www.padippakam.com

# சிந்தனை

தொகுதி VI    பங். ஆடி 1994    இதழ் I. II

கலைப்பீட வெளியீடு,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, இலங்கை.
1994

படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தினால் ஆண்டுக்கு மும்முறை பங்குனி, ஆடி, கார்த்திகை மாதங்களில் வெளியிடப்படுகின்றது. ஆய்வுக் கட்டுரைகள் பொருளியல், அரசியல், வரலாறு, தொல்லியல் புவியியல், தமிழ், மெய்யியல், மொழியியல் சமூகவியல், கல்வியியல். வடமொழி, சமயம், நாகரிகம் முதலிய துறைகளில் உள்ள பொருட் கூறுகள் பற்றியனவாக இருக்கும்.

சிந்தனையில் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட விரும்புவோர் கட்டுரைகளின் இரு பிரதிகளைச் சிந்தனை ஆசிரியருக்கு அனுப்புதல் வேண்டும். அடிக்குறிப்புக்கள், உசாத்துணை நூல்கள் கட்டுரையின் இறுதியில் அமைதல் வேண்டும். அனுப்பப்படும் கட்டுரைகள் ஆய்வு வளர்ச்சிக்கு ஆற்றும்பங்கினைச் சுருக்கமாகத் தமிழிலும், ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். விமர்சனத்துக்குத் தரம்வாய்ந்த நூல்களை ஆசிரியர் குழு வரவேற்கின்றது.

சிந்தனை தொகுதி VI இதழ் I, II 1994


| | | |
|---|---|---|
| ஆசிரியர்: | ச. சத்தியசீலன், | B A, Hons. (Cey.)<br>M. A. (Jaffna) |
| நிர்வாக ஆசிரியர்: | சி. முருகவேள் | B. A. Hons. (Cey.)<br>Dip in Lib. Sc. (Lond.) |
| ஆசிரியர் குழு: | கா. குகபாலன், | B. A, Hons. (Cey.)<br>M. A. (Jaffna)<br>D. P. S. (Madras)<br>Ph. D. (Jaffna) |
| | ப. சிவநாதன், | B. A. Hons. (Peradeniya)<br>M. A. (Jaffna) |
| | இ. கயிலைநாதன், | B. A., B. Phil Hons. (Colombo)<br>M. A. (Kelaniya) |
| | நா. ஞானகுமாரன், | B. A. Hons. (Kelaniya)<br>M. A. (Jaffna)<br>Ph. D. (Jabalpur) |
| | நா. வி. மு. நவரெத்தினம், | Sanggeetha Bhusanam (Annam.) |

www.padippakam.com

# சிந்தனை

தொகுதி VI | பங். ஆடி 1994 | இதழ் I, II

*ஆசிரியர்*

**ச. சத்தியசீலன்**

**கலைப்பீட வெளியீடு,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**திருநெல்வேலி, இலங்கை.**
**1994**
வெளியீடு மே 1997

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

**கட்டுரையாசிரியர்கள்**


1. அ. வே. மணிவாசகர் — B. A. Hons. (Peradeniya) M. A, Ph., D. (Benares) சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I
பொருளியற்றுறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

2. சோ. கிருஷ்ணராஜா — B. A. Hons. (Cey). Ph. D. (Mcoscow)
இணைப் பேராசிரியர்
மெய்யியற்றுறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

3. ஐ. ஹென்றிவிக்டர் — M. Th. (Serampore) Ph. D. (Birmingham)
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II
கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

4. நா. சுப்பிரமணியன் — B. A. Hons.(Cey) M. A.(Cey) Ph. D. (Jaffna)
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

5. ம. இரகுநாதன் — B. A. Hons. (Jaffna) M. A. (Jaffna)
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II
தமிழ்த்துறை,

6. சு. அருளானந்தம் — B. Sc. Hons. (Jaffna), Dip. in. Ed. (Jaffna), M A. (Jaffna)
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I
கல்வியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

7. சபா. ஜெயராசா — B. Ed (Cey) M. A. (Cey) Ph. D. (Jaffna)
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I
கல்வியியற்றுறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

8. எஸ். ரி. பி. இராஜேஸ்வரன் — B. A. Hons. (Peradeniya)
Post, Grd. Dip. in Photo inp, (Netherlands)
M. A. (Jaffna)
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I
புவியியற்றுறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


படிப்பகம்

www.padippakam.com

| | | |
|---|---|---|
| 9. | கே. சிவானந்தமூர்த்தி | B. A. Hons. (Peradeniya) M. A. (Jaffna)<br>சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II<br>மெய்யியற்றுறை<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| 10. | எஸ். கிருஷ்ணகுமார் | B. A. Hons. (Jaffna) M. A. (Jaffna)<br>சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II<br>வரலாற்றுத்துறை,<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| 11. | ச. சத்தியசீலன் | B. A. Hons. (Cey.) M. A. (Jaffna)<br>சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I<br>வரலாற்றுத்துறை<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |

படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை
தொகுதி VI
இதழ் I & II, 1994

# உள்ளூராட்சி அரசாங்கம் : ஒரு எண்ணக்கருக் கண்ணோட்டம்

கலாநிதி அ. வே. மணிவாசகர்

## அறிமுகமும் பின்னணியும்:

'உள்ளூராட்சி அரசாங்கம்' என்ற பதம் பொதுவாக உள்ளூர் விடயங்களை ஒழுங்கு படுத்தி நிர்வகிக்கின்ற சுயாதீனமான. ஆனால் இறைமையற்ற, ஜனநாயக ரீதியான குழுமங்களைக் குறிக்கிறது. ஒரு நாட்டின் அதிகாரப் படிமுறையில் உள்ளூராட்சி அரசாங்கம் மூன்றாவதாக இடம் பெறுகிறது. உயர் மட்டத்தில் தேசிய அல்லது மத்திய அரசும், இடைமட்டத்தில் மாகாண அல்லது மாநில அரசும், அடிமட்டத்தில் உள்ளூராட்சி அரசாங்கமும் அமைகின்றன. பிரதேச ரீதியிலான அதிகாரப் பரவலாக்கத்துக்கும், உயிர்ப்புள்ள ஜனநாயகத்துக்கும், சுயசார்பான அபிவிருத்திக்கும் ஏற்றதோர் ஊடகமாகவும், உபாயமாகவும் உள்ளூராட்சி அரசாங்க முறை இருந்து வந்துள்ளது. ஒற்றையாட்சி – கூட்டாட்சி என்றோ, சித்தாந்த– கலாசார முரண்பாடுகள் என்றோ, அபிவிருத்தியடைந்த நாடுகள் – அபிவிருத்தியடையும் நாடுகள் என்றோ இல்லாமல், எல்லா அரசுகளிலும் காணப்படும் ஒரு பொதுவான அம்சமாக உள்ளூராட்சி அரசாங்கமுறை முக்கியம் பெறுகிறது.

நவீன உள்ளூராட்சி அரசாங்கமானது பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய – அமெரிக்கத் தாராண்மை வாதத்தின் பக்கவிளைவுகளில் ஒன்றாக உருவாகிப் பின்னர் அந்நியர் ஆட்சிக்காலத்தில் குடியேற்ற நாடுகளிலும் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றாகும். இருப்பினும் உள்ளூராட்சி அரசாங்கத்துக்கு நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் உண்டு. நாகரிகம் அடைந்த மக்கள் உள்ளூர்ப் புறங்களில் கூடிவாழ முற்பட்ட போதே அவர்கள் நலன்பேணும் உள்ளூர் அமைப்புக்களும் தோன்றிவிட்டன. முடியாட்சி நிலவிய புராதன காலத்தில் கூட, ஏறத்தாழ எல்லா நாடுகளிலும், கிராமிய மட்ட அமைப்புக்கள் மக்கள் பங்குபற்றலையும், ஜனநாயகப் பெறுமானங்களையும் கணிசமான அளவில் பேணி வந்துள்ளன.[1] உதாரணமாக, இலங்கையின் 'கம்சபாக்கள்', இந்தியாவின் 'பஞ்சாயத்துக்கள்', சீனாவின் 'கிஷியாங்' என்ற குழுமங்கள், கிழக்கிந்தியத் தீவுகளின் 'மூத்தோர் கழகங்கள்', ஆபிரிக்காவின் 'குலமரபுக் குழுக்கள்' முதலானவற்றைக் கூறலாம். குடியேற்ற நாடுகளின் சுதந்திரப் போராட்ட காலத்திலும், சுதந்திரத்தின் பின்பும் பண்டைய கிராமிய அமைப்புக்களுக்குப் புத்துயிர் ஊட்ட வேண்டும் என்ற கோரிக்கை வலுப் பெற்றது. அதனால், பல மூன்றாம் உலக நாடுகளில், நவீன உள்ளூராட்சி அரசாங்க முறையில் மரபு ரீதியான பண்புகளும் குறிப்பிட்டளவு ஊடுருவியுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

11. P. Sharan, *Op. cit.*, pp. 621 – 622.

12. *Ibid.*, p. 620.

13. See for vivid arguments Arthur E. Morgan, *The Small Community: Foundation of Democratic Life*, (New York: Harper & Row, 1942); and Baker Brownell, *The Human Community*, (New York: Harper & Row, 1950).

14. *Encyclopaedia of the Social Sciences*, Vol. IX – X, p. 584.

15. *Report of the (Maud) Committee on the Management of Local Government in England*, Vol. 1, London ,1967, p. 68; (Bhalwantray Mehta) *Committee on plan projects*, Vol. 11, New Delhi, 1957, p.5.

16. See J. Herbamas, *The Theory of Communicative Action*, Vol. 1, (trans). T. Mc Carthy, (Boston: Beacon Press 1984); Carole Pateman, *Participation and Democratic Theory*, (Cambridge University Press, Cambridge, 1970); and Robert Nozick, *Anarchy, State and Utopia*, (New York: Basic Books, 1974).

## APPENDIX

A. Basic Types of Local Government System (as depicted in *Decentralization for National and Local Development*, op. cit.)

1) '*The Comprehensive Local Government System*', where most governmental services at the local level are administered through multi - purpose local authorities.

2) '*The Partnership System*', where some direct services are rendered by field units of central agencies, and others by local authorities pursuant to general statutory authority – the local authorities being more or less autonomous in the exercise of some of their functions, while they are subject to technical supervision in those functions, which are performed for central ministries.

3) '*The Dual System*', where central ministries administer technical services directly, while local authorities, although they have the legal authority, provide very few services;

4) '*The Integrated Administrative System*', where central government agencies directly administer all technical services, while an area administrator co – ordinates them as well as the limited services in the hands of the local bodies.



படிப்பகம்

www.padippakam.com

B. Structural Patterns of Local Government in Major Countries.

The U. K.

(i) In England, Wales and Northern Ireland, the local authorities are:

1) Parish Meetings.

2) Parish Councils.

3) Rural District Councils.

4) Urban District Councils.

5) Non - County Borough Councils.

6) County Borough Councils.

7) County Councils.

(ii) In Scoland, the local authorities are:

1) County Councils

2) Town Councils.

3) District Councils.

(iii) In London, the local authorities are:

1) the London County Council.

2) the Corporation of the City of London.

3) Metropolitan Borough Councils.

The U. S. A.

1) The Weak Mayor Form: This form of local government is generally a Council elected by Wards and the mayor plays a minor part in the administration.

2) The Strong Mayor Form: This is based on the theory of separation of powers, making of policy being separated from the administrative function.

3) The Commission Form: The typical Commission plan provides for five Commissioners with collective responsibility for all legislative and executive authority combined.



படிப்பகம்

www.padippakam.com

4) The Council Manager Form: This seeks to satisfy the separation of the legislative function from the administration by entrusting the work of administration to a competent person, an appointed executive, known as a general manager.

France.

1) Departments – Regional divisions of general government.

2) Arrondissments – Seats of courts of first instance.

3) Cantons – Electoral and justice of the peace districts.

4) Communes – General areas for rural, urban and metropolitan government.

The U. S. S. R.

1) Territory Soviet (Krai)

2) Province Soviet (Oblast)

3) Autonomous Province Soviet (Avtonomnaya Oblast)

4) District Soviet (Raion)

5) National Region Soviet (Okurang)

6) City Soviet (Gorod)

7) Village Soviet (Selakiy)

8) Settlement Soviet (Poselok)

9) Unit Soviet (Apilinkow in Lithuania, Aul in the Kazakh and Ail in the Kirghiz Republics).



படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை
தொகுதி VI
இதழ் I & II, 1994

# சைவசித்தாந்த ஒழுக்கவியல் தேவிகாலோத்திர ஆகமப் போதனைகள்

கலாநிதி சோ. கிருஷ்ணராஜா

முன்னுரை

சைவசித்தாந்த மெய்யியற் சிந்தனையில்–குறிப்பாக ஒழுக்கவியல் தொடர்பான சிந்தனையில், தேவிகாலோத்திரம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஞானத்தைப் பெறுவதால் மட்டுமே ஆன்மா முத்தியடையும் எனக் கூறும் ஆகம நூல்களில் வாதுளாகமத்தின் பேதமான இவ்வாகமமும் ஒன்று. உயிரின் விடுதலைக்கான அறிவு பற்றியும், அவ்வறிவைப் பெறுவதற்கான ஒழுக்க நடைமுறைகள் பற்றியும் இதிற் கூறப்படுகிறது.

தேவி, காலம், உத்தரம் என்ற மூன்று சொற்கள் கொண்ட தொடர் மொழியால் இவ்வாகமத்தின் பெயர் ஆக்கப்பட்டுள்ளது. காலம், உத்தரம் என்ற இரு சொற்களும் புணர்த்தப்பட்டு காலோத்தரம் என்றும், உமாதேவியாருக்குப் போதிக்கப்பட்டமையால் தேவி என்ற பெயரையும் பெற்று ''தேவிகாலோத்திரம்'' என அழைக்கப்படலாயிற்று. இந்நூல் ஞானம், ஞானசாரம் என்ற இருபிரிவுகளைக் கொண்டது. ஞானம் என்பது உண்மையறிவு எனவும், ஞானசாரமென்பது அவ்வறிவை அடைவதற்குரிய ஆசாரம் எனவும் பொருள் தரும்.

''உத்தம குணத்தாய் ஞான மெழுங்கெது
மிரண்டினாலே
மொய்த்தலர் முத்தியெய்தும் விதியினை
விரித்துரைப்பன்''1

உண்மையறிவான ஞானமும், அதற்குரிய ஒழுக்க முறைமையுமே இவ்வாகமத்தின் பிரதான போதனைப் பொருளென இச் செய்யுள் தெரிவிக்கிறது.

ஒழுக்கவியற் கருத்துக்களைப் போதிக்கும் முதனூலென்ற வகையிற் சைவசித்தாந்த சாஸ்திர நூல்களில் தேவிகாலோத்தரம் குறிப்பிடத்தக்க முக்கியத்துவமுடையது. உமாபதி சிவாசாரியார் தனது சதரத்ன சங்கிரகத்தில் இவ்வாகமத்தின் சுலோகமொன்றையும் உள்ளடக்கியிருப்பது மேற்படி கருத்தை அரண் செய்யும்.2

காலோத்தர ஆகமமும் தேவிகாலோத்தரமும்

சைவசித்தாந்த மெய்யியற் கூடத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் இருபத்தியெட்டு ஆகமங்களில் வாதுளாகமமும் ஒன்று. இவ்வாகமத்தின் பேதங்களாக வாதுளம், உத்தரவாதுளம், காலாக்ஞானம், ப்ரரோகிதம், சர்வம், தர்மாத்மகம், சிரேட்டம், நித்தியம், சுத்தம், மகாநனம், விசுவம், விசுவாதமதம் என பன்னிரண்டு உபா



படிப்பகம்

www.padippakam.com

கமங்கள் உளவென சைவபூஷணம் என்ற நூல் குறிப்பிடுகிறது.[3] இப்பன்னிரண்டு உபாகமங்களிலும் காலோத்தரம் என்ற பெயர் காணப்படவில்லை. இதற்குப் பதிலாக காலாக்ஞானம் என்ற பெயரே காணப்படுகிறது. ஆனால் காலோத்தர ஆகமத்தின் சுவடிகளில் சில சந்தர்ப்பங்களில் காலாக்ஞானம் எனவும், வேறுசில சந்தர்ப்பங்களில் காலோத்தரம் என்றும் குறிப்பிடப்படுவதிலிருந்து இவ்விரு சொற்பிரயோகங்களும் ஒன்றையே சுட்டி நிற்கின்றனவென ஊகிக்கலாம். காலோத்தரம் என்பது காலத்தைக் கடந்து நிற்பது என்ற அர்த்தத்தையும், காலாக்ஞானம் காலத்தைக் கடந்த மெய்யறிவு என்ற அர்த்தத்தையும் கொண்டது. இதுவரை அறியப்பட்ட தரவுகளிலிருந்து பதின்மூன்று காலோத்தரா கம பேதங்கள் இருந்ததாகத் தெரியவருகிறது.[4] அவற்றின் பெயர்கள் பின்வருமாறு.

1. காலோத்தரம்
2. பிருஹத் காலோத்தரம்
3. அயுதத்ரய சம்ஹிதா காலோத்தரம் அல்லது த்ருயயுதகிரந்த சம்ஹிதா காலோத்தரம்
4. தேவீகாலோத்தரம் அல்லது சதுர்விம்சதிஸகஸ்ர காலோத்தரம்
5. துவாதச சகஸ்ர சம்ஹிதா காலோத்தரம்
6. ஷட்சகஸ்ர சம்ஹிதா காலோத்தரம்
7. த்ரயோகசதிகாலோத்தரம்
8. ஸப்தசதிக காலோத்தரம்
9. சதுசதிக காலோத்தரம்
10. ஸார்தாத்திரிசதி காலோத்தரம்
11. திரிசதிக காலோத்தரம்
12. துவிசதிக காலோத்தரம்
13. ஸ்கந்த காலோத்தரம்

இவற்றில் 1,2,7,8,10,12 இலக்கங்களுடைய காலோத்தர ஆகம பேதங்களும், 3,4,5, இலக்கங்களுடைய காலோத்தர ஆகமத்தின் ஒருசில படலங்களுமே இதுவரை கிடைக்கப்பெற்றுள்ளது. ஸாத்தாத்திரிசதிகாலோத்தர உரையாசிரியரான ராமகண்டர் தனது உரையில் மேற்கோளாகக் குறிப்பிட்ட இரு சுலோகங்களிலிருந்து சதுசதி காலோத்தரம் பற்றி அறியக் கூடியதாயுள்ளது. காத்திகேயருக்கும் சிவனுக்குமிடையிலான உரையாடலாகவே தேவிகாலோத்தரம் தவிர்ந்த ஏனைய காலோத்தர பிரதிபேதங்கள் காணப்படுகின்றன. ஆனால் தேவிகாலோத்தரம் மட்டும் சிவன் பார்வதி உரையாடலாகக் காணப்படுகிறது.

ரௌரவ ஆகமத்தின் உபாகமமான காலக்னமும், புரோத்கீதா ஆகமத்தின் உபாகமமான ஸ்ரீ காலாஞானமும் வாதுளாகமத்தின் சுருக்கங்களேயென்று உரையாசிரியர்கள் சிலர் கருதுவதால் காலக்னமும், ஸ்ரீ காலாஞானமும் காலோத்தர ஆகமத்தையே குறிப்பிடுவதென எண்ணுதல் ஆகாது. வாதுளாகமத்தின் பேதமான காலக்ஞானம் அல்லது காலோத்தரம் மேற்கூறிய இவ்விரண்டிலிருந்தும் வேறுபட்டது. ''ஸார்த்தாத்திரிசதிகாலோத்தரம்'' (350 சுலோகங்களைக் கொண்டது) ராமகண்டபட்டருடைய (கி. பி. 1100 — 1130) உரையுடன் பாண்டிச்சேரியிலமைந்துள்ள பிரேஞ்சு நிறுவன வெளியீடாக வந்துள்ளது.[5] இந்நூல் த்ரயோதசதிகாலோத்தரத்தின் (1300 சுலோகங்களைக் கொண்டது) சுருக்கமாகும்.

காலோத்தரத்தின் பிறிதொரு பேதமான துவிசதிகாலோத்தரராகமத்திற்கு (200 சுலோகங்களைக் கொண்டது) அகோர



படிப்பகம்

www.padippakam.com

ரசிவாசாரியாரின் உரையொன்றும் உளது. அகோரசிவாசாரியாரின் துவிசதிகாலோத்தரம் நானூறு சுலோகங்களைக் கொண்ட சதுசதிககாலோத்தரராகமத்தின் சுருக்கமாகும். இவ்விடத்து சோமசம்பு பத்ததியின் உரையாசிரியரான திரிலோசனசிவர் தரும் சுவையானதொரு தகவல் உண்டு.[6] அதாவது முதனூலான காலோத்தர ஆகமத்தின் பேதமான ஸார்தாத்திரிசதியும் துவிசதிகாலோத்தரமும் இருவேறு மரபுசார்ந்த சிந்தனாகூடத்தைச் சார்ந்தவை என்ற குறிப்பு. சோமசம்பு சிவாசாரியாரின் பத்ததி துவிசதிகாலோத்தர ஆகம மரபையும், அகோர சிவாசாரியாரின் பத்ததி ஸார்தாத்திரிசதிகாலோத்தர மரபையும் பின்பற்றுவனவாகும். அகோர சிவாசாரியார் துவிசதிகாலோத்தரத்திற்கோர் உரை விளக்கம் தந்த பொழுதும் அவ்விளக்கம் ஸார்தாத்திரிசதிகாலோத்தர ஆகமபேதத்தின்படியே அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சிவஞானசுவாமிகள் தமது சிவஞானபாடியத்தில் அகோரசிவாசாரியாரின் பத்ததியைக் கண்டித்தும், சோமசம்பு சிவாசாரியாரின் சோமசம்பு பத்ததியே சைவசித்தாந்தத்திற்கு உடன்பாடானதென்று குறிப்பிடுவதும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.[7]

தேவிகாலோத்தரம் என அழைக்கப்படும் காலோத்தராகமபேதத்திற்கு சதுர்விம்சதிஸகஸ்ரகாலோத்தரம் (24,000 சுலோகங்களைக் கொண்டது) என்ற பெயரும் உண்டு. கிரியாக்கிரமஜியோதி, ஞானரத்நாவலி ஆகிய நூல்களில் இவ்வாகம சுலோகங்கள் மேற்கோளாகத் தரப்பட்டுள்ளன. சதுர்விம்சதிஸகஸ்ர காலோத்திரத்தின் ஞானகண்டத்தின் அறுபத்தைந்தாம் படலத்தில் உள்ளவை மட்டுமே இன்று தேவிகாலோத்தர ஆகமம் என்ற பெயரில் கிடைக்கக் கூடியதாயிருக்கிறது. 1901 ஆம் ஆண்டு மாராட்டி மொழியில் இவ்வாகமம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. கர்நாடக மொழியில் நிரஞ்சனசித்தநஞ்சனர் என்பவரால் இவ்வாகமத்திற்கு உரைவிளக்கமொன்று எழுதப்பட்டதென்ற தகவல் உண்டு.[8] தேவிகாலோத்தர ஆகமத்தின் வடமொழி மூலத்தைக் கிரந்தத்தில் முதன்முதலில் அச்சிட்டு வெளியிட்டவர் ஆறுமுக நாவலரின் மருமகனான த. கைலாயபிள்ளையாவர்

தேவிகாலோத்தரம் நீண்டகாலத்திற்கு முன்பே தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு விட்டதென்றும், பாடியவர் பெயர் தெரியவில்லையென்றும் இவ்வாகமத்தின் தமிழ் மொழிப் பதிப்பாசிரியரான முத்தையா பிள்ளை குறிப்பிடுகிறார்.[9] இவரது பதிப்பில் வெளிவந்த தேவிகாலோத்தர ஆகமம் ஞானம், ஞானாசாரம் என்ற இரண்டு இயல்களை உடையதாய், 69 செய்யுள்களாலானது. இது தவிர ரமண மகரிஷியின் 85 செய்யுள்களைக் கொண்ட தேவிகாலோத்தர தமிழ்மொழிப்பெயர்ப்பொன்றும் உளது.[10] ரமணரது மொழிப்பெயர்ப்பின் அவதாரிகையில் வடமொழி தேவிகாலோத்தரத்தின் ஞானசார விசாரப்படலமே இங்கு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதென்ற குறிப்பு உண்டு. சிவாக்கிரயோகிகள் வடமொழி தேவிகாலோத்தரத்திற்கு தமிழுரையொன்று செய்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.[11]

சர்வஞ்ஞானோத்தர ஆகமத்தின் தமிழ் மொழிபெயர்ப்பின் பதிப்பாசிரியரான முத்தையபிள்ளை, அதில் வருகிற காப்புச் செய்யுளும், தனக்கு பதிப்பதற்குக் கிடைத்த தேவிகாலோத்தரத்தில் வருகிற காப்புச் செய்யுளும் ஒன்றேயாதலால் இவ்விரு ஆகமங்களையும் மொழிபெயர்த்தவர் ஒருவராயிருக்கலாமெனக் கருதுகிறார்.[12] எனினும் இவ்விரு ஆகமங்களின் தமிழ் மொழிபெயர்ப்புகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது சர்வஞ்ஞானோத்தர செய்யுட்களில் பெரும்பாலும் வடமொழிக் கலப்பிருப்பதையும், தேவிகாலோத்தர செய்யுட்களோவெனில் சீரான தமிழ் நடையிலிருப்பதையும் அவதானிக்



படிப்பகம்

www.padippakam.com

கலாம். நடைவேறுபாட்டைக் கருத்திற் கொள்ளின் இவ்விரு ஆகமங்களையும் தமிழில் மொழிபெயர்த்தவர் ஒருவராயிருத்தல் முடியாது.

ஒழுக்கவியற் கருத்துக்கள்

சிவாகமங்கள் கூறும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நாற்பாதங்களையும் ஒழுக்கவியல் நோக்கில் நால்வகை சமய ஒழுக்கநெறிகளாக எடுத்துக் காட்டலாம். இவற்றில் சரியையும், கிரியையும் கர்மமார்க்கமாகும். விதிக்கப்பட்ட சமய நடைமுறைகளைப் பின்பற்றி ஒழுகுவதென்பதே இதன் தாற்பரியமாகும். சமய நடைமுறைகளை முதன்மைப்படுத்தாது மெய்யறிவினடிப்படையில் ஒழுகுவது ஞானமார்க்கமாகும். சமய இலக்குகளை அடைவதற்குரிய வழிமுறைகளாக இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம் முதலிய எட்டு படிமுறைகளினூடாக யோகத்தில் நிற்றல் யோக மார்க்கத்திலடங்கும். இவை தவிர திருஞானசம்பந்தர் முதலாகிய சைவ நாயன்மார்களால் கைக்கொள்ளப்பட்ட பக்திமார்க்கமும். சைவமரபினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதொரு சமய ஒழுக்க முறையாகும். தனிமனிதரது பிரத்தியேகமான நேரடி ஈடுபாடே பக்திமார்க்கத்திற்கு அடிப்படையானது. ஆனால் ஆகமங்களைப் பொறுத்தவரையில் கர்மமார்க்கம் யோகமார்க்கம், ஞானமார்க்கம் என்ற மூன்று வழிமுறைகளுமே பிரதான ஒழுக்க நெறிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

கர்மமார்க்கமும் யோகமார்க்கமும்ஞான மார்க்கத்தினளவு முக்கியத்துவமுடையதாக மூலாகமங்களில் காணப்பட்டாலும், உண்மையென்றும் சிறப்பென்றும் சைவசித்தாந்திகளால் போற்றப்படும் சர்வஞ்ஞானோத்தரம், தேவிகாலோத்தரம் முதலிய ஆகமங்களில் ஞானமார்க்கமே விதந்தோதப்படுகிறது. மெய்யறிவைப் பெறுதலே ஆன்மவிடுதலைக்கு (முத்திக்கு) இன்றியமையாததென்பது இவ்வாகமங்களில் பிரதான போதனைப் பொருளாக இருக்கிறது. சமய நடைமுறைகளை வற்புறுத்துகிற கர்மமார்க்கமும், யோகமார்க்கமும், ஆன்மவிடுதலைக்கான பொருத்தமான வழிமுறைகள் அல்லவெனவும், பயனற்றவையெனவும் கூறப்படுகிறது.

''மந்திரஞ் செபந்தியானம் பூசனைவணக்கம் வேண்டா
அந்தமில்லா முத்திக் குபாயமே யறிய வேண்டும்'' 13

எனக் குறிப்பிடுவதன் மூலம் கர்மமார்க்கத்தையும் யோகமார்க்கத்தையும் முத்தியடைவதற்குரிய பொருத்தமான ஒழுக்க முறையல்லவென எடுத்துக் கூறும் தேவிகாலோத்தரம்.

''பெத்தமற ஞானத்தாற் காட்சிபெறிற் சாந்தியுடைச்
சித்தனாய்ப் பொருட்பற்றுத் தீர்ந்துவிடையுமால்'' 14

என ஆன்மவிடுதலைக்கு அல்லது முத்திக்கு ஞானமார்க்கமே சரியான வழிமுறையாகுமெனக் குறிப்பிடுகிறது.

ஆன்ம விடுதலையும் அதனோடு தொடர்புடைய ஞானமார்க்கமும் கிரியைகளை முதன்மைப்படுத்தும் வேதமரபிற்கு எதிராக வளர்ச்சிபெற்று வந்ததொரு ஒழுக்கவியற் சிந்தனையாகும். ஞானமார்க்கம் ஆன்மாக்களின் இறுதி இலட்சியத்தை அடைவிக்கும் வழிமுறையாக சைவமரபினாலும் போற்றப்படுகிறது. ஆனால் வேதமரபினால் விதந்து போற்றப்படும் கிரியைசார் ஒழுக்கமோ நற்பலாபலன்களை எதிர்பார்த்து குறிப்பாக வளமான இவ்வுலக வாழ்க்கைக்கான மார்க்கமாகவே பரிந்துரைக்கப்பட்டது.

ஆன்ம விடுதலைக்கு வேதங்களில் கூறப்பட்டுள்ள வேள்விக்கிரியைகள் எந்த வகையிலும் உதவுவனவல்லவென்ற குறிப்பு உப



படிப்பகம்

நிடதங்களிலும் காணப்படுகின்றன. சாங்கிய தரிசனமும் இதனைக் கண்டிக்கிறது. சாங்கியரின் அபிப்பிராயப்படி பௌதீக வதீத உண்மைகள் பற்றிய அறிவே மனிதரை மறுபிறப்பாகிய பந்தத்திலிருந்து விடுவிக்கும். ஆன்மவிடுதலைக்கான இம்முயற்சி ''நிவிர்த்தி மார்க்கம்'' என அழைக்கப்படும். நிவிர்த்தி மார்க்கம் வேதங்களினாலும் தர்மசாஸ்திரங்களினாலும் போதிக்கப்படும் ''பிரவிர்த்தி'' மார்க்கத்திற்கு முற்றிலும் எதிரானது. புற உலகு பற்றிய உளச்சாய்வு அல்லது புலன்களதும் உளத்தினதும் விடய நாட்டம் பிரவிர்த்தி எனப்படும். வேதங்களினாலும் தர்மசாஸ்திரங்களினாலும் முன்மொழியப்பட்ட பிரவிர்த்தி மார்க்கம் இவ்வுலக வாழ்க்கையை முதன்மைப்படுத்தி அவ்வாழ்க்கையில் அனைத்து நற்பேறுகளையும் பெறுவதை இலக்காகக் கொண்டது. ஆனால் மோட்சம் அல்லது ஆன்மவிடுதலை என்ற ஒழுக்கக்கருத்தோ கடந்தநிலையான உண்மை பற்றிப் பேசுகிறது. மனித உளத்தை புறப்பொருட்களிடம் நாட்டமடையச் செய்வதாக பிரவிர்த்தி மார்க்கம் உளது. வேதங்களும் தர்மசாஸ்திரங்களும் போதிக்கும் தருமம், நற்பேறு, இன்பம் (காமம்) போன்ற விழுமியங்கள் பிரவிர்த்தி மார்க்கத்திற்குரியனவாகக் காணப்படுகின்றன. ஆனால் ஆன்ம விடுதலையைச் சுட்டும் ஞானமார்க்கமோ (நிவிர்த்தி மார்க்கம்) புறப் பொருட்களுடனான தொடர்பை மனம் முற்றிலும் விலக்கிக் கொள்ள வேண்டுமென வற்புறுத்துகிறது. அகநிலைப்பட்ட முறையில் ஆன்மாவின் உண்மையியல்பைக் கண்டறிந்து கொள்ள வேண்டுமெனவும் வற்புறுத்துகிறது. நிவிர்த்தி மார்க்கத்தை வற்புறுத்தும் ஒழுக்கக் கொள்கையினரில் சாங்கியர் முதன்மை ஸ்தானத்தைப் பெறுகின்றனர்.

பிரவிர்த்தி மார்க்கம் ஆன்ம விடுதலையைத் தராதென தேவிகாலோத்தரமும் குறிப்பிடுகிறது. மனமானது புறத்தேயுள்ள விடயங்களில் செல்லாது கருத்தடங்கி தன்னிடத்தே நிற்றல் வேண்டுமெனவும், அவ்வாறு நிற்றலே முத்திக்கு வழியாகுமெனவும் அது கூறுகிறது.[15]

''கருத்தடங்கின் முத்தியது கையகலிற் கட்டாகும்
விரித்த பொருளிதுவென்ன வறிவுடைய மேதக்கோர்
திருத்தகுநல் லறிவாலே சித்தத்தைத் திறம்பாமல்
அருந்தியுட னிலைநிறுத்து மஃதறிவின் பயனாமால்''

துன்பமே பிறவிக்குக் காரணமென்று பின்வரும் செய்யுள் குறிப்பிடுகிறது.[16]

யாவ ராயின மெய்பிறப் பெய்திலும்
ஆவ தாவ தருத்துய ராதலால்
தீய துன்பஞ் செலுத்தற் பொருட்டந்தத்
தூய ஞானச் சுடரைத் தொடர்வரே

எவராயினும் எப்பிறப்பு எய்தினாலும் அடைவது துன்பமே. எனவே துன்பத்திலிருந்து விடுபடுதற் பொருட்டு மெய்யறிவின்படி ஒழுகுதல் வேண்டுமென்பது இச்செய்யுளின் தாற்பரியம். பிறப்பு துன்பத்திற்கேதுவானதென்ற கருத்து சாங்கிய தரிசனத்திலிருந்து சைவசித்தாந்திகளாற் பெறப்பட்ட கருத்துக்களில் ஒன்றாகவிருக்கலாம்.[17] ஒவ்வொரு ஆன்மாக்களும் விடுதலையடைய வேண்டுமென்பது சாங்கியத்தின் நிலைப்பாடாகும்.

பிறவியாகிய துன்பத்திலிருந்து விடுபடமனதையடக்குதல் வேண்டும். மனமானது ஓரிடத்தில் நிலைத்து நிற்பதல்ல. அது குரங்கு போல ஒன்றைவிட்டொன்றைப் பற்றி அலைந்து திரியும்.[18]

மருவிய பொருண்மே லன்பாய் வானரம் போற்சரித்துத்
திரியுமச் சித்தந் தன்னைத் திருத்திச் சூனியத்தே நின்றால்
மருவினோர் பிரிதலின்றி வானவ ரறிவுக் கெட்டாப்
பொருவிலா நித்தசுத்தப் பொருவினை யடைவரன்றே

www.padippakam.com

என மனத்தின் இயல்பையும் அதனை அலையவிடாது ஓரிடத்தில் நிலைநிறுத்துதலும் ஆன்ம விடுதலைக்கு இன்றியமையாததெனக் தேவிகாலோத்தரம் குறிப்பிடுகிறது. மனம் ஓரிடத்தில் நிலைபெற வேண்டுமாயின் தேகபற்றும், போகபற்றும் அகலுதல் வேண்டும். போகப்பற்று பலவிதமான அவஸ்தைகளிற்குக் காரணமாகிறது. அவஸ்தை பிறவிக்கேதுவாகிறது. எனவே மனதை நிலைபெறச் செய்து காப்பவரே நல்ல தவத்தையுடையவராவர்.

''பற்றினாற் சலிக்குமுள்ளம் பற்றாதே பண்ணிக்கொள்க
நிற்றலின் றெனினுந்தந்த நிலையினில் நிறுத்திக்கொண்டால்
பெற்றன மென்று பேணிப் பின்னைப் பேராமற் காக்கும்
நற்றவ ரன்னியநிக வுலகினில்லோரியாரே''

என்பது தேவிகாலோத்தரச் செய்யுள்.[19]

ஆன்மவிடுதலையாகிய முத்திநெறிக்குரிய உபாயம் மனவடக்கமே என்று கூறுவதன் மூலம் புலனடக்கத்தை ஒழுக்க நடத்தைக்கான முற்கற்பிதமாக தேவிகாலோத்திரம் எடுத்துக்காட்டுகிறது.[20] புலனடக்கம் பந்தங்களிலிருந்து விடுதலையடையச் செய்கிறது. இவ்விடுதலை பிறப்பிறப்பிலிருந்து ஆன்மாவை விடுதலை செய்கிறது. இவ்வாறு சைவசித்தாந்தம் கூறும் ஆன்மவிடுதலைக் கோட்பாடு சாங்கியம், நியாய வைசேடிகம் ஆகிய தரிசனங்களது ஆன்ம விடுதலைக் கோட்பாட்டை ஒத்திருப்பதுபோலத் தோன்றுகிறது. எனினும் சைவசித்தாந்த நிலைப்பாட்டிற்கும் சாங்கியம், நியாய வைசேடிகம் ஆகியனவற்றின் நிலைப்பாட்டிற்குமிடையில் அடிப்படையானதொரு வேறுபாடுண்டு. சாங்கியத்தின்படி விடுதலையடைந்த ஆன்மா இலைபினிட்சுவின் ''மொனாடுகள்'' போன்றிருக்கும். அது பிறப்பிறப்பாகிய பந்தத்திலிருந்தும் விடுபட்ட ''கைவல்ய'' நிலையாகும். ''சரீர சம்பந்தமில்லாது ஆத்யாதமிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிதம் என்ற மூன்று விதமான துக்கங்களற்ற நிலையை புருஷன் அடைவதே மோட்சம் அல்லது கைவல்யம்'' என சாங்கிய தத்துவ கௌமுதி மோட்சத்தை விளக்குகிறது.[21] நியாயவைசேடிகம் ஏற்றுக்கொள்கிற ஆன்ம விடுதலையும் சாங்கியர் கூறுகிற கைவல்ய நிலையை ஒத்ததாக இருப்பினும் ஆன்மா மோட்சத்தில் நிர்க்குணனாக இருக்கிறானென்பது இவர்களது நிலைப்பாடாகும்.

ஆனால் சைவசித்தாந்தமோ பிறப்பிறப்புக்களை எக்காலத்துக்குமாய்த் துறந்து சிவனோடு இரண்டறக்கலத்தலே ஆன்ம விடுதலை என்பதன் தாற்பரியமெனக் கருதுகிறது. சிவனைப் பற்றி நிற்பவனே சிவயோகி என்றும், தூல சூக்கும சரீரங்களைத் தனக்கு வேறாக அறிந்தவனுக்கு சிவஞானம் விளக்கித் தோன்றுமெனவும் சைவசித்தாந்தம் ஏற்றுக்கொள்கிறது.

சிவனே தானென்று உணர்வதாகிய சிவஞானத்தினால் ஆன்மவிடுதலையான பரமுத்திப்பேறு ஆன்மாக்களிற்குக் கிடைக்குமென தேவிகாலோத்தரம் குறிப்பிடுகிறது.(22)

''நித்தனாம் பரமேசன் யாரென்று நிச்சயிக்கின்
முத்தனல வெனினுமவன் முத்தனா முயிருடம்பின்
பெத்தமற ஞானத்தாற் காட்சிபெறிற் சாந்தியுடையச்
சித்தனாய்ப் பொருட்பற்றுத் தீர்ந்துவீ டடையுமால்''

இவ்வாறு நிவிர்த்தி மார்க்கத்தால் ஆன்ம விடுதலையைப் பெறும் உயிரானது அத்தகைய விடுதலையை அடைவதற்கான ஒழுக்கநெறி யாதென்ற வினாவிற்கு இவ்வாகமத்தின் ஞானாசாரவியல் விடை தருகிறது. இதன்படி பரமுத்தியடைவதற்கான ஞானத்தைத் தவிர பசுஞானமோ பாசஞானமோ அல்லது சிவபூசையோ வேள்



படிப்பகம்

வியோ அல்லது இவற்றிற்கு அங்கமான கிரியைகளோ தேவைப்படுவதில்லை. நியமம் முதலிய சரியைகளும் விரத ஒழுக்கமும் வேண்டப்படுவதில்லை. நிவிர்த்தி மார்க்கத்தில் ஈடுபடுபவன் உலகசம்பந்தமான செயல்களனைத்தையும் செய்யாது விடுதலே தக்கதெனக் கூறப்படுகிறது. ஆசையை அடக்குதல் வேண்டும்.(22) உயிர்களிடத்து அன்புடையவனாயிருத்தல் வேண்டும்.(23) மந்திர தந்திரங்களை விரும்புதல் ஆகாது.24 விருப்புவெறுப்பின்றி சமநிலையில் நிற்றல் வேண்டும்.(25)

''ஆசையினை யறவிட்டெப் பொருட்கு மொத்துச் சுகதுக்கம்
பேசியநட் டார்பகைஞர் பீடுடையோர் பீடில்லோர்
மாசிலொளி வளருமணி காஞ்சனங் கல் லேட்டினினும்
நேசமறப் பார்த்துணர்ந்து சமநிலத்தே நிலை நிற்பான்''

என சமநிலையாளுமை உடையவனாயிருத்தல் வேண்டுமென இவ்வாகமம் கூறுகிறது. இதனால் உலகத்துப் பொருட்களிடத்து அச்சமோ அல்லது அதிசயமோ ஞானசாதகனுக்கு இல்லாது போய்விடுகிறது. வாதம் செய்தலும், பயனில்லாத சொற்களைச் சொல்லுதலும், பிறருடன் விரோதமாயிருத்தலும் இல்லாதிருக்கும். விதிக்கப்பட்டவையும் விலக்கப்பட்டவையும் பற்றிய நூல்களை ஓதுதலிலிருந்தும் விடுபட்டு, நன்மை திமைஎன்று சொல்லப்பட்ட கன்மம் அனைத்தையும் ஒருசேர விட்டிருப்பான். இவ்வாறு நிவிர்த்தி மார்க்கத்திலீடுபட்டவனது ஒழுக்கவியல் பற்றி தேவிகாலோத்தரம் விளக்குகிறது.27

''வாதுரைபயனில் சொல்லும் பிறருடன் பகிழ்த்ருத்தல்
பேதுறு பிணக்கநீங்கிப் பெரியவ னருளினாலே
ஓதுநூ லோதலோவி யுலகினினன்று தீதென்
றாதியி லுரைத்த வெல்லா மறவிட்டே யமர்ந்திருப்பான்''

பிறிதொரு செய்யுள்மூலம் ஆசை, கோபம், பயம், சோகம், பொறாமை, ஆற்றாமை பிறருக்கு தீங்குபயக்கும்படி பேசுதல், சிறுமை என்பன இல்லாதிருத்தல் வேண்டுமெனவும் கூறுகிறது 28

''ஆசை கோபம் பயஞ்சோக ராகமாம்
மாசு மாட்சியுள் ளோதராக்க மாற்றாமை
பேசு தீமை பிறர்க்குத் தமக்கிலாத்
தேசி முக்குடன் றிர்வார் சிறந்தவர்''

## முடிவுரை

இதுவரை கூறியவற்றிலிருந்து சைவ சித்தாந்த ஒழுக்கவியல் அடிப்படையில் ஆன்மா மையவாதமாகவிருப்பதைக் காணலாம். இவ்வுலக வாழ்க்கை பாசத் தொடர்புகளைக் கொண்டது. துன்பமானது. ஒருவனது வாழ்க்கை பிறப்பிறப்புத் தொடரிலிருந்து விடுபடுதலையே இலக்காகக் கொண்டதால் ஒழுக்கவியலும் அதனடிப்படையிலேயே விளங்கிக் கொள்ளப்படுகிறது மிக உயர்தரத்திலுள்ள சுயகட்டுப்பாடும், தூய்மையான உள்ளமும் விடுதலைக்காவ இன்றியமையா நிபந்தனைகளாக வற்புறுத்தப்படுகிறது. ஒருவன் ஆன்மிக நாட்டத்தைத் தனது சுயமுயற்சியாலேயே அடைதல் வேண்டுமென்ற இச்சிந்தனைப் போக்கு ஒழுக்கவியலில் தனியுரிமைச் செயலாற்றக் கோட்பாடாக இருப்பதுடன் ஒருவன் தன் பற்றுக்கள், மனச்சாய்வுகள் அல்லது சுயாதீனசித்தம் என்பனவற்றின் மீது ஆளுகை செய்யவேண்டுமென்ற நம்பிக்கையையும் வெளியிடுவதாக உள்ளது.

வேதங்களில் கூறப்பட்ட பிரவிர்த்தி மார்க்கம் சமய ஒழுக்கத்தையும், வர்ணாச்

www.padippakam.com

சிரம தர்மம் போதிக்கும் சாதி ஒழுக்கத்தையும் வற்புறுத்துவதன் மூலம் சமூதாய ஏற்றத்தாழ்வுகளை அங்கீகரிக்கிறது. இதனாற் போலும் வேதங்களைப் பயிலுதல் முதன் மூன்று வர்ணத்தவர்க்குமேயுரிய தென்ற நிலைப்பாட்டை வேதமரபு போதிக்கிறது. ஆனால் சைவசித்தாந்தத்தின் முதல் நூல்களான ஆகமங்களோ நால்வகை வர்ணத்தவர்க்கும் அவை உரியனவென்று அறுதியிட்டுக் கூறுவதன் மூலம் சாதிப்பாகுபாட்டிலமைந்த சமூதாய ஏற்றத்தாழ்வுகளைக் கண்டிக்கிறது.

இதனையாதாரமாகக் கொண்டே ஆன்மவிடுதலைக்கான ஒழுக்கம் அனைவருக்கும் ஒன்றேயென சைவசித்தாந்தம் விதிப்பதை தேவிகாலோத்தரம் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. □

*பிற்குறிப்பு*

இக்கட்டுரையை எழுதுங்கால் காலோத்தர ஆகமத்தின் பகுதிகளை வாசித்து விளக்கிய பேராசிரியர் வி. சிவசாமி அவர்களுக்கு நன்றி.

*அடிக்குறிப்புகள்*

1. தேவிகாலோத்தர ஆகமமும் உரையும், பதிப்பாசிரியர் பொ. முத்தையாபிள்ளை (1935), பக். 8.

2. Sataratnasangraha of Umapati Sivacarya (ed) P. Thirugnanasampandhan (1973), Madras University Press. p. 102.

3. சைவபூஷணம், வடமொழிமூலமும் தமிழ் வியாக்கியானமும், தேவகோட்டை, சிவாகம சித்தாந்த வெளியீடு, (1925), பக். 163. திருமந்திரத்தில் ஒன்பது ஆகமங்கள் பற்றிய குறிப்பொன்று காணப்படுகிறது அவற்றில் காலோத்திரமும் ஒன்று. திருமூலர் குறிப்பிடும் ஆகமங்கள் வருமாறு: காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், வியாமளம் காலோத்தரம், சுப்பிர பேதம், மகுடம்.

4. Sardhatrisatikalottaragama (ed N. R. Bhatt 1979) Institute Francais D indologie, Pondichery p. 4.

5. மேலே குறிப்பிட்ட நூல்.

6. மே. கு., பக். 8.

7. சிவஞான சுவாமிகள், சிவஞானபாடியம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் (1952) பக். 25–26.

8. மே. கு. பக். 7.

9. தேவிகாலோத்திரம் மு. கு., பக். 12



படிப்பகம்

www.padippakam.com

10. ரமணர் நூற்றிரட்டு (இரண்டாம் பதிப்பு 1934) திருவண்ணாமலை, பக். 53-58.

11. சிவாக்கிரயோகிகள் சிவநெறிப்பிரகாசம் (முன்னுரை) திருவாவடுதுறை ஆதீனம் (1968) பக். 17.

12. தேவிகாலோத்தரம் மு. கு., முன்னுரை.

13. மே. கு., பக். 23.

14. மே. கு., பக். 61.

15. மே. கு., பக். 14.

16. மே. கு., பக். 33.

17. மே. கு., பக். 33.

18. சாங்கிய தத்துவ கௌமுதியில் வருகிற பின்வரும் சுலோகத்தை மேற்படி தேவிகாலோத்தர செய்யுளுடன் ஒப்பிட்டு நோக்கவும். ''.........லிங்க சரீரத்துடன் கூடிய புருஷன் லிங்கசரீரம் தொலையும் வரையில் ஜனனமரணங்களால் ஏற்பட்ட துக்கத்தை அடைகிறான். ஆகையால் சிருஷ்டி இயற்கையில் துக்கசாதனமாகவே இருக்கிறது. பார்க்க. ''சாங்கிய தத்துவ கௌமுதி'' பதிப்பாசிரியர் கடலங்குடி நடேச சாஸ்திரிகள் (1925) பக். 199.

19. தேவிகாலோத்தரம் மு. கு., பக். 36.

20. மே. கு., பக். 45.

21. சாங்கிய தத்துவ கௌமுதி, மு. கு., பக். 226.

22. தேவிகாலோத்தரம் மு. கு. பக். 61.

23. மே. கு., பக். 81.

24. மே. கு., பக். 82.

25. மே. கு., பக். 86.

26. மே. கு., பக். 87.

27. மே. கு., பக். 91.

28. மே. கு., பக். 92.



படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை
தொகுதி VI
இதழ் I & II, 1994

# பௌத்த களத்தில் கிறித்தவ இறையியல்: லின் டீ சில்வாவின் இறையியல் அணுகுமுறை

அருட் கலாநிதி ஐ. ஹென்றி விக்டர்

## தொடக்கக் குறிப்புகள்:

கிறிஸ்தவ அடிப்படை வாதம், ஏனைய சமய அடிப்படை வாதங்கள் போன்று, சமயக் கலப்புக் (Syncretism) குறித்த அளவு கடந்த பயத்தினையும் அதைத் தொடர்ந்து கிறிஸ்தவர்களுக்கிடையே விலகிவாழும் (Ghettoism) மனப்பாங்கையும் வளர்ப்பதோடு, கிறிஸ்தவமல்லாத ஏனைய மறைகளையும் அவற்றின் கொள்கைகள், கோட்பாடுகளையும் கிறிஸ்தவ நற்செய்திப்பணிக்கு ஒரு தடங்கலாகவும் அச்சுறுத்தலாகவும் காணவும் தூண்டுகிறது. இதற்கு மாறாகப் பௌத்த கொள்கைகள் கோட்பாடுகள் கிறிஸ்தவ நற்செய்திப் பணிக்குச் சாதகமான வாகனங்கள் அல்லது கருவிகள் என்ற கண்ணோட்டத்தைக் கிறித்தவர்கள் மத்தியில் வளர்க்க முயற்சித்தவர்களுள் அருட் கலாநிதி லின் டீ சில்வா (1919 – 1981) குறிப்பிடத்தக்கவர்.

இவர் மெதடித்த சபையைச் சேர்ந்தவர். பௌத்த சமயத்தையும் அதன் கொள்கைகள், கோட்பாடுகளையும் நன்கு கற்றறிந்தவர். இலங்கையில் கிறிஸ்தவ, பௌத்த உரையாடலை வளர்த்தவர்களுள் ஒருவர். கொழும்பிலிருந்து வெளிவரும் உரையாடல் என்ற ஆங்கில காலாண்டுச் சஞ்சிகையின் தாபக ஆசிரியர். தனது சபையில் பணியாளர், ஆசிரியர், திருமறை மொழிபெயர்ப்பாளர் எனப் பல பணிகளை யாற்றியவர். கொழும்பிலுள்ள Ecumenical Institute for Study and Dialogue என்ற நிறுவனத்தின் இயக்குனராகப் பல ஆண்டுகள் சேவை புரிந்தவர்.

கிறிஸ்தவர்களின் ஒதுங்கி வாழும் தன்மையையும் மதம் மாற்றும் உத்வேகத்தையும் லின் டீ சில்வா அதிகமாகச் சாடினார். இவரைப் பொறுத்த மட்டில் சமயக் கலப்பைவிட விலகி வாழுதலே கிறிஸ்தவர்களுக்கு அதிக ஆபத்தானது. இப்பின்னணியில் உருவாகிய சில்வாவின் இறையியலில் "உரையாடல்" மையக்கருவாகின்றது. ஆதலால், ஆத்தீகத்தை ஆதரிக்கும் கிறிஸ்தவமும் நாத்திகப் போக்குடைய தேரவாத பௌத்தமும் உரையாடுமா எனப் பலர் சந்தேகத்தோடு வினாவுகின்ற போது, லின் டீ சில்வா அது முடியுமென வலியுறுத்தியது மாத்திரமல்லாமல் அவ்வுரையாடல் இரு சாராருக்குமே பயனுள்ளது எனவும் இடித்துரைத்துள்ளார்.

## பௌத்தர்களின் இறையியல் முக்கியத்துவம்:

இறைவன் பார்வையில் ஏனைய மறையடியார்களைவிடத் தாம் சிறப்பானவர்கள் அல்லது உயர்ந்தவர்கள் என்ற பரவலான கிறிஸ்தவ மனப்பாங்கை சில்வா சகிக்க மாட்டாதவராகக் காணப்பட்டார். கடவுள் பட்சபாதமற்றவர்: இறைவனுக்குப் "பிரியமானவர்கள்" (Favourites) கிடையாது.



படிப்பகம்

www.padippakam.com

இது சில்வாவின் உறுதியான நம்பிக்கை. ஆகவே, கடவுள் முன்னிலையில் கிறிஸ்தவர்களும் பௌத்தர்களும் - ஒரே வகையில் – முக்கியத்துவமானவர்கள் என்பது சில்வாவின் முடிவு.[1] இவருடைய இந்த முடிவிற்குக் காரணமாய் உள்ளது; மனிதப் படைப்பு, கடவுள் – மனிதன் உடன்பாடு, இறைஆவியின் அகிலத்துவம், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் செயற்பாடு போன்ற கிறிஸ்தவ கோட்பாடுகளே.[2]

அ) ''நமது சாயலாகவும் பாவனையாகவும் படைப்போமாக'' (ஆதியாகமம் 1:26) எனக் கூறுவதனை மேற்கோள் காட்டி மனிதர் (கிறிஸ்தவர்கள், உட்பட) அனைவரும் கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்டவர்கள்: ஆகவே, அனைவருமே இறைவனுக்கு முக்கியம் வாய்ந்தவர்கள் எனச் சில்வா வாதிட்டார்.

இங்கு ''கடவுளின் சாயல்'' எனப்படுவது கடவுள் - மனித உறவைக் குறிப்பிடுகின்றது என்பது அவர் நம்பிக்கை. இதன் படி அனைத்து மக்களும் -பௌத்தர்கள் உட்பட - ஏதோவொரு வகையில் கடவுளோடு உறவு கொண்டவர்கள் என்பதே. இந்தக் கடவுள் - மனித உறவை, இங்கு முதலில் ஏற்படுத்துவது கடவுள் எனவும் இவ்வுறவை கடவுள் அனைத்து மனிதரோடும் எவ்வித பேதமோ அல்லது பாரபட்சமோவின்றிச் செய்கின்றார் என்பதும் லின் டீ. சில்வாவின் வாதமாகும். இது மாத்திரமன்றி, இந்தக் கடவுள் மனித - உறவிற்கூடாகக் கடவுள் தம்மை மனிதருக்கு வெளிப்படுத்துகிறார் என்பதும், ஆதலால், இவ்வெளிப்படுத்தலை எந்த ஒரு சமய மரபிற்குள்ளும் நாம் கட்டுபடுத்த முடியாது: கட்டுப்படுத்தவும் கூடாது என்பதும் அவருடைய இறையியற் கொள்கையாகும்[3] மேலும், இக் கடவுள் மனித உறவை, கடவுள் தொடங்கி அதன் மூலமாக மனிதருக்குத் தம்மை வெளிப்படுத்துகின்ற போது, அவ்வெளிப்பாட்டிற்கு மாறுத்தரமளித்து படைத்தவனோடு அன்புறவினுள் உட்புகுவது மானுடர் அனைவருக்கும் இயற்கையானது, அடிப்படை மானிடத்தன்மையுமாகும். ஆகவே இத்தகைய இறை வெளிப்பாட்டிற்கு மாறுத்தரமளிக்கும் தன்மையை ஒரு சிலர், அதுவும் கிறித்தவர்கள், மாத்திரமே கொண்டுள்ளார்கள் என வாதிடுவது தவறு எனச் சில்வா இடித்துரைத்துள்ளார்.[4]

ஆ) கடவுள் - மனித உடன்பாடு என்ற கோட்பாடும் மனிதப்படைப்போடு இணைந்ததாகும். இது ஒரு குறிக்கப்பட்ட மக்களோடு மாத்திரமுள்ள ஒரு குறுகிய உடன்பாடல்ல; தெரிந்து கொள்ளப்பட்ட ''ஒரு'' இனத்தோடு மாத்திரம் செய்யப்பட்டதல்ல[5] கிறித்தவ திருமறை கடவுள் - மனித உடன்பாடு குறித்துப் பேசும்போது அதற்கு ஒரு அகிலத்துவத்தைக் கொடுத்துக், அனைத்து மக்களினங்களையும் அதனுள் அடக்குகின்றது எனச் சில்வா கூறியுள்ளார். இதற்குச் சான்றாகப் பல திருமறைப்பாடங்களையும் காண்பிக்கின்றார்.[6] இப்பாடங்களின் பின்னணியின் எல்லா மக்களையும் உள்ளடக்கும் ஒரு கிறித்தவ சிந்தனையுண்டு என்பது அவர் நம்பிக்கையாகும்.

இ) ''கடவுள் ஆவியானவர்; ஆதலால் அவரைத் தொழுபவர்கள் ஆவியிலும் உண்மையிலும் தான் அவரைத் தொழுதல் வேண்டும்'' (அருளப்பர் 4:24) என்னும் கூற்றில் இறை ஆவியின் அகிலத்துவத்தைக் காண்கிறார் லின் டீ. சில்வா. இறை ஆவி எங்குமுண்டு, அல்லது எங்குமுள்ளார். இவர் ஒரு தனிப்பட்ட சமயத்திற்கு மாத்திரமே உரித்தானவருமல்லர். இதுவே திருமறையின் சாட்சியமெனவும் திடமாகப் பகர்ந்துள்ளார்.[7]



படிப்பகம்

ஈ) மேற்கூறியதோடிணைந்ததே, இவ்வுலகில் உயிர்த்தெழுந்த கிறித்துவின் செயற்பாடாகும். டி. ரி. நைல்ஸ், நோர்மன் பிட்டின்ஞர், என்ரிக் பிரான்க் ஆகிய அறிஞர்கள் இவ்விடயத்தில் சில்வாவின் சிந்தனையைத் தூண்டியுள்ளார்கள் என்பதனை அவரே ஏற்றுக்கொள்கின்றார்.[8] சில்வாவைப் பொறுத்தமட்டில் கிறித்து வெறும் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுப் புள்ளி மாத்திரமல்ல, ரெமண்ட் பணிக்கரைப் போன்றே சில்வாவும் ''கிறித்துவை'' நசரேயனாகிய இயேசுவிலிருந்து வேறுபடுத்துகின்றார். ''கிறித்து'' என்ற மெய்ப்பொருளின் முழுமையும் நசரேயனாகிய இயேசுவிற்குள் அடக்கப்படவில்லை. ஊனுடல் எடுத்தலுக்கு முன்னரும் அதன் பின்னரும் கூட ''கிறித்துவின் சமூகம்'' உலகில் செயற்பட்டதாகக் கிறித்தவ திருமறை பறைசாற்றுகின்றது என்பது லின் டீ சில்வாவின் கருத்தாகும். அனைத்து மக்களோடும் இருந்த / இருக்கின்ற, செயற்பட்ட / செயற்படுகின்ற ''அண்டக் கிறித்துவை'' (Cosmic Uhrist) சில்வா கண்டார்.

மேற்கூறப்பட்ட நான்கு கிறிஸ்தவக் கோட்பாடுகளின் அடிப்படையில் மாத்திரமன்றி வேறு பல காரணங்களையும் மேற்கோள் காட்டி ஏனைய மறையடியார்களின் இறையியல் முக்கியத்துவத்தைச் சில்வா தெளிவு படுத்தினார். அவர் காட்டிய காரணங்களிலொன்று: மனித இனத்திற்காக மனித இனத்தவர் மத்தியில் இறைவன் செயற்பட்ட போது யூதர் அல்லாதவர்களும் அச்செயற்பாட்டில் பங்கு கொண்டுள்ளனர் என்பதற்கான சாட்சியங்கள் கிறிஸ்தவத் திருமறையில் நிறைய உண்டு என்பதே. மேலும், கிறிஸ்தவ திருமறையின்படி இயேசு ஏனைய மறையடியார்களை இறைச் செயற்பாடுகளுக்கு எதிரானவர்களாக நோக்கவில்லையென்பதுமாகும்.[9]

ஆதலால், லின் டீ சில்வாவிற்கு இலங்கை வாழ் பௌத்தர்கள் இறையியல் முக்கியத்துவம் பெற்றவர்கள். எனவே, இம் மக்களைத் தன் கரிசனைக்குட்படுத்தாது கிறிஸ்தவ இறையியல் இலங்கைக் கிறித்தவர்களுக்கு பொருத்தமற்றதென்பதே சில்வாவின் முடிவாகும். இது பொருத்தமற்றது என்பது மட்டுமல்ல, எம்மண்ணில் வேரூன்றாத வெறும் ''சாடித் தாவரம்'' எனவும் இதனைக் கருதினர். இதனால் இவர் இலங்கை வாழ் பௌத்தர்களுடன் உறவு கொண்டார்; உரையாடினார். இலங்கையிலுள்ள திருச்சபையும் அனைத்துக் கிறிஸ்தவ சபைகளும் பௌத்தர்களோடு உரையாடி உறவு கொள்ள வேண்டும் என்பது அவர் அறிவுறுத்தலாகும்.[10]

லின் டீ சில்வாவின் இந்த உரையாடலுக்கான அழைப்பு அவருடைய கிறிஸ்தவ இறையியலில் எவ்வகையான மாற்றங்களை ஏற்படுத்தியது என்பதனைப் பரிசீலனை செய்வதற்கு முன்னர் நாம் கணக்கிலெடுக்க வேண்டிய மற்றுமொன்றுண்டு. அது யாதெனில் லின் டீ சில்வா தம்முடைய வாதத்தைத் தொடர்ந்து நிலை நாட்டக் கிறிஸ்தவத் திருமறையைப் பிரயோகிப்பதே. சில்வாவின் இவ்வகையான இறை செயற்பாட்டில் பல உண்மைகள் தெளிவு படுவதோடு சில நன்மைகளுமுண்டு. அவையாவன: முதலாவது ஏனைய மறையடியார்களை உள்ளடக்குகின்ற மறைகள் சார்ந்த கிறித்தவ இறையியலை கிறித்தவத் திருமறைக்குப் புறம்பானதோ அல்லது எதிரானதோவென நிராகரிக்க முடியாது. அத்தகைய இறையியல்களை உருவாக்குகின்றவர்களைச் சமயக் கலப்பாளர்கள் எனத் தள்ளிவிடவும் முடியாது. கிறித்தவத் திருமறை ஏனைய சமய மரபுகளுக்கு முரண்பட்டதல்ல. அவற்றையும் அவற்றின் கொள்கைகள், கோட்பாடுகளையும் அழித்தொழிக்க எம்மை அது ஏவுகின்றது என்பதும் தவறான கருத்தாகும்.

இரண்டாவதாக, ஏனைய மறைகளுக்கு எதிராகவும், ஏனைய மறைகளை உள்ளடக்குகின்ற கிறித்தவ இறையியல்களுக்கு எதிராகவும் போர் தொடுத்துக் கிறித்தவத்

திருமறையின் பாடங்களின் செம்பொருளைத் தவிர்த்து மேலோட்டப் பொருள் மாத்திரம் காணும் கிறித்தவ இறையியல் முறைக்குச் சில்வாவின் அணுகுமுறை ஒரு பதிலடியாக் அமைகின்றது. அது மட்டுமன்றிப் பெரும்பாலான கிறிஸ்தவ அடிப்படை வாதிகள் கையாளும் கிறித்தவத் திருமறைப் பாடங்களுக்கு எதிரான பாடங்களையும் திருமறை உள்ளடக்கியுள்ளது என்பதையும், மேலும், இவ்வடிப்படைவாதிகள் கையாளும் கிறித்தவத் திருமறைப் பாடங்களுக்கு எதிராக பாடங்களுக்கு வேறு விளக்கவுரைகள் உண்டென்பதையும் சில்வா எமக்கு நினைவூட்டியுள்ளார். சில்வாவின் இப்புதிய அணுகுமுறையைப் பின்பற்றினால் கிறித்தவ திருமறையிலிருந்து ஒரு புதிய செய்தியை நாம் பெற்றுக்கொள்ளலாம். இச் செய்தி கிறித்தவமல்லாத மறையடியார்களை அவர்கள் கிறித்தவ சமயத்தைப் பின்பற்றாத ஒரே காரணத்திற்காக இறையரசிலிருந்தும் இறைவனுடைய மீட்புத்திட்டத்திலிருந்தும் முழுமையாக வெளித்தள்ளாது. ஆதலால், அத்தகையோரை உள்ளடக்கும் ஒருதன்மை பெற்றதாகக் கிறித்தவத் திருமறை நோக்க முடியுமென்பது லின் டீ சில்வாவின் நம்பிக்கையாகும். [11]

மேற்கண்ட ஏனைய சமயங்கள் குறித்த கிறிஸ்தவ இறையியல் கரிசனை ஓரளவுக்காயினும் புதியது என்பதனை நாம் முற்றிலுமாக நிராகரிக்க முடியாது. இவ்வடிப்படையில், புதிய வினாக்களுக்குப் பழைய வேதாகமத்தில் பதிலை வலிந்து எடுக்கமுடியாது ஆதலால், சில்வாவின் அணுகுமுறை குறித்த சிக்கல்களுமுண்டு. இது தொடர்பான வினாக்களை கிறிஸ்டர் ஸ்டெண்டால் கேட்டுள்ளார். இவருடைய கருத்தின் படி பல்வேறுபட்ட திருமறைப் பாடங்களை ஒன்றாய் இணைத்துச் சமயங்கள் சார்ந்த கிறித்தவ இறையியலை நாம் உருவாக்க முடியாது.[12] லின் டீ சில்வாவின் அணுகு முறை அத்தகையதாகத் தோற்றமளிப்பினும் அது திருமறைப் பாடங்களைத் தெரிந்தெடுத்து ஒன்றாய் இணைப்பதிலிருந்து வேறுபட்டது என்பதனைப் பின்னர் நாம் தெளிவுபடுத்தலாம். இது இப்படியிருக்க, கிறித்தவ அடிப்படைவாதத்தின் தாக்கம் அதிகமுள்ள புரட்டத்தாந்து கிறித்தவ சமூகத்திற்குள், அவர்களுக்குத் தம் இறையியல் கருத்துக்களைத் தெளிவுபடுத்த வேண்டியிருந்ததனால் லின் டீ சில்வா இவ்வாறு திருமறையிலிருந்து மேற்கோள்காட்ட வேண்டியுள்ளது என்பதனை நாம் புரிந்து கொள்வோம்.

லின் டீ சில்வா எப்பொழுதுமே கிறித்தவர்களுக்கும் பௌத்தர்களுக்கும் தெரிந்ததைக் கொண்டு தெரியாததை விளக்கினார். பொதுவாகப் புரட்டத்தாந்து கிறித்தவர்கள் தாம் எடுத்துள்ள முடிவுகளை நியாயப்படுத்துவதற்கும், எடுக்க வேண்டிய முடிவுகளை அறிந்து கொள்ளவும் திருமறைப் பாடங்களைத் தேடுகிறவர்கள். அங்கு அதனைக் காணாவிட்டால் அது இறைத்திட்டத்திற்குப் புறம்பானது என்பர். இது இவ்வாறிருப்பதால் லின் டீ சில்வாவின் அணுகுமுறை புரட்டத்தாந்து சமூகத்தினுள் ஒரு அடிப்படை தேவையையும் பூர்த்தி செய்கின்றது.

லின் டீ சில்வாவின் கிறித்தவ இறையியல் பொருத்தமானது. ஏனெனில், அது கிறித்தவர்களின் அடிப்படைத் தேவையொன்றைப் பூர்த்தி செய்கின்றது. இவருடைய இறையியல் அதன் பௌத்த சூழலில் வேரூன்றியுள்ளது. மேலும் அது கிறித்தவர்கள் தனித்திராமல் தாம் வாழும் சூழலோடு அவர்களை இணைத்துக் கொள்ளத் தூண்டுகிறது. கிறித்தவ நம்பிக்கை அது வாழும் சூழலில் ஊனுடல் எடுக்காவிடின் அது பயனற்ற நம்பிக்கையாகும். ஆதலால் சில்வாவின் அத்தகைய இறையியலைப் "பௌத்த களத்தில் கிறித்தவ இறையியல்" (Christian theology in the Buddhist frontier) எனவும் வர்ணிக்கலாம். மேலும், இத்தகையதொரு இறையியலின் முக்கிய கூறுகள் எவை என்பதனைப் பரிசீலனை செய்வதும் இங்கு பயன் தரக்கூடியதாகும்.

www.padippakam.com

பௌத்த களத்தில் கிறித்தவ இறையியல்:

ஒருவன் தன்மைய எண்ணக் கருவி லிருந்து விலகி மற்றைய மனிதர்களின் மைய எண்ணக் கருக்களைச் சந்திக்க முற்படுகின்றபோது, அவ்வநுபவத்திலிருந்து உருவாகும் இறையிலை மெக்ஸ் வொரன், "கள இறையியல்" (Frontier thelogy) என வர்ணிக்கிறார்.[13] லின் டீ சில்வாவின் இறையியல் இத்தகையவொரு "கள இறையியலே".

லின் டீ சில்வாவின் கள இறையியலை இங்கு விளக்குவதன் மூலம், இவருடைய இறையியல் வெவ்வேறு திருமறைப் பாடங்களை இணைப்பதனால் உருவாக்கியதொன்றல்ல என்பதும் உறுதியாகக்கூடும்.

சில்வா தம் இறையியல் உருவாக்கலில் மெக்ஸ் வொரன் கூறுவதையே பின்பற்றுகிறார். இதற்காக இவர் பௌத்த அடிப்படை அநுபவமான "திலக்கான" (tilakhana) அதாவது, துக்கம், அநித்தியம், அநாத்துமம் என்ற அந்த மூன்றினையும் உள்ளடக்கிய அநுபவத்திற்குள் பிரவேசித்தார். மனித இருத்தலின் இந்த மூன்று அநுபவக் கூறுகளே பௌத்தத்தின் ஆரம்பமுமாகும். ஏனைய பௌத்தக்கோட்பாடுகள் ஏதோவொரு வகையில் இந்த "திலக்கானவோடு" இணைந்தவையே.[14]

"திலக்கான" என்ற இந்தக் கோட்பாடு கிறித்தவ நம்பிக்கைகளுக்கு முரண்பட்டது போன்று தோற்றமளிக்கலாம். ஆயினும், சில்வாவைப் பொறுத்த மட்டில் இது இந்த உலகில் மனிதநிலையை வெளிப்படுத்துவது மட்டுமன்றி பௌத்தச் சூழலில் கிறித்தவ நம்பிக்கையை அறிவிக்க ஒரு இறையியல் கட்டமைப்பையும் வழங்குகின்றது.[15] மற்றுமோரிடத்தில் தன்னாட்டு மயமாக்கப்பட்ட (indigenisation) கிறித்தவ இறையியலை வழங்க "திலக்கான" உதவுமெனச் சில்வா பறைசாற்றியுள்ளார்.[16]

துக்கம், அநித்தியம், அநாத்துமம் என்ற இந்த அநுபவம் கிறித்தவ திருமறைக்குப் புறம்பானதல்ல என்பது இவருடைய நம்பிக்கையாகும். இவை ஒருங்கிணைந்து காணப்படும் இரண்டு திருமறைப்பாடங்கள்: சங்கீத 90 உம், ரோமர் 8: 18-25 உம் ஆகும்.[17]

"திலக்கான" என்ற கோட்பாட்டினுள் "அநாத்துமம்" என்ற கூறினையே லின். டீ. சில்வா பெருமளவில் ஆராய்ந்துள்ளார். இது குறித்த ஆய்வினை, *The Problem of the Self in Buddhism and Christianity*) என்ற நூல் வடிவில் 1975 இல் தந்தார். இவர் அநாத்துமத்திற்கு முக்கியத்துவம் கொடுத்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

முதலாவது, சில்வாவிற்கு, "திலக்கான" "வின் முக்கிய உதைப்பு "துக்கம்" "அநித்தியம்" ஆகிய கோட்பாடுகளை விட ",அநாத்துமம்" என்ற கோட்பாடே அதிக சிக்கலைக் கிறித்தவர்களுக்குக் கொடுக்கக் கூடியது. ஏனெனில், "ஆத்துமாவின் அழியாமை" ,கிறித்தவ சிந்தனையில் ஆழமாகப் பதிந்து காணப்படுகின்றது. ஆயினும், லின் டீ சில்வா, "ஆத்துமாவின் அழியாமை" கிறித்தவ மரபுக்குப் புறம்பானதொன்று எனவும், இது கிரேக்க மெய்யியலினூடாகத் தான் கிறித்தவ இறையியலுக்குள் புகுந்துள்ளது எனக் கூறினார்.[18] மாறாக, பௌத்த "அநாத்துவம்" எபிரேய சிந்தனையோடிணைந்தது என அவர் வாதிட்டார்.[19] இவரைப் பொறுத்த மட்டில் "அநாத்துமம்" கிறித்தவ அநுபவத்திற்கு உட்பட்டதெனவும், ஆதலால், கிறித்தவ அநாத்துமம் என்ற ஒரு கோட்பாட்டை சில்வா ஆதரித்தார் எனவும் நாம் நம்ப இடமுண்டு.

கிறித்தவ அநாத்துமத்தை சில்வா இரு வகையாகக் கருதினார். முதலாவது, இது ஒரு ஆன்மீக அநுபவம். இது "நான்" என்பதனை மறுத்தலும், ஒறுத்தலுமாகும். பௌத்த அல்லது கிறித்தவ ஆன்மீகத்தில் அடிப்படையாக இருப்பதும் இதுவாகும்.[20] இயேசு தம் சீடரிடம், "என்னைப் பின்



படிப்பகம்

www.padippakam.com

செல்ல விரும்புகிறவன், தன்னையே மறுத்து தன் சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப் பின் தொடரட்டும்'' (மத்தேயு 16:24) எனக் கூறியதில், லின் டீ சில்வா, ''ஆத்துமம் | அற்ற'' வாழ்விற்கானவொரு அழைப்பைக் காண்கிறார்.[21]

இரண்டாவதாக, மனிதனின் படைக்கப்பட்ட தன்மையில் ''அநாத்துமம்'' தெளிவு படுகிறது எனச் சில்வா நம்பினார். ஆதலால் மனிதனின் ''படைக்கப்பட்ட தன்மையும் (creatureliness), ''அநாத்துமமும்'' ஒன்றினையே குறிப்பதாகக் கூறினார். மனித வாழ்வின் ''துக்கமும்'' ''அநித்தியமும்'', மனிதனுடைய 'படைக்கப்பட்டவன்'' என்பதிலிருந்து, அல்லது அவனுடைய ''அநாத்துமத்திலிருந்து'' ஊற்றெடுக்கின்றது என வாதிட்டார். கிறித்தவ படைப்புக் கோட்பாடு ''ஒன்றுமில்லாமையிலிருந்து படைப்பு'' (Creatio ex Nihilo) எனக் கூறுவது தமக்குச் சாதகமாக இருப்பதனை சில்வா உணருகிறார். ஆதலால், ''படைக்கப்பட்டவன்'' என்ற கோட்பாடும் 'அநாத்துமம்'' என்ற கோட்பாடும் ஓரே உண்மையையே வெளிப்படுத்துகின்றது என்பது அவர் முடிவு.[22]

''அநாத்துமத்தை'' கிறித்தவத் திருமறையில் காணபதனால் சில்வா இரண்டு பயனடைகின்றார், முதலாவது, ''கடவுள் குறித்த பேச்சில்லாத'' தேரவாத பௌத்தம், ஆத்தீக சமயமான கிறித்தவத்தைச் சந்திக்குமிடம் சில்வாவினால் இனம் காணப்படுகிறது. இதனால், உரையாடல் தொடர இடமுண்டு என்பதனை அவர் குறிப்பிடுகின்றார்.

1873இல் கிறித்தவ பாதிரியாருக்கும் பௌத்த பிக்குவிற்குமிடையே நடந்த பாணந்துறை விவாதத்தில் கிறித்தவ பாதிரியார் டேவிற் டீ சில்வா பௌத்த அநாத்துமக்கோட்பாட்டினை நிராகரித்ததை நாம் நினைவு கூரலாம். ஆதலால் அவருக்கும் மெகித்துவந்த குணானந்த தேரோவிற்குமிடையே உரையாடல் தொடர முடியாதுவிட்டது. ஆனால் லின் டீ சில்வாவிற்கு இந்த இரண்டு மறைகளுக்கும், பௌத்தம் – கிறித்தவம், இடையே உள்ள பொதுவான கோட்பாடு இந்த ''அநாத்துமம்'' என்பது குறிப்பிடத்தக்கது.[23]

இரண்டாவது, சில்வா தொடர்ந்து உரையாடி கிறித்தவ நற்செய்தியை விளக்க அநாத்துமக் கோட்பாட்டினை ஒரு திறவு கோலாகப் பிரயோகிக்கிறார் ஆதலால், ''அநாத்துமம்'' நற்செய்தி அறிவித்தலுக்கு ஒரு தடங்கல் அல்ல. மாறாக, அது ஒரு புதிய வாசல் இவ்வாறு அநாத்துமத்தைத் திறவுகோலாகப் பிரயோகிக்கின்றபொழுது, பௌத்தமல்ல, கிறித்தவமே அநாத்துமத்தின் பூரணத்துவத்தை வெளிக்கொணர்கின்றது எனச் சில்வா வாதிட்டார்.[24]

அநாத்துமத்தின் பூரணத்துவத்தை வெளிக்கொணர்தலே லின் டீ சில்வாவின் முக்கிய பங்களிப்பாகும். இதன் மூலம் இவர் கிறித்தவ பௌத்த மறைகளின் முக்கிய தரிசனங்களை ஒருங்கிணைக்கின்றார்: அல்லது, இவர் பௌத்த தரிசனத்தின் கூறுகளுக் கூடாக கிறித்தவ செய்தியை அறிவிக்கின்றார் எனவும் நாம் கூறலாம்.

**அநாத்துமமும் கிறித்தவ நற்செய்தியும்:**

இலங்கையில் தேரவாத பௌத்தத்தின் முக்கிய பிரதிநிதியான வல்பொல ராகுல தேரோ கூறியுள்ளதாவது:

> பிள்ளை பெற்றோரில் தங்கியிருப்பது போன்று, தான் தங்கியிருத்தலுக்கும் தன் பாதுகாப்பிற்கும் மனிதன் கடவுளைப் படைத்துள்ளான். இக்கடவுளில் மனிதன் தன் பாதுகாப்பு, அரவணைப்பு ஆகியன வற்றிற்காகத் தங்கியுள்ளான்.[25]

இம்முறையில் தான் தேரவாதிகள் கடவுள் குறித்துள்ள அனைத்துப் பேச்சுகளையும் அணுகுகின்றனர். இச் சூழலில் ''அநாத்துமத்தை'' ஆதாரமாகக் கொண்டு, லின் டீ சில்வா கடவுளின் அவ



படிப்பகம்

www.padippakam.com

சியத்தையும் அவருடைய இருத்தலையும் மெய்ப்படுத்த முயன்றுள்ளார். பௌத்தம். அநாத்துமத்தின் முழுமையை வெளிக்கொண்டுவரவில்லை எனச் சில்வா கூறுகின்றபொழுது அவர் இதனையே குறிப்பிடுகின்றார்.

அநாத்துமம் உண்மையானால், சில்வாவைப் பொறுத்தமட்டில், கடவுள் அவசிமானவர். ஆதலால் அவர் கூறுவதாவது:

> கடவுளின் இருத்தலில் அநாத்துமத்தின் உண்மை அர்த்தமுள்ளதாகும், மனிதனை அநாததுமம்: ஆதலால், கடவுளின் அவசியம் மறுதலிக்கப்படக் கூடாது. அநாத்துமம் உண்மையிலும் உண்மை; ஆகவே கடவுள் உண்மையிலேயே அவசியமானவர்.[26]

கடவுள் இல்லாமல், அநாத்துமமான மனிதன் நம்பிக்கையிழந்தவனாவான்; நம்பிக்கையிழந்தவன் வாழ்வில்லாதவன். இவருடைய இச்சிந்தனைக்கு மேற்கோள் காட்டி பௌத்த மறையிலிருந்து ஒரு வாசகத்தைத் தந்துள்ளார். அதில் காண்பது:

> பிக்குகளே பிறவாதது ஒன்று உண்டு, உருவாகாதது உண்டாக்கப்படாதது, சேர்க்கப்படாதது: அப்பிறவாதது, உருவாகதது...இல்லாவிடில், இங்கு பிறந்த, உருவாகிய, செய்யப்பட்ட, சேர்க்கப்பட்டதிலிருந்து விடுபட வழி இராது. ஆனால் பிறவாதது, உருவாகாதது, உண்டாக்கப்படாதது. சேர்க்கப்படாதது உள்ளதால், பிறந்த, உருவாகிய, செய்யப்பட்ட, சேர்க்கப்படாததிலிருந்து இங்கு விடுதலையுண்டு.[27]

மேற் கூறியதிலிருந்து சில்வாவின் முடிவு:

> மனிதன் மெய்யாகவே அநாத்துமம் ஆயின், மனிதனுடைய மீட்பிற்கு கடவுள் அவசியமானவர். கடவுள் இல்லையாயின் அநாத்துமத்தின் விளைவு, இறுதியில் மனிதனின் ஒன்றுமில்லாமையே. கடவுள் உண்டானால், அநாத்துமத்தை உணருகின்றபோது அது ஒன்றுமில்லாமையையும் முழுமையையும் ஒருங்கே அநுபவிக்க எம்மைத் தூண்டும்.[28]

கடவுளின் அவசியத்தையும்[29] மனிதனின் அநாத்துமத்தையும் உறுதி செய்தால் அது எம்மைக் கிறித்தவ நற்செய்திக்கு இட்டுச் செல்லும் என்பது சில்வாவின் நம்பிக்கை. இந் நற்செய்தியில் மனிதனை மீட்க கடவுள் முதலடியை எடுத்து வைக்கிறார். இங்கு கடவுள் அருள் மாத்திரமே தேவையானதும், போதுமானதும். மனிதன் அநாத்துமமானதால் அவன் தன்னை மீட்கமுடியாதவன். மனிதன் ஒன்றுமில்லாதவன்: கடவுள் முழுமையானவர்.

பௌத்தர்களோடு உரையாடல்:

சில்வா இன்றைய உலகில் மறைகளின் பன்மைநிலை உண்மையெனக் கண்டார். மேலும் பௌத்தம் தன் மறைக்கு (கிறித்தவத்திற்கு) ஓர் அச்சுறுத்தலல்ல; மாறாக, தன் நம்பிக்கை ஒரு ஊக்கி என உணர்ந்த அவர், பௌத்தர்களுடனும் அவர்களுடைய நம்பிக்கையுடனும் உரையாடுகின்றார். நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி, இலங்கையில் கிறித்தவ பௌத்த உரையாடலுக்கு இவர் ஒரு முன்னோடி. இவர் இத்தகைய உரையாடலை ஆதரித்ததால் கிறித்தவர்களும் சில பௌத்தர்களும் கூட இவரைச் சந்தேகத்தோடு நோக்கினர்.

சில பௌத்தர்களுக்கு, சில்வாவின் உரையாடல் பௌத்தர்களை மதம்மாற்ற கிறித்தவர்கள் மேற்கொண்ட புது யுத்தியாகத் தென்பட்டது. இப்பயம் ஒரு முறை இவ்வாறு வெளிப்படுத்தப்பட்டிருந்தது '"Dialogue is a subtle invitation to the 'heathen' fly to walk into the 'Christian spider'"[30] மறுபுறத்தில் "உரையாடல் அழைப்பு" கிறித்தவ நற்செய்திப்பணியின் "மறுப்பு" எனவும், இது "சமயக் கலப்பு"க்கு இட்டுச் செல்லும் எனவும் கருதிச் சில கிறித்தவர்கள் அதனை



படிப்பகம்

www.padippakam.com

ஆதரிக்க அஞ்சினர்.[31] ''உரையாடல்'' கிறிந்தவத் திருமறைக்குப் புறம்பானது எனக் கூறும் கிறித்தவர்களுமுண்டு.

ஆயினும், காலங்கள் வேளைகளை நன்குணர்ந்திருந்த சில்வா, ''துக்ககரமான பேதங்கள் விவாதங்களின் காலம் ஓய்ந்து தற்பொழுது உரையாடலின் யுகம் ஆரம்பித்துள்ளது''[32] எனத் துணிந்து பறைசாற்றினார். உரையாடலின்யுகம் பிறந்துள்ளது என இலங்கையிலுள்ள திருச்சபைக்கு நினைவூட்டி, இறையியல் உருவாக்கத்தின் அணுகு முறை மாறுதலடையும் போது அதன் உள்ளடக்கமும் மாறுமெனச் சில்வா எதிர்பார்த்தார்.

இத்தகைய உரையாடல் மூன்று மட்டங்களில் நடக்கக் கூடுமென சில்வா கூறினார். அவையாவன: (1) பகுத்தறிதல் மட்டம் (2) அநுபவ மட்டம் (3) சமூக-அரசியல் அல்லது யதார்த்த மட்டம். உரையாடல் பகுத்தறிதல் மட்டத்தில் நடைபெறும் போது எண்ணக்கருக்கள் பரிசீலனை செய்யப்படும்; இதனால் வெவ்வேறு மறைக்கொள்கைகள், சடங்குகள், வாழ்வு வழிகள் அறியப்படும். லின் டீ சில்வா இம் மட்டத்தில் தான் பெரும்பாலும் செயற்பட்டார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அதுவே பௌத்தர்களின் ''திலக்கான'' கோட்பாட்டை அவர் புரிந்து கொள்ளவும் அக் கோட்பாட்டின் அடிப்படையில் நற்செய்திக்கு புதிய விளக்கம் தரவும் அவரைத்தூண்டியது.[33]

''ஒருவர் மற்றவருடைய ஆன்மீகத்தைத் புரிந்து கொண்டு அதனால் ஊக்குவிக்கப்பட்''[34] அனுபவ மட்டத்திலான உரையாடல் துணை புரிகின்றது. இம்மட்டத்திலான உரையாடலை இலங்கையில் தற்பொழுது காணமுடியவில்லை என்பது சில்வாவின் கவலையாகவிருந்தது. இதனால், பௌத்த தியானங்களால் இலங்கையில் உள்ள திருச்சபை எந்த விதமான நன்மையையும் எப்பொழுதுமே பெற்றதுமில்லை என்பதனை நாம் அவதானிக்க முடியும்.

சில்வாவின் இறுதிக் காலங்களில் சமூகத்தை உறவுகளால் கட்டி எழுப்பவேண்டிய தன் அவசியத்தை அவருடைய ஆக்கங்களில் வலியுறுத்தினார்; 77ஆம் ஆண்டு இனக் கலவரங்களுக்குப் பின்னர் இவருக்குள் இவ்வுணர்வு அதிகரித்தது. இதற்குச் சமூக அரசியல் மட்டத்தில், அதாவது, யதார்த்தமான உரையாடல் அவசியமெனச் சில்வா கூறிவந்தார்;[35] ஆயினும், இவர் தாமாக இதற்காக எவ்வித பங்களிப்பையும் தரத் தவறிவிட்டார்.

இப்படியிருக்க சில்வா இந்த மூன்று வகையான, அல்லது மூன்று மட்டத்திலான உரையாடல் குறித்துக் கூறியதாவது:

> அறிவு ரீதியான ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்த வெவ்வேறு மனங்களின் மோதல், ஆன்மிகத்தை வளம்படுத்த வெவ்வேறு உள்ளங்களின் சந்திப்பு, மனித வாழ்வின் தரத்தை உயர்த்த வெவ்வேறு கரங்கள் ஒன்றிணைதல் ஆகிய அனைத்தும் மானிட அநுபவங்களாகும். இவை அனைத்தும் ஒருங்கிணைந்தவை: இவற்றைப் பிரிக்க முடியாது.[36]

முடிவாக:

லின் டீ சில்வா கூறிய இந்த உரையாடலின் மூன்று மட்டங்களையும் நாம அவதானிக்கும் போது, இத்தகைய சமயங்களுக்கிடையேயான உரையாடல் உறவிற்குள் செல்லாத, அல்லது செல்ல விரும்பாத கிறித்தவர்கள், ஒரு பூரண, அல்லது மெய்யான மறைவாழ்வு வாழ முடியாது என்பது தெளிவுபடும். அது மட்டுமன்றி இலங்கையில் உருவாகும் அல்லது உருவாக்கப்படும் கிறித்தவ இறையியலில் ஒரு பௌத்த மணம் கமழ வேண்டும். நாம் முன்னர் கூறியபடி, சில்வாவினுடைய இறையியலின் பொருத்தம் அதன் பௌத்த கட்டமைப்பே; அது பௌத்தச் சூழலில் உருவாகியபடியால் இவரின் இறையியல் இலங்கைக்கு உகந்ததாகும் எனலாம்.



படிப்பகம்

www.padippakam.com

## அடிக்குறிப்புகள்

1. காண்க: ''The Theological Significance of People of Other Faiths'' in *Dialogue in Community: Essays in Honour of Stanley J. Samartha*, Edited by C. D. Jathanna, Mangalore: The Karnataka Theological Research Institute, 1982. p. 31
2. காண்க: மேற்படி. , p, 31 — 39
3. காண்க: மேற்படி. , p. 31
4. காண்க: மேற்படி. , p. 32
5. காண்க: மேற்படி.
6. அப்பாடங்கள் பின்வருவனவற்றையும் அடக்கும்: ஆதியாகமம் 9 : 9,12 ; ஆமோஸ் 9 : 7 ; உபாமகம் 23:7-9 ; இசையாஸ் 19:25 ; மலாக்கியா 1 : 11
7. Silva, ''The Theological Significance... '', *op.cit* , pp. 33 — 35.
8. காண்க: மேற்படி; p 35
9. காண்க: மேற்படி; pp. 42 — 45
10. காண்க: ''Dialogue in the Context of Sri Lanka Buddhism'' in *New Approaches to Inter-Faith Dialogue*, Edited by T. Dayanandan Francis, Sweden: The Church of Sweden Mission, 1980, இத்தகைய உரையாடலின் விளைவே இவருடைய மற்றுமோரு நூல்: *Creation, Redemption, Consummation in Christian and Buddhist Thought*, Chiangmai : Thailand Theological Seminary, 1964.
11. இவருடைய இக் கருத்து இவருடைய சகாவினால் நூல் வடிவம் கொண்டது குறிப்பிடத்தக்கது. காண்க. S. Wesley Ariyarajah, *Bible and People of other Faiths*, Geneva: WCC, 1986.
12. காண்க: Krister Steridahl, ''It took a miracle to launch the mission to the Gentiles'' in *Faith in the Midst of Faith*: *Reflection on Dialogue in Community*, Edited by S. J. Samartha, Geneva: WCC, 1977. P. 125.
13. காண்க: Nax Warren பின்வரும் நூலுக்கு எழுதிய முகவுரை: Kenneth Cragg, *Sandals at the Mosgue*: *Christian Presence Amid Islam* London: SCM Press Ltd., 1959 p. 11.
14. காண்க: Lynn De Silve, ''Thelogical Construction in a Buddhist Context' in *Asian Voices in Christian Theology*, Edited by Gerald H. Anderson, New York 1: Orbis Books, 1980. p 40F
15. காண்க: மேற்படி:, பக் 99.
16. காண்க: Lynn de Silva, ''Christian Reflection in a Buddhist Context'', in *Asian Struggle for FullHumanity*, Edited by Virginia, Fabella New York: Orbis Books, 1980. p. 97.
17. காண்க: மேற்படி.; பக் 99.



படிப்பகம்

www.padippakam.com

18. இது கொழும்பில் வெளியிடப்பட்டது. இந்நூலின் சுருக்கமும் கட்டுரை வடிவம் பெற்றது. காண்க: Lynn de Silva, "The Problem of the Self in Buddhism and Christianity", in *What Asian Christians are Thinking*, Edited by Dougls J. Elwood, Philippines: New Day Publishers, 1976, pp. 105 — 118.

19. காண்க: Silva, "Christian Reflections...", *op.cit.*, p. 99

20. காண்க: Silva, "The Problem of the Self...", *op cit.*, P. 112.

21. காண்க: மேற்படி., பக். 108.

22. காண்க: Lynn de Silva, "An Existential Understanding of the Doctrine of Creation in the Context of Buddhism, in *A Vision for Man: Essays on Faith, Theology and Society*, Edited by Samuel Amirtham, Madras: CLS, 1978, pp. 84 — 87

23. காண்க: Lynn de Silva and Neville Gunaratne, "Reviewing the Panadura Vade" in *Dialogue* (New Series) Vol. 1, No. 1, (January - April 1974), p. 17ff,

24. காண்க: Lynn de Silva, "Good News of Salvation to the Buddhists" in *International Review of Mission*, Vol.LVII, No. 228, (October 1968) p. 449.

25. Walpola Rahula, *What the Buddha Taught*, (Revised Edition), New York: Grove Press, 1974, p 51.

26. Silva, "The Problem of the Self...", *op.cit.* p. 117.

27. மேற்படி,

8. மேற்படி, பக், 118.

29. காண்க: Lynn de Silva, "Anatta and God" in *Dialogue*, (New Series) Vol. II, No 3, (November - December 1975), pp, 106 — 115;, Lynn de Silva, *Why Believe in God? The Christian Answer in Relation to Buddhism*, Colombo: Study Center, 1970.

30. சில்வா தம்முடைய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். Silva, "Dialogue in the Context of Sri Lanka Buddhism", *op. cit.* p. 90.

31. காண்க: Lynn de Silva "The Understanding and Goal of Dialogue," in *Dialogue*, (New Series), Vol. IV, No 1+2, (January - August 1977), p. 6

32. Silva "Dialogue in the Context of Sri Lanka Buddhism", *op.cit.* p. 90

33. காண்க: மேற்படி., p. 92

34. மேற்படி.

35. காண்க: மேற்படி., p. 93

36. மேற்படி.



படிப்பகம்

சிந்தனை
தொகுதி VI
இதழ் I & II, 1994

# திருக்குறளில் 'ஊழ்'

கலாநிதி நா. சுப்பிரமணியன்

## தோற்றுவாய்

இந்தியா உலகுக்கு அளித்த சிந்தனைச் சிகரங்களில் ஒன்று திருக்குறள். ''இந்த நூலுக்கு இணையாகச் சுட்டக் கூடிய மெய்யுணர்வுத் தொகுப்பொன்றை உலக இலக்கிய பரப்பிலே காண்பதரிது'' என்பது ஜெர்மனிய அறிஞர் அல்பர்ட் சுவைட்சர் அவர்களது கணிப்பு.[1] இந்நூல் தான் எழுந்த காலப்பகுதியிலே மரபாகப் பேணப்பட்டு வந்த வாழ்வியற் கூறுகளில் விழுமியவற்றைப் பேணிக் கொண்டது; பொருந்தாதவை எனத்துணிந்தவற்றைக் கண்டித்தது; மரபுசார் நடைமுறைகள், சிந்தனைகள் என்பவற்றிற் சிலவற்றை விமர்சிப்பதன் ஊடாக அக்காலப் பகுதியிற் புரட்சிகரமானவை எனத்தக்க எண்ணங்களை முன்வைக்கது. இவற்றின் மூலம் தமிழர் பண்பாட்டில் மட்டுமன்றி அனைத்திந்திய பண்பாட்டிலும் ஒரு திருப்புமுனை ஏற்படுத்திய நூலாகவும் அது திகழ்கின்றது. இவ்வாறு திருக்குறள் திருப்புமுனை ஏற்படுத்திய கூறுகளுள் ஒன்று 'ஊழ்' தொடர்பான சிந்தனை ஆகும். இதனைத் தெளிவுறுத்தும் முயற்சியாக இந்த ஆய்வுக் கட்டுரை அமைகிறது.

இவ் வகையில் முதற்கண் 'ஊழ்' என்ற சொல் குறித்து நிற்கும் பொருண்மை நமது கவனத்துக்கு உரியதாகிறது.

## ஊழ் – பொதுவிளக்கம்

இச்சொல்லுக்கு, பழைமை, பழவினை, பழவினைப்பயன், முறைமை, குணம், தடவை, முதிர்வு, முடிவு, பகை, மலர்ச்சி, சூரியன் ஆகிய பொருள்களை அகராதியாளர் குறிப்பிடுவர்.[2] பொது வழக்கிலே இச்சொல் செயலுக்கும் அதன் விளைவுக்கும் உள்ள உறவுநிலை (காரண காரியத் தொடர்பு) என்ற அடிப்படையில் பழவினைப்பயன் என்ற பொருளிலே மிகுபயிற்சி பெற்றுள்ளது. இதனை 'ஊழ்வினை' எனவும் வழங்குவர். இதனை அடிப்படையாகக் கொண்டு ஒரு கோட்பாடே உருவாகியுள்ளது. அதற்கு ஊழ்வலிக் கோட்பாடு என்று பெயர். இந்திய தத்துவவியலார் இதனை, 'கர்மம்', 'விதி' ஆகிய வட சொற்களாலும் வழங்குவர். ஒருவரது பிறப்பு, வாழ்க்கை நிலை, செயலூக்கம் இன்பதுன்ப அனுபவங்கள் ஆகிய அனைத்தும் அவரது முற்செயல்களின் விளைபொருள்களே என்பது இக்கோட்பாட்டின் தெளிபொருள்.

முற்செயல் என்பது (ஒரு பிறப்பில்) தொடக்கத்தில் செய்தவற்றையும் சுட்ட வல்லது. ஆனால் 'பிறப்பு' முதலிய அனைத்து நிலைகளுக்குமான முற்காரணத்தை ஒரு பிறப்பில் காட்டுவது சாத்தியமில்லை என்ற சிந்தனையின் அடிப்படையில் முற்பிறவி என ஒன்று இருந்திருக்க வேண்டும் என்ற கருத்து உருவானது. ஒரு

www.padippakam.com

வர் தாம் செய்யும் செயற்பலன் அனைத்தையும் அப்பிறப்பில் துய்த்தல் சாத்தியமில்லை என்ற எண்ணம் மறுபிறப்பு என்ற சிந்தனையைத் தந்தது. இவ்வாறு செயலின் விளைவு – வினைப்பயன் – என்ற எண்ணமும் மறுபிறப்பு என்ற கருத்து நிலையும் ஒன்றுடனொன்று சார்ந்து சங்கிலித் தொடர்போல – அமைந்துள்ளன. ஊழ்வலிக் கோட்பாட்டின் விளக்கநிலை இது.

''ஊழ்வலிக் கோட்பாடு அனைத்தும் பழவினைகளால் முதலிலேயே தீர்மானிக்கப் படுகின்றன என்பதை விளக்குவதாகும்......

வாழ்க்கையில் சிலர் எவ்வளவோ முயற்சி செய்தும் வெற்றி பெறாமல் துன்புறுகின்றனர். சிலர் பெருமுயற்சி செய்யாமலே பெரும்பயன் எய்துகின்றனர். இதற்கு முன்வினைப்பயன்தான் காரணம் என்று கூறவேண்டியிருக்கிறது''.[3] என இக்கோட்பாட்டுக்கு விளக்கம் தருவதோடு அதனை நியாயப்படுத்தவும் முற்படுகின்றது.

வாழ்வியற்களஞ்சியம்.

ஊழ் என்ற சொல் தொல் தமிழ் மரபில் வழங்கி வந்த பொருட்பரப்பை ஆராய்ந்துள்ள டாக்டர். பெ. சுப்பிரமணியன் அவர்கள், அச்சொல் தொடக்கத்தில் உலகியல் நிலையில் இயற்கைப் பொருள்கள், நிகழ்வுகள் என்பவற்றைச் சுட்டி நின்று, நாளடைவிலே (பழ) வினை என்ற பொருள் நிலையை எய்தியது என்ற ஊகத்தை முன்வைத்துள்ளார். அதனை அவரது சொற்களிலேயே காண்போம்.

> 'ஊழ் என்னும் சொல் தொடக்கத்தில் உலகியல் நிலைகளில் இயற்கைப் பொருள்களை, நிகழ்வுகளைச் சுட்டும் பொருளில் வழங்கியது. பெரும் பான்மையும் மலர்தல், முதிர்தல், தோன்றுதல், சிறத்தல் ஆகிய பொருட்களில் ஆட்சி பெற்றது......... மலரும் நிலையிலுள்ள மலரின் செவ்வியையும் கனியும் நிலையிலுள்ள பழத்தின் பருவத்தையும் ஊழ் என்ற சொல் சுட்டுவதைச் சங்க நூல்களில் காணமுடிகிறது,

ஊழ் என்பதற்கு பான்மை – தன்மை ஆகிய பொருள்களும் உள்ளன. ஒரு பொருளின் இயல்பை உணர்த்தும் வகையில் இச்சொல் பான்மை, மரபு, முறை ஆகிய பொருட்களில் வழங்கியிருக்கலாம். ஒரு பொருளின் உடனாகவே நுண்மையாக இருந்து உரிய பருவம் வரும்போது வெளிப்படும் ஆற்றலைக் குறிக்கும் சொல்லாக இதனைக் கொள்ளவும் இடமுண்டு.

...உழை, உழைத்தல், பால் ஆகிய சொற்களும் ஊழ் என்னும் சொல்லுடன் நெருங்கிய உறவுடையன. உழை, பால் என்னும் பொருளுடையன. ஆகவே ஒன்றின் பக்கத்தில் உடனாகவே இருந்து உரிய காலத்தில் வெளிப்படும் ஆற்றலை ஊழ் எனக்குறிப்பிட்டனர், வித்து நிலையிலிருந்து விளைவு நிலைக்குவரும் பாவத்தினைக் குறித்த இச்சொல் காலப் போக்கில் விளைவிற்குரிய ஆற்றலுக்கு ஆகுபெயராய் மாறி ஊழாற்றலைக் குறித்துள்ளது.

...நிகண்டுகள் கூறும் பொருளடிப்படையில் காணும்போது ஊழ் என்னும் சொல் தன்மை, இயல்பு, மரபு ஆகியன போன்ற பண்புப் பெயர்ச் சொல்லாக இருந்து செயலைக்குறிக்கும் வினை, விதி, தருமம் ஆகிய பொருள்களை உணர்த்துவதாக மாறியிருக்கவேண்டுமென்று தெரிகிறது.''[4]

இவ்வாறு பொருள்மாற்றம் எய்திவந்த ஊழ் என்ற சொல் குறித்து நிற்கும் வினை (விதி – கருமம்) என்ற பொருண்மைக்கும் ஒரு நீண்டவரலாறு உளது. வடமொழியிலே காலமுதன்மையுடையதான இருக்கு வேதப்பாடலில் இப்பொருண்மை தோற்றம் கொள்ளத் தொடங்கி விட்டது. உடல் அழியும் காலத்திலே உயிர் அழிவதில்லை



படிப்பகம்

www.padippakam.com

எனவும் அது தான் செய்த செயல்களின் இயல்புக்கு ஏற்ப நரகம் அல்லது மோட்சம் எய்துகின்றதெனவும் அக்கால மக்கள் நம்பினர்.[5] வேதஇலக்கியப்பரப்பின் இறுதிப் பகுதியான உபநிடதங்களில் செயலுக்கு ஏற்ப மறு பிறப்பு அமைகின்றது என்ற கருத்து நிலை உருவாகிவிட்டது.[6] பின்னர் உருவான சமய - தத்துவப் பிரிவுகள் பல வற்றிலும் இச் சிந்தனை செல்வாக்குச் செலுத்தியது. இப்பிரிவுகள் பலவற்றிற்கும் பொதுவான அடிப்படைக் கோட்பாடுகளிலொன்றாக பழவினைக்கோட்பாடு – கர்மக் கோட்பாடு – அமைந்தது. சைவம், வைணவம், சமணம், பௌத்தம், சாங்கியம், யோகம், மீமாம்சம், வேதாந்தம் ஆகியன மறுபிறப்புண்மையை ஒப்புக் கொள்கின்றன.[7]

இவ்வாறு உருவாகி நிலைத்த மேற்படி கோட்பாடு, தமிழர் பண்பாட்டிலும் தொல் லிலக்கியமான சங்கஇலக்கிய காலப்பகுதியிலேயே இடம்பெறத் தொடங்கிவிட்டது.

> ''அருளும் அன்பும் நீங்கி நீங்கா
> நிரயம் கொள்பவர்'' (புறநானூறு :5)

> ''மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த
> தென்புலங்காவலில் னொரீகிப் பிறர்
> வன்புலங்காவலின் மாறியான்
> பிறக்கே'' (புறநானூறு: 71)

> ''நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
> செல்வம் அன்றுதன் செய்வினைப்
> பயனே'' (நற்றிணை: 210)

முதலியவற்றில் இதனை அவதானிக்கலாம். இவ்வாறு இடப்பெறத்தொடங்கிய இக் கோட்பாட்டுச் சிந்தனை நாளடைவிலே 'ஊழ்', 'ஊழ்வினை' ஆகிய சொற்களைத் தனக்கு உடைமை ஆக்கிக் கொண்டது.

இவ்வாறான வரலாற்றுப் போக்கில் திருக்குறள் கூறும் 'ஊழ்' குறிக்கும் பொருண்மை யாது? என்பது நமது முன் நிற்கும் முக்கிய வினாவாகும்.

## திருக்குறள் கூறும் 'ஊழ்' அதிகாரம்

திருக்குறளில் ஊழ் என்ற தலைப்பிலே தனி அதிகாரம் உளது. அறத்துப்பாலின் இறுதியில் அது அமைந்துளது. இந்த அதிகாரத்துக்குப் புறம்பாகவும் 'ஊழ்' என்ற சொல்லாட்சி உளது. (உ+ம் குறள் 620)

ஊழ் அதிகாரம் சுட்டிநிற்கும் பொதுப் பொருண்மை தொடர்பாகவும் அதில் அமைந்துள்ள குறள்களின் பொருண்மைகள் தொடர்பாகவும் உரையாசிரியர்கள், ஆய்வாளர்கள் ஆகியோரிடத்து முரண்பாடுகள் நிலவுகின்றன. பண்டைய உரையாசிரியர்களான பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார் ஆகியோர் இந்த அதிகாரம் பழவினை - ஊழ்வலிக்கோட்பாடு - தொடர்பானது என்று கொண்டனர்

> ''அஃதாவது இருவினைப்பயன் செய்தவனையே சென்று அடைதற்கு ஏதுவாகிய நியதி.''[8]

எனப் பரிமேலழகரும்,

> ''ஊழாவது முன்பு செய்தவினை பின்பு விளையும் முறை''[9]

என மணக்குடவரும்,

> ''ஊழர்வது போன சென்மத்தின் வினைப் பயனைச் சொல்லியது''[10]

எனப் பரிதியாரும் இந்த அதிகாரத்துக்கு அறிமுகக் குறிப்புத் தந்துள்ளனர். இவ்வாறு இவ்வதிகாரத்தை வினைப்பயன் கோட்பாடுடன் தொடர்புபடுத்தி அமையும் கருத்து நிலை பிற்கால உரையாசிரியர்கள் பலராலும் ஆய்வாளருள் ஒருசாராராலும் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டுப் பேணப்பட்டு வருகின்றது. பிற்கால உரைகாரரர், ஆய்வாளர் என்போருள் ஒரு சாரார் 'வினைப்பயன்' என்பதற்குப் பதிலாக பொதுவாகப் 'உலக முறைமை' 'உலகச் சூழ்நிலை' 'அறம்' என்பனவாகப் பொருள் கொள்வர், அத்தகு சிந்தனைகளிற் சில :-



படிப்பகம்

www.padippakam.com

''ஊழ் என்பது உலகச் சூழ்நிலை. அஃது ஒருவனுக்கு நன்று தீது ஆகிய இரு திறமும் செய்யவல்லது.'' 11

என்பர் டாக்டர் வ. சுப. மாணிக்கம்

''ஊழ் முறைமை; உலகியல் நிகழும் முறைமை:

உலகியலின் இயற்கை நிகழ்ச்சி, அதாவது பொருளும் காலமும் செயற்படும் தகுதியும் சுற்றுச்சார்பின் தகுதியும் நம் எண்ணத்தின் முயற்சியின், செயலின் தகுதிக்கு ஒத்துவருதலும் ஒவ்வாது வருதலுமாம்............மக்களின் எண்ணம் முதலியவற்றினுள் அடங்காமல் அப்பாற்பட்டு இயற்கையாக நிகழும் நிகழ்ச்சி ஊழ் எனப்படும். அந்நிகழ்ச்சியின் போக்கில் நாம் செய்வன ஆகும். அதற்கெதிரிடையாகச் செய்வன ஆகா'' 12

என்பது புலவர் குழந்தையவர்கள் சிந்தனை.

''ஊழ்வேறு. ஊழ்வினைவேறு. ஊழ் என்பது முறைமை. மறுபிறப்புக் கொள்கைக்குச் செல்வாக்கு ஏற்பட்ட பின்னர், முற்பிறப்பு வினையின் பயன் இப்பிறப்பில் முதிர்வதை முறைமையின் வெளிப்பாடாகக்கண்டு அதனை ஊழ்வினைப் பயன் என்றனர். பழவினையை ஊழ்வினை என்றாரேயன்றி ஊழ் என்றார் இல்லை. 13

என ஊழ், ஊழ்வினை ஆகிய இரண்டின் பொருள்நிலை வேறுபாட்டினை விளக்கும் டாக்டர் எஸ். ராமகிருஷ்ணன் அவர்கள்.

''...வள்ளுவத்தின் ஊழ், அறிவிற்கு அப்பாற்பட்ட ஒரு கருத்து. (Mystic-Conception) அதில் இறைமை உண்டென்பது வள்ளுவரின் குறிப்பு. பல இயற்கை நிகழ்ச்சிகளின் முறைமையை விஞ்ஞானரீதியாகப் புரிந்து கொள்ள முடியாத சமுதாயத்தில் தோன்றிய கருத்து இது... உலகத்தில் அறம் நிலவுகிறது. அதுவே இயற்கை; அதுவே ஊழ் அல்லது தெய்வம்...''14

என்ற கருத்தை முன்வைக்கிறார். அத்துடன் வள்ளுவரின் ஊழ் என்பதைச் 'சூழ்நிலை' என்ற பொருளில் விளங்கிக் கொள்வது பிழையாகும் என்றும் கூறுகிறார். 15

டாக்டர் மு. வரதராசனார், ''உலகத்தின் பொது ஒழுங்கான ஆட்சிமுறையை ஊழ் எனச் சான்றோர்கள் குறித்தனர்'' என்பர். 16. ''ஊழும் வினைப்பயனும் வேறு வேறு ஆற்றல்கள; இவையிரண்டிற்கும் ஒரு நொய்ய தொடர்புண்டு'' என்பது பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையாரின் சிந்தனை. 17

மேற்படி சிந்தனைகளின் ஏற்புடைமையைத் தெளிந்து கொள்வதற்கு முதற்கண் ஊழ் அதிகாரத்தின் குறள்களை நேரே அணுகவேண்டும்.

இந்த அதிகாரத்தின் முதல் மூன்று குறள்கள், ஒருவரது செயலூக்கம், அறிவாற்றல் என்பன ஊழின் அடிப்படையிலேயே தொழிற்படுவன என உணர்த்துவன.

நல்ல ஊழ் (ஆகூழ், ஆகலூழ்) அமைந்தால் செயலூக்கம் மிகும்; அறிவு விரித்து தொழிற்படும். தீய ஊழ் (போகூழ், இழவூழ்) அமையின் சோம்பல் உண்டாகும்: அறிவு சுருங்கிப் பேதைமை ஏற்படும். (1, 2) நுட்பமான நூல்கள் பலவற்றைக்கற்றலும் (ஊழானாகிய) உண்மையறிவே மிகுந்து தொழிற்படும்.

அடுத்த இரண்டு குறள்களில், உலக இயல்பிற் காணப்படும் முரண்பாடுகளுக்கு ஊழே அடிப்படை என்பது உணர்த்தப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

உலகம் இருவேறுபட்ட இயல்புகள் கொண்டது. சிலர் செல்வமுடையோராயுள்ளனர்; வேறு சிலரிடம் கல்வியறிவு உள்ளது. (4)

செல்வம் சேர்ப்பதான முயற்சிக்கு நல்ல வழிகள் எனப்படுபவை தீமைபயத்தலும் உண்டு; தீய வழிகள் எனப்படுபவை நன்மை பயத்தலும் உண்டு. (5)

அடுத்து அமைந்துள்ள இரண்டு குறள்களில், ஊழால் தரப்படுவனவற்றை விலக்கவோ அன்றேல் தரப்படாதவற்றை அநுபவிக்கவோ முடியாது என்பது கூறப்பட்டுள்ளது.

(ஊழின்படி) அநுபவத்துக்குரியன அல்லாதவற்றைப் பேணிக்காத்தாலும் அவை பயன்படப்போவதில்லை. அநுபவித்தேயாக வேண்டியவற்றைப் புறத்தே விலக்கினாலும் அவை நீங்கமாட்டா. (6)

கோடி கோடியாகத் தொகுத்து வைத்திருந்தாலும் ஊழ்(வகுத்தான்) வகைப்படுத்தித்தந்த முறையிலன்றி அவற்றை அநுபவித்தல் சாத்தியமில்லை. (7)

அடுத்த குறள் வறியவர்கள் துறவிகளாகாமைக்குக் காரணம் ஊழ் என்பதை உணர்த்தும். நுகர்தற்குரிய பொருளற்ற வறியோர் (ஊழானாகிய) அநுபவிக்க வேண்டிய துன்பங்களை அநுபவித்துக் கழிக்கவேண்டிய நிலை காரணமாகவே துறவுபூண முடியாதவர்களாய் உள்ளனர். அல்லாவிடின் துறவு பூண்டிருப்பார். (8)

அடுத்தகுறள் ஊழினால் வரும் இன்பதுன்ப அநுபவங்களால் மன அமைதி பாதிக்கப் படலாகாது என்பதை உணர்த்துவது.

(ஊழினால்) நன்மை வரும்போது அவற்றை விலக்காது அநுபவிப்போர் துன்பம் வரும்போது மட்டும் அதனைத் துடைத்தற்கு வழிதேடி அல்லல் உறுவது ஏன்? (9) என்ற வினாவில் மேற்படி அநுபவங்களால் பாதிக்கப்படாத நடுநிலை உளப்பாங்கு அவசியம் என்பது உட்பொருளாக உள்ளது.

இறுதிக்குறள் ஊழின் வல்லமை பேசுவது; அதனை விலக்குவது சாத்தியமில்லை என்பதை உணர்த்துவது.

> ஊழைவிடப் பெருவலியுடையனவாக யாவுள?
>
> ஏதாவது உபாயத்தால் அதனை மீறுதற்கு முற்படும் பொழுதும் அது (மீறப்பட முடியாதவகையில்) தானே முன் வந்து அநுபவத்துக்கு உரியதாக அமையும். (10)

மேற்கண்ட குறள் விளக்கங்கள் பெரும்பாலும் பரிமேலழகர் உரையை ஒட்டியே தரப்பட்டுள்ளன. சில குறள்களுக்கு உரை கொள்வதில் பரிமேலழகருடன் ஏனையோர் பலர் முரண்படுகின்றனர். மூன்றாம் குறளில் அமையும் 'உண்மை அறிவு' என்ற தொடருக்கு பரிமேலழகர் தரும் உரை.

'ஊழானாகிய பேதைமையுணர்வு' [18] என்பதாகும். மணக்குடவர்,

'இயல்பாகிய அறிவு' [19]

எனவும, புலவர் குழந்தை அவர்கள்,

'இயற்கை அறிவு' [20]

எனவும் பொருள் கொள்வர். அதிகாரம் ஊழ்பற்றியது ஆதலின் பரிமேலழகர் ஊழடன் உண்மைக்கு இயைபு காண்கிறார் என ஊகிக்கலாம். புலவர் குழந்தையவர்கள் ஊழ் என்பதை இயற்கை நிகழ்ச்சி என்பதோடு இணைத்துப் பொருள் கொள்பவர் என்பதால் உண்மையை இயற்கை எனப் பொருள் கொண்டார் எனலாம்.

'இருவேறுலகத்தியற்கை' என்ற நான்காம் குறளின் தொடருக்கு பரிதியார் சுட்டும் 'இரண்டு வகைப்படும் செல்வம்' என்ற கருத்து பொருந்துமாறில்லை என்பதை முனைவர் இரா. சாரங்கபாணி அவர்கள் தக்கவாறு மறுத்துள்ளார்.[21]

ஏழாவதாகிய 'வகுத்தான் வகுத்த வகை' என்ற குறளில் 'வகுத்தான்' என்



படிப்பகம்

www.padippakam.com

பதற்குப் பரிமேலழகர் 'தெய்வம் எனப் பொருள் கொண்டார்.[22] தெய்வம் என்பதால் அவர் ஊழையே குறித்தார் என அமைதி கொள்ளலாம். 'வகுத்தான்' என்பதற்கு திருக்குறளார் முனுசாமி அவர்கள்,

> 'இக்குறட்பாவில் ஊழின் அமைப்பைக் கூறவந்த ஆசிரியர் திருவள்ளுவனார் அந்த ஊழினை உருவகமாகச் சொல்லி 'வகுத்தான்' என்று உயர்திணையாகக் கூறினார். இது ஒரு மரபு. அப்படி ஒருவன் இருந்து கொண்டு வகுத்து அமைக்கிறான் என்பது பொருளல்ல... 'காமம் என்ற உணர்ச்சியைக் காமன் என்று சொன்னது போல, இயற்கையின் நிகழ்ச்சியினைப் பகுப்பு—வகுப்பு முறையினை உருவகப்படுத்தி 'வகுத்தான்' என்று கூறினார்'[24]

என விளக்கம் தருவர். வகுத்தான் என்பதற்கு 'அரசன்' எனப்பொருள் கொள்வோரும் உளர் எனச்சுட்டும் முனைவர் இரா. சாரங்கபாணியவர்கள், ஊழ் அதிகாரமாதலின் இயற்கை அல்ல ஊழ் என்று 'வகுத்தானுக்குப்' பொருள் கொள்வதே இயல்பாகும் என்று கூறி மேற்படி முனுசாமி அவர்களின் பொருள் தெளிவுடையது என்பர்.[25]

மேலே நோக்கப்பட்ட பத்துக் குறள்களிலும் எவ்விடத்திலேனும் வினை, ஊழ்வினை' கருமம் ஆகிய சொற்கள் இடம் பெறவில்லை என்பதும் பதிலாக இயற்கை (4) பால் (6 - பரியினும் ஓவாவாம் பாலல்ல ......) ஆகிய சொற்கள் இடம்பெற்றுள்ளமையும் நமது கவனத்துக்குரியதாகும். ஊழ் வினை வேறு, வள்ளுவர் சுட்டிய ஊழ்வேறு என அறிஞர் சிலர் கருதியதற்கான அடிப்படைகளில முக்கியமானவை இவை. தமிழர் பண்பாட்டில் பாரம்பரியமாக நிலவிவந்த ஊழ் என்ற சிந்தனையோடு ஒட்டி அவர்கள் பொருள் கொள்ள விழைந்தமை புலனாகின்றது. அப்படிப் பொருள் கொள்வது ஆய்வு முறைமைக்கு ஒத்ததே ஆயினும் அவ்வாறு கூற்முற்படும் பொருண்மைகள் வள்ளுவத்துக்குப் பொருத்தியுள்ளனவா என்பதே நம்முன் நிற்கும்வினா.

வள்ளுவர் கூறும் ஊழ் என்பது பொதுவான ''உலகச் சூழ்நிலை'' எனக் கொள்ள முடியாது என்பது டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன் அவர்களது கருத்தால்[26] தெளியப்படும். அவர் வள்ளுவரின் ஊழிலே தெய்வம் என்ற அம்சமும் இணைந்துள்ளதாக - முறைமையில் இறைமையும் இயைந்ததாகத்தரும் விளக்கம்[27] இதனைத் தெளிவுறுத்தும்.

டாக்டர் மு. வரதராசன், புலவர் குழந்தை ஆகியோர் சிந்திக்க முயன்றுள்ள 'உலகியல் முறைமை' என்ற எண்ணக் கருவை டாக்டர் எஸ் இராமகிருஷ்ணன் சமுதாய வரலாற்று நோக்கில் தெளிவாக வளர்த்தெடுத்துள்ளமை தெரிகிறது. அவர் வள்ளுவர் கூறும் ஊழை, அறிவிற்கு அப்பாற்பட்டதும் இறைமை உள்ளதும் உலகத்தின் அறம் எனக் கொள்ளத்தக்கதுமான 'முறைமை' என விளக்கம் தந்துள்ளார். அவர் ஆராய்ந்து தெளிவுபடுத்திய முறையில் வள்ளுவரின் ஊழுக்கு அப்படி ஒரு கருத்துப்பரிமாணத்தைக் கொடுக்கலாம். ஆனால் அது வள்ளுவத்தை உரிய வகையில் விளங்கிக் கொள்வது ஆகுமா என்பதே இங்கு எழும் வினாவாகும்.

ஏனெனில், வள்ளுவருக்கு ஊழ்வலிக் கோட்பாடு தொடர்பான அறிவு இருந்திருக்கிறது. அவரே பல சந்தர்ப்பங்களில் வினைப்பயன், மறுமை, மறுபிறப்பு என்பன தொடர்பாகப் பேசியுள்ளார்.

> ' தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
> வீயா தடியுறைந் தற்று'' (208)

> ''அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை இருள் சேர்ந்த
> இன்னா உலகம் புகல் (243)

> ''பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
> நிலையாமை காணப் படும்'' (349)



படிப்பகம்

முதலிய சில குறள்கள் இதற்குச் சான்றாகச் சுட்டத் தக்கன.

இவ்வாறு செயலுக்கும் அதன் விளைவுக்கும் உள்ள தொடர்பை நன்கு அறிந்திருந்த வள்ளுவர் 'ஊழ்' என்பதால் மனிதரைக் கட்டுப்படுத்தும் பிறிதொரு 'முறைமை' பற்றிக் கூறவந்தார் என்பது எந்த அளவுக்குப் பொருந்தும்? ஊழ் என்பதோடு வினை என்பதை இணைத்துக் கூறவில்லை என்பதால் ஊழ்வேறு, ஊழ்வினைவேறு என்று வேறுபடுத்தித்தான் பொருள் கொள்ள வேண்டுமென்ற கட்டாயம் உள்ளதா?

வள்ளுவர் வினைப்பயனைப்பற்றிப் பேசியுள்ளார்; கடவுள் பற்றியும் பேசியுள்ளார் (கடவுள் வாழ்த்தில்). அறம் என்பது பற்றி தனி அதிகாரம (அறன்வலியுறுத்தல) ஒன்றை அமைத்துள்ளார். மேலும் இல்லறம், துறவறம் என்றெல்லாம் பல்வேறு வகைகளில் அவரது அறம் பற்றிய சிந்தனைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு கூறியவற்றுக்கெல்லாம் புறம்பாக இறைமையுடன் 'இணைந்ததான ஒரு உலக அறம்' - 'முறைமை' என்பது பற்றி அவர் தனியாக ஊழ் அதிகாரத்திற் பேசவந்தார் என்று கொள்வதற்கு அவசியம் இருப்பதாகத் தெரியவில்லை. அதுவும் டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன் சிந்திப்பதுபோல 'அறிவுக்கு அப்பாற்பட்ட ஒரு கருத்து (Mystic Conception) என்ற நிலையில் வள்ளுவரின் ஊழ் அமைந்துள்ளது என்பது பொருந்துவதாகவும், தெரியவில்லை. தமது காலத்தின் பண்பாட்டு விழுமியங்கள் அனைத்திலும் துறைபோன புலமை எய்தியிருந்த வள்ளுவர் மக்கள் மத்தியில் நிலவிய Mystic Conception ஒன்றை விளக்க ஒரு அதிகாரம் அமைத்தார் எனச் சிந்திப்பது அவரது மேதைமைக்குப் பெருமை சேர்ப்பதாக இல்லை. அவ்வாறு ஊழ் என்ற அதிகாரத்தில் அவர் (வள்ளுவர்) உணர்த்திநின்ற கருத்துக்கள் சமுதாய வளர்ச்சிக்குப் பயன்படத்தக்க உள்ளடக்கம் உடையன என்று கொள்வதற்கும் இல்லை. அதில் இடம் பெற்றுள்ள கருத்துக்கள் மனிதனின் செயலூக்கத்தைக் கட்டுப்படுத்துகின்றனவேயன்று - எப்படி முயன்றாலும் ஊழ் இன்றி எதுவும் ஆகாது எனச் சோர்வடையவைப்பனவேயன்றி - அவனது இயல்பூக்கத்தைத் தூண்டுவனவாக இல்லை என்பதும் இங்கு சிந்திக்கத்தக்கது. மேலும் ஊழ்அதிகாரம் செல்வந்தரை நோக்கிக் கூறப்பட்டது என்ற டாக்டர் எஸ். இராமகிருஷ்ணனின் கருத்து [28] ஒரு ஆய்வு நிலை ஊகமே தவிர சான்று பூர்வமான முடிவு அல்ல

இவற்றையெல்லாம் சிந்திக்கும் போது வள்ளுவர் தமது காலத்தில் மக்களின் பொதுவழக்கில் நிலவிய ஊழ்வினை என்ற கருத்தை விடுத்து வேறொரு முறைமையை ஊழ் என்பதாற் சுட்டினார் என்பது வலிந்து கோடல்போலத் தெரிகிறது. அன்றியும், ஊழ்வினைக்குப் புறம்பான மற்றொரு உலக முறைமையும் மனிதனைக் கட்டுப்படுத்துகிறது என்ற கருத்தைத்தான் வள்ளுவர் கொண்டிருந்தார் என்ற முடிவு செய்வதால் வள்ளுவத்துக்குத் தனிச்சிறப்பு ஏதும் வந்துவிடப்போவதும் இல்லை. ஏனெனில் வினைப்பயன் கோட்பாட்டில் மனிதப்பண்பு வளர்ச்சிக்கு சிறிதளவேனும் - இனியேனும் தீவினைக்கு அஞ்சி நல்வினையில் ஈடுபடத்தூண்டும் அளவுக்கு - இடம் உண்டு. அதைவிடுத்து 'முறைமை' என்று விளக்கம் தருவதால் பண்புவளர்ச்சிக்கு இடம் இருப்பதாகத் தெரியவில்லை.

இவ்வாறாகச் சிந்திக்கும் போது வள்ளுவரின் ஊழ்தொடர்பான சிந்தனை ஊழ்வினை தொடர்பானதே என்ற முடிவே எய்தப்படுகின்றது.

"அறிஞர் பலர் திருவள்ளுவரின் ஊழ்க் கோட்பாடு பற்றி மாறுபட்ட கருத்துக்களைக் கூறினும் பெரும்பாலானோர் ஊழ் என்பதற்குப் பரிமேலழகர் கூறும் விளக்கத்தை ஏற்று, "ஒருவனது இன்றைய செயலின் பல்ன் நாளைய ஊழாக இம்மையிலும் பயன் தரலாம் என்றும்

www.padippakam.com

வினையைச் செய்தவன் பயனைத்
துய்த்தே தீரவேண்டும் என்றும் கூறி
இதுவே திருவள்ளுவர் கருத்தென்றும்
விளக்குகின்றனர்''[29]

என டாக்டர் பெ. சுப்பிரமணியன் தமது ஆய்வேட்டில் குறிப்பிட்டுள்ளமையும் இத் தொடர்பில் நோக்கத்தக்கது.

குறள் கூறும் 'ஊழும் முயல் திறனும்' — முரண் நிலை

''ஊழ்'' அதிகாரத்திலே ஊழின் வல்லமையை முயற்சித்திறனால்—ஆள்வினைத் திறனால்—வெல்லுதல் சாலும் என்ற கருத்தையும் முன்வைத்துள்ளார்.

''ஊழையும் உப்பக்கங் காண்பர் உலை
வின்றித்
தாழாது ஞற்று பவர்'' (620)

என்ற குறள் ஊழ்வலிமைக்கு நேரடி எதிர்க் குரலாகவே அமைவதை அவதானிக்கலாம். சோர்வின்றித் தொடர்ந்து முயல்வோர் ஊழையும் புறமுதுகிடச் செய்வர் என்பது இதன தொனிபொருள்.

''கூற்றம் குதித்லுதம் கை கூடும் நோற்
றலின்
ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு'' (269)

''தொட்டனைத் தூறும் மணற்கேணி
மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு'' (396)

ஆகிய குறள்களும் ஊழ்வலியை மறுதலித்து நிற்பன என்பது தெளிவு. (தவ) முயற்சியால் யமனையும் வெல்லலாம் என்பதும் (கல்வி) முயற்சியால் அறிவு ஊறும் (பெருகும்) என்பதும் ஆகூழ், போகூழ் போன்றவற்றின் அடிப்படையையே ஆட்டங்காணச் செய்வன.

''அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும்
செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்'' (169)

என்ற குறள் வள்ளுவரின் ஊழ் நம்பிக்கை தொடர்பாக மிகப்பெரும் ஐயத்தையே விளைவிப்பது.

இவற்றையெல்லாம் நோக்க வள்ளுவர் தமது கருத்துக்களில் தாமே முரண்படுகின்றார் என்ற எண்ணம் எழுவது இயல்பு. இவற்றை முரண்பாடு என்று கொள்வது வள்ளுவருக்கு இழுக்கேற்படுத்தும் என்ற எண்ணத்தினர் குறள்கள் அமைந்த சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் காரணம் காட்டிச் சமாதானம் கூறுவர். வள்ளுவரின் இலக்கிய உத்திகளுள் இத்தகையனவும் அமைகின்றன என்போரும் உளர். மேற்குறித்தவற்றுள் '' ஊழையும் உப் பக்கம் காண்பர் '' என்ற குறளுக்கு டாக்டர் மொ. சு. துரை அரங்கசாமி அவர்கள்,

''போரில் பகைவரை அழிப்பது வேறு; புறங்காண்பது வேறு; அழிந்த பகைவரான் அப்பொழுது நற்பயனோ அற்பயனோ நேராதென்றாலும் பின்னொருகால் அவற்றுளொன்று நேரலாம். ஆனால் அப்பொழுது அவர் அடங்கியொழுகுபவராகலின் அவரால் அப்பொழுது நற்பயனோ அற்பயனோ நேராது என்று கொள்வது பொருத்தமேயன்றோ. இவ்வேறுபாட்டையுணர வல்லார் '' ஊழையும் உப்பக்கம் காண்பர்'' என்று கூறப்பட்ட கருத்து ஊழிற்பெருவலியாவுள என்ற கருத்துக்கு முரண்பட்டதன்று என்பதைத் தெளிய உணரலாம்''[30]

என்று முரணின்மை காட்ட முயல்கிறார். டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன் ஊழ் அதிகாரம் செல்வந்தரையும் ஆள்வினையுடைமை அதிகாரம் பாட்டாளி மக்களையும் நோக்கி அமைந்தன என்று வேறு வேறு நிலைகளைக் கற்பிப்பதன் மூலம்[31] வள்ளுவரில் முரணின்மை காட்ட விழைகிறார். சாமி. சிதம்பரனார் அவர்கள்,

'' வள்ளுவர் ஊழை மறுக்கவில்லை; அதனை எதிர்க்க வழிகாட்டுகிறார்''[32] என்பர். டாக்டர் இரா. வேலு அவர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் இரண்டினதும் அடிப்படைகளை வேறுபடுத்திக் காட்டுவதன் மூலம் மேற்படி முரண்நிலைச் சிந்தனையில் புதிய கருத்துப் பரிமாணத்தைத் தருகின்றார். அவர், “அறத்துப்பால் காலங்கடந்து பயனைக் கொடுப்பது பொருட்பால் உடனுக்குடன் பயன் தருவது” என்ற வகையில் சிந்தித்துள்ளார். ஊழ் தொடர்பான வள்ளுவரது நிலைப்பாடு பற்றி அவர் தரும் விளக்கம் வருமாறு.

> “இந்தியக் கொள்கையான விதிக் கொள்கை சங்ககாலச் சமுதாயத்தில் வேரூன்றியிருந்தது. வள்ளுவர் அக்கொள்கையை ஏற்றுக் கொள்கிறார். ஆனால் அதன் விளைவாக மக்கள் உள்ளத்தில் சோம்பல் நிலைகொள்வதை அவர் விரும்பவில்லை. அதனால் ஊழையும் ஆள் வினையால் வெல்ல முடியும் என்ற நம்பிக்கையையும் (கு.620) முயற்சிக்குத் தக மெய்வருத்தக் கூலிதரும் (கு. 619) என்ற குறிக்கோளையும் வலியுறுத்துகிறார்... ஊழுக்கு முதன்மை கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் வள்ளுவருக்கு இருந்திருந்தால் செயல் முறைப்பகுதியான பொருட்பாலில் ஆள்வினைக்கு முதன்மையும் சிறப்பும் கொடுத்து மக்கள் மனத்தை வலிமையாக்கியிருக்க மாட்டார். ஊழ்க் கொள்கை வள்ளுவரிடம் வன்மைபெறவில்லை. அறத்துப்பாலில் கூறும் கருத்துக்கள் எல்லாம்செயற்பாட்டுக் கொள்கையெனக் கொள்ளல் இயலாது. ஆனால், பொருட்பாலில் விளக்கும் கொள்கைகள் எல்லாம் அரசன் செய்ய வேண்டிய செயல்களை வலியுறுத்துகின்றன அறத்துப்பால் காலங்கடந்து பயனைக் கொடுப்பது: பொருட்பால் உடனுக்குடன் பயனைத் தருவது”[35]

டாக்டர் இரா. வேலு அவர்களின் இந்த விளக்கம் தெளிவானதாகவும் மேலும் சிந்தனையைத் தூண்டவல்லதாகவும் அமைந்துள்ளது. சாமி சிதம்பரனாரின் மேற்சுட்டிய எண்ணக்கருவின் தருக்கரீதியான விரிந்த விளக்கமாகவும் இதனைக் கருத முடியும்.

### சிந்தனை வரலாற்றில் திருப்புமுனை

திருப்புமுனை என்பது முன்னரே அமைந்திருந்த ஒரு எண்ணப்போக்கிலிருந்து – முன்னர் (இதுவரை) நடந்து வந்த பாதையினின்று – வேறொருபாதையை நோக்கித் திரும்பும் இடத்தின் மையப் புள்ளி ஆகும். உலக வரலாற்றில் பல்வேறு மாமனிதர்கள் திருப்புமுனைகளாகத் திகழ்ந்துள்ளனர். கௌதமபுத்தர் முதல் கார்ல் மாக்ஸ் வரை இத்தகையோர் பெயர்வரிசை விரியும். இத்தகையோர் வரிசையில் தனிக் கவனம் செலுத்தப்படத்தக்க வரலாற்றுமாமனிதராகத் திருவள்ளுவர் திகழ்கிறார் என்பதை மேலே நாம் இதுவரை நோக்கிவந்த ‘ஊழ்’ அடிப்படையில் தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.

வள்ளுவர் தமக்கு முற்பட்ட காலத்தின் மரபுகளைச் சுமந்தவர்; தமது காலச் சூழலில் தமிழகத்தில் முட்டிமோதிநின்ற பல வகைச் சமயதத்துவச் சிந்தனைகளைக் கற்றுணர்ந்து அவற்றுள் எதனுடனும் முழுநிலை உடன்பாடுகாணாமல் தம்வழியில் ‘மெய்ப்பொருள்’ கண்டவர்; காட்டியவரும் கூட. அக்காலப்பகுதியில் இந்திய சமய – தத்துவப்பிரிவுகள் பலவற்றிலும் செல்வாக்குச் செலுத்திநின்ற ஊழ்வினை தொடர்பான சிந்தனைகள் வள்ளுவரையும் பாதித்துள்ளன. அக்கால முடியாட்சிச் சூழலில் அக் கோட்பாடு தவிர்க்கவியலாததொன்றாகவும் இருந்தது என்பதை நாம் உணர்ந்து கொள்வது அவசியம். ஏனெனில் சமுதாய வரலாற்றுப்போக்கிலே நிலவுடைமை வர்க்கமும் முடியாட்சியும் உருவான காலகட்டத்தில் அதற்குக் கவசமாக உருவான சிந்தனையே ஊழ்வினைக் கோட்பாடு என்பது வரலாற்றறிஞர் பலரது கருத்தாகும். அதாவது உடைமையும் அதிகாரமும் கொண்டிருந்த வர்க்கங்கள் தமது ஆட்சிக்குட்பட்டிருந்த வர்க்கத்தினரை நிரந்தரமாக அடக்கிவைத்திருக்கப் பயன்படுத்திய



படிப்பகம்

www.padippakam.com

ஆயுதமே - உனது இன்றைய நிலைக்கு உனது முன் வினையே காரணம் என்ற — ஊழ்வினைக்கோட்பாடு ஆகும். வள்ளுவர் தமது கால சமய, தத்துவ, முடியாட்சிச் சூழல்களில் இந்தக் கோட்பாட்டைக் கொள்கை அளவிலாவது ஒப்புக்கொள்ள வேண்டிய நிலையில் இருந்திருப்பார் என்பதனை நாம் ஊகத்தாற் கொள்ள வேண்டியது அவசியம். சமுதாயத்துக்குப் பயன்படத்தக்க உயரிய கருத்துக்கள் பலவற்றைக் கூறவந்த வள்ளுவருக்கு அந்தச் சமுதாயத்தில் தன்னை நிலை நிறுத்திக்கொள்ள இந்த 'கொள்கையளவிலான ஊழ்வினை ஏற்பு' அவசியமாக இருந்திருக்கலாம். அவர் ஊழ் என்ற சிந்தனைக்குத் திருக்குறளில் தந்துள்ள இடத்துக்கு (ஊழ் அதிகாரத்துக்கு) நாம் இப்படி அமைதி காண முயலலாம். இந்திய மரபிலே மக்கள் துயருக்கு தீர்வுகாணப்புறப்பட்ட முதல்வரெனத்தக்க கௌதம புத்தர் ஊழ்வினைச் சிந்தனைக்கு உட்பட்டிருந்தவராகவே அறியப்படுகிறார் என்பது இங்கு நாம் தொடர்புபடுத்திச் சிந்திக்க வேண்டியதொன்றாகும்.

இவ்வாறு ஊழைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்ட வள்ளுவரால் அதனை முழு மனதோடு அங்கீகரிக்க முடியவில்லை என்பதைப் பல குறள்கள் காட்டுவன. சமகாலத்திலே நல்லோர் பலர் துன்புறுவதையும் தீயோர் சுகபோகவாழ்வு பெறுவதையும் அவர் அவதானித்துள்ளார் (முற்சுட்டிய) 'அவ்விய நெஞ்சத்தானாக்கமும்' என்ற குறள் (169) இதற்குச்சான்று. இந்த நிலைகளுக்கு ஊழில் அவர் அமைதிகாணமுற்படவில்லை. முற்பட்டிருப்பின் அக்குறளின் இறுதித் தொடர் 'விதியாற்படும்' என்பதாக அல்லது 'ஊழற்படும்' என்பதாக அமைந்திருக்கும். அவ்வாறு அமையாமல் 'நினைக்கப்படும்' என அமைந்து அக்குறள் நிறைவெய்துகின்றது. இதன் தெளிபொருள் 'ஆராயத்தக்கது' அல்லது 'ஆராயப்படவேண்டியது' என்பதாகும். இவ்வாறான சமுதாயப் பிரச்சினைகள் ஆராயப்படத்தக்கன என்று வள்ளுவர் சிந்தித்ததே அன்றைய ஊழ்வலிக்கோட்பாட்டுச்சூழலில் பெரியதொரு 'சிந்தனைமாற்றம்' அல்லது 'சிந்தனைப்பாய்ச்சல்' எனலாம்.

வள்ளுவரின் சிந்தனை இந்த மாற்றம் அல்லது பாய்ச்சலுடன் மட்டும் அமையவில்லை. சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகளுக்கு, அதாவது பிச்சை எடுத்தேனும் ஒருவன் உயிர்வாழ வேண்டும் என்று நிலவும் சூழ்நிலைக்கு யார் காரணமோ அவன் அலைந்து கெட்டு அழிந்து போகட்டும் என்ற அளவுக்கு அவரது சிந்தனை சென்றிருக்கின்றது.

> ''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
> கெடுக உலகியற்றி யான்'' (1062)

என்ற குறளின் தெளிபொருள் இதுவே. இதில் 'உலகியற்றியான்' என அவரால் சுட்டப்பட்டவனை இறைவனாகவோ அன்றேல் அரசனாகவோ எவ்வாறு பொருள் கொண்டாம் சிந்தனையிலுன் அடிப்படையில் மாற்றம் ஏற்படாது. அதாவது சுரண்டலுக்கும் துன்பத்துக்கும் காரணமான இந்த சமூக அமைப்பு மாற்றமடைய வேண்டும் என்பதே இக்குறளின் ''தொனி', ஆகும். படைத்தவன் அல்லது ஆள்பவன் மாறினாலாவது இந்த அவலம் மாறாதா? என்ற வள்ளுவரின் அடிமன எதிர்பார்ப்பு இக்குறளில் புலப்பட்டுள்ளது.

இவற்றைத் தொகுத்து நோக்கும் போது வள்ளுவரின் 'ஊழ், பற்றிய நிலைப்பாட்டைப் பின்வருமாறு தெளிந்து கொள்ளலாம்,

அ) ஊழ்வலிக் கோட்பாட்டைக் கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளார்.

ஆ) சமுதாயப் பிரச்சினைகள் — ஏற்றத் தாழ்வுகள், முரண்பாடுகள் — என்பவற்றுக்கான அடிப்படைகளை ஆராய முற்பட்டுள்ளார்.

இ) சமுதாயத்தின் அவலங்கள் தீர்க்கப் பட வேண்டுமானால் அச்சமுதாயத்



படிப்பகம்

www.padippakam.com

தைப் படைத்தவனை அல்லது ஆள் பவனை மாற்றலாம் என்ற அளவுக்கு அவர் சிந்தனை சென்றுள்ளது. இதிலே சமுதாய மாற்றத்துக்கான எண்ணக் கருவை உய்த்துணர முடியும்.

இவ்வாறான அவரது நிலைப்பாடுகளே 'ஊழையும் உப்பக்கம் காணலாம்' என்ற வகையில் மனிதமுயற்சியை உயர்த்திப் பேசும் குறள்களின் தோற்றத்துக்கு அடிப்படைகள் என்பது உய்த்துணரற்பாலது.

திருக்குறள் ஒரு திருப்புமுனை ஆக அமைந்த நிலை இதுதான். முடியாட்சிச் சூழலில் ஊழ் நம்பிக்கை வலுப்பெற்றிருந்த சமுதாயத்தளத்தில் நின்று சமூகத்தின் அடி நிலை மனிதனின் அவலம் தீர்வதற்காக வழிகாட்ட முற்பட்ட வகையில் இந்தத் திருப்பநிலை தெளிவாகத் தெரிகிறது. வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் (கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட பகுதியில்) தமிழ் இலக்கியப்பரப்பில் மட்டுமல்ல அனைத்திந்திய சிந்தனைப்பரப்பிலும் வள்ளுவர் முன் வைத்த சமுதாய மாற்ற எண்ணக்கரு கொண்ட சிந்தனை அமைந்திருந்தமைக்குச் சான்றிருப்பதாகத் தெரியவில்லை. சமுதாயத்தின் – மனிதனின் – துன்பங்களுக்கு நிவாரணம் தேடமுற்பட்ட கௌதமபுத்தரும் கூட சமுதாய மாற்றத்தை அவாவி நின்றார் என்று வாதிட இடமிருப்பதாகத் தெரியவில்லை. மேல்நாட்டில் கடந்த நூற்றாண்டில் தான் சமுதாய மாற்றம் என்ற சிந்தனை பொதுவுடைமைக் கொள்கையூடாக ஒரு தெளிவான வடிவத்தைப் பெற்றதாகத் தெரிகிறது. இவற்றை நோக்கும்போது திருக்குறள் ஏற்படுத்திய திருப்புமுனையின் வரலாற்று முதன்மை உறுதிப்படும்.

## அடிக்குறிப்புகள்

1. Albert Schweitzer. *Indian Thought and Its Development*, Wilco Publishing House, Bombay 1960 p. 199
2. சென்னைப்பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி. தொகுதி I பகுதி 11 சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை. 1956 ப. 50
3. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி. 5. தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். 1987. பக் - 653 - 654.
4. சுப்பிரமணியன், பெ. ''பழந்தமிழ் நூல்களில் ஊழ்'' டாக்டர் பட்ட ஆய்வேடு; சென்னைப் பல்கலைக்கழகம் 1989. பக் 9 - 12
5. லஷ்மணன், கி. இந்திய தத்துவஞானம் 4ம்பதி, பழனியப்பா பிரதர்ஸ். சென்னை. 1987 பக். 28.
6. சாங்கிருத்தியான், ராகுல். இந்து தத்துவ இயல். தமிழாக்கம் ஆர். பார்த்தசாரதி. நியு செஞ்சுரி புக்ஹவுஸ். சென்னை 1985 பக். 27 - 28.
7. வாழ்வியற் களஞ்சியம் மு. நூ. மு. ப
8. பார்க்க. சாரங்கபாணி, முனைவர், இரா. திருக்குறள் உரைவேற்றுமை அறத்துப்பால் அண்ணாமலைப் பல்கலைக்கழகம். சிதம்பரம். 1989. பக். 538.
9. மேற்படி.



படிப்பகம்

www.padippakam.com


10. மேற்படி.

11. மாணிக்கம் டாக்டர். வ. சுப. வள்ளுவம் பாரிநிலையம். சென்னை. 1956. ப. 349.

12. மேற்கோள்; பார்க்க: சாரங்கபாணி முனைவர். இரா. மு. நூ. மு. ப.

13. இராமகிருஷ்ணன், டாக்டர் எஸ். திருக்குறள்: ஒரு சமுதாயப்பார்வை மீனாட்சி புத்தகநிலையம். மதுரை 1980 ப. 56

14. மேற்படி ப. 7ப.

15. மேற்படி ப. 57.

16. வரதராசன். டாக்டர். மு. திருக்குறள் அல்லது வாழ்க்கை விளக்கம். பாரிநிலையம். சென்னை. 1956 ப. 410.

17. அப்பாதுரை, பன்மொழிப்புலவர். கா. தென்னகப்பண்பு - மலர் நிலையம் சென்னை 1961. ப. 446.

18. பார்க்க: சாரங்கபாணி, முனைவர் இரா. மு. நூ. ப. 541

19. மேற்படி.

20. மேற்படி.

21. மேற்படி ப. 543

22. மேற்படி ப. 544

23. மேற்படி ப. 538

24. பார்க்க. மேற்கோள். மேற்படி: 545

25. மேற்படி

26. பார்க்க: அடிக்குறிப்பு இல. 15

27. மேற்படி

28. மேற்படி ப. 75

29. சுப்பிரமணியன், பெ. மு. ஆ. ப. 161

30. துரை அரங்கசாமி, டாக்டர் மொ. சு. குறளில் முரணா? தமிழ்ப்புத்தகாலயம். சென்னை. 1979 ப. 9

31. இராமகிருஷ்ணன், டாக்டர் எஸ். மு. நூ. பக். 75. 78

32. சிதம்பரனார், சாமி வள்ளுவர் வாழ்ந்த தமிழகம் சென்னை. 1964, ப 257

33. வேலு, டாக்டர், இரா திருக்குறள் - கௌடலீயம் ஒப்பாய்வு அறம் பதிப்பகம் மதுரை 1989. ப. 257

34. மேற்படி.




படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை
தொகுதி VI
இதழ் I & II, 1994

# நடையியல் நோக்கில் நிலக்கிளி - காட்டாறு - ஒப்பாய்வு

ம. இரகுநாதன்

நடையியல் நோக்கு

மொழி இலக்கிய ஆய்வாளர்களால் நடை என்ற பதம் அடிக்கடி கையாளப் பட்டு வருவதைப் பலரும் அறிவர். எனினும் நடை என்பது இதுதான் என்று பலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கருத்தை இதுவரை எவரும் கூறியதாகத் தெரியவில்லை. அருமையான நடை, ஆற்றொழுக்கான நடை, கடினமான நடை, தாவித் தாவிச் செல்லும் நடை என்றவாறெல்லாம் பலரும் கூறுவதைக் கேட்கின்றோம். ஆனால் இத்தகைய சொற்றொடர்கள் குறிக்கும் பொருளை வரையறுத்துக் கூறுவது கடினமானதே. ஓர் இலக்கியப் படைப்பை வாசித்தவர் அதன் நடை அழகானது என்றோ கடினமானது என்றோ கூறுவது சுலபம். ஆனால் அது எவ்வாறு நல்ல நடையாகவோ கடினமான நடையாகவோ அமைந்தது என்பதை விளக்குவது கடினமானதே.

நடை என்றால் என்ன? என்பது பற்றிய தெளிவான வரையறை கூறப்படவில்லையே என்பதற்காக நடை என்பதே இல்லாத ஒரு பொருளாகிவிடாது, ஆசிரியர் கொடுத்த துணைக் குறிப்புக்களையே ஆதாரமாகக் கொண்டு ஒரே வினாவுக்குப் பல மாணவர்கள் விடை எழுதினாலும் எந்த இருவரது விடைகளும் ஒரே மாதிரி அமைவதில்லை. ஏற்கனவே எழுதப்பட்ட விடையினை மனனஞ்செய்து எழுதினாலன்றி இருவரது விடைகள் ஒரேமாதிரி அமைவதில்லை. இங்கு இவர்களது தனித்தனித் தன்மைகளே விடைகளை வேறுபடுத்துகின்றன. இதனால்தானோ என்னவோ ''நடை என்பது ஓர் ஆசிரியரைத் தனித்து இனம் காட்டும் வகையில் அமையும் அவரது தனித் தன்மையான வெளியீட்டுப் பாங்கே'' என்றார் அறிஞர் முர்ரே.[1]

இவ்வாறு தனித்தனியாக ஒவ்வொருவருடனும் நடைமுறைத் தொடர்பு படுத்துவதாலேயே ஜானகிராமனின் நடை, கல்கியின் நடை, மு. வ. வின் நடை என்றெல்லாம் கூறப்படுவது வழக்கமாகிவிட்டது. இங்கே ஒவ்வொரு எழுத்தாளரிடமும் காணப்படும் சில தனிப் பண்புகளையே நடை எனக் கருதப்படுவதாகத் தெரிகிறது.

நடையைத் தனித்தனி ஆசிரியர்களோடு தொடர்புபடுத்திக் கூறுவது போலவே ஒரு குறிப்பிட்ட காலத்தோடு அல்லது ஒரு குழுவினரோடு தொடர்புபடுத்திக் கூறுவதும் வழக்கம். இந்தவகையிலேயே சங்கத்தமிழ்நடை, பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் உரைநடை, தி. மு. க. நடை, மறுமலர்ச்சிக்கால நடை என்றெல்லாம் கூறப்படுவதுண்டு. இவ்வாறெல்லாம் கூறினாலும் நடை என்றால் என்ன? என்ற வினாவுக்கு விடை கிடைத்ததாகத் தெரியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

நடைபற்றிய ஐந்து வரைவிலக்கணங்களை என்க் விஸ்ட் எடுத்துக்கூறுகிறார்.[2] அவர் நடை என்பது:

1. எண்ணம் அல்லது கருத்து என்னும் கருவினைச் சுற்றி அமைந்துள்ள ஒரு கூடு.
2. வேறுபட்ட வடிவங்களுக்கிடையே ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் உத்தி.
3. ஒரு படைப்பாளியின் அல்லது படைப்பிலக்கியத்தில் காணப்படும் தன்மைக் கூறுகளின் ஒட்டு மொத்தம்.
4. மொழியின் இயல்பான கட்டமைப்பிலிருந்து மாறுபட்ட பிறழ்ச்சிகள்.
5. சொற்றொடர் அடிப்படையிலன்றி முழுப்படைப்பிலுமுள்ள மொழியியற் கூறுகளுக்கிடையே காணப்படும் உறவுகள்.

என்றவாறாக நடையை வரையறுத்துள்ளார்.

தற்கால நடையியலின் தந்தை எனப்படும் சார்ல்ஸ் பாலி மொழியிற் காணப்படும் உணர்ச்சிக் கூறுகளின் ஆய்வினையே நடையியல் என்கின்றார்,[3]

நடையியற் கூறுகளை ஒலிநிலை, சொல்நிலை, தொடர்நிலை ஆகிய மூன்று நிலைகளில் இனங்காணமுடியும் என்கின்றார் மொழியியலாளர் உல்மான்.[4] இம்மூன்று நிலைகளிலும் காணப்படும் நடையியற் கூறுகளை மொழி என்ற கோணத்திலிருந்தும் ஆசிரியர் என்ற கோணத்திலிருந்தும் விளக்குகின்றார். ஆசிரியர் என்ற கோணத்திலிருந்து நடத்தப்படும் ஆய்வு புள்ளி நடையியல் எனப்படும். ஒவ்வோர் ஆசிரியரினதும் மொழிப்பயன்பாட்டிலும் சில மடக்குக்கூறுகள் உண்டு. குறிப்பிட்ட சொற்கள், தொடரமைப்புக்கள், ஒலிக் கோலங்கள் ஆகியவற்றை ஒவ்வோர் ஆசிரியரும் திரும்பத் திரும்பப் பயன்படுத்திக் கொண்டிருப்பர். சில கூறுகள் திரும்பத் திரும்ப வராவிடினும் ஆசிரியரின் விருப்பக் கூறுகளாக இருக்கும், இவ்விருவகைக் கூறுகளும் ஆசிரியரை இனங்காட்ட வல்லன.

மொழி என்ற கோணத்திலிருந்து நோக்கும்போது தற்காலப் படைப்புக்களில் பயன்படுத்தப்படும் மொழி வழக்கு தற்கால மொழிவழக்கிற்கு ஏற்றதா? என்பது ஒப்பிட்டு நோக்கப்பட வேண்டும், புனைகதைகளில் பாத்திர உரையாடல்களில் பாத்திரங்களின் பேச்சு வழக்கும் ஆசிரியரின் கூற்றாக வருகின்ற பகுதிகளில் ஆசிரியரின் நடையும் கையாளப்படுவதால் இவ்விரு இடங்களிலும் வருகின்ற மொழி தற்கால மொழியுடன் ஒப்பிட்டு நோக்கப்பட வேண்டும். சொற்களைப் பயன்படுத்தும்போதும் காலம், பொருள், பாத்திரங்களின் சமூக நிலை முதலியவற்றையும் நோக்கவேண்டும்.

நடையியல் தொடர்பான ஆய்வுகள் முற்றுப்பெறாத நிலையில் நாம் நடையியல் பற்றிய வரைவிலக்கணச் சர்ச்சைக்குள் மூழ்கி அமிழ்ந்து போகாமல் அது தொடர்பாகக் கூறப்பட்ட மேற்படி கருத்துக்களின் நிறையினையும் குறையினையும் மனதிற்கொண்டு அக்கருத்துக்களின் அடிப்படையில் எமது ஆய்வினைத் தொடங்கலாம்,

நிலக்கிளி - காட்டாறு – அறிமுகம்

வன்னி மண்ணின் முதல் நாவல் என்று சிறப்பிக்கப்படுவது அ. பாலமனோகரனின் நிலக்கிளி,[5] நகர்ப்புற நாகரிகத்தின் தாக்கத்திற்குட்படாத கிராமியச் சூழலும், அச்சூழலுக்கேயுரிய மக்களின் இயல்பான மனநிலைகளும் நன்கு துலக்கமுறும் வண்ணம் வன்னிப்பிரதேசத்தில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தண்ணீமுறிப்புக்கிராமம் இந்த நாவலில் எடுத்துக் காட்டப்படுகிறது, தாமிருக்கும் வளைகளைவிட்டு அதிக உயரத்திற்கெல்லாம் பறக்காத நிலக்கிளியைப் போலவே தான்வாழ்ந்த சின்னஞ்சிறு குடிசையையும் கதிராமனையுமே தனது உலகமாகக்கொண்டு வாழ்ந்த பதஞ்சலி என்ற பெண்ணின் வாழ்வு தண்ணிமுறிப்புக் கிராமப்பகைப்புலத்தில் எடுத்துக் காட்டப்படுகிறது. தண்ணிமுறிப்புக் கிராமத்தில் பாரம்பரியக் குடியினரான கோணாமலையர், பாலியார், கதிராமன், உமாபதியார், பதஞ்



படிப்பகம்

www.padippakam.com

சலி ஆகியோருடன் அயற்கிராமமான தண்ணீரூற்றிலிருந்து வந்த ஆசிரியர் சுந்தரலிங்கம் ஆகியோரையும் இணைத்துக் கதை வளர்த்துச் செல்லப்படுகிறது,

வன்னி மண்ணில் பிறந்து அங்குள்ள மக்களோடு நெருங்கிப் பழகி அவர்களோடு ஒருவனாகவே வாழ்ந்த அ. பாலமனோகரனின்

> "என்னுடைய பிறந்த மண்ணையும் அங்கு வாழ்மக்களையும் மிகவும் அதிகமாகக் காதலிப்பவன் நான். அந்தக் காதலின் விளைவுகளில் இந்தக் கதையும் ஒன்று!"

என்று முன்னுரையோடு நிலக்கிளி 1973இல் கொழும்பு, வீரகேசரி வெளியீடாக வெளிவந்தது,

வன்னிப் பிரதேசத்திற்கு வெளியே யுள்ள யாழ்ப்பாண மண்ணிலிருந்து தொழில் நிமித்தம் வன்னிப் பிரதேசத்திற்குச் சென்றவர் கந்தையா குணராசா என்ற செங்கை ஆழியான். 'இதுவரை காலமும் தெரிந்திருக்காத ஒரு சமூக வாழ்வு பலத்துடனும் பலவீனத்துடனும்' வன்னியில் இருப்பதைக் கண்டுணர்ந்ததாகக் கூறும் ஆசிரியர் அந்த வாழ்வை எழுத்தில் வடிக்க முனைந்தபோதே காட்டாறு நாவல் உருவானதாகக் கூறுகிறார்.

காட்டாறு நாவல் கடலாஞ்சி என்னும் கற்பனைக் கிராமத்தைக் களமாகக் கொண்டது, கடலாஞ்சியில் வன்னிப்பிரதேசத்தவர்களும் புதிய குடியேற்றவாசிகளும் குளத்தை மையமாகக்கொண்டு விவசாய வாழ்வு வாழ்கின்றனர். இவர்களில் யாழ்ப்பாணத்திலிருந்து தொழில் தேடிக் கடலாஞ்சிக்கு வந்த இளைஞனான சந்தனத்தை மையமாகக்கொண்டு கதை வளர்த்துச் செல்லப்படுகிறது. புங்குடுதீவிலிருந்து வந்த கணபதியும் மலையகத்திலிருந்து வந்த தாமரைக்கண்டுவும் துணைப்பாத்திரங்களாக அமைகின்றனர். பணத்தாலும் பதவியாலும் கிராமத் தலைமத்துவத்தைப் பெற்றுக்கொண்ட சியாமன் மாரசிங்கம், விதானையார் ஸ்ரீ வரதசுந்தரர் புதுப்பணக்காரர் கந்தசாமி, ஆசிரியர் திசைநாயகம், ஆகியோர் பொதுமக்களை சுரண்டிப் பிழைப்பதும் சந்தனத்தின் தலைமையில் இளைஞர்கள் இச்சுரண்டலுக்கு எதிராகக் கிளர்ந்து எழுவதும் இந்த நாவலில் எடுத்துக்காட்டப்படுகிறது.

காட்டாறு பெருகிவருவது கட்டுப் படுத்த முடியாதது. காலங்காலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட வர்க்கம் அடக்கு முறைக்கும் சுரண்டலுக்கும் எதிராகக் கிளர்ந்து எழுகின்ற தன்மையும் பெருகி வரும் காட்டாறு போன்றதுதான். அடங்கா வேகம் – மூர்க்கத்தனம் அத்தனையும் நிரம்பப்பெற்ற காட்டாற்றின் தன்மை இங்கே இளைஞர்களின் எழுச்சியாகக் காட்டப்படுவது பொருத்தமாகவே தெரிகிறது. ஈழத்திலேயே மிகப்பெரிய பரிசினைப் பெற்ற நாவல் என்று கூறப்படுகின்ற காட்டாறு பெப்ரவரி 1977இல் கொழும்பு, வீரகேசரி வெளியீடாக வெளிவந்தது.

**நடைப்போக்கின் ஒப்பாய்வு**
**காட்சிகள்**

நிலக்கிளி தண்ணிமுறிப்புக் காடுகளையும் முரளிப்பழத்தின் இனிய மணத்தையும், தாவிப்பாயும் மான்களின் கூட்டத்தையும் காட்டியே ஆரம்பமாகிறது.

> 'கார்த்திகை மாதத்தின் கடைசி நாட்கள்! அடிக்கடி பெய்த பெருமழையில் குளித்த தண்ணிமுறிப்புக் காடுகள் பளிச்சென்றிருந்தன. ஈரலிப்பைச் சுமந்துவந்த காலையிளங்காற்றில் முரலிப்பழங்களின் இனிய மணம் தவழ்ந்து வந்தது.
>
> பதஞ்சலிக்கு முரலிப் பழத்தின் மணம் மிகவும் பிடிக்கும். 'ஐயோ, நிப்பாட்டுங்கோ... உங்கை உந்த முரலியிலை பழம் இலுத்துப்போய்க் கிடக்குது' வண்டிக்குள் எழுந்து நின்றுகொண்டு அவள் ஆசையுடன் குதித்தாள்... ... ...
>
> 'அங்கை! அங்கை பாரணையப்பு மான் கிளை!' அவள் சுட்டிக்காட்டிய திசை



படிப்பகம்

யில் ஒரு கூட்டம் மான்கள் தாவிப்பாய்ந்தன. பதஞ்சலிக்கு ஒரே குதூகலம்! வண்டிலின் கிறாதியைப் பிடித்துக்கொண்டு துள்ளிக்குதித்தாள்.

உறுதியான அந்த வண்டியை இழுத்சென்ற எருதுகள் தலைகளை நிமிர்த்தியவாறே நடைபோட்டுக் கொண்டிருந்தன.

பலம்வாய்ந்த அந்த எருதுகளை லாவகமாக நடத்திக்கொண்டிருந்தான் கதிராமன்,'' (நிலக்கிளி, ப. 1)

மான்களின் துள்ளலோடும், முரலிப்பழத்தின் மணத்தோடும், மழையில் குளித்த காடுகளோடும் தண்ணிமுறிப்புக் கிராமம் இங்கே காட்சிப்படுத்தப்படுகிறது. இக்காட்சியினூடாகவே நாவலின் பிரதான பாத்திரங்களான பதஞ்சலி, கதிராமன் ஆகியோர் அறிமுகப் படுத்தப் படுகின்றனர். தண்ணிமுறிப்புக் கிராமத்தின் இயற்கைச் சூழலுடன் இணைத்தே பாத்திரங்களை முன்னிறுத்தும் தன்மையைக் காணமுடிகிறது.

''பதஞ்சலிக்கு தண்ணிமுறிப்புக் கிராமத்தில் எல்லாமே மிகவும் பிடித்திருந்தன. அடர்ந்து கிடக்கும் இருண்ட காடுகள்- அவற்றினூடாகச் சலசலத்தோடும் காட்டாறுகள்; அவற்றின் கரையோரங்களில் கானமிசைக்கும் காட்டுப் பறவைகள்- இவையனைத்திலும் அவளுக்குக் கொள்ளை ஆசை! பருவத்தின் தலைவாசலில் அடியெடுத்து வைக்கத் தயாராய் நிற்கும் பதஞ்சலி நடந்து திரிவது கிடையாது. சதா மான்குட்டியின் துள்ளலும் துடிப்புந்தான்'' (ப. 3).

''தண்ணிமுறிப்புக் காடுகளில் காணப்படும் மரைகள் நீலங்கலந்த கருநிறம் படைத்தவை. அழகிய கொம்புகளைத் தலையில் ஏந்தி அவை கம்பீரமாக நடக்கையில் காண்பவர் நெஞ்சு ஒரு தடவை நின்றுதான் பின் அடித்துக்கொள்ளும்- அவ்வளவு கம்பீரம். கதிராமனுடைய நடையிலும் அதே கம்பீரம் காணப்பட்டது''. (ப. 3.)

நாவலின் ஆரம்பத்தில் தாவிப்பாய்ந்த மான்களையைக் காட்டியவர், இங்கே மான் குட்டியின் துள்ளலோடும், துடிப்போடும் பதஞ்சலியை அறிமுகப்படுத்துகின்றார். அவ்வாறுதான் பலம்வாய்ந்த எருதுகளை லாவகமாக நடத்திக்கொண்டிருந்த கதிராமனைக் காட்டியவர் அதற்கு ஒருபடி மேலே சென்று காண்பவர் நெஞ்சு நின்று பின் அடித்துக்கொள்ளும் அளவுக்கு கம்பீரமான காட்டு மரைகளுடன் அவனை ஒப்பிட்டுக் காட்டுகின்றார்.

காட்டாறு நாவல் அருவியாற்றுப் பக்கமாகத் தாமரைக்கண்டுவும் கணபதியும் வேட்டைக்குச் செல்வது பற்றிக் கூறப்படுவதோடேயே தொடங்குகின்றது.

''அருவியாற்றின் கரையில் அவர்களின் கால்கள் தரித்துநின்றன. தாமரைக்கண்டுக் கிழவன் தனது கையில் இருந்த துப்பாக்கியைக் கணபதியிடம் நீட்டினான். வலது கையிலிருந்த காட்டுக்கத்தியை இடது கைக்கு மாற்றிக்கொண்ட கணபதி, வலது கையால் துப்பாக்கியை வாங்கிக்கொண்டான். தாமரைக்கண்டு தண்ணீர் அருந்துவதற்காக ஆற்றில் இறங்கினான். பிரம்புப் பற்றைகளை விலக்கிக்கொண்டு தாமரைக்கண்டு இறங்கும்போது எழுந்த சரசரப்பால் தூக்கம் கலைந்த ஆற்று மந்தி ஒன்று கிரீச்சிட்டபடி மருதமர உச்சிக்குத் தாவி ஏறியது. ஆற்று மந்தியின் கூச்சலால் அமைதி குலைந்தது. பறவைகளின் சிறகொலியும் சிறுவிலங்குகள் பற்றைகளுக்குள் மறைவதால் பரபரப்பொலியும் காட்டில் சற்று நேரம் நிலவி அழிந்தது. தாமரைகண்டு கிழவன் சற்றுத் தயங்கி நின்றான். பின்னர் மருதமர உச்சியில் மறைந்திருந்து அவனை உறுத்துப் பார்க்கும் ஆற்றுமந்தியைத் தலை நிமிர்த்திப் பார்த்தான்'' (காட்டாறு, ப. 1)

இவ்வாறுதான் காட்டாறு நாவலின் ஆரம்பக் காட்சி அமைகிறது. நிலக்கிளியில் எடுத்த எடுப்பிலேயே அதன் பிரதான களமான தண்ணிமுறிப்பும் பிரதான பாத்திரங்களும் மனதிற் பதியும் வண்ணம் காட்சிப்படுத்தப்பட்டதுபோல இங்கே நாவலின் ஆரம்பம் அமையவில்லை.

நிலக்கிளியில் பிரதேசத்திற்குரிய கருப்பொருட்களோடு களத்தினைக் காட்டி அக்களத்திலே இயற்கைச் சூழலோடு மிகவும் நெருக்கமாக இணைந்துள்ள பாத்திரங்களை அச்சூழலோடு இணைத்தே காட்டுகின்ற தன்மையைக் காணமுடிகிறது. ஆனால் காட்டாற்றில் அருவியாற்றங்கரையில் வெளிப்படுகின்ற தாமரைக்கண்டுவும் கணபதியும் அந்தப் பிரதேசத்திற்குத் தொழில் தேடி வந்தவர்கள்; புதியவர்கள். எனவே அந்த இயற்கைக்கும் அவர்களுக்கும் அப்படியொரு உறவை சித்தரித்துக் காட்டவேண்டிய அவசியம் ஆசிரியருக்கு எழவில்லைபோலும். அருவியாற்றங்கரையில் தாமரைக்கண்டுவும் கணபதியும் உரையாடும்போது இந்த அந்நியத்தன்மை தெரிகிறது. ஆற்றில் இறங்கும் வழிபற்றிக் கூறுவதும் யானைத்தடம் பற்றிக் கூறுவதும் இவர்களுக்கு இவை புதிய அனுபவங்கள் என உணரவைக்கின்றன. இருவரும் புதினம் பார்ப்பதாகவும் ஒருவருக்கொருவர் தாம் கண்டதைக் கூறுவதாகவுமே இந்த உரையாடல் அமைகிறது.

இந்த உரையாடல் முடிய முன்னரே ஆசிரியர் அருவியாற்றுப் பள்ளத்தாக்கில் புவியியல் வருணனையைக் தொடங்கிவிடுகிறார்.

> ''கணபதி சற்று அச்சத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தான். இருபது அடிவரை சாய்வாக இறங்கிய ஆற்றுப் பள்ளத்தாக்கில் ஆறடி அகலத்திற்கு ஒரு ஆறு சலசலத்தபடி விரைந்து ஓடிக்கொண்டிருந்தது. வட்டமான கருங்கற் பாறைகள் சிறிதும் பெரிதுமாக ஆற்றின் கரைகளில் உருட்டிவிடப்பட்டிருந்தன. பலபாறைகள் ஆற்று நீருக்கு மேலாகத் தலையை நீட்டிக்கொண்டு கிடந்தன. வலது பக்கமாக அவனின் பார்வை சென்றது. முழங்கை வளைவுடன் ஆறு ஒரு முடக்கில் திரும்பி மறைந்தது. ஆற்றின் இரு பக்கங்களிலும் மனிதனால் ஒருபோதும் அழிக்கப்படாத கன்னிக்காடு மண்டிக் கிடந்தது... .'' (ப. 2)

இங்கே சாய்வாக இறங்கிய ஆற்றுப்பள்ளத்தாக்கு, வட்டமான கருங்கற்பாறைகள், ஆற்றின் முழங்கை வளைவு ஆகியவற்றைக் கூறும்போது ஆசிரியரின் புவியியல் அறிவு மேலோங்கி அவரை ஒரு புவியியலாளனாகக் காட்டிவிடுகிறது, இந்நிலையினை வேறு சில இடங்களிலும் காணமுடியும்.

காடு எரிதல்

காட்டாறில் சந்தனத்தின் காட்டுக்குத் தாமரைக்கண்டு மூட்டிய தீ பற்றிஎரிவதை ஆசிரியர் பின்வருமாறு சித்திரிக்கின்றார்.

> ''தீ நாக்குகள் வானளாவி எழுந்தன. படபடவென கட்டைகள் எரிகின்ற ஒலி எழுந்துகொண்டிருந்தது. நெருப்பின் செங்கரங்கள் காய்ந்து கலகலத்துக் கிடந்த கட்டைகளைத் துளாவித் துளாவி அணைத்துக் கொண்டன. சந்தனம் குளக்கட்டில் நின்றபடி வெட்டிய காடு சுவாலித்து எரிவதை பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான்.
>
> காற்று சாதகமாகவே வீசியது. வேகமாக ஒரே திசையில் வீசிய கடுங்காற்று, காட்டுத்தீ நாக்குகள் நீட்டி எரிவதற்குப் பெருந்துணையாக இருந்தது.''
>
> (காட்டாறு ப. 171)

நிலக்கிளியில் கதிராமனின் புதுக்காட்டுக்கு மலையர் மூட்டிய தீ பற்றி எரிவதை ஆசிரியர் பின்வருமாறு சித்திரிக்கின்றார்,

> ''–இந்தச் சமயம் காற்றும் விழுந்து விடவே உலர்ந்து கிடந்த அந்தக்காட்டில் நெருப்பு கொழுந்து விட்டெரிந்தது. தாவியெழுந்த செந்தீயின் நாக்குகள் காட்டை நக்கி எடுத்தன.

சுள்ளிகள் சடசடவென வெடித்தன. உய்யென்ற இரைச்சலுடன் தீச்சுவாலை உயரே எழுந்தது. அந்தச் சுற்றுவட்டா ரத்தையே ஒளிமயமாக்கிக் கொண்டு எரிந்த காடு புகை கக்கியது,
(நிலக்கிளி, ப. 81)

நிலக்கிளியிலே ''உய்யென்ற இரைச்சலுடன் தீச்சுவாலை உயரே எழுந்தது'' எழும் போது தெரிகின்ற காட்சியை காட்டாறில் ''தீ நாக்குகள் வானளாவி எழுந்தன'' என்று கூறும்போது உணர முடியவில்லை. நிலக்கிளியில் ''தாவியெழுந்த செந்தீயின் நாக்குகள் காட்டை நக்கி எடுத்தன', எனும்போது 'நக்கி எடுத்தன' என்ற பிர தேசப்பேச்சு வழக்குத் தொடர் காடு நன் றாக எரிந்துவிட்டது என்பதைத் தெளி வாகக் காட்டிவிடுகின்றது,

மண்ணின் வளம்

இரு ஆசிரியர்களும் மண்ணின் வளம் பற்றிக் கூறும் தன்மையும் மண்ணைப் பார்க் கின்ற பார்வையும் சற்று வேறுபட்டதா கத் தெரிகிறது. காட்டாறில் வாணன் குளத் திற்கும் பனைநின்றமடுவிற்கும் இடையே ஒரு கைவிடப்பட்ட குளத்தைக் கண்ட போது தாமரைக்கண்டு அந்த மண்ணை

''அற்புதமான இருவாட்டிமண் ... ... வெள்ளாண்மைக்கு அற்புதமானது'' (ப. 59).

என்று கூறுவதையும், நிலக்கிளியில்

''சுமார் மூன்று ஏக்கர் பரப்பான அந் தக் கன்னி நிலத்தில் சாம்பர் படிந்த வளமான இருவாட்டிமண் பூத்துப்போய்க் கிடந்தது'' (ப. 85)

என்று கூறுவதையும் ஒப்பிட்டு நோக்கும் போது முன்னது வெள்ளாண்மைக்கு இரு வாட்டி மண் அற்புதமானது என்று ஒரு தகவல் கூறுவது போலவே அமைய, பின் னதில் இருவாட்டி மண் அதன் தன்மை யோடு எமக்கு முன்னே காட்சிப்படுத்தப் படுகிறது. இதனால் இங்கே உணர்ந்தது உணர்ந்தவாறே உணர்த்தப்பட முன்னது அறிந்ததைக் கூறுவதுபோல இருப்பதா கவே உணரமுடிகிறது.

வயற் காட்சி

வயலிலே நெற்பயிர்கள் குடலை தள் ளிக் கதிராக்கும் பருவம் முக்கியமானது. இப்பருவத்தை இருவரும் காட்டுகின்றனர். காட்டாறில்,

''நெற்பயிர் குடலை தள்ளியிருந்தது. நிறைமாதக் கர்ப்பிணியின் பொலிவோடு பயிர்கள் மென்காற்றில் அசைந்தன. கண் படும் இடமெல்லாம் நெற்குருத்துக்கள் வெளித்தள்ளிச் சிரித்தன'' (ப. 72)

நிலக்கிளியில்,

''மண்ணின் வளத்தையுண்டு மதர்த்து வளரும் நெற்பயிர்களின் மத்தியில் கதிரா மனும் பதஞ்சலியும் கைகோர்த்துத் திரிந் தார்கள். கண்ணை இமை காப்பதுபோல் தன் வயலைக் காத்துவந்த கதிராமனின் கைதேர்ந்த பராமரிப்பில் அவனின் வயல் செழித்து வளர்ந்தது. குடலைப் பருவம் கடந்தது, பார்த்த கண்ணுக்குத் கதிரா கிப் பின்பு கலங்கல் கதிராகி இறுதியில் ஒரே கதிர்க்காடாகக் காட்சியளித்தது. அத்தனையும் பதரில்லா அசல் நெல் மணிகள்', (ப. 87)

காட்டாறில் நிறைமாதக் கர்ப்பிணியின் பொலிவோடு ஒப்பிடப்பட்டுக் குடலைப் பருவக் காட்சி பொதுவாகக் கூறப்படுகிறது. நிலக்கிளியில் குடலைப்பருவம் கடப்பது முதல் கதிர்க் காடாகக் காட்சி தருவது வரை ஒவ்வொரு சிறு பருவங்களும் நுணுக்க மாக எடுத்துக்காட்டப்படுகிறது. அவ்வாறு கூறும்போதும் மண்ணின் வளமும் மண்ணை வளம்படுத்திய கதிராமனும் பதஞ்சலியும் கூட அக்காட்சியோடு சேர்த்துக் கூறப் படும்போது காட்சி எமக்குமுன் நிறுத்தப் படுகிறது.

உவமைகள்

இருவரும் பயன்படுத்துகின்ற உவமை களிலும் சிலவேறுபாடுகளை அவதானிக்க முடிகிறது. நிலக்கிளியில் கதிராமனுக்குப் பதஞ்சலியின் ஸ்பரிசம் எவ்வாறிருந்தது எனக் கூறும்போது,

www.padippakam.com

''எருக்கும்பியில் முளைக்கும் தளதள வென்ற செங்கீரையின் குளிர்மை நிறைந்த அவளின் ஸ்பரிசம் அவனுக்குப் புதிய தோர் அனுபவம்'' (ப. 6)

என்று எருக்கும்பியில் தளதளவென வளர்ந் திருக்கும் செங்கீரையையும் பதஞ்சலியின் ஸ்பரிசத்தையும் ஒப்பிடுகின்றார். பதஞ்சலி உமாபதியின் பிரிவால் துன்புற்று யாருமற்ற அனாதையாகி நின்றபோது

''பெருமழையில் அகப்பட்ட செங்கிரைக் கன்றுபோல் அவள் கசங்கிக் காணப்பட் டாள்'' (ப. 36)

என்கிறார். எருக்கும்பியில் தளதளவென்று வளர்ந்திருந்த செங்கீரைக் கன்று இங்கே பெருமழையில் அகப்பட்டுக் கசங்கிக் காணப் படுகிறது.

ஸ்பரிசத்தில் செங்கீரைக்கன்றின் தள தளப்பு உவமிக்கப்பட்டது போலவே அழ கிலும் நளினத்திலும் தண்ணிமுறிப்புக் காடுகளில் தன்னிச்சையாகத் திரியும் பெண் மான்கள் உவமிக்கப்படுகின்றன. (ப. 22). அவளின் பயமும் கட்டுப்பாடுமில்லாத வாழ்க்கைமுறை காட்டுப்புறாவுக்கு ஒப்பி டப்படுகின்றது.

இங்கே ஆசிரியர் காட்டும் உவமைகள் கதைக்களமான தண்ணிமுறிப்புப் பிரதே சத்திற்குரிய கருப்பொருட்கள். அந்த இயற் கையோடு ஒட்டி வாழும் பதஞ்சலியும் அவற்றோடு சேர்த்தே கூறப்படுகின்றாள்.

கதிராமனின் வலிய கரிய தோற்றம் கலை மரையின் மிடுக்குடனும் கருங்காலி மரத்தின் வைரத்துடனும் இருண்ட காடு களின் கருமையுடனும் ஒப்பிட்டுக் காட்டப் படுகின்றது. கோணாமலையரின் கரிய நெடியதோற்றம் காட்டு வயிரவனாக உவ மிக்கப்படுகிறது (ப. 139). மனைவியையும் மக்களையும் பயமுறுத்துவதில் காட்டு வயி ரவராகத் தெரியும் மலையர் மன உறுதியில் கருங்காலியாகக் காட்டப்படுகின்றார் (ப. 140)

இதே மலையர் கதிராமனின் வெளி யேற்றத்தாலும் மாடுகளை விற்று வாங்கிய உழவு இயந்திரத்தின் நட்டத்தாலும் கைப் பொருள் இழந்து மதுவுக்கு அடிமையாகி வரட்சியாலும் பாதிக்கப்பட்டு நிலை குலைந்து நின்றபோது,

''மழை தண்ணியின்றி வரண்டிருந்த அவருடைய வளவைப் போன்றே அவரும் உடற் கட்டிழந்து உருக்குலைந்து போயி ருந்தார்'' (ப. 120).

என்று கூறுகிறார். மலையரின் வாழ்வின் அஸ்தமனத்தை மழை தண்ணியின்றி வரண் டிருந்த வளவோடு ஒப்பிட்டுக்காட்டியது. விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற மக் களின் வாழ்வில் வரட்சி எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதையே எடுத்துக் காட்டிவிடுகிறது. வரட்சி அவர்களது வாழ் வின் அஸ்தமனதிற்கான ஒரு அறிவிப்புத் தான் என்பதை இது உணர்த்திவிடுகிறது.

பொதுவாக நிலக்கிளியாசிரியரின் உவ மைகள் தண்ணிமுறிப்புக்கிராமத்தின் இயற் கைச் சூழலில் காணப்படுபவை. இத்தகைய உவமைகளைக் கையாள்வதால் பாத்திரங் கள் களத்தின் பகைப்புலத்திலிருந்து அந் நியப்படாமல நாவலுக்கு மெய்ம்மைத் தன்மையைக் கொடுக்கின்றன.

இனி காட்டாறு நாவலில் வருகின்ற சில உவமைகளை நோக்கலாம். தாமரைக் கண்டுவின் கை வலிமை பற்றிக் கூறும் போது,

''உழைத்து உழைத்து உரமேறிய கரங் களில் சுருக்கம் விழுந்திருந்தாலும் முறுக் கேறிய காட்டுக்கொடிபோல அவை திரண்டு கிடந்தன'' (ப. 57).

என கையின் வலிமைக்குக் காட்டுக் கொடியை உவமையாக்குகின்றார்.

நிலக்கிளியில் கலைமரையும் கருங்காலி யும் கொடுத்த மிடுக்கையும் வலிமையினை யும் காட்டுக் கொடியில் காண்பது சற்றுச் சிரமமானதே. கலைமரையும் கருங்காலியும் அப்பிரதேசத்துக்குரிய கருப்பொருட்கள். காட்டுக் கொடி என்பது பொதுவான ஒரு



படிப்பகம்

உவமை என்பதால் இதில் மனதைக் கவரும் தன்மை முன்னதைவிடக் குறைவாகவே தெரிகிறது.

செவந்தியின் அழகும் காட்டுப்பூ வின் கவர்ச்சியுடனும் பாலைப்பழத்தின் பளபளப்புடனுமே ஒப்பிடப்படுகின்றது. (ப. 67). இங்கும் காட்டுப்பூ பொதுவான ஒரு உவமையே.

சந்தனம் செவந்தியைத் திருமணம் செய்ய நினைத்து அவளிடம் தனது விருப் பத்தைக் கூறியபோது,

''அவள் முகம் வீரைப்பழத்தின் செந் நிறமாக மாறியது'' (ப. 168). என் கிறார். செவந்தியின் சிவந்த முகத்திற்கு மிகவும் சிறிய வீரைப்பழத்தை அதன் நிறத் திற்காக மட்டும் ஒப்பிட்டது மனதை அதி கம் கவர மறுக்கிறது.

நிலக்கிளியில் ''காட்டு வயிரவன்போல் கறுத்து நெடுத்திருந்த மலையரின் விழிகள் கோவைப்பழமாகச் சிவந்து கொண்டன'' (ப. 139) என்று கூறும்போது அளவில் பெரிய சிவந்த கோவைப்பழம் மலையரின் விழிகளுக்கே ஒப்பிடப்பட்டது. ஆனால் காட்டாறில் செவந்தியின் முகத்திற்கு மிக வும் சிறிய வீரைப்பழம் ஒப்பிடப்பட்ட போது அது மனதைத்தொட மறுக்கிறது.

பொதுவாக நிலக்கிளி ஆசிரியர் களத் தின் பகைப்புலத்திலிருந்து பெற்ற உவமை களைப் பொருத்தமாகப் பயன்படுத்தியுள் ளார். குறித்த பிரதேசச் சூழலோடு இணைத்து நோக்கும்போது இவை அதிக மாக மனதைக்கவரும் தன்மையைக் கொண் டுள்ளன. காட்டாறில் பொதுவான உவ மைகளையே பயன்படுத்யிருப்பதால் நிலக் கிளியின் பிரதேசத்திற்குரிய சிறப்பான உவமைகளோடு ஒப்பிட்டு நோக்கும்போது காட்டாறில் வரும் உவமைகளில் மனதை கவரும் தன்மை சற்றுக் குறைவாகவே காணப்படுவதை உணர முடிகிறது.

**குறிப்பால் உணர்த்துதல்**

காட்டாறில் காட்டு விலங்குகளும் பற வைகளும் ஒலி எழுப்புவதைக் காட்டி அப் பகைப்புலத்தில் நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் தன்மையைக் காணமுடிகிறது. எடுத்துக் காட்டாக: மழையின்றிப் பயிர்கள் வாடு வதைப் பார்த்து வேதனைப்பட்டுக் கொண் டிருந்த கணபதிக்கு தாமரைக்கண்டு ''சியாமனும் கந்தசாமியாரும் தங்கட பயி ருக்கு எப்படியாலது தண்ணி எடுப்பினம். அவருக்குத் தண்ணி கொடுத்தால் உனக் கும் தருவினம்'' (ப. 75) என ஆறுதல் கூறும்போது ''ஆட்காட்டிக் குருவி அவல மாகக் கத்தியபடி கிளம்பியது'' (ப. 76). ஆட்காட்டியின் அறிவிப்பு கணபதிக்குத் தண்ணி கிடைக்காது வயல்கள் அழிவது உறுதி என்பதை உணர்த்துவதாகவே அமை கிறது.

செவந்தியை முனியாண்டிக்குத் திரு மணம் செய்து வைப்பதன் மூலமாகத் தனது ஆசையைத் தீர்க்கலாம் என்று சியா மன் திட்டமிடுகிறார். இதையறிந்த செவந்தி சந்தனத்திடம் ஓடி வருகிறாள். அப்போது,

''தூரத்தில் மயில்களின் அகவல் சத்தம் கேட்டது. அச்சத்தத்தைத் தொடர்ந்து குரங்கொன்றின் உறுமல் ஒலி எழுந்தது. வானில் வல்லூறு ஒன்று இரை காணா மல் இரைந்தது'' (ப. 211).

ஆசிரியர் சித்திரிக்கும் பகைபுலக் காட்சியி னூடாக சந்தனம்-செவந்தி திருமணம் நல்லபடியாக அமையாது என்பதும், இரை காணாமல் அலையும் வல்லூறான சியா மன் எந்நேரமும் ஆபத்தை விளைவிக்க லாம் என்பதும உய்த்துணரத் தக்கனவாக உள்ளன.

சந்தனம் தனது திருமணம் பற்றிக் கூறு வதற்காக கணபதியின் வீட்டு வாசலை நெருங்கியபோது ''வானில் பருந்தொன் றின் சேவல் மெதுவாக ஒலித்தது''(ப. 217). இப்பருந்தின் சேவல் புவனேஸ்வரி சந்தனத் தையே நினைத்துக் கொண்டிருப்பதையும்

www.padippakam.com

அது கனவாகப் போவதையும் உணர்த்தி விடுகிறது. சந்தனம் தனக்கு இன்று கல்யாணம் என்பதைப் புவனேஸ்வரிக்குக் கூற முன்னரே ''வானில் அவலமாக அலறியபடி கரிக்குருவியொன்று விரைந்தது'' (ப. 230) கரிக்குருவியின் அலறல் புவனேஸ்வரியின் மனக்கோட்டை இடிவதையே உணர்த்துகிறது.

சந்தனம் காட்டுப்பாதையில் மயக்கமுற்றுக் கிடந்தபோது அவனது குடிசையில் செவந்தி சியாமனால் துன்புறுத்தப்படுவது எலியொன்று ஆந்தையிடம் அகப்பட்டுத் துன்புறுத்தப்படும் காட்சியின் பின்னணியிலேயே காட்டப்படுகிறது.

> ''காட்டுப் பாதையின் ஒருபக்கத்தில் சந்தனம் மயங்கிக்கிடந்தான். அவன் அருகே துள்ளிவந்த எலி ஒன்றை, அரவம் செய்யாது பறந்து வந்த ஆந்தை ஒன்று பற்றித் தூக்கியது. ஆந்தையின் கூரிய நகங்களின் பிடியில் அகப்பட்ட எலி மரண ஒலி எழுப்பியது. அதனைக் கவனியாத ஆந்தை மரக்கிளையில் போய் அமர்ந்து கொண்டது. வேட்டையின் வெற்றி அதற்கு, தலையைச் சுழற்றி, தன் பரந்த கண் மணிகளால் இருளைத் துளைத்து நெடுந்தூரம் பார்த்தது. பின் அச்சமும் வெறுப்பும் தரும் குரலில் சத்தமிட்டது. அதன் வளைந்த கூரிய அலகுகள் எலியின் தசையைக் கிழிக்கும் மெல்லிய ஒலியும் அந்த இரவின் அமைதியில் கேட்டது'' (ப. 240)

சந்தனத்துக்கு நினைவு தடுமாறிக்கொண்டிருந்தபோது 'அச்சமும் வெறுப்பும் தரும் குரலில் ஆந்தை மீண்டும் அலறியது. இரையைச் சுவைத்துவிட்ட திருப்தி அதற்கு' (ப. 241) சந்தனம் மயக்கம் தெளிந்து குடிசைக்குச் சென்றபோது ஆந்தையிடம் அகப்பட்ட எலிபோல சியாமனால் கெடுக்கப்பட்ட செவந்தி குற்றுயிராகக் கிடக்கிறாள்.

இவ்வாறாகக் கதையில் பின் நிகழப் போகின்றவற்றை நுண்ணறிவுள்ள வாசகர்கள் முன்கூட்டியே உய்த்துணரத்தக்க வகையில் களத்தின் கருப்பொருட்களின் இயங்குநிலைகளைப் பயன்படுத்தும் விதம் செங்கை ஆழியானின் புனைதிறனுக்குத் தக்கதொரு சான்றாக அமைகிறது.

**விருப்பக் கூறுகளும், பயின்றுவரும் கூறுகளும்**

இவ்விரு நாவல்களிலும் காணப்படுகின்ற சில விருப்பக் கூறுகளும் பயின்றுவரும் கூறுகளும் ஆசிரியரை இனங்காட்டவல்ல நடையியற் கூறுகளாக விளங்குகின்றன. நிலக்கிளியில் பதஞ்சலி தாய் முத்தம்மாவின் சாயலிலேயே பிறந்திருந்தாள் என்பதை ''பதஞ்சலியும் முத்தம்மாவையே உரித்துப் பிறந்திருந்தாள்'' (ப. 12) எனக் கூறுகிறார். இதே விடயத்தை மற்றொரு சந்தர்ப்பத்தில் கூறும்போதும்,

> ''முத்தம்மா அவமானத்தால் குன்றிப் போனாள். அவளையே உரித்துப் படைத்துக்கொண்டு தங்க விக்கிரகம் போன்றதொரு பெண் அவளுக்குப் பிறந்தாள்'' (ப. 30)

என்கிறார். பதஞ்சலிக்கு மகன் பிறந்தபோது.

> ''...கதிராமனை உரித்துக் கொண்டல்லவா அந்தக் குழந்தை பிறந்திருக்கிறது'' (ப. 146)

என்கிறார். இவற்றை நோக்கும்போது உரித்துக்கொண்டு பிறத்தல் என்பதை ஆசிரியரின் விருப்பக் கூறாகக் கொள்ளலாம் போலத் தெரிகிறது. இந்த வழக்கு வன்னிப் பிரதேசத்தில் பயின்று வருவதையும் அவதானிக்க முடிகிறது.

இவ்வாறே 'முல்லை அன்னை' என்ற தொடரையும் இவரது விருப்பக்கூறாகக் கருத முடிகிறது.

> '' அவன் எதிரே அவனைப் பேணி வளர்த்த செவிலித் தாயான முல்லை அன்னை...'' (ப. 69)

> ''அவனை வளர்த்த செவிலித்தாய் முல்லையன்னை'' (ப. 80)



படிப்பகம்

www.padippakam.com

என இரு இடங்களில் இத்தொடர் இடம் பெறுவதை அவதானிக்க முடிகிறது. தனது பிறந்த மண்ணை அதிகமாக நேசிப்பதாகக் கூறும் ஆசிரியர் அந்த மண்ணை முல்லை அன்னை எனக் கூறுவதை அவரது விருப் பக் கூறாகவே கொள்ளலாம்.

காட்டாறில் 'கவிதல்' என்பது கவிய, கவிந்து, கவிகின்றது, கவிவதை எனப் பல் வேறு வடிவங்களிலும் அடிக்கடி பயன் படுத்தப்படுவதை அவதானிக்க முடிகிறது.

''மாலை மெதுவாகக் கவியத் தொடங் கியது'' (ப. 58)

'' மாலை கவிந்து கொண்டிருந்தது '' (ப. 93)

''இருள் கவிகின்றது'' (ப. 119)

''மாலை கவியத்தொடங்கியது''(ப.169)

''மாலை கவிந்து வந்தது'' (ப. 175).

''...கருமேகத்திரள் ஒன்று கவிவதைச் சந்தனம் கண்டான்'' (ப. 210)

எனவே கவிதல் என்ற தொழிலுக்குரிய கவி என்ற வினையடியிற் பிறந்த சொற் கள் மீண்டும் மீண்டும் பயின்று வருவதால் இதனை நடையியலில் பயின்று வரும் கூறா கக் கருத இடமுண்டாகிறது.

இவ்வாறே வியப்புடன் என்ற சொல் லையும் ஆசிரியர் அடிக்கடி பயன்படுத்து வதை அவதானிக்க முடிகிறது.

''தாமரைக்கண்டுவை கணபதி வியப் புடன் பார்த்தான்'' (ப. 9).

''அவரை வியப்புடன் சந்தனம் ஏறிட்டு நோக்கினான்'' (ப. 121).

''கணவனை வியப்புடன் பார்த்தாள் செல்லாச்சி'' (ப. 185).

இவ்வாறாக மேலும் பல இடங்களில் வியப் புடன் என்ற சொல் திரும்பத் திரும்ப வருவதால் நடையியலில் இதனை மடக்கு அல்லது பயின்று வரும் கூறாகக் கருத முடியும் [6]

வேகத்தைக் காட்டுவதற்கு ''விர்'' என்ற சொல்லை அடிக்கடி பயன்படுத்து கிறார்.

''வெருட்சியுற்ற அந்நாய் மறிப்பைவிட்டு சற்று விலகிப் பதுங்க... அக்கணங்கள் பன்றிக்குப் போதுமானதாக அமைந்து விட்டது. விர் என அது காட்டும் பற் றைக்குள் புகுந்து மறைந்தது'' (ப. 220).

''கலப்பையைப் பற்றியிருந்த மாயழகு விர் எனப் பாய்ந்து சென்று அவனைப் பற்றித் தூக்கி விட்டான்'' (ப. 202)

விர் என்ற சொல் வேகத்தைக் குறிப்பதற்கு ஆசிரியரின் ஏனைய நாவல்களிலும் காணப் படுகிறது.[7] எனவே இதனை ஆசிரியரின் விருப்பக்கூறாகக் கருதலாம்.

இவ்வாறே பேச்சு வழக்கில் இடம் பெறும் ''சாய்'' என்ற சொல்லையும் ஆசி ரியரின் விருப்பக் கூறாகக் கருதலாம். காட் டாறில் கணபதி என்ற பாத்திரத்தின் கூற் றாகவே இச்சொல் இடம்பெற்றாலும் ஏனைய நாவல்களிலும் இச்சொல் இடம் பெறுவதால் இதனையும் ஆசிரியரின் விருப் பக் கூறாகக் கொள்ளலாம்.[8]

''நான் அலட்சியாக இருந்திட்டன். காட் டெல்லை வயல் என்று தெரிந்தும் சாய்... நல்ல காலம்... வயலுக்கு நுழைய வில்லை'' (காட்டாறு. ப. 72).

இவ்வாறே பிரமை, திக்பிரமை, திக் கென்றது ஆகிய சொற்களையும் ஆசிரியரின் நாவல்களில் அடிக்கடி காணமுடிகின்றது. இவையும் விருப்பக் கூறுகளாகவும், பயின்று வரும் கூறுகளாகவும் அமைந்து ஆசிரியரை இனங்காட்டி நிற்கும் நடையியற் கூறு களாக அமைகின்றன

காட்டாறு நாவலில் ஆசிரியரின் விருப் பக் கூறுகளையும் பயின்றுவரும் கூறுகளை யும் பலமுறை எம்மால் அவதானிக்க முடி கிறது. இதற்கு அதனுடைய 243 பக்கங் கள் வரை விரிந்து செல்லும் கதை அம்சம் ஒரு முக்கியமான காரணமாகலாம். ஆனால் 150 பக்கங்களிலுள்ளே இறுக்கமாகக் கதை



படிப்பகம்

www.padippakam.com

கூறும் பாலமனோகரனுக்கு இத்தகைய கூறுகளை அதிகம் பயன்படுத் வேண்டிய தேவை இருந்திருக்கவில்லை என்பதை உய்த்துணர முடிகிறது.

முடிவுரை

இரண்டு நாவல்களையும் முழுமையாக ஒப்பிட்டு நோக்கும்போது இரண்டும் பிர தேச/மண்வாசனை நாவல்கள் என்ற வகை யினுள் பொதுவாக அடங்கினாலும் அவற் றில் ஆசிரியர்களுடைய நோக்கம், உள்ள டக்கம் என்பவற்றிலே தெளிவாகப் புலப் படும் ஒரு வேறுபாட்டைச் சுட்டிக்காட்டு வது அவசியமாகும். நிலக்கிளி ஆசிரி யருக்கு களம் அதாவது தான் எடுத்துக் துக்கொண்ட மண் அதனுடைய அனைத்து உள்ளார்ந்த வளங்களோடும் வெளிக்கொண ரப்பட வேண்டும் என்பது அடிப்படையான உந்துதலாகும். நிலக்கிளி என்ற பெயர், கதையம்சம் ஆகிய அனைத்தும் இதை உறுதிப்படுத்துகின்றன. பதஞ்சலி என்ற பாத்திரத்தை தண்ணிமுறிப்புப் போன்ற தொரு களத்தில் மட்டுமே காட்டமுடியும்.

செங்கை ஆழியானுடைய காட்டாறைப் பொறுத்தவரையிலே அங்கு காணப்படும் சமூக வர்க்க முரண்பாடுதான் கதையின் மையச்சரடு. இந்தக் கதை நிகழ்வதற்கு ஆசிரியர் எந்தக் களத்தையும் பயன்படுத்தி யிருக்கலாம். ஏனெனில் பல பிரதேசங் களுக்கும் இது பொதுவான நிகழ்வே. ஆனால் ஆசிரியர் எடுத்துக்கொண்ட செட் டிகுளப் பிரதேசக் கிராமம் கூடியளவு பொருத்தமானதாக அமைந்து விடுகிறது. எனவே செங்கை ஆழியானின் நாவல் மண் ணின் கதையல்ல. அது மக்களின் கதை. அந்த மக்கள் வாழும் இடம் என்ற அளவில் மட்டுமே மண்ணுக்குள்ள முக்கியத்துவம், இயன்றவரை அந்த மண்ணோடு மக்களைப் பொருந்தத்தக்க வகையில் அந்தக் கிராமத் தேர்வு அமைகிறது.

எனவே, அ. பாலமனோகரன், செங்கை ஆழியான் ஆகிய இருவரதும் படைப்புக் களை நடையியல் நோக்கில் ஒப்பிடும்போது அவற்றினிடையே காணப்படும் வேறுபாடு களுக்கு அவற்றின் நோக்குநிலை, உள்ள டக்கம் என்பவற்றின் வேறுபட்ட தன்மை களே அடிப்படைக் காரணிகளாக அமை கின்றன என்பதை உணர்ந்துகொள்ள முடி கிறது.

ஈழத்தின் இரண்டு முன்னணிப் படைப் பாளிகளை ஒப்புநோக்கும் வகையில் அமைந்த இம்முயற்சி இவ்வகையில் ஒரு முதன் முயற்சி. ஏனைய படைப்பாளிகளை நோக்கி இம்முயற்சி மேலும் முன்னெடுத் துச் செல்லப்படும்.

---

அடிக்குறிப்புக்கள்

1. பார்க்க: நுஃமான், எம். ஏ., ''ஆக்க இலக்கியமும் நடையியலும்'', ஆக்க இலக்கியமும் அறிவியலும், பதிப்பாசிரியர். அ. சண்முகதாஸ், இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத் தமிழ்த்துறை வெளியீடு 1, யாழ்ப்பாணம், 1977, பக். 78.
2. பார்க்க: நீதிவாணன், ஜெ., நடையியல், காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1983, பக். 22.
3. பார்க்க; நீதிவாணன், ஜெ., மேற்படி நூல், பக். 27.
4. பார்க்க; நீதிவாணன், ஜெ., மேற்படி நூல், பக். 28.



படிப்பகம்

www.padippakam.com

5. முல்லைத்தீவு த. கைலாசபிள்ளை என்பவரால் இன்பவதி என்ற தொடர்கதை யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்திய கலாநிதி சஞ்சிகையின் முதல் நான்கு இதழ்களில் ஒரு வன்னி நாட்டுக்கதை என்ற குறிப்புடன் தொடராக வெளிவந்து நிறைவடையாது நின்றுவிட்டது. 1942ஆம் ஆண்டில் பிரசுரமாகத் தொடங்கிய இத்தொடர்கதை அதற்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டு விட்டதெனக் கதைத்தொடக்கத்தில் அமைந்த சஞ்சிகை ஆசிரியரின் குறிப்புக் கூறுகிறது என்ற தகவலை கலாநிதி நா. சுப்பிரமணியம் குறிப்பிட்டுள்ளார்.

முல்லைமணி, (தொகுப்பாசிரியர்), பண்டாரவன்னியன் நினைவு விழா மலர், பண்டாரவன்னியன் அறங்காவல் கழகம், கற்சிலைமடு, ஒட்டுசுட்டான், 1989, பக். 25.

6. செங்கை ஆழியான், காட்டாறு வீரகேசரி வெளியீடு, கொழும்பு, 1977, பக். 7, 56, 127, 199, 211, 221, 229, 235.

7. ......................, மேற்படி நூல். பக். 137, 203.

......................, வாடைக்காற்று. வீரகேசரி வெளியீடு, கொழும்பு, 1973, பக். 61, 62, 85, 103, 104, 133.

......................, அக்கினி, மீரா வெளியீடு, யாழ்ப்பாணம், 1991, பக். 109.

8. ......................, மேற்படி நூல், பக். 17, 24.

......................, மண்ணின் தாகம், மீரா வெளியீடு, யாழ்ப்பாணம். 1989, பக், 80.

......................, தீம்தரிகிட தித்தோம், யாழ் இலக்கியவட்டம், யாழ்ப்பாணம், 1988, பக். 76.

......................, கங்கைக்கரை ஓரம். வீரகேசரி வெளியீடு. கொழும்பு, 1978, பக். 41.

......................, ஒரு மையவட்டங்கள், கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம், இரண்டாம் பதிப்பு, 1991, பக். 81.



படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை
தொகுதி VI
இதழ் I & II, 1994

# இலங்கைப் பாடசாலைக் கலைத்திட்டத்தில் ஒன்றிணைந்த விஞ்ஞானத்தின் வளர்ச்சியும் அமுலாக்கமும்

செல்வி சு. அருளானந்தம்

விஞ்ஞானமானது மனிதனைச் சூழவுள்ளனவற்றைப் பற்றிய சரியான விளக்கத்தைக் காலாகாலம் அளித்து வருகின்றது. இது மனிதனுக்குப் பெருமளவில் சௌகரியங்களை அளித்துவரும் அதேவேளையில் அவனது குறைபாடுகளையும் அவனுக்கு உணர்த்தி வருகின்றது, மருத்துவம், விவசாயம், விலங்குவேளாண்மை, பொறியியல் மற்றும் தொழிற்துறைகள் யாவற்றிலும் விஞ்ஞான அறிவு பின்னிப்பிணைந்துள்ளது. புத்தாக்கங்களினூடாக மனித வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் இது வழி கோலுகின்றது. மேலும், சில உண்மைகளையும் தத்துவங்களையும் அவன் அறிந்துகொண்டு, சூழல் பற்றிய விளக்கத்தைப் பெற்றுத் தொழிலாற்றுவதற்கு வேண்டிய மனப்பான்மையை விருத்திசெய்து, உலகுடன் பொருத்தப்பாடடையவும் செய்கின்றது. எனவேதான் விஞ்ஞானக் கல்வியூடாக மாணவனது வாழ்க்கைக்கேற்ற அறிவு, ஆற்றல், திறன், மனப்பாங்கு என்பன வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இவை அவனது நாளாந்த வாழ்க்கைக்குப் பயனளித்து, தொழிலுலகுக்கும் அவனை வழிகாட்ட வேண்டும். இந்நோக்கங்களை முக்கியமாகக் கருத்திற்கொண்டே எமது (இலங்கை) இடைநிலைப் பாடசாலைக் கலைத்திட்டத்தில் விஞ்ஞானபாடம் அறிமுகம் செய்யப்பட்டுக் கற்பிக்கப்பட்டு வருகின்றது. எமது இடைநிலைப் பாடசாலைக் கலைத்திட்டத்தில் ஒன்றிணைந்த விஞ்ஞானமானது எவ்வாறு அறிமுகம் செய்யப்பட்டது? அதன் குணாம்சங்கள் யாவை? அதன் பாட உள்ளடக்கம் எவ்வாறுள்ளது? அதனைக் கற்பிப்பதற்கான நேர அவகாசம் எவ்வாறுள்ளது? கற்பித்தல் முறைகள் எவை? என்பன தொடர்பான அம்சங்களை ஆராய்வதே இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஒன்றிணைந்த விஞ்ஞான அறிமுகம்

இருபதாம் நூற்றாண்டில் இரண்டாம், மூன்றாம் தசாப்த காலங்களில் இருந்து இன்றுவரை எமது பாடசாலைக் கலைத்திட்டமானது பல்வேறு மாற்றங்களூடாக இயங்குநிலையடைந்து வந்துள்ளபோது அதனூடாக விஞ்ஞானக் கலைத்திட்டமும் இயங்குநிலையடைந்து வந்துள்ளமையைக் காணலாம், அதாவது, சுருங்கக்கூறின் கலைத்திட்டமானது நிலையான வடிவமற்றது. ஒரு நாட்டின் கல்வியின் நோக்கம், இலக்கு, சமூகத்தேவை, ஆளும் அரசு என்பனவற்றில் மாற்றங்கள் ஏற்படுகின்றபோது பாடசாலைக் கலைத்திட்டத்திலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுவது இயல்பு. இந்த வகையில் ஏற்படுத்தப்பட்டு வந்த கலைத்திட்ட மாற்றங்களுள் 1972இல் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் ஒரு புதிய போக்கில் காணப்பட்டதுடன் புத்தாக்கங்களையுடையதாகவும் காணப்பட்டது. சிறப்பாக



படிப்பகம்

www.padippakam.com

விஞ்ஞான பாடத்தைப் பொறுத்தவரை பாட உள்ளடக்கம், பாடத்தின் போக்கு, கற்பித்தல்முறை என்பவற்றில் புதிய போக்குக் காணப்பட்டது. ஒரே வகுப்புப் பாடத்துள்ளும் பாடங்களுள்ளும் கிடைநிலையான ஒன்றிணைவினைப் பேணுவதுடன் வகுப்பு வளர்ச்சியுடன் நிலைக்குத்தான ஒன்றிணைவினைப் பேணுவதாகவும் ஒன்றிணைந்த விஞ்ஞானம் என இது அறிமுகம் செய்யப்பட்டது. மேலும், ஆறாம் வகுப்பிலிருந்து ஒன்பதாம் வகுப்புவரை எல்லா மாணவரும் விஞ்ஞான பாடத்தினைக் கற்கும் வாய்ப்பும் பெற்று, எல்லோர்க்கும் விஞ்ஞானம், என்ற கோட்பாட்டை வலியுறுத்துவதாகவும் அமைந்திருந்தது. அத்துடன் விஞ்ஞானத்தின் எல்லாக்கிளைகளுக்கும் பொதுவாகவுள்ள விரிவான தன்மைகளையும் முறைகளையும் அடக்கியிருந்ததினால் இது 'ஒன்றிய விஞ்ஞான பாடத்திட்டம்,' எனவும் கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 1978இல் கல்வியில் ஒரு மாற்றம் கொண்டுவரப்பட்டு, அதன் மூலம் ஆறாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்புவரை விஞ்ஞான பாடம் கற்பிக்கப்பட வழியேற்படுத்தப்பட்டது. இந்த மாற்றத்தின்மூலம் 'ஒன்றிணைந்த விஞ்ஞானம்', 'எல்லோர்க்கும் விஞ்ஞானம்' என்ற கோட்பாட்டு ரீதியிலான அம்சங்களில் மாற்றம் இருக்கவில்லையென்றே கூற முடியும். 1981இல் கல்வி வெள்ளை அறிக்கையின் பிரகாரம், இதுவரையும் கனிட்ட இடை நிலைமட்டத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த விஞ்ஞானக் கல்வியானது, மேலும் ஆரம்பப்பாடசாலை மட்டத்துக்கும் (தரம் 5 – தரம் 10) பரவலாக்கப்பட்டது. 1985இலிருந்து ஆண்டு 4 (தரம் 3) இலிருந்து அறிமுகம் செய்யப்பட்டுப் படிப்படியாக ஆண்டு 11 வரை தொடர்ந்து (1988 வரை) புகுத்தப்பட்டு இன்றுவரை அவ்விஞ்ஞானக் கலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. பெரும்பாலும் இது 1972இல் விஞ்ஞானக் கலைத்திட்டத்திலிருந்து மாறுபடாத அமைப்பினைக் கொண்டுள்ளதுடன் ஒன்றிணைந்த ரீதியிலும் கற்பிக்கப்பட்டு வருகின்றது. பாடவேளைகளின் எண்ணிக்கை (ஆண்டு 4-5 இரண்டு பாடவேளை, ஆண்டு 6 - 8 ஆறுபாடவேளை, ஆண்டு 9 – 11 ஏழு பாடவேளை[1]), கற்பிக்கப்படும் வகுப்புக்களின் எண்ணிக்கை (ஆண்டு 4 - 11) என்பவற்றில்தான் மாற்றம் காணப்பட்டது. இதன்மூலம் விஞ்ஞானத்தின் ஒன்றிணைவு, விஞ்ஞானத்தின் பரம்பல் என்பன கூடிய கருத்துடையனவாக அமைந்தன எனலாம்.

ஒன்றிணைந்த விஞ்ஞானம்:

எமது பாடசாலைக் கலைத்திட்டத்தில், 1972 இலிருந்து ஒன்றிணைந்த விஞ்ஞானமாக அறிமுகம் செய்யப்பட்ட விஞ்ஞானமானது, இன்றுவரை ஆரம்ப விஞ்ஞானம், புதிய விஞ்ஞானம் எனப் பெயர் மாற்றங்கள் பெற்றாலும்கூட, ஒன்றிணைந்த போக்கைக் கொண்டதாகவே உள்ளமை தெரிகின்றது. ஆனால் பாட உள்ளடக்கத்தில் மட்டும் சிற்சில மாற்றங்கள் புகுத்தப்பட்டுள்ளன.

'ஒன்றிணைவு' எனும்போது, தனித்தனியே கற்பிக்கப்பட்ட பாடங்களிடையேயும், பாடத்துள்ளேயும் உள்ள தொடர்புக்குப் பொதுவாகப் பிரயோகிக்கப்படும் பதம் எனலாம். இது ஒரு கலைத்திட்டத்துள் கிடையான, நிலைக்குத்தான தொடர்பைக் குறிக்கும். இரு பாடங்களின் சேர்க்கையாகவோ அன்றிப் பல பாடங்களின் சேர்க்கையாகவோ இந்த ஒன்றிணைவு காணப்படலாம்.[2]

உ+ம்:

இரசாயனம் + பௌதிகம் → பௌதிக இரசாயனம்
தாவரவியல் + விலங்கியல் → உயிரியல்
இரசாயனம் + பௌதிகம் + உயிரியல் + புவிவிஞ்ஞானம் + வானியல் → ஒன்றிணைந்த விஞ்ஞானம்



படிப்பகம்

www.padippakam.com

எனினும், வெவ்வேறு பாடத்துறைகளாகக் கற்பிக்கப்படும் விஞ்ஞானப் பாடங்களை ஒன்றிணைந்த ரீதியில் கற்பிக்கும் கற்பித்தல்முறை எனவும் ஒன்றிணைந்த விஞ்ஞானத்துக்கு விளக்கம் கொள்ளலாம்.

கனிட்ட இடைநிலைமட்டத்து ஒன்றிணைந்த விஞ்ஞானத்தில், ஒவ்வொரு விஞ்ஞான எண்ணக்கருவும் முன்னர் கற்ற எண்ணக்கருவிலிருந்து கட்டியெழுப்பப்படும். இவை பின்னர் அதியுயர்/சிக்கலான எண்ணக்கருவுக்கு அடித்தளமாக அமையும். எனவே, விஞ்ஞான நோக்கங்கள் குறுகிய காலத்துள் அடையப்படக்கூடியவை அல்ல. ஒன்றிணைந்த விஞ்ஞானமானது பாடத்துள்ளும் வெவ்வேறு பாடங்களுள்ளும் ஒன்றிணைவினைக் கொண்டிருப்பது இந்த விஞ்ஞான எண்ணக்கரு வளர்ச்சிக்கும் விஞ்ஞான நோக்கங்களின் அடைவுக்கும் வழிகோலுவதாக அமைகின்றது.

ஒன்றிணைந்த விஞ்ஞான பாடநெறியானது, மாணவரது மனத்தில் விஞ்ஞானத்தின் ஒன்றிணைவின் நயப்பை அடையச் செய்கின்றது. வெவ்வேறு வகையான விஞ்ஞானத்துறையில் மாணவரின் பங்குபற்றலின் விரிவைக் கூட்டுகிறது. தர்க்க ரீதியற்ற உள்ளடக்க விரிவாக்கத்தையும், மேற்பொருந்துதலையும் தவிர்க்கின்றது. பின்னைய சிறப்பு கற்கைநெறிக்கும், ஆழமான கல்விக்கும் அடிப்படையாக இதன் வடிவமும் பொதுமையாக்கமும் அமைந்துள்ளது. கற்பிக்கும் நேரத்தைப் பொறுத்தமட்டிலும் தனித்தனிப் பாடங்களாகக் கற்பிக்கத் தேவையான, நேர அட்டவணையில் அதற்கு ஒதுக்கப்படவேண்டிய. நேரத்திலும் பார்க்கக் குறைந்த நேரத்தையே உள்வாங்குகின்றது. மாணவர் கற்கும் பாடங்களிடையே ஒற்றிணைவு இல்லையெனில் அதனால் பெறும் பயிற்சியானது நிரல் படுத்தப்பட்ட தகவற்தொகுப்பாக மட்டுமே அமைந்துவிடும். அப்போது கல்வி வாய்ப்புக்களில் பெரும்பாலானவை வீணாக்கப்பட்டுவிடும். 'சமூகத்தில் ஏற்படும் நெருக்கிடைகள் வேலையற்றோரின் மனமுறிவுகளால் மட்டுமன்றிக் கல்வியமைப்பில் மாணவர் நம்பிக்கையற்று இருப்பதாலும் ஆகும்'[3] என உணர்ந்தே, இலங்கையரசு 1972இல் கலைத்திட்ட மாற்றத்தினை உருவாக்கியதுடன் மாணவரின் நம்பிக்கையை ஊட்டுவதாகவும் வாழ்க்கைப் பயனுடையதாகவும் அமைந்த ஒன்றிணைந்த விஞ்ஞானத்தை அதில் புகுத்தியது. இன்று உலகளாவிய ரீதியிலேயே ஒன்றிணைந்த விஞ்ஞானமானது முக்கிய எண்ணக்கருவாக அமைந்து இடைநிலைப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது,

ஒன்றிணைந்த விஞ்ஞானமானது பின்வரும் போக்குகளைக் கொண்டதாக உணரப்படுகின்றது.[4]

— இது துரிதமாக விருத்தியடைகின்றதும் பரந்துபட்டதுமான கல்வித்துறை.

— ஆரம்பப் பாடசாலை மட்டத்தில் அடிப்படை விஞ்ஞான அறிவை வழங்குவதாக உலகளாவிய ரீதியில் அறிமுகம் செய்யப்பட்டு வருவது.

— கனிட்ட இடைநிலை மட்டத்தில் துரிதமாகவும் பரந்துபட்டதுமாக விருத்தியடைந்து வருவது.

— சமூகப் பொருந்தப்பாட்டை நோக்கிய போக்கைக் கொண்டுள்ளது.

— சுற்றாடல் சம்பந்தமான அம்சங்களுக்கு இதில் இடம் கொடுக்கப்பட்டிருப்பது,

— விஞ்ஞான, தொழில்நுட்பக்கல்வி இதில் விருத்தியடைந்திருப்பது.

— இதனைக் கற்பிப்பதற்கு பயிற்சியும், மீள் பயிற்சியும் ஆசிரியர்க்கு வழங்குவதில் கவனம் செலுத்தப்பட்டு வருவது.

— விஞ்ஞானக்கல்வி மதிப்பீட்டுக்கு இதில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டிருப்பது.



படிப்பகம்

www.padippakam.com

— ஏனைய கலைத்திட்டப் பகுதியுடன் ஒன்றிணைவை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது.

— இதனைத் திட்டமிடுவதில் கல்வி ஆய்வுகளூடாகக் கிடைத்த பெறுபேறுகள் பயன்படுத்தப்பட்டு வருவது.

ஒன்றிணைந்த விஞ்ஞானத்தைக் கற்பித்தல் - கற்றல் சார்பாக அதனை வேறொரு வகையில் நோக்கின், 'இயல்பான நிலையில் மாணவர்க்கு விஞ்ஞானத்தை அறிமுகம் செய்தல்' எனவும் பொருள்படும். அதாவது 'விஞ்ஞானிகள் இயற்கையாகப், பல்வேறு அணுகுமுறைகளூடாக எவ்வாறு அறிவைத்தேட முயன்றனரோ, அந்த வகையில் மாணவரும் ஆய்வு கூடம் அல்லது வகுப்பறையில் வெவ்வேறு விஞ்ஞான அணுகுமுறைகளைப் பின்பற்றி அறிவைத்தேடிக் கொள்வதற்கு ஆசிரியர் அவர்களை நெறிப்படுத்துதல்' எனவும் விளக்கம் கொள்ள முடியும், தன்னைச் சுற்றியுள்ள உலகினை உற்று நோக்கி, அவ்வப்போது எழும் வினாக்களுக்கு (பிரச்சினைகளுக்கு) தீர்வு காணும் திறன்களை மாணவர் வளர்த்துக் கொள்ளும் வகையில் ஆசிரியர் நெறிப்படுத்த வேண்டும். விஞ்ஞான ரீதியில் அவன் சிந்தித்து ஒரு முடிவெடுக்கும் நிலைக்கு அவனை மாற்றவேண்டும். 'விஞ்ஞானம் ஒரு கடினமான பாடம்' எனச் சில மாணவர் கருதுவதுண்டு. உண்மையில் இவர்களுக்கு இதனைக் கற்கும் ஆற்றல் இல்லையென அறவே கூறிவிட முடியாது. அவர்களின் அனுபவம், நாட்டம், ஆற்றல் என்பவற்றுக்கேற்ப பாட ஏற்பாடு அமையாததினாலும், விஞ்ஞான விடயங்களில் விளக்கம ஏற்படுத்தப் படாததினாலும் இந் நிலைமை ஏற்பட்டிருக்கலாம். எனவே, விஞ்ஞானக் கலைத் திட்டத்தினைத் திட்டமிடுபவர்கள் பாட உள்ளடக்கத் தெரிவினை மிகக் கவனமாக மேற்கொள்ள வேண்டும். விஞ்ஞான எண்ணக்கருக்களுள் எவையெவை, எந்தெந்த வயது மட்டத்தினர்க்குப் பொருத்தமானவை என்பதை நன்கு விளக்கிக் கொண்டு திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும்.

பாட உள்ளடக்கம்

ஒரு நாட்டின் கல்வியமைப்பானது வாழ்க்கைப் பயன்பாடு உடையதாகவும், நாட்டின் சமூக பொருளாதார நிலையை வளர்ப்பதாகவும் அமைய வேண்டும். கல்வியமைப்பின் வாழ்க்கைப் பயன்பாட்டுப் பொருத்தமின்மையை 1971 இல் உணர்ந்த அன்றைய இலங்கையரசு அதை நிவிர்த்தி செய்யுமுகமாகவென்றே கல்வியமைப்பு மாற்றங்களூடாகக் கலைத்திட்ட மாற்றங்களை ஏற்படுத்தியது. அம்மாற்றங்களுள் ஒன்றே ஒன்றிணைந்த விஞ்ஞானநெறி புகுத்தப்பட்டமையுமாகும். இப்புதிய விஞ்ஞான நெறியின் மூலம்,

— விஞ்ஞானச் செய்கைகளை ஆதரித்தல்.

— விஞ்ஞானிகளின் உதவி தேவைப்படும் சூழ்நிலைகளை அறிந்து அவ்வுதவிகளைப் பெறுதல்,

— பிரச்சினைக்கு விஞ்ஞானிகள் தீர்வு காணும் முறைகளைப் பின்பற்றித் தீர்வு காண முயலுதல்,

— விஞ்ஞானத்தை இணைக்கும் பிரதான எண்ணக்கருக்களையும், பாங்குகளையும் புரிந்து கொள்ளல்.

போன்றனவற்றை உள்ளடக்கியதான எட்டுப் பிரதான நோக்கங்கள் மாணவர் சார்பாக முன்வைக்கப்பட்டன.[5] இவ் ஒன்றிணைந்த விஞ்ஞான நெறியினைப் பூர்த்தி செய்யும் மாணவர் மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைய வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. இதனை அடையச் செய்வதற்கென விஞ்ஞானபாட உள்ளடக்கமும், அதனைக் கற்பித்தல் முறைகளும் ஏற்படுத்தப்பட்டதுடன் அதனைக் கற்பித்தலுக்கான உபகரணவசதி, இரசாயனப் பொருள்வசதி, இணக்கல் உபகரணம் செய்வதற்கான ஆசிரிய பயிற்சிகள் போன்ற



படிப்பகம்

www.padippakam.com

னவும் ஏற்படுத்தப்பட்டன. இவை யாவும் விஞ்ஞானக்கல்வி தொடர்பான அரசின் 'புத்தாக்க' முயற்சிகள் ஆகும்.

பின்னர், காலத்துக்குக் காலம் ஏற் படுத்தப்பட்ட படிப்படியான கலைத்திட்ட மாற்றங்களுள் ஒன்றான 1985 இன் மாற் றத்தின் மூலம், ஆண்டு 4 இலிருந்து ஆண்டு 11 வரையுள்ள மாணவர் யாவரும் விஞ் ஞானக் கல்வியைப் பெறும் வாய்ப்பு ஏற் படுத்தப்பட்டது. இதில் ஆரம்ப மட்ட விஞ்ஞானக்கல்வி (ஆண்டு 4 — ஆண்டு 5) இன் நோக்கங்களானவை, கனிட்ட இடை நிலை மட்ட விஞ்ஞானக் கல்வியைத் தொடர்வதற்கான அடிப்படைகளை வழங்குவதாக ஏற்படுத்தப்பட்டது. ஆரம்ப மட்ட விஞ்ஞானக் கல்வியின் நோக்கங்கள் பின்வருமாறு: [6]

— சூழல் தொடர்பான விஞ்ஞான ரீதி யான மனப்பாங்கை வளர்த்தல்

— எதிர்காலக் கல்விக்கு அடிப்படை யான திறமைகளை உருவாக்குதல்

ஆரம்பமட்ட விஞ்ஞானத்தைப் பூர்த்தி செய்த மாணவர் கனிட்ட இடைநிலை மட்ட விஞ்ஞானத்தைத் தொடர்வர். இதனைப் பூர்த்தி செய்யும் மாணவர் பின் வரும் தகமைகளைப் பெறவேண்டுமென எதிர்பார்க்கப்பட்டு, நோக்கங்கள் முன்வைக் கப்பட்டன:[7]

— விஞ்ஞான ரீதியான பிரச்சினைக ளுக்குத் தீர்வு காணும்போது விஞ் ஞானிகள் பின்பற்றும் முறைகளை யும் செயற்பாடுகளையும் உணர்ந்து கொண்டு, உரிய சந்தர்ப்பத்தில் அதனைப் பயன் படுத்துவர்.

— அன்றாட வாழ்க்கைக்குத் தேவை யானதும், தனியார் சமூகம் ஆகிய வற்றின் நற்சுகத்தைப் பேணுவ தற்குத் தேவையானதும், தேசிய வளங்களை இனங்கண்டு அவற்றைப் பயனுறுதியுள்ள முறையில் பயன் படுத்துவதற்குத் தேவையானது மான அறிவு, திறன், மனப்பாங்கு களைப் பெற்றுக்கொள்வர்.

— தொழிநுட்ப அபிவிருத்தியால் எழக்கூடிய பிரச்சினைகளையும் ஆபத்துக்களையும் உணர்ந்து, இலங் கைக்கு ஏற்ற தொழிநுட்பத்தைத் தெரிவு செய்துகொள்ள வேண்டிய தன் அவசியத்தையும், சூழலின்மீது மனிதனின் தாக்கத்தை உணர்ந்து இயற்கைச் சமநிலையைப் பேண வேண்டியதன் அவசியத்தையும், மதிப்பர்.

— தேசிய முன்னேற்றத்துக்கு விஞ் ஞான நிறுவனங்களினால் ஆற்றப் படும் சேவையை மதித்து அவற் றிற்கு உதவி ஒத்துழைப்பு வழங்கு வதற்கும், உரிய சந்தர்ப்பங்களில் அவற்றின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் விரும்புவர்.

— பல்வேறு பொதுசனத் தொடர்பு சாதனங்களின் மூலம் வெளியிடப் படும் தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல் மூலம் மதிப்பீடு செய்யும் திறனை விருத்தி செய்து கொள்வர்.

— ஆக்கத் தொழில்களுக்கு வழிவகுக் கும் விதத்திலான நிர்மாண சக்தி களை விருத்தி செய்து கொள்வர்.

— பொழுது போக்கு நடவடிக்கை களின்போது விஞ்ஞானத்தைப் பய னுள்ள விதத்தில் கையாள்வர்.

— விஞ்ஞானத்தை ஒருங்கிணைக்கக் கூடிய பிரதான எண்ணக்கருத்துக் களையும் கோலங்களையும் உணர்ந்து கொள்வதுடன் மேலதிக கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவை யான அடிப்படையையும் கட்டியெ ழுப்பிக் கொள்வர்.

ஆரம்பமட்ட விஞ்ஞானக் கல்வியானது ஆண்டு 6 — 9 வரையான விஞ்ஞானக் கல்விக்கு அடிப்படைகளை வழங்குவதாக



படிப்பகம்

www.padippakam.com

வும், ஆண்டு 6 — 9 விஞ்ஞானக் கல்வியானது ஆண்டு 10, 11 விஞ்ஞானக் கல்விக்கு முன் நிபந்தனையாக அமைந்தும் ஒன்றுடனொன்று தொடர்பு கொண்டு விஞ்ஞானத்துக்கு ஒன்றிணைவை ஏற்படுத்துவது காணக்கூடியதாக உள்ளது. இத் தொடர்ச்சியினைப் பேணும் வகையில் கற்பித்தல் — கற்றல் அணுகுமுறைகளைப் பின்பற்ற வேண்டும். தவறின், மாணவரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் அடைவுகளைப் பெற்றுக் கொள்ள முடியாது.

இந்த ஒன்றிணைந்த விஞ்ஞானபாட உள்ளடக்கத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளைப் பகுப்பாய்வு செய்தபோது அங்கு அறிவு, 'அறிவாற்றற்றிறன், உள - இயக்கத்திறன், மனப்பாங்கு என்பனவற்றில் எதிர்பார்க்கப்படும் அடைவுகள் பின்வருமாறு காணப்பட்டது.[8]

— அறிவில் ஏற்படும் அடைவு ஏனையவற்றிலும் பார்க்கக் கூடுதலாகவும்,

— அறிவாற்றற்றிறன்களில் ஏற்படும் அடைவு உள - இயக்கத்திறன்களிலும் பார்க்கக் கூடுதலாகவும்,

— அறிவு, அறிவாற்றற்றிறன் என்பவற்றுடன் ஒப்பிடும்போது உள - இயக்கம் சார்திறன், மனப்பாங்கு மாற்றம் ஆகியவற்றில் குறைவாகவும் உள்ளது.

'விஞ்ஞானத்தின் பிரதான கிளைகளான உயிரியல், இரசாயனம், பௌதிகம் போன்றனவற்றின் ஓரளவு அறிவையேனும் பெற்றுக் கொள்ளாமல் புற உலகினுள் நுழையக் கூடாது'[9] என்னும் கூற்றுக்குச் செயல் வடிவம் கொடுப்பதாக இந்த ஒன்றிய விஞ்ஞானத்தின் அமைப்பு விளங்குகின்ற போதிலும், விஞ்ஞான தொழிநுட்ப உலகுக்கு முக்கியமாகவுள்ள தகைமைகளான விஞ்ஞான உள - இயக்கத்திறன்கள், விஞ்ஞான மனப்பாங்கு வளர்ச்சி என்பனவற்றிலும் பார்க்கக் குறைவாக இதில் இடம் அளிக்கப்பட்டிருப்பது ஒரு குறைபாடென்றே கருத முடிகின்றது. மேலும், பௌதிகவியல் அம்சங்களுக்கு ஒதுக்கப்பட்ட உள்ளடக்கங்கள் இரசாயனம், உயிரியல் என்பனவற்றுடன் ஒப்பிடும் போது கூடுதலாக உள்ளது. இதுவும் ஒன்றிய விஞ்ஞானபாட உள்ளடக்கச் சமநிலையைப் பேணாத குறைபாடாகத் தென்படுகின்றது.

ஆண்டு 10, 11 விஞ்ஞானக் கல்வியானது முக்கிய ஒரு கட்டமாக உள்ளது. இது சமூகத்துக்குப் பொருத்தமான அறிவு, திறன், மனப்பாங்குகளை ஒவ்வொரு மாணவனுக்கும் வழங்குவதுடன், வருங்காலப் பல்கலைக்கழக (உயர்கல்வி) மாணவர்க்கும், தொழில் உலகில் புக உள்ளவர்களுக்கும் வரவேற்பளிக்க வேண்டும். கனிட்ட இடைநிலைமட்ட விஞ்ஞானக் கல்வியும் ஆண்டு 10, 11 விஞ்ஞானக் கல்வியும் கொண்டுள்ள தொடர்பை நுணுகி ஆராய்ந்தபோது, ஆண்டு 10, 11 இன் பொருளடக்கம் அதே வகுப்பில் சில பாட அலகுகளின் தொடர்ச்சியாகவும், சில அலகுகளின் அத்திவாரமாகவும், பெரும்பாலும் கனிட்ட இடைநிலை (ஆண்டு 6 — 9) விஞ்ஞானத்தின் தொடர்ச்சியாகவும் கொண்டு விளங்குவது காணக்கூடியதாக உள்ளது. ஆண்டு 10 இன் ஒலி (அலகு 10 — 10.0) என்னும் அலகு மட்டும் இத் தன்மையிலிருந்து விலகிக் காணப்படுகின்றது. இவ்வலகு ஆண்டு 5, 6 இன் அலகுகளான 5 — 6.0, 6 — 6.0 ஐ அடிப்படையாகக் கொண்டே கட்டியெழுப்பப்பட்டுள்ளது. ஆண்டு 7, 8, 9 இல் இதன் தொடர்ச்சி பேணப்படவில்லை.[10] அத்துடன் இவ்வலகுக்கான அடிப்படையறிவும் போதியதாக இல்லை.

ஆண்டு 11 இன் அலகு 11 — 3.0, 4.0, 6.0 ஆகியவற்றின் உள்ளடக்கம் தொடர்பான அறிவை மாணவர் கருத்துநிலைச் சிந்தனை மூலமும், சுற்றாடலில் இருந்து பெற்றுக் கொள்ளும் அநுபவம் மூலமுமே கட்டியெழுப்ப வேண்டி உள்ளது. எனவே, இவ்வலகுகளுக்கான போதிய அடிப்படையறிவு அதற்குக் கீழ்ப்பட்ட வகுப்புக்களில் பெரும்பாலும் வழங்கப்பட



படிப்பகம்

www.padippakam.com

வில்லை எனலாம். இவ்வகுப்பில் கற்கும் மாணவர் பெரும்பாலும் பியாஜேயின் நியம சிந்தனைப் பருவத்தினராகையினால், இவற்றினைக் கற்றுக் கொள்வதில் பிரச்சினை அதிகம் எழ இடமில்லை. ஆண்டு 10, 11 விஞ்ஞானபாட உள்ளடக்கமானது வாழ்க்கைப்பயன், உயர்சிறப்பு நெறிக்கான அடிப்படை என்னும் இரு அம்சங்கள் சார்பாகவும் போதிய உள்ளடக்கங்களைக் கொண்டு விளங்குகின்றது.

### கற்பித்தலுக்கு ஒதுக்கப்படும் நேரம்

ஒன்றிய விஞ்ஞானத்தைக் கற்பித்தலுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தை நோக்கும்போது, கல்வி அமைச்சின் 10. 11. 1986 ஆம் திகதிய 1986/13 ஆம் இலக்கச் சுற்று நிருபத்துக்கு அமைவாக விஞ்ஞானபாடக் கற்பித்தலுக்கு வாரமொன்றுக்கு ஒவ்வொரு வகுப்புக்கும் ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகள் பின்வருமாறு காணப்படுகின்றது.

**கற்பித்தலுக்கான நேர ஒதுக்கீடு**

| ஆண்டு (வகுப்பு) | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|
| வாரமொன்றிற்குப் பாடவேளைகளின் எண்ணிக்கை | 2 | 2 | 6 | 6 | 6 | 7 | 7 | 7 |
| வருடத்துக்கு உத்தேச மொத்த பாடவேளைகள் | 60 | 60 | 127 | 120 | 142 | 199 | 224 | |

ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு பாட அலகையும் கற்பித்தலுக்கான உத்தேசப் பாடவேளைகளைக் கொண்ட ஆசிரிய வழிகாட்டி, கல்வி அமைச்சின் பாடவிதான அபிவிருத்தி நிலையத்தினால் தயார்செய்து வழங்கப்படவில்லை. இது ஆசிரியர்க்குப் பழுவை ஏற்படுத்துமென உணர்ந்த யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களம், தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தின் உதவியுடன் தீவிரமாகச் செயற்பட்டு, ஆசிரியர்க்கான வழிகாட்டிகளை அமைத்தும் கற்பித்தற்குத் தேவையான உத்தேசப் பாடவேளைகளைக் குறிப்பிட்டும் யாழ்.மாவட்ட விஞ்ஞான சேவைக்காலப் பயிற்சிமூலம் இவற்றுக்கான ஆலோசனைகளை வழங்கியும் சேவையாற்றி உள்ளமை இங்கு முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. ஒரு வாரத்துக்கு விஞ்ஞானம் கற்பித்தற்கு ஒதுக்கப்பட்ட பாடவேளைகளுடன் வருடத்துக்கான உத்தேச மொத்தப் பாடவேளைகளை ஒத்து நோக்கியபோது, ஒவ்வொரு வகுப்புக்கும் ஒதுக்கப்பட்ட நேரம் போதுமானதாக உள்ளமை காணக்கூடியதாக உள்ளது.

### கற்பித்தல் முறை

ஒன்றிய விஞ்ஞானம் மூலம் மாணவர் பெறும் விஞ்ஞான அறிவு, திறன், மனப்பாங்குகளைத் தமது வாழ்க்கைக்கும், தாம் தொடரவுள்ள உயர்கல்விக்கும் பிரயோகிக்கக்கூடிய திறனைக் கற்பித்தல்— கற்றல் எனும் இருவழிச் செயற்பாடு மூலம் வளர்த்தெடுக்க வேண்டும். இவற்றை வளர்ப்பதற்காய கற்பித்தல் முறைகளைத் திட்டமிட்டு ஆசிரியர் பயன்படுத்த வேண்டியது அவசியம். வெறுமனே பாடநூல்களை வாசித்து விளங்கப்படுத்துவதினாலோ, மாணவரை வாசிக்க விடுவதினாலோ மாணவர் அநுபவங்களைப் பெற்றுக் கொள்ள முடியாது. செய்து காட்டல், உற்றுநோக்கல், பரிசோதனைகள் செய்



படிப்பகம்

www.padippakam.com

தல், பிரச்சினை தீர்த்தல், கண்டறிதல், புல — உலாக்கள் மேற்கொள்ளல், இணைக்கல் உபகரணங்களைத் தாமே தயாரித்தல், விஞ்ஞானப் பொருட்காட்சியில் பங்கு கொள்ளல் போன்ற பல்வேறு தரப்பட்ட மாணவர் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி மாணவர்க்கு அனுபவம் மூலம் கற்றுக் கொள்ள வழிகாட்ட வேண்டும். ஆசிரியரின் எதிர்பார்ப்பு, மாணவரின் எதிர்பார்ப்பு, மாணவரின் விருத்தி நிலை, கடினத்தன்மை, சிக்கல்தன்மை. என்பவற்றைப் பொறுத்து ஏற்ற விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்த வேண்டும். இவையே கற்பித்தலின் வெற்றிக்குச் சான்றாகும். இது குழந்தைப் பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரை எல்லாக் கல்வி மட்டங்களுக்கும், எல்லாப் பாடங்களுக்கும் பரந்தளவில் உண்மையாக விளங்குகின்றது.

## முடிவுரை

விஞ்ஞானத்தின் சிக்கலான தன்மை, ஆழம், வகைகள் என்பவற்றை விளக்கும் விதத்தில் புதிய பாடவிடயங்கள், எண்ணக்கருக்கள், கற்பித்தல் நுண்முறைகள் என்பன ஒன்றிணைந்த விஞ்ஞான நெறியில் பதிந்துள்ளன. இதனைக் கற்பித்தலிலும் கற்றலிலும் ஒன்றிணைந்த சிந்தனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் பாடத்துள்ளும் பாடங்களுள்ளும் இந்த ஒன்றிணைவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.'எல்லோர்க்கும் விஞ்ஞானம்' என்னும் எண்ணக்கருவைச் செயற்பாட்டிற்குக் கொண்டுவரும் வகையில் ஒன்றிணைந்த விஞ்ஞானம் ஆரம்ப, கனிட்ட, இடைநிலைக் கல்வியில் (ஆண்டு 4 — ஆண்டு 11) ஒரு கட்டாய பாடமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் பரந்த நோக்கில் கூடியபாடப் பரப்பை உள்ளடக்கியதாகவும் இது அமைந்துள்ளது. வானியல், இலத்திரனியல், கடல்வளம் போன்ற பாட அம்சங்கள் இதில் புகுத்தப்பட்டுள்ளமையானது, ஒன்றிணைந்த விஞ்ஞானத்துக்கு மேலும் மேலும் சிறப்பை வழங்குவதாக அமைந்துள்ளதுடன் வேகமாக முன்னேறிவரும் விஞ்ஞானத் தொழிநுட்ப உலகுக்கு மாணவன் ஈடுகொடுத்துச் செல்லவும் உதவுன்றதெனலாம்.

செயல்முறை வடிவில் முன்வைக்கப்படுகின்ற பிரயோக அறிவு ஒன்றிணைந்த விஞ்ஞானத்தின் முக்கிய இயல்பு ஆகும். ஆனால் செய்முறை மூலம் கற்பித்தலுக்கு ஏற்ற ஆய்வுகூடவசதி, உபகரணவசதி, இடவசதி, ஆசிரியர் புலமை போன்றன குறைவாக உள்ள பாடசாலைகளில் கற்கும் மாணவர்க்கு செயல்முறை ஆற்றல் மந்தமாகவே கிடைக்கக்கூடியதாக இருக்கும். இத்தன்மையானது இம்மாணவர்க்குப் பின்னடைவை ஏற்படுத்துவதுடன் உளவியல் தாக்கங்களையும் கொடுக்கும். இம்மாணவர்க்குப் பிரத்தியேக கல்வி நிலையங்கள்கூட உதவாத நிலையிலேயே உள்ளன எனலாம். ஏனெனில் இங்கும் விஞ்ஞானத்தின் கொள்கை வழி அறிவைத் தவிர செயல்முறை வடிவிலான அறிவு வழங்கப்படுவதில்லை. தேர்வு நோக்கிலேயே இங்கு கல்வி வழங்கப்படுவது இயல்பு.

ஒட்டுமொத்தமாகக் கூறின், 1972ஆம் ஆண்டுவரை நடைமுறையில் இருந்த விஞ்ஞானக்கல்வியிலிருந்து வேறுபட்டதாகவும், நுண் ஆய்வும் கற்பனைத் திறனும் கொண்டவர்க்குச் சிந்தனையைத் தூண்டுவதாகவும், மனித அனுபவங்களை ஆராயும் ஒரு சிறந்த முயற்சியாகவும், ஒழுங்குபடுத்தப்பட்ட நடவடிக்கைகளைக் கொண்டதாகவும், அறிவமைப்பை விசாலிப்பதாகவும் புத்தாக்கம் செய்யப்பட்ட ஒன்றாக இந்த ஒன்றிணைந்த விஞ்ஞானம் காணப்படுகின்றது.

---

## அடிக்குறிப்புக்கள்

1. கல்வி அமைச்சு — இலங்கை, திருத்தியமைக்கப்பட்ட பாடவிதானத்தை நடைமுறைப் படுத்தல், சுற்று நிருப இலக்கம் 1986/13, கல்வி அமைச்சு, 1986-11-10, பந்தி இல. 2 — 3.



படிப்பகம்

www.padippakam.com

2. Unesco, *New trends in integrated Science teaching - Vol. IV*, (Paris: Unesco 1977,) p. 10.

3. Government of Ceylon, *The Five year Plan* (Ceylon; Ministry of planning and employment, 1971), p. 11.

4. Unesco, *New trends in integrated science teaching - Volume V*, (Paris: Unesco, 1979.) pp. 36 – 37.

5. கல்வி அமைச்சு — இலங்கை, விஞ்ஞானம் 6 ஆந் தரம் 1ம் தவணைக்குரியது — 1992, (கொழும்பு: கல்வி அமைச்சு, 1971). பப. 11 — 16.

6. பாடவிதான நிலையம் — இலங்கை, பாடத்திட்டம் ஆண்டு 1 முதல் 5 வரை, (கொழும்பு: பாடவிதான அபிவிருத்தி நிலையம், 1985) ப. 5.

7. 1. பாடவிதான அபிவிருத்தி நிலையம் — இலங்கை, ஆண்டு 6, 7, 8 பாடத்திட்டங்கள். (கொழும்பு: பாடவிதான அபிவிருத்தி நிலையம், 1986), ப. 24.
   2. பாடவிதான அபிவிருத்தி நிலையம் — இலங்கை, ஆண்டு 9 — 11 பாடத்திட்டங்கள், (கொழும்பு: பாடவிதான அபிவிருத்தி நிலையம், 1986), ப. 29.

8. சு. அருளானந்தம் (செல்வி), யாழ்ப்பாண மாவட்டத்தில் கனிட்ட இடைநிலை மட்டத்து (ஆண்டு 7 — 9) விஞ்ஞான பாடத்தில் மாணவர் அடைவை மதிப்பிடுதல் பற்றிய ஓர் ஆய்வு, முதுகலைமாணி ஆய்வுக்கட்டுரை (வெளியிடப்படாதது), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, 1990, ப. 77.

9. Ministry of Education — England (Phamphlet No. 38), *Science in Secondary Schools*, (Lond: H. M, S. O, p. 34.

10. சு. அருளானந்தம், மு. கு. ப. 66.



படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை
தொகுதி VI
இதழ் I & II, 1994

# கல்வியும் சுயவேலை வாய்ப்புகளும் சமன்பாடுகளின் பகுப்பாய்வு

கலாநிதி சபா ஜெயராசா

மூன்றாம் உலக நாடுகளின் கல்வித் திட்டமிடலில், கல்விக்கும், வேலைவாய்ப்புக்களுக்குமிடையேயுள்ள தொடர்புகளை இணக்கப்படுத்தலும், மீள வலியுறுத்தலும் தவிர்க்கமுடியாத அழுத்தங்களாக மேற்கிளம்பியுள்ளன, ''கல்வி உலகு'', ''வேலை உலகு'' என்ற இரண்டு தொழிற்பாடுகளுக்குமிடையே ஏற்பட்ட இணக்கமின்மை தொடர்பான ஆய்வுகளின் வளர்ச்சியிலே தோன்றிய ஒரு புதிய பரிமாணமாக ''கல்வியும்-சுயவேலை வாய்ப்புக்களும்'' முகிழ்த்துள்ளது.

இலங்கையின் கல்விக்கும் வேலைவாய்ப்புக்குமிடையேயுள்ள இணக்கப்பிறழ்வை விளக்க வந்த இளைஞர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு பின்வரும் கருத்துக்களை முன்வைக்கின்றது.[1]

(அ) 1987ஆம் ஆண்டில் மட்டும் க. பொ. த. சாதாரண பரீட்சையில் சித்தியடையாத 389, 381 மாணவர்கள் ஏதாவது தொழில்களைத் தேடிக்கொள்ளுமாறு கைவிடப்பட்டார்கள்.

(ஆ) அதே ஆண்டில் 112, 577 மாணவர்கள் க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு முகம் கொடுத்து 6143 பேர் மட்டுமே பல்கலைக் கழக அனுமதியைப் பெற்றனர். உலகக் கல்விச்செல் நெறியை நோக்கும்போது இது மிகவும் குறைந்த விகித அளவு. அத்துடன் க. பொ, த. உயர்தர வகுப்புக் கலைத்திட்டம் பல் கலைக்கழக அனுமதியை மட்டும் கருத்திலே கொண்டுள்ளமையால் வெளி வீசப்படும் மாணவர் தமக்குரிய தொழில் தொடர்பான உளவியற் பதகளத்தை அனுபவிக்கின்றனர்.

(இ) அதே ஆண்டில் 8000 பட்டதாரிகள் வேலைவேண்டி அரசாங்கத்தில் பதிவு செய்துள்ளார்கள்.

மேற்கூறியவற்றைத் தொகுத்து நோக்கும் பொழுது இலங்கையின் வேலையின்மையானது கல்வி நிலையின் நெடுங்கோட்டுத் தொடர்ச்சியுடன் பிணைப்புக் கொண்டுள்ளமையைக் காணலாம். பின்வரும் தரவுகள் இத்துறை பற்றிய புலக் காட்சியை மேலும் தெளிவுபடுத்துகின்றன.[2]



படிப்பகம்

www.padippakam.com

| கல்வி மட்டம் | குடிமதிப்புத் தரவு 1971 ஆண் | 1971 பெண் | 1981 ஆண் | 1981 பெண் |
|---|---|---|---|---|
| பாடசாலை செல்லாதோர் | I2.1 | 12.4 | 6.0 | 4.2 |
| 1 முதல் 5 வரை சித்தியடைந்தோர் | 15.6 | 10.4 | 9.4 | 4.9 |
| 6 முதல் 10 வரை சித்தியடைந்தோர் | 61.4 | 58.0 | 72.7 | 67.6 |
| க. பொ. த. (சா. த.) வரை சித்தியடைந்தோர் | 9.9 | 18.0 | 9.8 | 19.6 |
| க. பொ. த. (உ. த.) சித்தியடைந்தோர் | 0.7 | 1.0 | 1.7 | 3.3 |
| பட்டப்படிப்பும் அதற்கு மேலும் சித்தியடைந்தோர் | 0·3 | 0.6 | 0.1 | 0.4 |
| அனைத்தும் | 100 | 100 | 99.7 | 100 |

வயது அடிப்படையில் தேவையற்றோர் பற்றிய ஆய்வு[3] பின்வரும் காட்சியைத் தருகின்றது.

| வயதுத் தொகுதி (ஆண்டுகளில்) | குடிமதிப்புத் தரவு 1971 | 1981 |
|---|---|---|
| 15 — 20 | 26.1 | 24 2 |
| 20 — 24 | 37.5 | 35.7 |
| 25 — 29 | 16.6 | 19.7 |
| 30 — 39 | 5.4 | 15.2 |
| 40 — 49 | 5.3 | 3 8 |
| — 50 | 9.1 | 1.4 |
| அனைத்தும் | 100 | 100 |

மாவட்ட அடிப்படையிலும் வேலையின்மை பற்றிய விபரங்களும் ஆராயப்பட்டுள்ளன.[4]

| மாவட்டம் | குடிமதிப்புத்தரவு 1971 | 1981 |
|---|---|---|
| கொழும்பு | 26.6 | 21.0 |
| கம்பகா | — | 26.9 |
| களுத்துறை | 26.2 | 27,7 |
| கண்டி | 18.0 | 19.4 |
| மாத்தளை | 10.7 | 12.8 |
| நுவரெலியா | 10.3 | 7,8 |
| காலி | 26.2 | 27.4 |
| மாத்தறை | 21.4 | 28 0 |
| அம்பாந்தோட்டை | 16.2 | 20.2 |
| யாழ்ப்பாணம் | 12.6 | 14.2 |
| மன்னார் | 5.5 | 5.0 |
| வவுனியா | 5.2 | 6.0 |



படிப்பகம்

www.padippakam.com

| மாவட்டம் | | குடிமதிப்புத்தரவு | | |
|---|---|---|---|---|
| | | 1971 | | 1981 |
| முல்லைத்தீவு | — | — | — | 4.0 |
| மட்டக்களப்பு | — | 8.9 | — | 9.8 |
| அம்பாறை | — | 11.2 | — | 11.1 |
| திருகோணமலை | — | 11.5 | — | 10.6 |
| குருநாகல் | — | 14.2 | — | 15.2 |
| புத்தளம் | — | 14.3 | — | 11.8 |
| அனுராதபுரம் | — | 7.2 | — | 8.5 |
| பொலநறுவை | — | 11.8 | — | 11.8 |
| பதுளை | — | 13.8 | — | 10.4 |
| மொனராகலை | — | 10.3 | | 9.4 |
| இரத்தினபுரி | — | 16.7 | — | 13.8 |
| கேகாலை | — | 23.1 | — | 23.1 |
| இலங்கை நிலவரம் | — | 18.7 | — | 17.9 |

இலங்கையின் வேலை வாய்ப்புக்களும் வேலையற்றோரின் எதிர்பார்ப்புக்களும், விருப்பு உந்தல்களும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.[5]

| தொழில்துறை | | குடிமதிப்பு | | | | வேலையற்றோரின் விருப்பு உந்தல் |
|---|---|---|---|---|---|---|
| | | 1971 | — | 1981 | | 1981 — 82 |
| | | % | | % | | % |
| வாண்மை நிலை | — | 5.3 | — | 7.4 | — | 21.1 |
| எழுது வினைஞர் நிலை | — | 5.1 | — | 6.3 | — | 22.1 |
| விற்பனையும் சேவையும் | — | 12.9 | | 13.4 | — | 11.0 |
| விவசாயம் | — | 48.8 | — | 44.7 | — | 8.4 |
| கைத்தொழில் | — | 25.4 | — | 26.2 | — | 37.2 |
| பிற | — | 2.5 | — | 2.0 | — | 00 |
| | — | 100.0 | — | 100.0 | — | 99.8 |

இலங்கையைப் பொறுத்தவரை கல்வி விரிவாக்கத்தின் "இரண்டாவது கட்டம்" சிந்தனையளவில் முனைப்புப் பெறத் தொடங்கியுள்ளது. திட்டமிட்ட மனிதவலு விருத்தியைக் கருத்திற் கொள்ளாது மேற் கொள்ளப்படும் கல்வி விரிவாக்கத்தை "முதலாம் கட்டக் கல்வி விரிவாக்கம்" என்ற எண்ணக்கருவாற் குறிப்பிடலாம். இரண்டாம் கட்டக் கல்வி விரிவாக்கம் இணைந்த மனித வலு விருத்திக்கான முனைப்புக்களை உள்ளடக்கியது. பாரம் பரியமான பொருளாதாரத் துறைகளை விரிவு படுத்துவதாலும் நவீனப்படுத்துவ தாலும் நேர்முக வளர்ச்சிக்குரிய மனித வலுவை உருவாக்குதல், பாரம்பரியமற்ற துறைகளின் வளர்ச்சிக்குரிய மனித வலுவை வளர்த்தல், சுயவேலை வாய்ப்புக்களைத் தேடக்கூடிய மனித வளத்தை உருவாக்கு தல் முதலியவை கல்வி விரிவாக்க இரண் டாம் கட்டத்தின் முனைப்புக்களாக்கப் பட்டுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

திறன்கள் (SKILLS) சுயவேலை வாய்ப்புக்களின் அகவிசையாகக் கொள்ளப்படுகின்றது. பின்வரும் சமன்பாட்டினால் இது மேலும் விளக்கப்படுகின்றது.[6]

ஆதாரக்கல்வி + ஆதாரத்திறன் = சுயவேலை

மேற்கூறிய சமன்பாட்டில் பல மட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரை இன்றைய ஆரம்ப பாடசாலைக் கலைத்திட்டம் செயல் அனுபவங்களைக் காட்டிலும் ஏட்டுக்கல்விக்கே கூடிய அழுத்தம் கொடுக்கின்றது. மேலும் ஐந்தாம் ஆண்டில் நிகழும் புலமைப் பரிசில் பரீட்சை கல்வியின் பரந்துபட்ட இலக்குகளை மேலும் ஒடுக்கி விடுகின்றது. நடைமுறையில் பாடசாலைகள் தமது பரந்துபட்ட கலைத்திட்டப் பணிகளைச் சுருக்கி ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சைக்குரிய தயாரிப்பு வேலைகளில் ஈடுபாட்டை ஏற்படுத்தி வருகின்றன. ஆரம்பப் பாடசாலைகளில் மொழி, கணிதம் என்பவற்றிற்கு கூடிய அழுத்தம் கொடுக்கப்படுகையில் மாணவரின் சுய தொழிற்பாடுகள் புறக்கணிக்கப்படும் பின்புலத்தில் ''தற்புலக் காட்சி'' பாதிக்கப்படுகின்றது. சுயதொழிற்பாடுகளையும் வளமான தற்புலக் காட்சியையும் கலைத்திட்டத்தினூடாக வளர்க்கும் நிலை ஏற்படும்பொழுதுதான் சுய வேலைவாய்ப்பு முனைப்புக்கள் மேலோங்கும்.

சுயவேலைவாய்ப்புத் தொடர்பான பிறிதொரு சமன்பாடு சமூக நடப்பியலைத்தழுவி மேலும் குறித்துரைக்கத்தக்க கூர்மையுடன் முன்வைக்கப்படுகின்றது.[7] பாடசாலை செல்லாச் சிறுவர்களும் ஆரம்பக்கல்விச் சுற்றுவட்டத்தை திருப்திகரமாக நிறைவேற்றி வைக்காதோரும் இடைவிலகுவோரும் இலங்கை உள்ளிட்ட மூன்றாம் உலக நாடுகளிற் காணப்படுகின்றனர். அத்தோடு பாடசாலைக் கலைத்திட்டத்தில் வேலை அநுபவங்களும் வறிதாகவுள்ளன. இக்கண்ணோட்டத்தின் அடிப்படையிலே கீழ்க்காணும் சமன்பாட்டை அணுகலாம்.

குறைந்த (அல்லது கிடைக்கப்பெறாத) பாடசாலைக்கல்வி +
நியமமற்ற (தொழில்நிலையப் பயிற்சி) திறன் = சுயவேலை

ஆரம்பக் கல்வி விரிவாக்கத்துடன் இரண்டாம் நிலைக் கல்வி வாய்ப்புக்களையும் விரிவாக்கிவரும் சூழலில் மேற்கூறிய சமன்பாட்டுடன் கட்டுப்பட்டிருக்கவேண்டிய தேவை இலங்கைக்கு எழவில்லை. இரண்டாம்நிலைப் பாடசாலைக் கலைத்திட்டத்தின் வழியாக இலங்கையில் வழங்கப்பெற்ற தொழிற் கல்விப் பாடங்கள், வேலை அனுபவம், முன்தொழிற் கல்வி, வாழ்க்கைத்திறன் கல்வி முதலிய ஏற்பாடுகள் ஏட்டுக்கல்விக்கான அழுத்தங்களின் மத்தியில் வீரியம் பெற முடியாமற் போயின.

இலங்கையில் நடைமுறையில் உள்ள பாடசாலைக் கலைத்திட்டம் ''பாடக் கலைத்திட்ட''ப் பண்புகளையே மிகையாகக் கொண்டுள்ளது. ஆசிரியரின் வாய்மொழி உரைகளிலும், குறிப்புக்களிலும், பொறிமுறையாக மனனம் செய்து ஒப்புவிக்கும் பணிகளிலும் தங்கவைக்கும் இன்றைய செயல் முறைகள் கல்வியாளரின் விமர்சனங்களுக்கு இலக்காகியுள்ளன. இவ்வாறான ஒரு கலைத்திட்டத்தின் வழியாக பாரம்பரியமான தொழிற்சந்தை எதிர்பார்ப்புக்களிலும் கூடுதலான கல்வியைப் (Over education) பாடசாலை வழங்க எத்தனிக்கின்றது. இந்நிலையானது சுய தொழில் வாய்ப்பு விருப்பிலும், தெரிவிலும் சிக்கலான நிலைமைகளை ஏற்படுத்துகின்றது.

கல்வியின் விருத்திக்கு ஏற்றவாறு பொருத்தமான வேலைவாய்ப்புக்கள் சமாந்தரமாக நிகழாமையினால் ஏற்கனவேயுள்ள தொழில்களுக்கு முன்னரிலும் கூடிய கல்வித்தகைமைகளுடன் போட்டியிட நேரிடுகின்றது. பாடசாலைக் கல்வியை நிறைவேற்றியவர்களும் பட்டதாரிகளும் ஒரே தொழிலுக்குப் போட்டியிடும் சந்தர்ப்பங்கள் இலங்கையில் எழுந்துள்ளன. ஐக்கிய



படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்காவிலும் மேற்கு ஐரோப்பாவி லும் இவ்வாறான நிலவரம் ஏற்கனவே தோன்றியுள்ளமை ஆய்வாளர்களினாற் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.[8] கூடுதலான கல்வியறிவுடன் குறைந்தமட்டத் தொழில் களை மேற்கொள்ளும் பொழுது தொழில் சார் உளநிறைவு பாதிக்கப்படுவதுடன் வேறு தொழில்களை நோக்கிய அசைவு எதிர்பார்ப்புக்களும் தூண்டப்படுகின்றன. தொழில்சார் உளநிறைவு இன்மை ஒரு கோணத்தில் தொழில் செய்வோரின் உள நிலையைப் பாதிப்பதுடன் மறு கோணத் தில் தொழில் நிலைய உற்பத்தி விளைவுப் பெருக்கத்தையும் பாதிக்கின்றது.

சுயவேலை வாய்ப்புக்குரிய கல்வியா னது மேற்கூறிய நடப்பியல்களைக் கருத் திலே கொள்ளவேண்டியுள்ளது. ''சுய வேலைவாய்ப்பு'' என்ற எண்ணக்கரு தொடர்பான தெளிவை முதலிலே ஏற் படுத்தவேண்டியுள்ளது. தனிச் சொத்து ரிமை, மூலதனம், சமூக விழுமியங்கள், கல்வி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த எண்ணக்கருவை இரு துறைகளாக வகுத்துத் தெளிவு படுத்த லாம்.

அ) பிழைப்பூதிய சுயவேலை (Subsistance Self - employment)

ஆ) முயற்சியாண்மைச் சுயவேலை. (Entrepreneurship Self employment)

பிழைப்பூதியச் சுயவேலை முதலாம் நிலைக்கல்வியுடன் பெருமளவு இணைந் தது. கிராமிய விழுமியங்களை மேம்படுத் தலும், கடின உடல் உழைப்பை வலியுறுத் தலும், மேல் நோக்கிய சமூக அசைவியக் கத்தை அதிகம் ஏற்படுத்த முடியாததது மான இயல்புகளை இது கொண்டிருக்கும். முயற்சியாண்மைச் சுயதொழில் முயற்சி கள் கூடிய மூலதனம், மேல் நோக்கிய சமூக அசைவு, நவீன தொழில்நுட்பவி யல், தெரிவு செய்து கற்கும் கல்வி முதலிய பண்புகளைக் கொண்டிருக்கும்.

சுயவேலை வாய்ப்பு என்பது கல்விப் பரிமாணங்களுடன் சமுதாயப் பரிமாணங் களையும் கொண்டது. கல்விக்குரிய அனைத்து மூல வளங்களும் சமுதாயத்திட மிருந்து பெறப்படுகின்றது. சமூக அடுக் கமைப்பின் உயர்ந்தோரால் கல்விச் செயல் முறை நீண்டகாலமாகத் திட்டமிடப்பட்டு வந்தமையால், சமூக அடிமட்டங்களுக்குரிய தேவைகள் வினைத்திறனுடன் அணுகப்ப டவில்லை என்ற திறனாய்வுகளை முற்றி லும் நிராகரிக்க முடியாதுள்ளது. பிழைப் பூதியச் சுயவேலை வாய்ப்புக்கள் அடி மட்ட மக்களையே இலக்கு மாந்தராகக் கொண்டு வடிவமைக்கப்படவேண்டியுள் ளது. கல்விப் பங்குபற்றலை பொருளா தாரப் பழுவாகக் கருதாது, குறைந்த வரு மான வீச்சின்கீழ் வாழ்வோர்க்கு மலிவு டைமை (Cheapness) கொண்ட சேவை யாகக் கல்வியை அணுகும்படி செய்தல் வேண்டும்.

இலங்கையின் இலவசக் கல்வித்திட்டம் தாழ்ந்த வருமான வீச்சின்கீழ் வாழ்வோ ருக்குச் சுவறியமையிலும் பார்க்க மத்திய தர வகுப்பினருக்கே ஒப்பீட்டளவிற்கூடிய பயனை வருவித்துள்ளது. பள்ளிபுகாமை, இடைவிலகல், மீளக்கற்றல், குறைந்த நாட்கள் பள்ளி வரவு முதலியவை தாழ்ந்த வருமானம் உடையோர் மத்தியில் மிகை யாகக் காணப்படுகின்றன. போட்டி நிலை மைகளில் இவர்கள் பின்தள்ளப்படுகின் றனர். இத்தகைய இடர்களின் மத்தியிலும் தாழ்ந்த வருமானம் உடையோர் மத்தியில் எழுத்தறிவு அதிகரித்து வந்துள்ளது. சிறப் பாக பெண்கள் கல்விச் செயற்பாடுகளிலே பங்குபற்றல் அதிகரித்து வந்துள்ளமை சுதந்திரத்திற்குப் பிற்பட்ட கல்வி அனுப வங்களாகவுள்ளன. இதன் காரணமாக 15 வயதுக்கும் இடைப்பட்ட தொழிலின் வலுவீச்சில் பெண்கள் அதிக அளவிலே இன்று காணப்படுகின்றனர்.[9]

தாமே சுயமாகத் தொழிற்படுவதிலும் அரச, கூட்டுத்தாபன, தனியார் துறைக ளில் வேலை பெறுதலே உயர்ந்ததென்ற



படிப்பகம்

www.padippakam.com

விழுமியங்கள் நிலவி வருதல் சமூக அறிக்கை மரபுகளிலே குறித்துரைக்கப் படத் தக்கதாகவுள்ளது. இந்நிலையில் பிழைப்பூதிய சுயவேலை ஊக்கலை சமுதாயத்துடன் இணைப்பதற்குரிய பின்வரும் சமன்பாடு[10] பரிசீலனைக்குரியது.

அடிப்படைப் பாடசாலை + அடிப்படைத்திறன் + சமுதாயம் = சுயவேலை

கேட்டல், விளங்குதல், பேசுதல், எழுதுதல், கணித்தல் போன்ற அடிப்படை அறிக்கை ஆற்றல்களுடன் தொழில் சார்ந்த திறன்களையும், சமுதாயத்தின் பங்குபற்றலையும் ஒன்றிணைத்து இயக்கும்பொழுது சுய வேலை வாய்ப்பு ஊக்கல் பிறப்பிக்கப்படுகின்றது. தொழில் சார்ந்த திறன்கள் பன்முகப்பட்டனவ்யாக இருத்தல் வேண்டும். 'சுயவேலை வாய்ப்புகள் நாட்டின் பெரும் பொருளாதாரக் கட்டமைப்பை மீறியதாக இருக்க முடியாது. நகர வளர்ச்சி, துணை நகர வளர்ச்சி என்பவற்றுடன் இணைந்த உற்பத்தி, கட்டுமாணம், வர்த்தகம், போக்குவரத்து, விநியோகம், பழுதுபார்த்தல், பொதிசெய்தல், நானாவித சேவைகள் குடிசைக்கைத் தொழில், சிறு கைத்தொழில் முதலியன சார்ந்த சுயவேலை வாய்ப்புக்கள் மூன்றாம் உலக நாடுகளில் தோன்றுகின்றன. நியமமான கல்வி, வேலைத்தலப் பயிற்சி, குடும்பம் அல்லது நிறுவனம் சார்ந்த ஆதரவு முதலியவை சுயவேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துகின்றது.

முயற்சியாண்மைச் சுயவேலை ஊக்கம் பொருத்தமான கல்வியுடனும், திறன்களுடனும், கடன் வசதிகளுடன் இணைந்தது. இவ்வகைச்சுயவேலை வாய்ப்புக்கான ஊக்குவிப்பு முயற்சிகளில் வங்கிச் செயற்பாடும் இணைத்துக் காட்டப்படுகின்றன.

பாடசாலை + திறன் + கடன் வசதி = முயற்சியாண்மைச் சுயவேலை

பிழைப்பூதியச் சுயவேலை முயற்சிகள் பெரும்பாலும் ஆரம்பக் கல்விச்சுற்றுவட்டத்துடன் இணைந்தது. ஆனால் முயற்சியாண்மைச் சுயவேலையானது கல்லூரிசார் மட்டம், பல்கலைக்கழக மட்டம் என்றவாறு ஒப்பீட்டளவிற் கூடிய கல்விப் பின்புலத்துடனும் வங்கிக்கடன் வசதிகளுடனும் இணைந்ததாகும். இந்தியாவில் இந்த உபாயம் இன்று ஊக்குவிக்கப்படுகின்றது.

கல்வியும் சுயவேலை ஊக்கல் பற்றியும் சிந்திக்கும் பொழுது, முரண்படும் பூட்கைகளையும் கருத்திற் கொள்ளவேண்டியுள்ளது. எடுத்துக்காட்டுக்கள் வருமாறு,

1. பொதுக் கலைத்திட்ட உபாயம் — எதிர் — சிறப்புக்கலைத்திட்ட உபாயம்.
2. அனைத்துத் திறன்களையும் வளர்த்தல் — எதிர் — சிறப்புத் திறன்களை வளர்த்தல்.
3. ஒருதிறன் வளர்ப்பு — எதிர் — பன்முகத்திறன்கள் வளர்ப்பு.
4. முறைசாராக்கல்வி உபாயம் — எதிர் — முறைமைக்கல்வி உபாயம்
5. மரபுப் பொருளாதார நடவடிக்கையுடன் இணைந்த கல்வி — எதிர் — அன்மரபுப் பொருளாதார நடவடிக்கையுடன் இணைந்த கல்வி.
6. வரையறுத்த எல்லைக்கு உட்பட்ட கல்வி — எதிர் — தொடர் கல்வி.
7. சமுதாயத்துடன் இணைந்த திறன்கள் — எதிர் — சுய முன்னேற்றத்துடன் இணைந்த திறன்கள்.
8. பிழைப்பூதியச் சுயதொழில் ஊக்குவிப்பு — எதிர் — முயற்சியாண்மைச் சுயவேலை வளர்ப்பு.
9. திட்டமிடாத செயற்பாடுகள் — எதிர் — திட்டமிட்ட செயற்பாடுகள்

கல்வி வளர்ச்சியோடு பொருள் உற்பத்தி வளர்ச்சியும், வருமான வளர்ச்சியும் அதிகரித்தல் உலகளாவிய பொதுவான தோற்றப்பாடாகக் கருதப்படுகின்றது. கல்விச் செயல்முறையானது சிக்கலானதாக இருப்பினும் நேர்முகமான பன்முகத் தாக்



படிப்பகம்

www.padippakam.com

கங்களை ஏற்படுத்தக் கூடியதாகவுள்ளது. தனித்துவமான சிந்தனைகளையும் தனித்துவமான செயற் கோலங்களையும் கல்விச் செயல் முறையினூடாக உருவாக்க முடியு மானால் சுயவேலை முயற்சிகளை உருவாக்குதலை எட்ட முடியாத பணிகள் என்று கூறமுடியாது.

உலகளாவிய அவதானிப்பின்படி பாடசாலை மாணவருக்கு உடல்சார் அனுபவங்களைப் போதுமான அளவில் வழங்காமை, பல்வேறு பண்பாட்டு மாற்றங்களினூடே ஆழ்ந்து வேரூன்றிய நியமங்களாக இருந்து வந்துள்ளமை பாடசாலைக் கல்வி - எதிர் உடலுழைப்புக் கல்வி என்ற முரணுரைகளை ஏற்படுத்தியுள்ளது.[12] இந்நிலையில் "மேலெழுந்த வாரியான கல்விச் சீர்திருத்தங்களின் வாயிலாகப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சித்தல் வெறும் இலட்சிய வாதமாகிவிடும்.

சமகால இலங்கையின் கல்விச் செயற்பாடுகளை ஆராய்ந்த தேசிய கல்வி ஆணைக்குழுவினர் உடனடியாக செயற்பாடுகளுக்குரிய சில முன்னுரிமைகளைத் தந்துள்ளனர்.[13] அவையாவன.

- சீலமேம்பாடு.
- நாட்டு மேம்பாடு.
- வினையாற்றுகையைக் கண்காணித்தல்
- பாடவிதானம் சார்ந்த நடவடிக்கைகள்
- பிரதி அதிபர் பதவி.
- பாடசாலை நாட்களின் எண்ணிக்கை.
- மாகாண நிர்வாகமும் முகாமையும்
- கல்வி எழுதுநர் சேவை
- உயர் கல்வி, மூன்றாம் நிலைக்கல்வி
- தொழிற் கல்வி.
- பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான விசேட ஏற்பாடு.

பொதுக்கல்வி வழியான சுயவேலை வாய்ப்புக்கான செயற்றிட்டங்களின் போதாமை இந்த மொழிவில் காணப்படும்.

ஆயினும் "செயல் முயற்சிப் பாடசாலைகள்" என்ற ஓர் அமைப்பைப் பற்றிய முன் மொழிவு முக்கியமானதாக அமைகின்றது.[14] இப்பாடசாலைகளின் ஏற்பாடானது பாடசாலை செல்லாதோருக்கும், ஆரம்பப் பாடசாலைகளில் இருந்து இடை விலகியோருக்கும் மட்டும் உரிய சுய வேலை ஊக்கலை ஏற்படுத்தும் முன்மொழிவாக அமைகின்றது. இந் நிலையில் கல்வியும் சுயவேலைவாய்ப்பும் தொடர்பான அகல் விரி திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டியுள்ளமை மீள வலியுறுத்தலாக அமைகின்றது.

இலங்கையின் இன்றைய கல்விச் சூழலில் பொதுக் கல்வியினூடாக சுயவேலை வாய்ப்பை உருவாக்கக்கூடிய பின்வரும் சமன்பாட்டை முன்மொழியலாம்:

பல்தொழில் ஆற்றல்களுடன் இணைந்த கலைத்திட்டம் + வளர்தொழில் ஆலோசனைச் சபைகள் + வங்கிக் கடன் வசதி = சுயவேலை.

வளம் மிக்க ஒரு கலைத்திட்டத்தை உருவாக்குதலுடனும், கல்வியோடிணைந்த பன்முகப்பட்ட பொருளாதாரச் செயற்பாடுகளை, மேம்படுத்துவதன் வாயிலாகவும், தொழிற்படுவதற்குரிய அமைப்பு வசதிகளை விரிவாக்குவதன் வழியாகவும் சுயவேலை வாய்ப்புக்களைப் பெருக்குவதற்கு உதவலாம்.

---

## அடிக்குறிப்புக்கள்

1. *Report of the Presidential Commission on youth*, Sessional Paper No. 1 - 1990, pp 30 - 31.
2. Korale, R. B. M. *A Satistical overview of employment and Unemployment trends*, Dept. of Census and Statistics, Colombo 1988. Table - 13



படிப்பகம்

www.padippakam.com


3. *Ibid.*, - Table - 08

4. *Ibid.*, - Table 15

5. Gunatilleke, G, *The Extent and Nature of structural Mismatch in the Domestic Labour Market*, Marga Institute, Colombo 1988. Table - 3 and 10

6. UNESCO, *Education, Work and Employment* 11, International Institute for Educational planning, Paris, 1980 p. 226.

7. *Ibid.*, pp 226 - 7

8. *Ibid.*, pp 160 - 1

9. Synyal, Bikase, and others, *University Education and Graduate Employment in Sri Lanka*, Marga Institute, Colombo 1983, p. 325

10. UNESCO, *Education, work and Employment* 11, op. cit. p. 229

11. *Ibid.*, p, 229 - 30

12. UNESCO. *Learning and Working*, Paris; 1979, p. 45.

13. *First Report of the National Education Commission*, Sessional Paper V. 1992, pp 98 - 9

14. *Ibid.*. pp 118 - 9




படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை
தொகுதி VI
இதழ் I & II, 1994

# நிலப்பயன்பாட்டு வகைகளை மதிப்பீடு செய்தல்

எஸ். ரி. பி. இராஜேஸ்வரன்

## 1.0 முகவுரை

'தொலைநுகர்வு' (Remote Sensing technigues) சாதனங்கள் மூலமாக விரை வாக ஒரு பிரதேசத்தின் நிலவளங்களை மதிப்பிட்டுக் கொள்ளும் நுட்பமுறை கள் வேகமாக எல்லா நாடுகளையும் கவர்ந்து வருகின்றன. இம் முறைகள் பழைய மரபு வழி ஆய்வு முறைகளில் இருந்து பெரிதும் வேறுபட்டன. செய்மதி களின் படங்கள் (Landsat Images) 'றாடர்' விம்பங்கள் போன்றவை இந்த வகையில் நில வள மதிப்பீடுகளை செய் வதற்கு பயன்படும் மூலங்களாகும். இவ் வாய்வுக் கட்டுரையில், யாழ்ப்பாணப் பிர தேசத்தின் ஒரு சிறிய பகுதிக்கு விமான ஒளிப்படங்களை அடிப்படையாகக் கொண்டு (மாதிரி ஆய்வாக) அப்பிரதேச நிலப்பயன்பாட்டு வகைகள் மதிப்பிடப் பட்டுள்ளன.

## 2.0. முறையியல்

1984ம் ஆண்டு காலப் பகுதியில் எடுக் கப்பட்ட ± 1: 20000 என்ற அளவுத்திட்ட விமானப்படங்களில் இருந்து முறைப்படி ஆய்வுப் பிரதேசத்திற்குரிய படம் (Mosic) தயாரிக்கப்பட்டது. மில்லிமீற்றர் மேற்படி தாளில் இரண்டு சதுர செ.மீ கொண்ட இடைவெட்டும் புள்ளிகளில் மாதிரி பெறத்தக்கதாக ஒரு படித்தாள் (Over Lay) செய்யப்பட்டது. இப்படித்தாள், படத் தாள் மேல் பொருத்தப்பட்டு மாதிரிகள் (Samples) பெறப்பட்டன. இரண்டு செ.மீ. இடைவெளியில் ஒரு ஒழுங்கில் 100 மாதிரி கள் பெறப்பட்டன.

எல்லாமாக நான்கு ஒழுங்கில் 400 மாதிரி கள் பெறப்பட்டன. நான்கு ஒழுங்குகளி லும் பெறப்பட்ட எல்லா மாதிரிகளும் இரண்டு செ. மீ இடைவெளிகளில் இருக் கும். ஆனாலும் இவ்வண்ணம் மாதிரி கள் எடுக்கப்பட்டமையினால் முழுப்படத் திலும் எடுக்கப்பட்ட மாதிரிகளின் பரம் பல் ஒவ்வொரு சென்ரி மீற்றர் இடை வெளிகளைக் கொண்டதாகவே இருக்கும். ஆகவே பிரதேசம் முழுவதிலும் எடுக்கப் பட்ட மாதிரிகள் எல்லாம் சமஇடைவெளி களில் எடுக்கப்பட்டதாகவே இருக்கும். எடுக்கப்பட்ட ஒவ்வொரு மாதிரித்தொகு திகளும் பின்னர் புள்ளி விபர ஆய்வுக்குட் படுத்தப்பட்டது. நிலப்பயன்பாட்டு வகை களின் நிகழ்வுகள் வீதங்களாக மாற்றப் பட்டு ஒவ்வொரு பயன்பாட்டினதும் 'நியம வழு' (Standard error) கணிக்கப்பட்டது. 95% நம்பிக்கை மட்டத்தில் பெறுமானங் களின் வீச்சு கணிக்கப்பட்டது.

ஒவ்வொரு மாதிரி ஒழுங்கினதும் ஒவ் வொரு நிலப்பயன்பாட்டு வகையினதும் நியமவழுவும், இருமாதிரி ஒழுங்குகளை ஒன்றாகச்சேர்த்து (100 + 100 = 200 மா திரிகள்) அதற்கும் நியமவழு, பெறுமா னங்களின் வீச்சும் கணிக்கப்பட்டது. அதன்



படிப்பகம்

www.padippakam.com

பின்னர் முதல் மூன்று ஒழுங்குகள் (100 + 100 + 100 = 300) ஒன்றாகச் சேர்க்கப்பட்டு நியமவழு, பெறுமானங்களின் வீச்சு கணிக்கப்பட்டது. இறுதியாக நான்கு ஒழுங்குகளும் (100 + 100 + 100 + 100 = 400) ஒன்றாகச் சேர்க்கப்பட்டு நியம வழு, பெறுமானங்களின் வீச்சு கணிக்கப்பட்டு அட்டவணைப்படுத்தப்பட்டு, இறுதியாக முடிவுகள் பெறப்பட்டன.

## 3. 0. மாதிரி எடுப்பு

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட படம் கிழக்கு நோக்கியும் (Eastings) வடக்கு நோக்கியும் (Northings) சம இடைவெளிகளில் மாதிரி பெறத்தக்க வகையில் ஆள் கூறுகள் அமைக்கப்பட்டிருந்தன. இதனால் படத்தில் மாதிரிப்புள்ளிகள் சமஇடைவெளியில் வருவதுடன் ஒவ்வொரு தொகுதி மாதிரிப்புள்ளிகளும் 2.0 சதுர சென்ரிமீற்றர் இடைத் தூரம் கொண்டதாகவும் இருக்கும்.

படத்தின் அளவுத்திட்டம் ± 20,000 என்பதால் (1.0 செ. மீ = 0. 2. கி. மீ) 2.0 செ.மீ தூரம் = 0.4 கி. மீற்றராக இருக்கும். ஆகவே 0.4 கி. மீ தூரத்திற்கு ஒரு மாதிரிப்புள்ளி எடுக்கக் கூடியதாகஉள்ளது.

## 4.0 ஆய்வுப்பிரதேச நிலப்பயன்பாட்டு வகை

1. (SET) – குடியிருப்புக்களும் அவை சார்ந்த பயன்பாடுகளும் (இதில் குடியேற்றக் குடியிருப்புக்களும் செறிவான மரப்பயிர் சூழ்ந்த செறிவானகுடியிருப்புப் பகுதிகளும் அடங்கும்)
2. (UP) – உற்பத்தி திறனற்ற நிலங்கள் (இவற்றுள் கரையோர தாவர, தாவரங்கள் அற்ற பகுதிகளும் உவர் நிலங்களும் வெள்ளத்திற்குட்படும் உலர் நிலங்களும், மண் அள்ளப்பட்ட வெற்று நிலங்களும் ஏனைய தாவர நிலங்களும் அடங்கும்)
3. (P) – நெல்நிலங்கள் (இப்பிரதேசத்திலுள்ள பருவகால வயல் நிலங்களும் கைவிடப்பட்ட வயல் நிலங்களும் அடங்கும்.)
4. (C) மரப்பயிர் – தென்னை.
5. (P) மரப்பயிர் – பனை (இப்பயிரும் ஏனைய பற்றைத் தாவரங்களும்)
6. (MIX) கலப்பு நிலையிலான மரப்பயிர்கள் (தென்னை, பனை மற்றும் ஏனைய மரங்களும் (படத்தில் வேறுபடுத்த முடியாதவை)

## 5.0. நிலப்பயன்பாட்டு வகைகளின் நிகழ்வொழுங்குகளும் வீத அளவும்.

1வது, 2வது, 3வது, 4வது, மாதிரித் தொகுதிகளின் நிகழ்வுகளின் அடிப்படையில் நிலப்பயன்பாட்டு வகைகளின் வீத அளவுகள் கணிக்கப்பட்டு அட்டவணை 1, 2, 3, 4ல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை: 1.0

முதலாவது ஒழுங்கு முறையில் எடுக்கப்பட்ட 100 மாதிரிகளும் அவற்றின் நிகழ்வொழுங்கின் அடிப்படையில் நிலப்பயன்பாட்டு வகைகளும்

| 1. | SET | UP | P | C | PL | MIX | TOTAL | % |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2. | 06 | 26 | 27 | 13 | 14 | 14 | 100 | — |
| 3. | 06 | 26 | 27 | 13 | 14 | 14 | — | 100 |

1. நிலைப்பயன்பாட்டு வகைகள்
2. மாதிரிகளில் நிலைப்பயன்பாட்டு வகைகளின் நிகழ்வுகள்
3. நிகழ்வுகளின் விதங்கள்



படிப்பகம்

அட்டவணை: 2.0

இரண்டாவது ஒழுங்குமுறையில் எடுக்கப்பட்ட 100 மாதிரிகளும் அவற்றின் நிகழ்வொழுங்கின் அடிப்படையில் நிலப்பயன்பாட்டு வகைகளும்

| 1. | SET | UP | P | C | PL | MIX | TOTAL | % |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2. | 08 | 23 | 25 | 18 | 12 | 14 | 100 | — |
| 3. | 08 | 23 | 25 | 18 | 12 | 14 | — | 100 |

அட்டவணை: 3.0

மூன்றாவது ஒழுங்கு முறையில் எடுக்கப்பட்ட 100 மாதிரிகளும் அவற்றில் நிகழ்வொழுங்குகளின் அடிப்படையில் நிலப்பயன்பாட்டு வகைகளும்

| 1. | SET | UP | P | C | PL | MIX | TOTAL | % |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2. | 0.6 | 23 | 25 | 15 | 17 | 14 | 100 | — |
| 3. | 0.6 | 23 | 25 | 15 | 17 | 14 | — | 100% |

அட்டவணை: 4.0

நான்காவது ஒழுங்கு முறையில் எடுக்கப்பட்ட 100 மாதிரிகளும் அவற்றின் நிகழ்வொழுங்குகளின் அடிப்படையில் நிலப்பயன்பாட்டு வகைகளும்

| 1. | SET | UP | P | C | PL | MIX | TOTAL | % |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2. | 7 | 30 | 23 | 15 | 11 | 14 | 100 | — |
| 3. | 7 | 30 | 23 | 15 | 11 | 14 | — | 100% |

**6.0. மாதிரி தொகுதிகளின் அடிப்படையில் நிலப்பயன்பாட்டு வகைகளுக்கான நியமவழுக் (Standard errer) கணிப்பு:-**

'நியமவழு' என்பது மாதிரிகளில் இருந்து பெறப்படும் மதிப்பீடுகளும் உண்மையான பெறுமானத்திற்கும் இடையேயுள்ள வித்தியாசம் வழுவினது நியமமாக்கப்பட்ட பெறுமானமாகும். மாதிரிகளின் அளவு கூடக்கூட நியமவழு குறைந்து செல்லும்.

எடுக்கப்பட்ட மாதிரிகளில் இருந்து நிலப்பயன்பாட்டு வகைகளின் நிகழ்வுகள் பெறப்பட்டு அவை வீதமாக்கப்பட்டுப் பின்னர் நியமவழுப் பெறுமானம் கணிக்கப்பட்டது.

'நியமவழு' (SE) பின்வரும் சமன்பாட்டின் மூலம் பெறப்படுகின்றது.

இதில், SE = நியமவழு

$$SE = \sqrt{\frac{P \times q}{n}}$$

P = குறித்த பயன்பாட்டுக்கான நிலத்தின் வீதம்
q = மிகுதியான பயன்பாட்டினது நிலத்தின் வீதம்
n = எடுக்கப்பட்ட மாதிரிகளில் எண்ணிக்கை

1வது, 2வது, 3வது, 4வது மாதிரி தொகுதிகளின் நியமவழு அட்டவணை 5இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை: 5.0

1வது, 2வது, 3வது, 4வது மாதிரி தொகுதிகளின் நியமவழு

| மாதிரித் தொகுதி | SET | UP | P | C | PL | MIX |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2.37 | 4.38 | 4.44 | 3.36 | 3 46 | 3.46 |
| 2. | 2.71 | 4.2 | 4.33 | 3.84 | 3.24 | 3.46 |
| 3. | 2.37 | 4.2 | 4.33 | 3.57 | 3.75 | 3.46 |
| 4. | 2.55 | 4.58 | 4.2 | 3.57 | 3.12 | 3.46 |

அட்டவணை: 5 இல் முதல் நான்கு மாதிரித் தொகுதிகளிலும் நிலப்பயன்பாட்டு வகைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் இல்லை எனலாம். கலப்பு மரப்பயிர்களுக்கான பயன்பாடு நான்கு மாதிரித் தொகுதிகளிலும் ஒரே மாதிரியாக இருக்கின்றது.

அட்டவணை- 6 இல் முதல் நான்கு மாதிரித் தொகுதிகளின் நிலப்பயன்பாட்டு வகைகளுக்கான (95% நம்பிக்கை மட்டத்தில்) பெறுமானங்கள் வீச்சு கணிக்கப்பட்டுள்ளது. இப்பெறுமானங்கள் அடிப்படையிலும் மாதிரித் தொகுதிகளுக்கிடையில் நிலப்பயன்பாட்டு வகைகளுக்கு இடையிலான வேறுபாடுகள் குறிப்பிடத்தக்க அளவில் இல்லை என்பதை உறுதி செய்கின்றன.



படிப்பகம்

அட்டவணை 6.0

1வது, 2வது, 3வது, 4வது மாதிரித் தொகுதிகளுக்கான 95% நம்பிக்கை மட்டத்தில் நிலப்பயன்பாட்டு வகைகளின் பெறுமானங்களின் வீச்சு.

| மாதிரித் தொகுதி | SET | UP | P | C | PL | MIX |
|---|---|---|---|---|---|---|
| 1 | 9.48 | 17.52 | 17.76 | 13.44 | 13.84 | 13.84 |
| 2 | 10.84 | 16.8 | 17.32 | 15.36 | 12.96 | 13.84 |
| 3 | 9.48 | 16.8 | 17.32 | 14.28 | 14.0 | 13.84 |
| 4 | 10.2 | 18.32 | 16.8 | 14 28 | 12.48 | 13.84 |

முதல் நான்கு தனித்தனி மாதிரி ஒழுங்குகளுக்கிடையிலான முடிவுகள்

1. நான்கு தனித்தனியான மாதிரி எடுப்புக்களில் SET, UP, P, Co, Ply, Mix, என்னும் ஆறு பயன்பாடுகளைப் பொறுத்த வரையில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவு வேறுபாடுகள் இல்லை. கலப்பு மரங்களைக் கொண்ட பயன்பாடுகளில் நான்கு மாதிரித் தொகுதிகளிலும் எந்த வித வேறுபாடுகளும் காணப்படவில்லை. ஆய்வின் பிரகாரம் மிகச் சிறிய வேறுபாடு ஏனைய பயன் பாடுகளில் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

2. மாதிரிகள் ஒழுங்கு முறையில் எடுக்கப்பட்டமையும், மாதிரிகளுக்கிடையிலான இடை வெளிகள் சீரான முறையில் அமைந்திருந்தமையும், நிலப்பயன்பாட்டுக் கோலங்களின் முடிவுகளைப் பாதிக்கவில்லை.

3. இந் நிலைமைகளினால், எந்தவொரு மாதிரித் தொகுதியினதும் முடிவுகளை இப் பிரதேசத்திற்கான நிலப்பயன்பாட்டு வகைகளின் பரம்பல் நிலைமைகளை பிரதிபலிக்கின்றது என்ற முடிவுக்கு வரலாம்.

4. மாதிரித் தொகுதிகளில் கிடைக்கும் முடிவுகளில் குறிப்பிடக்கூடிய இன்னுமொரு அம்சம் தசமங்களில் மட்டுமே எல்லாப் பயன்பாடுகளுக்கும் இடையிலான வேறு பாடுகள் காணப்படுகின்றது, அத்துடன் 95% நம்பிக்கை மட்டத்தில், பெறுமானங்களுக்கிடையிலான வீச்சுக்களிலும், மாதிரித் தொகுதிகளுக்கிடையில் வேறுபாடுகள் குறிப்பிடக் கூடியதாக இல்லை (அட்டவணை 16)

## பகுதி - II

தனித்தனியாக ஒவ்வொரு மாதிரி ஒழுங்கும் ஆய்வுக்குட்பட்ட நிலைமையில் இருந்து சற்று வித்தியாசமாக மதிப்பீட்டினை நோக்கமுடியும். அதாவது மாதிரிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதனால், அதனால் ஏற்படும் நிலப்பயன்பாட்டு வகைகளின்

www.padippakam.com

வீத அளவுகளைக் கணித்து, அவற்றிற்கு நியம வழுவினை மதிப்பிட்டு அறிந்து, அதன் அடிப்படையில் நிலப்பயன்பாட்டு வகைகளின் பெறுமானங்களை அறிந்து கொள்ள முடியும்.

மாதிரிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதனால் மதிப்பீடுகளில் எத்தகைய மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதை இப்பகுதியில் நோக்கலாம்.

## 7.0. முதல் இருநூறு (200) மாதிரிகளில் இருந்து பெறப்பட்ட முடிவுகள்

முதலாவது இரண்டாவது மாதிரித் தொகுதிகளை ஒன்றாக்கியபின் (100+100=200) அவற்றுக்கிடையிலான பயன்பாட்டு வகைகளின் வீதம், நியமவழு என்பன அட்டவணை-7இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை: 7.0

| நிலப்பயன்பாட்டு வகை | SET | UP | P | C | PL | MIX | TOTAL | % |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாதிரிகள் | 14 | 49 | 52 | 31 | 26 | 28 | 200 | — |
| நிகழ்வுகளின் வீதம் | 07 | 24.5 | 26 | 15.5 | 13 | 14 | — | 100% |
| நியமவழு | 1.8 | 3.04 | 3.1 | 2.56 | 2.37 | 2.37 | — | — |

## 8.0 முதல் மூன்று (300) மாதிரிகளில் இருந்து பெறப்பட்ட முடிவுகள்

1வது, 2வது, 3வது மாதிரித் தொகுதிகளை ஒன்றாக்கிய பின்னர் (100+100+100=300) அவற்றுக்கு இடையிலான பயன்பாட்டு வகைகளின் வீதம், நியமவழு என்பன அட்டவணை 8ல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை: 8.0

| நிலப்பயன்பாட்டு வகை | SET | UP | P | C | PL | MIX | TOTAL | % |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாதிரிகள் | 20 | 72 | 77 | 46 | 43 | 42 | 300 | — |
| மாதிரி நிகழ்வு வீதங்கள் | 6.6 | 24 | 25.6 | 15.4 | 14.4 | 14 | — | 100% |
| நியமவழு (SE) | 1.43 | 2.46 | 2.52 | 2.08 | 2.02 | 2.0 | — | — |



படிப்பகம்

www.padippakam.com

## 9,0 முதல் நான்கு (400) மாதிரிகளில் இருந்து பெறப்பட்ட முடிவுகள்

1வது, 2வது, 3வது, 4வது மாதிரித் தொகுதிகளை ஒன்றாக்கியபின் (400) அவற்றின் பயன்பாட்டு வகைகளின் வீதம், நியமவழு என்பன அட்டவணைகளில் தரப்பட்டுள்ளன.

அட்டவணை: 9.0

| நிலப்பயன்பாட்டு வகை | SET | UP | P | C | PL | MIX | TOTAL | % |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாதிரிகள் | 27 | 102 | 100 | 61 | 54 | 56 | 400 | — |
| நிகழ்வுகளின் வீதங்கள் | 6.75 | 2.55 | 25 | 15.5 | 13.5 | 5.14 | — | 100% |
| நியமவழு (SE) | 1.25 | 2.17 | 2.16 | 1.79 | 1.7 | 1.73 | — | — |

## 10.0. வேறுபட்ட எண்ணிக்கை கொண்ட மாதிரிகளில் (100, 200, 300, 400) நிலப்பயன்பாட்டு வகைகளின் நியமவழு:

அட்டவணை: 10

| மாதிரித் தொகுதிகள் | மாதிரிகளின் எண்ணிக்கை | SET | UP | P | C | PL | MIX |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது | 100 | 2.37 | 4.38 | 4.44 | 3.36 | 3.46 | 3.46 |
| 2வது | 100 | 2 71 | 4.2 | 4.33 | 3.84 | 3.24 | 3.46 |
| 3வது | 100 | 2.37 | 4.2 | 4.33 | 3.57 | 3.75 | 3.46 |
| 4வது | 100 | 2.55 | 4.58 | 4.02 | 3.57 | 3.12 | 3.46 |
| சராசரி | | 2.5 | 4.54 | 4.32 | 3.58 | 3.39 | 3.46 |
| 5வது | 200 | 1.8 | 3.04 | 3.1 | 2.56 | 2.37 | 2.45 |
| 6வது | 300 | 1.43 | 2.46 | 2.52 | 2.08 | 2.02 | 2.0 |
| 7வது | 400 | 1.25 | 2.17 | 2.16 | 1.79 | 1.7 | 1.73 |

அட்டவணை: 10இல் இருந்து, மாதிரிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப நிலப்பயன்பாட்டு வகைகளின் நியமவழு எவ்வாறு மாறிச் செல்கின்றது என்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com

முதல் நூறு மாதிரிகளுக்கிடையிலான நியம வழுவில் குறிப்பிடத்தக்க வேறுபாடு இல்லாதபோதும் மாதிரிகளின் தொகை இரு மடங்காக அதிகரிக்கும்போது நியமவழுவில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக மாதிரிகள் 100ஆக இருக்கும் பொழுது குடியிருப்பும் – குடியிருப்பு சார்ந்த பயன்பாட்டில் (SET) நியமவழு 3.37 – 2.71 வரைகாணப்பட்டது. ஆனால் மாதிரிகளின் தொகை அதிகரிக்கும் பொழுது, அவை அதிகரிக்கும் மடங்குகளுக்கு ஏற்ப நியமவழு அம்மடங்காக குறைவடையவில்லை. (அட்டவணை 10) மாதிரிகளின் தொகை நான்கு மடங்காக அதிகரிக்கும் பொழுது – மட்டும் நியமவழு ஏறத்தாழ அரைமடங்காகக் குறைகின்றது. ஆனால், நிலப்பயன்பாட்டு வகைகளின் வீதாசாரங்களில் பெரிய அளவு மாற்றம் ஏற்படவில்லை (அட்டவணை: 11).

## மாதிரிகளின் தொகைகளுக்கேற்ப நிலப்பயன்பாட்டு வகைளுக்கான விகிதாசாரங்கள்

அட்டவணை: 11

| மாதிரிகளின் எண்ணிக்கை | நிலப்பயன்பாட்டு வகைகள் SET | UP | P | C | PL | MIX |
|---|---|---|---|---|---|---|
| 1 வது 100 மாதிரிகள் | 6.0 | 26 | 27 | 13 | 14 | 14 |
| 2 வது ,, | 8 | 23 | 25 | 18 | 12 | 14 |
| 3 வது ,, | 6 | 23 | 25 | 15 | 17 | 14 |
| 4 வது ,, | 7 | 30 | 23 | 15 | 11 | 14 |
| 200 மாதிரிகள் | 7 | 24.5 | 26 | 15.5 | 13 | 14 |
| 300 மாதிரிகள் | 6.6 | 24 | 25.6 | 15.4 | 14.4 | 14 |
| 400 மாதிரிகள் | 6.75 | 25.5 | 25 | 15.25 | 13.5 | 14 |

மாதிரிகளில் தொகை இருமடங்காகும் பொழுது முதலாவது நிலப்பயன்பாட்டு வகையின் (SET) விகிதாசார அளவு குறிப்பிடத்தக்க அளவில் குறையவில்லை. அதே போல மாதிரிகளை மூன்று மடங்காகவும், நான்கு மடங்காகவும் அதிகரிக்கும்பொழுதும் பெருமளவு மாற்றமடையவில்லை. இதே போல ஏனைய பயன்பாட்டு வகைகளையும் அவற்றின் வீதாசார மாற்றங்களை அட்டவணையில் இருந்து நோக்கலாம். கலப்பு மரங்கள் (MIX) காணப்படும் பயன்பாட்டில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இத்தகைய நிலப்பயன்பாட்டு வகைகளின் வீதாசார நிலைமைகளின் வேறுபாடுகளை நியமவழுவின் பெறுமானங்களில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் ஏற்படாததில் இருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. ஆகவே, இங்கு ஆய்வின் முடிவாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

1. எடுக்கப்பட்ட 200 மாதிரிகள் கொண்ட மாதிரித்தொகுதிகள் நான்கில் எதனையும் ஆய்வுப்பிரதேசத்திற்குரிய நிலப்பயன்பாட்டு வகைகளுக்கான வீதாசாரமாகக் கொள்வதில் தவறு இல்லை. ஏனெனில் மாதிரித்தொகுதிகள் நான்கிலும் நிலப்பயன்பாட்டு வகைகளுக்கிடையில் குறிப்பிடத்தக்க பெரிய வேறுபாடுகள் இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

2. மாதிரிகளை அதிகரிக்கும் பொழுது நிலப்பயன்பாட்டு வகைகளுக்கான வீதாசாரங்களிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றது. ஆனால் இந்தமாற்றங்கள் மாதிரிகள் அதிகரிக்கப்படும் மடங்குக்கு ஏற்றவாறு குறைடையாததினால் மாதிரித் தொகுதிகள், 200 300. 400 என்பவற்றில் எதனையும் இப்பிரதேசத்திற்கு பொருத்தமாகக் கொள்ள முடியும்.

அல்லது

3. 200, 300, 400 மாதிரிகளில் பெறப்பட்ட நிலப்பயன்பாட்டு வகைகளுக்கான வீதாசாரங்களில் சராசரியை இப்பிரதேசத்திற்கான நிலப்பயன்பாட்டு வகைகளுக்கான் வீதாசாரங்களாகக் கொள்ளாலாம். அதே போல முதல் நான்கு 100 மாதிரிகளின் நிலப் பயன்பாட்டு வகைகளின் வீதாசாரங்களின் சராசரியையும் இப்பிரதேசத்திற்கான மதிப்பீடாகக் கொள்ளமுடியும்.

---

## அடிக்குறிப்புக்கள்

1, *VATS, P. C. 1993. 'Application of Remote Sensing Techniques in Landuse/Land Covering Mapping of Nagaur District Western Rajasthan, India'.* THE DECCAN GEOGRAPHER, vol. xxi. No. 2,

2, *FAO. 1976. 'A Frame Work for Land Evaluation.* SOIL BULL. 32, FAO, ROME.

3. *LE QUANG TRI. 1993. 'Present Landuse as a Basis for Land Evaluation in the Mekong Delta',* ITC JOURNAL 1993 - 4.

4, *JAH, V. C. P. B. HAZRA. 1993, 'Landuse/Land Cover Analysis of Deoghar Upland Using Remote Techniques'.* THE DECCAN GEOGRAPHER, vol. xxxi, January - June 1993. No. 1 Pub. Deccan Geographical Society, India.



படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை
தொகுதி VI
இதழ் I & II, 1994

# பன்முகப்படுத்தப்பட்ட தலைமைத்துவ அமைப்புக்கள் - சமூக உளவியல் நோக்கு

கே. சிவானந்தமூர்த்தி

1.0 சமகால உலகம் தலைமைத்துவம் என்கிற எண்ணக்கரு குறித்து நோக்க வேண்டிய கட்டாயக்கடப்பாட்டைக் கொண்டுள்ளதெனலாம். தேசத்தின் பொருளாதார வளத்தை மேம்படுத்த கலாசார, பண்பாட்டு விழுமியங்களைச் சிறப்புறச் செய்ய, உடல்- உள வலுக்களை வளர்த்தெடுப்பதில் முக்கிய கூறுகளிலொன்றாய் விளங்குகின்ற விளையாட்டுத்துறையை விருத்தி செய்ய, மனப்பண்புகளை வளப்படுத்தி மானிடத்தை உயர்வடையச் செய்ய, தலைமைத்துவம் தலைமைத்துவப்பண்புகள் தனிநபர் ஒவ்வொருவரிடமும் வளர்க்கப்பட வேண்டும் என்கிற கருத்து வலிமையுடன் காணப்பெறுகின்றது. முதலாளித்துவ நாடுகள் தலைமைத்துவப் பண்புகளைத் தனிநபர்களிடையே வளர்தெடுக்கப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. பொதுவுடமைக் கொள்கைகளைத் தமது விழுமியங்களாகக் கொண்ட நாடுகள் தனிநபர் தலைமைத்துவ வளர்ச்சிக்கான அதீதமுயற்சிகள் குறித்துத் தமது அதிருப்திகளை வெளிப்படுத்துகின்றன. தனிநபர் இயல்பாக அக்கறை கொள்கின்ற பொருளாதாரம், கல்வி ஆகிய துறைகளிலே காட்டுகின்ற விருப்புக்களைத் திசைதிருப்பப் பொழுது போக்கு, கலாசாரம் என்றவாறாய் அதிக முக்கியத்துவம் இல்லாத விடயங்களிலே தனிநபர் சக்தியைத் திசை திருப்பத் தலைமைத்துவப் பயிற்சிகள் வழிசெய்கின்றன எனக் குறைபடுவதாகக் கூறப்படுகின்றது. தலைமைத்துவ தனிநபர் அக்கறைப்பாடானது சுயத்தை அறிய விடாதவாறு திரையிடுகின்றது எனவும், தனியாள் தலைமைத்துவ வளர்ச்சியிற் காட்டப்படுகின்ற அக்கறைகளைச் சமூகம் என்கிற கூட்டு அடிப்படையிற் காட்டப்படும் போது சமூகப் பார்வை, சமூகத் தன்மை உருவாக வழிவகுக்கும் எனவும் பொதுவுடைமை நாடுகள் நம்புகின்றன. தலைமைத்துவப் பண்புகளில் நேர்க்கணிய வளர்நிலைகள் நாட்டு நலனுக்கு மட்டுமல்ல வீட்டு நலனுக்கும் அவசியமானதென்பதாலும், சமகால உலகம் தலைமைத்துவ ஆராய்ச்சிகளில் அதீத அக்கறையைக் காட்டி நிற்பதாலும், தலைமைத்துவம் பற்றியதும், அதன் வகையீடுகள் பற்றியதுமான நோக்கல், பொருத்தமானது ஆகிறது.

தலைவர்கள் தலைமைத்துவ குணவியல்புகளை பிறப்புவழிக் கொணர்கிறார்கள் என்ற கருத்தும், தலைமைத்துவக் குணவியல்புகள் பிறப்புவழியும் வரலாம்வாராதும் விடலாம் ஆனால், வளர்த்துக் கொள்ளலாம்



படிப்பகம்

www.padippakam.com

என்கிற கருத்தும் முக்கியத்துவம் வாய்ந்த இரு வேறுபட்ட கருத்துக்களாக அமைகின்றன. இவ்விருநிலைப் பட்ட கருத்துக்களின் பொருத்தப் பாட்டை, பொருத்தப்பாட்டின்மையை கட்டுரையின் வளர்ச்சிநிலையில் காணலாம்.

1.1 1896 ஆம் ஆண்டிற்கு முன் தலைமைத்துவம் குறித்து ஆய்வுகள் இடம் பெறவில்லை. இடம் பெற்றதற்கு உடன்பாடாக நூல்களோ கட்டுரைகளோ கிடைக்கவில்லை. தலைமைத்துவம் என்கின்ற எண்ணக்கரு குறித்த நோக்கு, '' தனிநபர் தங்களது சக்திகளை பயன்படுத்திக் கொள்வதில் காட்டிநிற்கும் வேறுபட்ட நிலைகள் நிலைக்கான காரணிகள் என்றவாறாக கொன்பூசியஸ் முதலாய் பேட்டன்ரசல் வரையில் அலசப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.''[1] முதலாம் உலகப்போரின் விளைவாகச் சமூக உளவியல், சமூகவியல் முதலிய பாட விதானங்கள் தலைமை தலைமைத்துவம் குறித்து விஞ்ஞான விளக்கத்துடன் அறிந்து கொள்ளத் தொடங்கின.

1.2 தலைமைத்துவம் குறித்து வரைவிலக்கணம்மொன்றைத் தர முற்படும் போது, மிக நிறைவானதும் சுருக்கமானதுமான வரைவிலக்கணத்தை தருவதுசிரமமானது. தலைமைத்துவம் குறித்துப் பல்வேறு விளக்கங்களும் விபரங்களும் வேறுபட்ட காலப்பகுதியில், வேறு வேறான சமூக உளவியல், சமூகவியல் அறிஞர்களால் வெவ்வேறு குணவியல்புகளை முதன்மைப்படுத்தித் தரப்பட்டிருக்கின்றன. சில வரைவிலக்கணங்களை இங்கு நோக்குதல் பொருத்தமானதாகும் ''எவரேனும் ஒருவர், ஏனையோருக்கு முன்மாதிரியாக நின்று செயற்படுகின்றாரோ அந்த நபரை தலைவர் அல்லது தலைமை எனலாம்''[2] என ஸ்புறூட்ஸ் குறிப்பிடுகின்றார். இது ஒரு எளிய வரைவிலக்கணமாகும். இவ்வரைவிலக்கணத்தின்படி தலைமைத்துவம் என்பது ஒருவரிடம் குவிந்துள்ள சிறப்புக் குணவியல்புத் தொகுதி என்றும், இத் தொகுதியானது அத் தலைமைத்துவத்தை பின்பற்றுபவர்களுக்கு முன்மாதிரியாக அமைகின்றது என்றும் குறிப்பிடலாம். மல்யுத்த வீரனே மல்யுத்தக்குழுவொன்றிற்குத் தலைவராகலாம். அரசியல் விதிகளையும், வழிமுறைகளையும் அறிந்த ஒருவரே அரசியற்குழுவொன்றின் தலைவராகலாம். குறித்த இரு நிலைகளிலும் தலைவன் என்கிற நாமகரணம் சிறப்பான குணவியல்புகளைக் கொண்ட ஒருவனுக்கு அவன் வழிப்பட்டு வருபவர்களால் அதாவது குழுவொன்றினால் வழங்கப்பெறும் குறியீட்டுப்பெயர் அல்லது அடையாளம் எனலாம்.

மேர்வின் இ. சோ தலைமைத்துவம் குறித்துக் கூறுகையில், ''தலைவன்என்பவர் தூய்மையானவர் சிக்கனமானவர் என்றும், தன்னைச் சார்ந்துள்ள மக்கள் கூட்டத்தின்மேல் அல்லது குழுவின் மேல் நேர்க்கணியமான செல்வாக்கைச் செலுத்தக்கூடியவராகவும் விளங்க வேண்டும்'' என்றார்.[3] குழுவில் உள்ள தனியன் அல்லது முழுக்குழுவும் தலைவரை நோக்கி செலுத்துகின்ற செல்வாக்கைக் காட்டிலும் கூடுதலான செல்வாக்கை தன் குழுவைச்சார்ந்த அனைவரிடத்திலும் தலைவன் செலுத்தக் கூடிய செல்வாக்குடையவனாக அமைய வேண்டும்.

சமூக விஞ்ஞானத்தில் தலைமைத்துவம் என்ற சொற்பிரயோகமானது மூன்று முக்கிய அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. டானியல் கற்ஸ்சும், றோபோட் எல் - கானும், குறிப்பிடுகையில் தலைமைத்துவம் என்பது



படிப்பகம்

www.padippakam.com

ஒரு நிலையின் உடமை, தனியனின் குணவியல்பு நடத்தையின் கூறு என்கிறார்கள்.[4] இந்த மூன்று கூறுகளும் ஏக காலத்தில் தோற்றம் பெறுவனவாகவும் செயற்படுவனவாகவும் அமைகின்றன.

தலைமைத்துவம் குறித்து நிச்சாட் கொங்மன்னும், நோர்மன் ஆர். எவ். மைம்மும் குறிப்பிடும் போது "தனிநபரொருவரைத் தலைமைத்துவம் என்கிற நிலையில் அமர்த்துகின்ற போது அந்நபர் தன்னை நிலைப் படுத்திய குழுவினர் மீது செல்வாக்கைச் செலுத்துபவர். அந்நிலைக்குத் தனிநபரை நிலைப்படுத்தியோரும், தனிநபரான தலைவர் தம்மை நோக்கிச் செல்வாக்குச் செலுத்துகின்ற பாங்கை ஏற்றுக்கொள்ளத்தக் கமுறையிலே தம்மைத் தயார்படுத்திக் கொள்கின்றனர்"[5] என்றார்கள்.

எனவே தலைமைத்துவம், தலைவன் என்கிற நிலை ஏனையோரால் உன்னத இயல்புகள் குணவியல்புகள் என்று கருதப்படுகின்றவைகளைத் தன் உள்ளடங்கலாய்க் கொண்டு அமைகின்றது என்பதும், பதவி நிலை என்பதும், தலைமைக்கும், குழுவுக்கும் அல்லது வழிவருவோருக்கும் இடையிலான இடைவிடாத இடைவினையின் பேறாகத் தலைமைத்துவம் உயிர்ப்பாய் உள்ளது என்பதும் பெறப்படுகின்றது.

1.3 தலைமைத்துவச் செயற்பாடு தனிச் செயற்பாடா, அல்லது இணைச் செயற்பாடா, தலைமை அல்லது தலைமைத்துவம் எவ்வகையிலே தோற்றம் பெறுகின்றது என்பவை குறித்தும், தலைமைத்துவம் தோன்ற அதன் பின்னணியில் எது அல்லது எவை உள்ளன என்பது குறித்தும் விளக்கங்கள் அவசியமாகின்றன. தலைமைத்துவத்தைத் தனிநபரும் முன்னெடுக்கலாம். பலர் கூட்டாயும் முன்னெடுக்கலாம். தலைமைத்துவத்தை வேறுபட்ட பல வழிகளின் வாயிலாகவும் அடையலாம். அலுவலகத்தின் தலைமையை அவ்வலுவலகத்தைச் சேர்ந்த பிற அலுவலர்கள் சேர்ந்து செயற்பட்டு உருவாக்கலாம், அதிகாரம் மிக்கவர்களால் தலைமைத்துவத்திற்கு தனியாள், அல்லது ஒன்றிற்கு மேற்பட்டோர் நியமிக்கப்படலாம். தேர்தல்கள் மூலம் வாக்குப் பெற்றுத் தலைமைத்துவத்தை அடையலாம். பிறிதொருவரிடமிருந்து தலைமைத்துவத்தை வரன்முறை வழியாகப் பெறலாம். அபிமானமற்ற முறையில் எதேச்சையாகத் தலைமைத்துவத்தை அடையலாம். எவ்வாறு தலைவனானேன் என்று தெரியாமல் எதுவித முயற்சியுமின்றி மிக இயல்பாகக் கூடத் தலைமைத்துவத்தைப் பெற்றுக் கொள்ளலாம். மக்களை வலுக்கொண்டு அடக்கித் தலைமைத்துவத்தை கைப்பற்றலாம்.[6]

தலைமைத்துவத்தை ஏற்படுத்திக் கொடுத்தும் அதன் செயற்பாட்டிற்கு உதவியாகவும், உந்துசக்தியாகவும் அதன் பின்னணியில் அமைந்திருப்பவை மக்களின் அமைப்புக்களாகும். அந்த அமைப்பு, அரசாங்கமாகவோ, அரச நிறுவனமாகவோ, சமய நிறுவனமாகவோ, சமூக நிறுவனமாகவோ, பிற சிறு சிறு குழுக்களாகவோ அமையலாம். தனிநபர் சில இலக்குகளை அடைந்து கொள்வதற்காக ஒன்றாகக்கூடுகின்ற போது குழுக்கள் அமைகின்றன.[7] ஒவ்வொரு தனிநபரும், மிக இணைத்தன்மை வாய்ந்த எமது சமூகத்திற்குப் பல தரப்பட்ட வேறுவேறான சமூகக் குழுக்களில் அங்கத்தவர்களாக விளங்குகின்றனர், இத்தகைய குழுக்களை இரு வகையாக வகையீடு செய்யலாம். உளவியல் குழுக்கள், சமூக நிறுவனங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தொகையினர்



படிப்பகம்

www.padippakam.com

ஒன்று கூடும்போது குழு தோற்றம் பெற்று விடும். இங்கு சுதந்திரமான சுயாதீனமான கருத்துப் பரிமாறல்கள் இடம்பெறும். ஒவ்வொரு தனிநபரது நடத்தைக் கோலம் ஏனைய குழுவிலுள்ள மற்றவர்களது நடத்தையில் செல்வாக்கைச் செலுத்தும் குழு அங்கத்தவர்கள் தமக்கிடையே எண்ணங்களை, நம்பிக்கைகளை, அடைய விரும்பும் இலக்குகளை, பெறுமதிகளைக் குறித்து கலந்துரையாடுவார்கள். இங்கு தனித்துவம் வாய்ந்த எண்ணக் கருவை நோக்கி இவர்களது சிந்தனைகள் குவியும். இந்த இலட்சியத்தைத் தமது குழுவின் இலட்சியமாக்கிக் கொண்டு, இலக்காககிக் கொண்டு அதனை அடைய வழிகளை, முறைமைகளை வகுத்துக் கொள்வார்கள். பொதுவான இலக்கை எட்ட ஒருமுகப் பட்டுச் செயற்படுவார்கள். இவ்விதமாக குடும்பக் குழுக்கள், நண்பர் வட்டங்கள், அரசியல் குழுக்கள், சமயக் குழுக்கள் முதலானவை உருவாகின்றன. குழுக்கள் திட்டமிட்ட நீண்ட கால இலட்சிய அணிகளை ஈட்டிக் கொள்ள உருவாக்கப்படலாம். குழுக்கள் தற்செயலாகவும் உருவாகலாம். நீண்ட காலத்திற்கும் சில நிமிட தேவைக்கும் ஏற்றவாறாயும் கூட உருவாகலாம்.

மக்கள் தொகுதிகளாக குழுக்களாக இணைந்து தமது இலக்குகளை அடைந்து கொள்வது குறித்து இரு நிலைப்பட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. தனித்துவத்தை (Self-awareness theorists) முதன்மைப்படுத்துகின்ற கொள்கையினர், குழுக்களின் தோற்றம்குறித்து மாறுபாடான கருத்தினைக் கொண்டிருக்கின்றனர். ''சுய கட்டுப்பாடின்மையாலும் குறைந்தளவில் மட்டுமே பொறுப்பேற்றுக் கொள்கிற மனித சுபாவத்தின் விளைவுகளினாலும் குழு நடத்தை ஏற்படுகின்றது என்கிறார்கள்.[8] இக்கொள்கையினைச் சமூக அறிமுகக் கொள்கையினர் (Social iden-tity theorists) மறுதலிக்கின்றார்கள். பரிசோதனைகள் பலதின் மூலம் குழு நடத்தையைச் சுய எண்ணத்திலான உயர்ந்த கட்டமைப்புக்குட் பட்டதாக வெளிப்படுத்துகின்றனர். சமூக அறிமுகக் கொள்கையினர் சுயப்பிரக்ஞை கொண்ட மக்கள் கூடுதலாக தமது சமூக இனங்காட்டல் அடிப்படையில் நடந்து கொண்டு குழுவினுள் விசுவாசம் காண்பித்து, குழுவின் தனிச்சிறப்பையும் பேணுகிறார்கள். கூடுதல் தனித்துவமுடையவர்கள் கூடுதலாகவே சமூகத்திற்கு ஏற்புடைய வழியில் நடந்து கொள்ளும் சுபாவமுடையவர்களாகக் காணப்படுகிறார்கள் என்கிற கருத்துக்களை இவர்களது ஆய்வுகள் நிறுவின.

2.0 குழுவினரிடையே தலைமைத்துவம் எவ்வாறாய் அமைந்து. தொழிற்படுகின்றது என்பதை நோக்கின் தலைமைத்துவமானது தன்னைச் சார்ந்துள்ள குழுவினரிடையே, தனக்கெனவொரு விசேட பாணியை அமைத்துக் கொண்டு சிறப்புவழிகளில், செயல் முறைகளில், தொடர்புகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்கின்றது. தலைமைத்துவம் தன்னைச் சார்ந்த குழுவினரது பார்வையில் வியக்கத்தக்க தொன்றாக, இலட்சிய வடிவாகக் காட்சி கொடுத்துக்கொண்டிருக்கும். தலைமைத்துவம் இத்தகையதொரு தோற்றப்பாட்டை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் வரை தான் தலைமைத்துவம் நிலைத்திருக்க முடியும். இந்நிலையிலிருந்து பிறழ்வுறும் போது தலைமைத்துவத்தை இழக்கவும் அதிருப்தியின் விளைவாய் குழுவிலிருந்து நீக்கவுமான நிலைகள் தோன்றலாம். தலைமைக்கும் வழிவருவோருக்குமான



படிப்பகம்

www.padippakam.com

இடைவினைகள் புரிந்து கொள்ளல் அடிப்படையில் அமைகையில் வழி வருவோர் எத்தகைய சுய இழப்புக் களையும் தாங்கிக் கொண்டு தலை மையைக் காத்துக்கொள்ளும் மனவுறு தியைப் பெற்றுக்கொள்ளுவார். வழி வருபவர்களது மன உறுதிப்பாடானது தலைமைக்குரிய கடைமைப்பாட்டை, கடப்பாட்டை செயல்படும் இயல்பில் தொனிக்க வைப்பிற்கும் உந்து சக்தி யாக விளங்கும். இது தலைமைத்து வத்தை உயிர்ப்புடன் விளங்கச் செய் யும்.

தலைமைத்துவத்தின் சிறப்பியல் பினை, சார்ந்துள்ள குழுவில் செலுத் தும் செல்வாக்கின் அடிப்படையிலும் மதிப்பிடலாம். குழுவில் உள்ள அனைத்து அங்கத்தவர்களும் குறிப் பிடதகக அளவுக்கு, தலைமைத்துவக் குணவியல்புகளைக் கொண்டிருப்பார். எனினும் தலைமைத்துவம் என்பது குழுவில், குணவியல்புகள் குவிந்த வொரு அதி உயர் நிலையாகும். இந்த மையப்பகுதியில் இருந்துதான செயல்பாட்டிற்கான செய்திகள் வெளி யிடப்படுகின்றன. தலைமைத்துவம் திட்டமிடலையும் தீர்மானம் எடுத்த லையும் இந்த நிலையில் இருந்து தான் மேற்கொள்கின்றது, குழுவினது இலக்குகளை அதாவது குறிக்கோளை அடைவதற்கானவழிகள் செயற் திட் டங்களை வடிவமைத்து வழங்குகின் றது. தன்னைச் சார்ந்துள்ள குழுவின் பிரதிநிதியாக ஏனைய குழுக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதும் தலைமையின் பணியாக அமைகின் றது. தன்னைச் சார்ந்த குழுவின் தொடர்பு நிலைகளைக் கட்டுப்படுத் துவதும், ஒழுங்கு படுத்துவதும், புதிய தொடர்பினை ஏற்படுத்துவதும், கட் டுப்படுத்தலும், ஒழுங்கு படுத்துவதும் குழு அங்கத்தவர்களது விசேட செயல் களைப் பாராட்டுதலும், தேவை ஏற் படின் பரிசளித்துக் கௌரவிப்பதும் தவறுகளைக் கண்டித்தும் தேவை ஏற்படின் தண்டனை வழங்குவதும் தலைமைத்துவத்தின் தலையான பணிகளாக அமைந்து காணப்படுகின் றன. குழுவைச் சார்ந்தவர்களி டையே கருத்து வேறுபாடுகள், கசப்பு நிலைகள், தோன்றுகின்ற போது எதேச்சையாகவே அங்கத்தவர்கள் நீதி கேட்டு தலைமையை நாடிவரத் தக்கவகையில் நடு நிலையான நீதி வழங்கல் செயற்பாடுடையதாக தலை மைத்துவம் விளங்கல் வேண்டும்.

3.0 சில அடிப்படைகளை முதன்மை யாகக் கொண்டே தலைமைத் துவத்தை வகையீடு செய்யலாம். அவையாவன தலைமைத்துவத்தின் தோற்றம் (Origin of leadership) தலைமைத்துவத்தின் தேவை (Purpose of leadership) தலைமைத்துவத்தின் இயல்பு (Nature of leadership தலை மைக்கும் தலைமையைச் சார்ந்த குழு விற்கும் இடையிலான தொடர்பு (Nature of the relation of the leader with the followers) என் பவை ஆகும். மனித சமூகமானது தேவைகள் ஏற்படுகிற போது, அவசி யம் ஏற்படுகிற போது குழுக்களையும் அதற்கான தலைமைத்துவத்தையும் உருவாக்கிக் கொள்ளுகின்ற வேட்கை தாரன்மியத்தை இயல்பாகவேயுடை யது. குழுவாகத் தம்மை இணைத் துக் கொள்கிற வேட்கை இயல்பான தாயினும் குறித்து சமூகத்தை வழி நடத்தும் அரசாங்கம் இத்தகைய செயல்களை ஊக்கிவித்தும் கட்டுப் படுத்தியும் செயல்படுவதை அவ தானிக்க முடியும். தலைமைத் துவத்தை, அதிகாரத்தைப் பயன் படுத்துகிற, அதிகாரத்தைப் பரவ லாக்குகின்ற இயல்பினையொட்டியும் செயல்படும் முறைகளையும் செயல் படுத்துவதில் பின்பற்றுகின்ற வழிவ கைகளை ஒட்டியும் வழிவருபவர்களு டன் கொள்ளுகின்ற தொடர்பின்,



படிப்பகம்

www.padippakam.com

வேறுபட்ட நிலைகளையொட்டியும் வகைப்படுத்தலாம்.

தலைமைத்துவம், அதிகாரத் தலைமைத்துவம் (Autocratic leadership) சனநாயகத் தலைமைத்துவம் (Democratic leadership) தான் தோன்றித் தலைமைத்துவம் (Laissez-faire leadership) என்றவாறாக வகைப்படுகின்றது. அதிகாரத் தலைமைத்துவம் ஆனது, கடும் போக்குடைய அதிகாரத் தலைமைத்துவம் (Strict autocratic leardership) மென் போக்குடைய அதிகாரத் தலைமைத்துவம் (Benevolent autocratic-leadership) திறமையற்ற அதிகாரத் தலைமைத்துவம் (Incompetent autocratic leadership) எனவும் வகைப் படுத்தப்படுகின்றது. சனநாயகத் தலைமைத்துவம் ஆனது நேர்மையான சனநாயகத்தலைமைத்துவம் (Genuine democratic leadership) தோற்றத் திலான சனநாயத்தலைமைத்துவம் (Pseudo-democratic leadership) எனவும் வகைப்படுத்தப்படுகின்றது. 9

3.1 கடும் போக்குடைய அதிகாரத் தலைமைத்துவத்தில், தனி நபரொருவரே சகல அதிகாரங்களையும் தன்வசமாக்கிக் கொள்வார். தீர்மானங்களை எடுக்கும் போது தன் மனம் போன போக்கிலே தன்னிச்சையாகவே எடுத்துக் கொள்வார். இம் மாதிரியான தலைமைத்துவம் எதுவென்று குறித்தும் விபரமான விளக்கங்களை, தன் வழி வருவோருக்கு வழங்குவதில்லை. தலைமைத்துவம் மேற்கொள்ளும் தீர்மானங்கள், மிக இயல்பாகவே குழுவைச் சார்ந்தவர்கள் நிறைவேற்றி வைக்க வேண்டும் என்கிற பிடிவாதப் போக்கு தலைமைத்துவத்திடம் காணப்பெறும். தன்சார் குழுவிடம் எப்போதும் ஒருவித பய உணர்வை, எச்சரிக்கை உணர்வை ஊட்டிய வண்ணமும் பணிப்புகளை உடனுக்குடன் சரியானபடி நிறைவேற்றாது கால தாமதப்படுத்தினால் அந்த இடைவெளியுள் தம் அதிகார ஆள்புலத்திற்கு புறத்தேயுள்ள சக்திகள், தமக்குச்சதி செய்துவிடும் என்கிற அச்ச உணர்வையும் ஊட்டிய வண்ணமுமாகத் தலைமைத்துவம் செயல் பட்டுக் கொண்டிருக்கும். எதிலும் எப்போதும் கூட்டுணர்வு இங்கு காட்டப் படமாட்டாது.

கடும்போக்கு அதிகாரத்தலைமைத்துவம் ஆனது பொதுவாகச் சர்வாதிகார அரசுகளிலும் சர்வாதிகாரப் பணிமனைகளிலும் காணப் பெறும்,[10] தலைமைத்துவம் தனியாட்காட்சியாக அமைந்து, தன்னைச் சார்ந்திருக்கும் குழுவினர், தத்தமக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய உறவுமுறைகள், உறவின் எல்லைகள் யாவையும் வரையறுக்கும் பணியைதலைமையே கவனிக்கும். கடும் போக்கு அதிகாரத் தலைமையானது, ஏகபோக முகாமையாகவும், நிதியாளனாகவும், நீதியாளனாகவும், நீதிமன்றமாகவும் விளங்கிக் கொள்ளும். இத்தலைமைத்துவத்துக்குப் பின்னால் நிற்பவர்களது தலைவிதி தலைமைத்துவத்தின் கரங்களாலேயே நிர்ணயிக்கப்படும். இத்தகைய தலைமைத்துவம் தனக்குபின் தலைமையை ஏற்க என்றவாறாக, இன்னொருவரைத் தயார்படுத்தாது, இலை மறைகாயாக அவ்வாறு உருவாக வாய்ப்புக்கள் குவிந்தால் கூட, முளையிலேயே அதனைக் கிள்ளி விடும். தலைமைக்கு எதிராகக் கருத்துவேறுபாடுகள். அதிருப்தி நிலைகள் வழிவருவோரிடமிருந்து வரின், அவை ஆரம்ப நிலையிலேயே வன்முறை கொண்டு அடக்கப்படும். இயன்ற வரைக்கும் தலைமையின் ஊடாகவே குழு அங்கத்தவர்கள் தொடர்புகளை, உறவுகளை, மேற்கொள்ளத்தக்கவாறாக, கண்காணிக்கும், வெளி உலகத் தொடர்பு



படிப்பகம்

www.padippakam.com

கள் மட்டுப்படுத்தப் பட்டேயிருக்கும். நெகிழ்வற்ற தன்மையை தலைமைத்துவம் அங்கத்தவர்களிடையே கடைப்பிடிப்பதனால் காலப்போக்கில் அங்கத்தவரிடையேமீச்செலவு, மனமுறிவு, அமைதியின்மை முதலானவை உருவாக்கும். தலைமைத்துவத்தை அனுசரித்துச் செய்ற்படுவோருக்கு வெகுமதிகளும், சிறப்புக்களும் வழங்கிப் பராட்டியும், அனுசரியாதவர்களுக்கு தண்டனையும் கூடிய பட்சம் மரண தண்டனையும் வழங்கி, கட்டுக்கோப்பைக் காத்துக் கொள்ளும். தலைமைத்துவத்துக்கு உகந்தவர்களெனக் கருதப்படுபவர்களுக்கு உயர் பதவிகளைப் வழங்கிக் கௌரவித்தும் உகந்ததல்லாதாரெனக்கருதப்படுபவர்களுக்கு பதவி இறக்கமும், அவமதிப்பும் வழங்கி நிருவாகத்தை முன்னெடுக்கும். கடும் போக்குடைய அதிகாரத் தலைமைத்துவத்தில் வினைத்திறன். செயற்திறன், வெளியீடு சிறப்பாக அமையும். அதிகாரத்தலைமைத்துவத்துடன், அதன் வழிவருவோர் தொடர்பானது பல வடிவங்களில் இடம்பெறுமாயினும் அதன் எளிமையான தொடர்பு வடிவம் அடிக் குறிப்பில் காட்டப்பட்டவாறு அமையும்.[11]

3.1.1 மிதவாத அதிகாரத் தலைமைத்துவத்தை, மென்போக்குடைய அதிகாரத் தலைமைத்துவம் எனவும் குறிப்பிடலாம். இங்கு தலைமைத்துவமானது தன் வழிவருவோருக்கு அதாவது தன்னைச் சார்ந்துள்ள குழுவினருக்கு நல்லதையே செய்ய வேண்டும் என்கிற மனோபாவத்துடன் செயல்படும். குழுவினரது மனக்கிடக்கைகள் உணரப்பட்டு, அதன் இசைவின் அடிப்படையிலே செயல்பாடுகள் அமையும். புரிந்து கொள்ளல் செயற்பாடுகளின் மையவிசையாக அமையும். நீண்டகால ஓட்டத்தைத் தழுவியதாக செயற் பாடுகள் அமையும். தலைமைத்துவப் பொறுப்பை வகிப்பவர் அல்லது வகிக்கும் ஒன்றுக்கு மேற்பட்டோருக்கு ஒழுக்க சமயக் கோட்பாடுகளில் கூடிய ஈடுபாடு இருப்பின் செயற்பாடுகளின் பெறுபேறுகளில் அதாவது வெளியீடுகளில் தயை தாட்சணியப்பண்புகள் இழையோடிய வண்மாயிருக்கும். இத்தகைய தலைமைத்துவத்தில் இரக்க சுபாவம் அதிகமாயிருக்கும்.

3.1.2 திறமையற்ற அதிகாரத் தலைமைத்துவம், இந்த வகைப்பட்ட தலைமைத்துவத்தின் செயற் திறனை அதிகார வரம்பை, அதன் குறியீட்டுப் பெயரே வெளிப்படுத்துகிறது. திறமையற்ற தலைமைத்துவத்தினால், யாருக்கும் இலாபம் இல்லை. இத்தகைய தலைமைத்துவம் குறித்து, மேசிமித் கூறுகையில் ‘‘ இவ் வகைப்பட்ட தலைமைத்துவம் நிர்வாகத்தின் குழந்தைகள் என்றார். ’’ குழந்தைகளுக்கு நிறைய சக்தியிருந்தும், அதற்கு அதிகாரமின்மையால் சக்தியை நல்ல வெளியீட்டுக்காகப் பயன்படுத்திக் கொள்ள முடியாது. திறமையற்ற தன்மையால், இத்தகைய தலைமைத்துவம், எதனையும் சாதித்து விட முடியாது. தனது சொந்த விருப்பு வெறுப்புக்களை மட்டும் தன்னைச் சார்ந்த குழுவினருக்கு அல்லது நிருவாகத்திற்கு வெளிப்படுத்தலாம். இத்தகைய வெளிப்படுத்துதல், எந்த விதமான பயன்பாட்டையும் பெற்றுத்தராது.

3.2.0 அதிகாரத் தலைமைத்துவமாக இருந்தாலென்ன, சனநாயகத் தலைமைத்துவமாக இருந்தாலென்ன, அவைகளின் செயற்பாட்டிற்கு அதிகாரமே அடிப்படையானதாகும். அதிகாரங்கள் அதிகாரத் தலைமைத்துவத்திற்கும் சனநாயக தலைமைத்துவத்திற்கும் பொதுவானவையே. அவற்றைக்



படிப்பகம்

www.padippakam.com

கையாளுகின்ற, பிரயோகிக்கின்ற முறைகளிலேயே வழிவகைகளிலேயே தலைமைத்துவ வேறுபாடுகள், பாகுபாடுகள் உருவாகின்றன. நேர்மையான சனநாயகத் தலைவரை அல்லது தலைமைத்துவத்தைப் பொறுத்த வரையில், இயலும் வரையில் தன்னைச் சார்ந்துள்ளோரது, கருத்துக்களைக் கேட்டறிந்து, சம்மதப் பாட்டினை கேட்டறிந்து அவர்களது மனப்போக்குகளும் மனவொருமைப் பாடுகளும் தலைமைத்துவத்தின் செயற்பாடுகளில் பிரதிபலிக்கத் தக்க விதத்திலேயே செயல்பாடுகளை அமைத்துக் கொள்ளும். தன் வழி வருவோர்களது உயர்ந்த இலட்சியங்களை, இலக்குகளை ஈட்டிக் கொள்ளும் பொருட்டாய் வழிவருவோர் அனைவரது ஒத்துழைப்பையும் வெவ்வேறு வழிகளில், ஒப்புரவான முறையில் பெற்றுக்கொள்ளத் தலைமைத்துவம் முயற்சித்த வண்ணம் இருக்கும். இவ்வகைசார் தலைமைத்துவமானது பொறுப்புக்களை, அதிகாரங்களை தன்னை நோக்கி குவித்த வண்ணம் இருப்பதைக் காட்டிலும் தன்னைப் பின்பற்றுவோர்களை நோக்கியே பரவலாக்கிக் கொண்டிருக்கும். தன் வழி வருவோரிடம் உள - உடல் பலங்களை விருத்தி செய்வதற்காக, அவர்களிடையே உள்ளார்ந்தமான தொடர்புகளை ஏற்படுத்தி பரஸ்பரம் ஒற்றுமைப்பாட்டை, நல்லெண்ணத்தை, நம்பிக்கைகளை, வளர்த்துக் கொள்ளத் தலைமைத்துவம் பாடுபடும். வழிவருவோருக்கு இடையிலாய் வரும் முறுகல் நிலைகளை, கருத்தொவ்வாத நிலைகளை களைந்துவிட உடனுக்குடன் செயற்படும். குழுவினரிடையே அதிகார வேட்கையை மையமாகக் கொண்ட வரிசை முறை உருவாகாதவாறும் திறமைகளை, ஆற்றல்களை அனுபவங்களை மையப்படுத்தி சிறப்புச் செயற்பாட்டை, உறுதிசெய்யத்தக்க வகையில் செயல்களை மையமாகக் கொண்டு வரிசை முறை உருவாகுவதை அங்கீகரித்தும் தலைமைத்துவம் செயல்படும். நேர்மையான சனநாயகத் தலைமைத்துவம் முகவர் அமைப்புப் போல் விளங்கி மக்கள் வழங்கிய செயல் விஞ்ஞாபனத்தை நிறைவேற்றும் நிலையமாக விளங்கும். அதிகாரத் தலைமைத்துவத்தில், தலைமை சிறிய காலத்திற்கு சரீரரீதியாகப் பிரசன்னமாகாதவிடத்து அமைப்பு குழப்பமடைந்து விடும். சனநாயகத் தலைமைத்துவத்தில் தலைமை சரீரரீதியாக பலகாலம் பிரசன்னமாகாத விடத்தும், செயல்பாடுகளும் கடமைகளும் கற்பித்தது போல் கடப்பாட்டுணர்வுடன் நடைபெறும். சனநாயகத் தலைமைத்துவத்தில் வழிவருவோரால் தலைமையானது, தலைவரானவர் எம்மில் வேறானவர் அல்ல (not an outsider) என்ற உணர்வு மேலோங்கி எங்களில் ஒருவர் ( one of us ) என்கிற உணர்வு பரிணமித்து இருக்கும். தலைமைத்துவச் செயற்பாடுகள் வியத்தகு விதத்தில் செயற்பட்டுக் கொண்டு செல்லும் போது தலைவர் எங்களை விடவும் உயர்ந்தவர். (best of us) என்கிற எண்ணம் வழி வருவோர் மத்தியில் நிலைபெறும். இங்கு தலைமைக்கும், வழி வருவோருக்கும் இடையிலான மிக எளிதான தொடர்பு அமையும். [12]

**3.2.1** தோற்றப்பாட்டு சனநாயகத் தலைமைத்துவத்தை பொறுத்தவரையில், உண்மை சனநாயகப்பண்புகள் பரிணமித்துக் காணப்படுகின்றது போன்ற ஒரு தோற்றப்பாட்டையே, அவ்வாறெனின், போலியான பொய்யான தன்மையையே, இவ் வகையீடு சுட்டி நிற்கின்றது. இத்தகையதலைமைத்துவர் இலக்கைஎட்டத்தக்க வகையில் சிறப்பாகச் செயற்படமாட்டாது.



படிப்பகம்

www.padippakam.com

மிகச் சுலபமாக வழிவருவோரது அதிருப்தி நிலைகளுக்கு அடிக்கடி இடமாகும். இத்தகைய தலைமைத்துவம் வெறும் உணர்ச்சிவெளிப்பாட்டையே வெளியிட்ட வண்ணம் இருக்கும். தலைமைத்துவம் எப்போதும் பகட்டான வார்த்தைப் பிரயோகங்களை உபயோகித்துக்கொண்டிருக்கும். எடுத்துக்காட்டாக ''நாங்கள் ஏறத்தாள ஒரு மகிழ்ச்சியான பெரிய குடும்பம்'' என்றவாறாகப் பிரகடனப்படுத்தும். செயலின்றியும் இலக்கை எட்டும் நாட்டம் இன்றியும் காலத்தை கடத்திக்கொண்டு தலைமைத்துவம் செயற்பட்டுக் கொண்டிருக்கும்.

3.3.1 வெசிவியர் தலைமைத்துவத்தைத் தான்தோன்றித் தலைமைத்துவம் எனக் குறிப்பிடுவார். தலைமைத்துவத்தை அடையாளப் படுத்துகின்றதொரு சின்னம் போலவே இத்தலைமைத்துவம் அமையும். பொதுவாக இத்தகைய தலைமைத்துவம் நிருவாக வழி நியமனங்களாகவே அமையும், இயக்குனர் சபையொன்று தன் ஆள்புலத்திற்குட்பட்ட நிறுவனமொன்றிற்கு தனது பிரதிநிதியாகச் செயற்படத் தலைவராக நியமிக்கும் நியமனத்திலேயே, அதிகாரமற்ற பெயரளவில் தலைவர் என்கின்ற தொனி புலனாகின்றது. இத்தகைய தலைமைத்துவத்திற்கு எதுவித அதிகாரமும் இன்மையால் நிறைவேற்றும் ஆற்றலும் இயலாததாகின்றது. அதிகாரமில்லாத ஒருவரது ஆணைக்கு நிருவாகம் கட்டுப்படாது. நிறுவனம் தனக்கென வழங்கப்பட்ட அதிகார வரம்பெல்லைக்கு உட்பட்ட செயற் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் வெறும் விருந்தினர் என்கின்ற கோதாவில் இத்தகைய தலைவர்கள் நிறுவனத்திலே பிரசன்னமாகிக் காலத்தைக் கழிப்பர்கள்.

3.4.0 தலைமைத்துவம் அதிகாரத் தலைமைத்துவமும் உபபிரிவுகளும், சனநாயகத் தலைமைத்துவமும் உபபிரிவுகளும், தான்தோன்றித் தலைமைத்துவமும் என்றவாறாகக் குணவியல்புகளையும் செயல் முறைகளையும் மையப்படுத்தி, அரசாங்கத்தில், நிருவாகத்தில், சமூகத்தில் அவை வகிக்கின்ற இடம், ஏற்றுக் கொண்டிருக்கும் பொறுப்புக்கள் குறித்தும் இது வரையில் ஆராயப்பட்டன. மனித சமூகத்தின் தேவைகளும் அதன் இலக்குக்களும் ஆர்வங்களும் என்றுமில்லாதவாறாகச் சமகாலத்தில் பெருகிக் கொண்டே செல்கின்றன. இதற்கு ஈடுகொடுக்கும் வகையில் இலக்குகளை அடைவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளவும் சமூகத்தில் பல அமைப்புக்கள், நிறுவனங்கள் புதிது புதிதாகத் தோன்றுவது இயல்பாகின்றது. அமைப்புக்கள் அதிகரிக்கும் போது அதன் வடிவமைப்புகளும், செயல் திட்டங்களும் கூட வேறுபடுகின்றன. அதனை வழி நடாத்தும் தலைமைத்துவ வடிவங்களும் வேறுவேறான வடிவமைப்பைப் பெறுகின்றன. வளர்ச்சி நிலைகளில் இவை தவிர்க்க முடியாதவையாகி விடுகின்றது. இதுவரையில் நோக்கப்பட்ட அதிகாரத் தலைமைத்துவம், சனநாயகத் தலைமைத்துவம், தான்தோன்றித் தலைமைத்துவம் ஆகியவற்றின குணவியல்புகளினதும் செயல் வடிவங்களினதும் அடங்கல்களே புதிதாக வகையீடு செய்யப்படும் தலைமைத்துவத்தின் அமைப்புக்களிலும் பிரதிபலித்தாலும், கால கருத்து வளர்ச்சிக்கும் இணையானவாகவே குணவியல்பு அமைப்பு வடிவங்களிலும் சில சில வேறுபாடுகளை உள்ளடக்கியனவாக தலைமைத்துவம் மேலும் பத்து வகைகளாக வகையீடு செய்யப்படுகின்றன. நவீன உலகில் மனித



படிப்பகம்

www.padippakam.com

தேவைகள் அதிகரித்துச் செல்கின்ற நியதியால் பல வழிகளில் தனிநபர் ஏனையோர் மீது செல்வாக்குச் செலுத்துகிற நிலை ஏற்படுகின்றது. எந்தவொரு தனிநபரும் ஏதாவது ஒரு செயலை ஒரு குழுவின் இலக்கை நோக்கி வழங்குகின்ற போதும், இத்தகைய வழங்கு மாற்றல் ஏனைய பிறிதொரு அங்கத்தவர்களிடமிருந்து வராததாய் தனித்துவமுடைய தாக அமைகின்ற போதும் இத்தகைய வழங்களைச் செய்பவர்களை ஓரளவிற்கு தலைமைத்துவம் உடையவர்கள் எனலாம் எனவும் கூறப்படுகின்றது. எடுத்துக்காட்டாக காவற்துறை அலுவலர், ஆசிரியர்கள், ஏனையோர்கள் போன்றவர்கள். தலைமைத்துவத்தின் பத்து வகையீடுகளும் பின்வருமாறு அமைகின்றன.[13]

நிறைவேற்றும் தலைவர்
(the Administrator)

நிர்வாகத தலைவர்
(the bureaucrat)

கொள்கை வகுப்புத் தலைவர்
(the policy maker)

துறைசார் நிபுணத்துவத் தலைவர்
(the expert)

இலட்சியத் தலைவர்
(the idelogist)

கவர்ச்சித் தலைவர்
(the charismatic Leader)

அரசியல் தலைவர்
(the political Leader)

அடையாளத் தலைவர்
(the symbolic Leader)

தந்தைவடிவத் தலைதர்
(the father figure)

சமயத் தலைவர்
(the religious Leader)

நியைவேற்றும் தலைமைத்துவமானது அகன்ற ஆள்புலத்தை உள்ளடக்குகின்றது. திட்டமிடல் ஒருங்கிணைத்தல், நிருவாகத்தை வழிப்படுத்துதல், அமைப்புறுவித்தல் போன்ற செயல் வடிவங்களை இத்தலைமைத்துவம் முன்னெடுக்கின்றது. கருமங்கள் சரிவர நடைபெறுகின்றனவா எனவும் மேற்பார்வை செய்கின்றது. நிறுவனத்தின் அல்லது குழுவின் மிக முதன்மையிடத்தை இத்தலைமைத்துவம் வகிக்கின்றது. இத்தகைய தலைமைத்துவத்தின் கீழ் இயங்கும் நிறுவனம் ஆள்வலுவும், அதிகார வலுவும் ஒருங்கே அமையப் பெற்ற நிறுவனமாதலால் இலக்கை அடையத்தக்கதும், பெறுபேறுகளை பெற்றுத் தரத்தக்கதுமான அந்தஸ்தைக் கொண்டிருக்கின்றது. இத்தகைய தலைமைத்துவம் உற்பத்தியை இலக்காகக் கொண்ட நிறுவனத்திலோ அல்லது சேவைகளை வழங்குகின்ற குழுவிலோ இடம் பெறலாம். இங்கு தலைமைத்துவம் நிர்வகிப்புப் பணியை மேற்கொள்கின்றது. எனினும் சில நிறுவனங்களில் கொள்கை வகுப்புப் பணியும் மேற்கொள்ளப்படுகின்றது. எனினும் சில நிறுவனங்களில் கொள்கை வகுப்பும், நிர்வாகமும் வேறுவேறான அமைப்புக்களிடம் விடப்பட்டிருக்கின்றன.

3.4.2 நிருவாகத் தலைமைத்துவம் என்பது 'பெரும்பாலும்' ஒரு நிறுவனத்தில் அல்லது குழுவில் நேரடியாகக் கண்காணிப்பாளராக, நெறிப்படுத்துபவராக விளங்குபவரையே குறிப்பிடுகின்றது. தலைமைத்துவத்திற்கென்று இங்கு சில சிறப்பான கடமைகள் உண்டு. நிர்வாகக் கட்டமைப்பின் வரிசை முறையில் இத்தலைமைத்துவம் செயற்பட்டுக் கொண்டிருக்கும். பெரிய குழுக்



படிப்பகம்

www.padippakam.com

களும் நிறுவனங்களும் அவற்றின் செயற்பாடுகளை இலகுபடுத்தவும் துரிதப்படுத்தவுமாய் அமைப்பைத் தனித்தனிப் பகுதிகளாக வகுத்துக் கொள்கின்றன. இவைகள் தனித் தனிகிளைகளாகக் காட்சி தருகின்றன. அரசாங்க நிறுவனமாகவோ தனியார் நிறுவனமாகவோ அல்லது சமய நிறுவனமாவோ பிற ஏதுவாகவோ அமைந்திருப்பிலும் அவை இலகுச் செயற்பாட்டிற்காகச் சிறு சிறு கிளைகளாக வகுக்கப்பட்டு ஒரு நிருவாகத் தலைமைத்துவத்தின் கீழ் இயக்கப்படுகின்றது. இவ்வாறாய் அமைவுறச் செய்கையில் செயற்திறனும், பெறுபேறுகளும் சிறப்பாக அமையும் எனக் கருதப்படுகின்றது.

3.4.3 கொள்கை வகுப்புத் தலைமைத்துவத்தைப் பொறுத்தவரையில் ஒரு வகையில் நோக்கில் இவரும் நிருவாகத் தலைவரேயாவர். இங்கு காணக்கூடிய வேறுபாடு கொள்கை வகுப்பாளரைப் பொறுத்தவரையில் அவர் இயக்குனர் சபையின் அங்கத்தவராகக்காணப்பெறுவார். நிருவாகி பொதுவாக இந்தக் கொள்கை வகுப்பாளருக்கு அல்லது கொள்கை வகுக்கும் குழுவுக்குத் தலைமை தாங்குவார். கொள்கை வகுக்கப்பட்ட பின் அதனை வழி நடத்துபவராக நிருவாகியே விளங்குவார். கொள்கை வகுப்பாளரைத் தலைமைத்துவத்தின் மறைபொருளாய் இருப்பவர் எனவும் கூறலாம். 'முடிக்குப் பின்னால் நிற்கும் மனிதர்' இவர் என்றும் குறிப்பிடலாம்.[14]

3.4.4 துறைசார் நிபுணத்துவம் பெற்றவர்கள் பொதுவாக ஆலோசகர் என்ற முறையில் கொள்கை வகுப்பாளருக்கும் நிருவாகம் செய்வோருக்கும் உறுதுணையாக நின்று செயற்படுவார். சில துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களாதலால் இவர்கள் கொள்கைகளைத் தொகுப்பதிலும் வகுப்பதிலும் நிறுவனத்தில் முதலிடம் வகிப்பர். துறைசார் நிபுணர்களைப் பொறுத்தவரை நிறுவனத்தின் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு அதன் செயற்பாடுகளை விமர்சிப்பவர்களாகவும், கண்டனம் செய்பவர்களாகவும் விளங்கி நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குவார்.

3.4.5 இலட்சியத் தலைவர்களைப் பொறுத்தவரையில் துறைசார் நிபுணத்துவமுடையோர் போன்றே இலட்சியத் தலைவர்களும் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பார். இவர்கள் சிந்தனை ஆற்றல்களை நிறையப் பெற்றவர்கள். எண்ணங்கள் நம்பிக்கைகள் குறித்தும் பகுப்பாயும் திறன் பெற்றவர்கள். சமூகத்தின் போக்குக் குறித்தும் அதற்கான அடிப்படை நியதிகள் நியாயங்கள் குறித்தும் சில கொள்கைகளை வகுத்துக் கூறுபவர்களாகக் காணப்பெறுவார். எடுத்துக்காட்டாக 'கார்ள்மாக்ஸ்' 'புனித அகஸ்ரின், ஆகியோரைக் குறிப்பிடலாம். இலட்சியத் தலைவர்களது இலட்சிய மொழிவுகள் உலகெங்குமாய் வாழ்கின்ற இலட்சோப இலட்ச மக்களின் மனங்களிலே நன்கு பதிந்து அதன் வழி செல்லத் தூண்டியவாறு அமைந்து கொண்டிருக்கும். இலட்சியவாதிகள் தங்கள் இலட்சியப் பொதியை வெளியிடும் வரையிலேயே இலட்சியத் தலைவர்களாக விளங்குவார். வெளியீடுகளை வெளியிட்டதும் இவர்களது பணி நிறைவேறிவிடும்.



படிப்பகம்

3.4.6 கவர்ச்சித் தலைமைத்துவம் குறித்துப் பார்க்கின் சமூகவியலில் 'மாக்ஸ்வெபர் கரிஸ்மாற்றிக்' என்கிற சொல்லைப் பிரயோகப்படுத்தியதை அடுத்தே சமூக உளவியலில் கரிஸ்மாற்றிக் என்கிற சொற் பிரயோகம் இடம் பெறுகின்றது. அதிகளவில் உணர்ச்சிகளை, எழுச்சிகளை வெளிக்காட்டுகிற தலைவர்கள் குறித்துக் குறிப்பிடும் போது கரிஸ்மாற்றிக் என்ற சொல்லை 'மாக்ஸ் வெபர்' பயன்படுத்தினார்.[15] (Charismatic) என்ற சொல் Charisma என்ற கிரேக்கச் சொல் வழியாக வந்ததாகும். சில விசேட சக்திகளைக் கவர்ச்சிகளை தன்வயமாகப் பெற்றுக் கொண்டு அதன் வழி சில பல பிரமிக்கத் தக்க செயல்களைச் செய்பவர் இந்தக் கரிஸ்மாற்றிக் என்கிற கவர்ச்சி, எழுச்சித் தலைவர்களாவர்' இவர்களது 'கவர்ச்சியான எழுச்சியூட்டுவதுமான ஆணைகளுக்கு உடன்படும் மக்கள் கூட்டம் இவர்களின் பின் அணிதிரளும். இவர்களது தலைமைத்துவப் பாங்கு உணர்ச்சிகரமாக அமைந்து காணப்படும்.

கவர்ச்சி மற்றும் விசேட சிறப்பியல்புகளைக் கொண்ட தலைமைத்துவத்தை மூன்று வகைகளாக வகையீடு செய்யலாம். வெறுமனே கவர்ச்சியையும், எழுச்சியையும் ஊட்டிக் கொண்டு தன் சுய விருப்பு வெறுப்புக்களைத் தன்னைச் சார்ந்து வருவோர் மூலம், குழுவின் மூலம் நிறைவேற்றி வைக்கும் தலைமைத்துவம், கவர்ச்சியை முழு முலதனமாகக் கொண்டும் சிறிதளவாகினும் தன்வழி வருவோரின் இலக்குகளை அடையச் செய்விக்கும் நோக்குடன் வழி நடத்தும் தலைமைத்துவம், ஒழுக்க வழி நிற்றலையே தன் கவர்ச்சியாக்கிக் கொண்டும் மேலும் சிறப்பியல்புகளாக ஒழுக்க விழுமியங்களை அடிப்படையாக்கிக் கொண்டும் தன் வழிவருவோரை வழிநடாத்தும் தலைமைத்துவம் எனவும் மூவகைப் படுத்தலாம்.

கவர்ச்சியையும் எழுச்சியையும் ஊட்டிக்கொண்டு தன் சுய விருப்பு வெறுப்புகளை தன் வழிவருவோர் மூலம் சாதித்துக் கொள்ள விரும்புகிற தலைமைத்துவம் விரைவாக அழிந்துவிடும். எடுத்துக்காட்டாக கிட்லரின் தலைமைத்வத்தைக் குறிப்பிடலாம். வழிவருவோர் வெறும் கவர்ச்சிகளுக்கு அடிமைப்படுகின்ற காலவரையறை வரைதான் இத்தகைய தலைமைத்துவம் தாக்குப் பிடிக்க முடியும். இத்தகைய தலைமைத்துவத்துக்கு உடன்பாடானவர்கள் குறித்து, "எறிக்கொவர்" குறிப்பிடுகையில் இவ்விதம் பின்பற்றிவரும் நம்பிக்கையானது இருட்டானது என்றும் அறிவின்மையாலும், ஆற்றலின்மையாலும் இவர்கள் இவ்விதம் நடந்து கொள்கிறார்கள் என்றும் கூறுகிறார். அறிவு வளர்ச்சி, சிந்தனை வளர்ச்சி இவர்களுக்கு ஏற்படும் பட்சத்தில் தலைமைத்துவத்துவத்துடன் உடன்படும் போக்கு பறந்து விடும். தலைமைத்துவமும் வழிவருவோர் இல்லாமல் அழிந்து விடும்.

கவர்ச்சியை முழு முதலீடாகக் கொண்டும், தலைமைத்துவச் சிறப்பியல்புகளை சிறிதளவில் கொண்டும் தன் வழி வருபவர்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்கின்ற தலைமைத்துவத்தைப் பொறுத்தவரையில்: கவர்ச்சி நாட்டம் வழிவருவோரது மனதில் நீடிக்கும் வரையும நிலைபெறும். கவர்ச்சியை முழு மூலதனமாக்கிக் கொண்டு தலைமைத்துவத்தைப் பெற்றிருப்பினும் அந்த

www.padippakam.com

நிலையை அடைந்த பின் ஏனைய தலைமைத்துவ குணவியல்புகளை தன்னில் விருத்தி செய்து கொண்டு அதன் வழி சிறப்பாய் செயலாற்றி நேர்க்கணியப் பெறுபேறுகளை வெளிக்கொணரும் பட்சத்தில் தலைமைத்துவத்தின் ஆயுளை அதிகரித்துக் கொள்ளலாம். தலைமைத்துவக் குணவியல்புகள் நீண்ட பட்டியலைக் கொண்டிருக்கையில் வெறும் கவர்ச்சி மட்டும் தலைமைத்துவத்தை தக்க வைக்கக் கை கொடுக்காது. எடுத்துக்காட்டாக ஜெயலலிதாவைக் குறிப்பிடலாம்.

ஒழுக்கப்பண்புகளையே கவர்ச்சியாக்கிக் கொண்டும் ஒழுக்க விழுமியங்களை எழுச்சி உணர்வுகளாக்கிக் கொண்டும் அமையும் தலைமைத்துவத்தைப் பொறுத்தவரையில் நீண்டகாலம் பௌதீக பிரசன்னம் அற்ற நிலையிலும் போற்றுவதற்கும், அதன்வழிச்செல்வதற்கும் உடன்பாடான தலைமைத்துவமாகவும் அமையும். எளிமை நேர்மை சத்தியம் ஆகிய விழுமியங்கள் பிரபஞ்சத்திற்கும் மனித இனத்துக்கும் பொதுவானவை. ஆதலால் இத்தகைய இலட்சியமுன் எடுப்புக்களைக் கொண்டிருக்கும். தலைமைத்துவம் உலகளாவிய கௌரவத்தையும் அந்தஸ்தையும் பெற்றுவிடுகின்றது. தங்கள் வழிவருவோருக்கும், பொதுவாக மானிட சமூகத்திற்கும் எந்த வேளையிலும் எந்தச் செயலிலும் நல்லதையே ஒழுக்க விழுமியங்களில் கட்டுக்கோப்புகளுக்கு உடன்பட்டுச் செய்ய வேண்டும் என்கிற வேட்கையுடையதாக இத்தகைய தலைமைத்துவம் அமைந்து காணப்பெறும். எடுத்துக்காட்டாக மகாத்மாகாந்தி, மாட்டின்லுதர்கிங், காமராசர் ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்களது தலைமைத்துவம் தேசத்தின் பாடவிதானமாகப் பரிணமித்துவிடும். இத்தகையவர்களது தனிப்பட்ட வாழ்க்கையும் ஏனையோருக்கு வாழ்க்கை முறையாகிவிடுகின்றன. கொள்கைகள் மட்டுமல்ல வாழ்க்கைக் கோலங்களும் இலட்சியமாகிவிடுகின்றன.

3.4.7 அரசியல் தலைமைத்துவத்தைப் பொறுத்த வரையில் இது வரையில் நோக்கிய தலைமைத்துவ வகைகளை விடவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக இது அமைகின்றது; இலட்சியங்களையும் கொள்கை வகுப்புச் செயற்பாடுகளையும் உள்ளடக்குகின்றது. அரசியல் தலைமைத்துவம் சமயச் சார்பற்ற சமூகப் பிரக்ஞையை மட்டும் கொண்டமைந்த தலைமைத்துவமாகவும், தலைமைத்துவ தக்க வைப்புக்குத் தேவைப்படின் சமய தலைமைத்துவத்துடன் இணைந்து கொண்டு செயல்படும் தலைமைத்துவமாகவும் சமய சார்பான அரசியல் தலைமைத்துவமாகவும் வடிவத்தைப்பெறும். அரசியல் தலைவர்கள் அரசியல் கட்சிகளில் அல்லது அரசாங்கத்தில் சுயாதீனமாகச் செயற்பட்டுக்கொண்டிருப்பர். அரசியல் தலைமைத்துவம் இலக்குகளை, தங்களுக்காகவும், தங்கள் நண்பர்களுக்காகவும். தங்களுக்கு வாக்களித்துத் தெரிவு செய்த மக்கட் கூட்டத்தினருக்காகவும் பேரம் பேசியும் விட்டுக் கொடுப்புடனும் அடைந்துக்கொள்ள முயல்வார். அரசியல் தலைவர்கள் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளும் பொருட்டாய் ஏனைய நிறுவனங்களுடனும், அரசியல் கட்சிகளுடனும் பேரம் பேசுவார்கள் தொடர்பு கொள்ளுவார்கள். சமரசத்திற்கு வருவார்கள். அரசியல் அமைப்பானது சமத்துவமான பங்களிப்பினை எதிர்பார்த்திருக்கும் தன்மையினால், அரசியல் தலைவர்கள் தனிவழி நின்று செயல்பட்டுக்



படிப்பகம்

கொள்ள முடியாது. அரசியல் தலைவர்களுக்கு ஆதரவு தேடல் மிக அவசியமான தொன்றாதலால் பேரத்தின் அடிப்படையில் ஆதரவினைப் பெறும் சந்தர்ப்பங்களும் நிறையவே காணப்பெறும்.

3.4.8 அடையாளத் தலைமைத்துவம், இதுவரை நோக்கப்பட்ட தலைமைத்துவ வகைகளை விடவும் சிறிது வேறானது ஆகும். '' தான் சார்ந்து தலைமை வகிக்கும் அமைப்பை '' உலகளாவிய ரீதியில் பிரகடனப் படுத்துகின்ற பணியையும், அதன் உயர் நிலைப் பிரசை தான் என்கிற நிலையைப் புலப்படுத்துகிற பணியையும் அடையாளத் தலைமைத்துவம் மேற்கொள்கிறது. எடுத்துக்காட்டாக பிரித்தானிய மகாராணி, போலந்து இளவரசி ஆகியோரைக் குறிப்பிடலாம். இத்தகையவர்கள் உலகில் எங்கு பிரசன்னமானாலும் இவர்கள் தங்கள் நாட்டின் அடையாளச் சின்னமாகவே சென்றவிடமெல்லாம் மதிப்பினைப் பெற்றுக்கொள்வார். பிரித்தானியாவின் முதல் குடிமகனும், தலைவியும் மகாராணியாரே யாயினும் அவர்கள் எந்த விதமான அரசாங்கக் கடமைகளிலும் பங்கு கொள்வதில்லை. இருப்பினும் இவரே பிரித்தானிய மக்களின் தலைவராக மதிக்கப்பட்டுப் பெருமதிப்பைப் பெற்றுக் கொள்வார். அடையாளத் தலைமைத்துவம் தேசத்தின் உயர்ந்த சடங்குகள் எனக் கருதப்படுவன வற்றை நிறைவேற்றி வைக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. சாதாரண ஒரு குழுவில் அல்லது நிறுவனத்தில் கூட இத்தகைய எதிர்பார்ப்புக்கள் இருக்கவே செய்கின்றன. ஒரு நிறுவனத்தில் தலைவராக விளங்குபவரே, அந்த நிறுவனத்தில் பணி புரிந்து ஓய்வு பெறும் ஊழியரொருவரது பிரிவுபசார நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து பரிசளித்துக் கௌரவிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. உயர்ந்த நிகழ்ச்சிகள் என எடுத்துக் கொள்ளப்படுபவை அனைத்திற்கும் அடையாளமாக அமைவது. தலைவரின் தலைமையே ஆகும்.

3.4.9 தந்தை வடிவத் தலைமைத்துவத்தைப் பொறுத்தவரையில், மனித இனத்தின் தொடக்க நிலைக் குழுவும், முதன் முதலில் அனுபவப் படுத்திக் கொண்ட குழுவும் குடும்பமேயாகும். இதன் தலைமை பெற்றோர் வடிவமாகும். தனிமனிதன் குழந்தையாக உள்ள போதே அவன் முதல் இணைவு குடும்பக் குழுவுடன் ஏற்படுகிறது. அடுத்த நிலையில் பாடசாலையில் ஆசிரியர்கள் தலைமைப் பொறுப்பை எடுத்துக் கொள்கிறார்கள். ஆசிரிய மாணவ உறவுகள் சில விதிமுறைகளுக்கு உட்பட்டே திகழும். பெற்றோர்களுடனான உறவுகள் அவ்வாறல்ல. பெற்றோர் வடிவத் தலைமைத்துவத்திற்குள் வருபவர்களை பெற்றோர்கள் பாராட்டியும், சீராட்டியும் கண்டனம் செய்தும், தண்டனை வழங்கியும் வாழ்வின் இலக்கை நோக்கி முன்னெடுக்கச் செய்வார்கள். இத்தகைய பெற்றோர் வடிவத் தலைமைத்துவம் இரண்டாய் வகையீடு செய்யப்படுகின்றது. முறையே தன் ஆளுமைக் குட்படுத்தப்படும் தலைமைத்துவம், அன்பு வழியில் வழிக் கொள்ளும் தலைமைத்துவம் என்பனவே அவையாகும். சில நிலைமைகளில் இரு வழிகளையும் ஒருங்கே பின்பற்றும் சந்தர்ப்பங்களும் அமைவதுண்டு. தன் ஆளுமைக்கு உட்படுத்தித் தண்டித்து செல்வாக்குச் செலுத்தி தன் வழிக்கு கொண்டுவரும் தலைமைத்துவம் தந்தை வடிவம் (Father figure) எனவும் அன்பு வழியைக் கையாண்டு பாதுகாப்

www.padippakam.com

பாகவும் கூடிய விளக்கத்துடன் தலையும் தாட்சணியத்தையும் காட்டி நெறிப்படுத்தும் தலைமைத் துவம் அன்னை வடிவம் எனவும் (Mother Figure) குறிப்பிடுவார். எடுத்துக்காட்டாக உளவியல் அறிஞர் ஒருவரது வழிமுறை அன்னை வடிவமாகவும், காவல்துறை அதிகாரி ஒருவரது வழிமுறை தந்தை வடிவமாகவும் அமையும்.

3.4.10 சமயத்தலைமைத்துவமானது மதக் கோட்பாடுகளை முதன்மைப்படுத்தி அமையும் அமைப்புக்கு, தலைமைப் பொறுப்பை ஏற்பதாகும். மனித சமூகத்தில் மிகச் சக்தி வாய்ந்த அமைப்பாகச் சமயம் சார் நிறுவனங்கள் விளங்கும். அவ்வாறே அதன் தலைமைகளும் விளங்கும். சமயத்தலைமைத்துவம் கருணைப் போக்குடையதாகவும், கழிவிரக்கம் மிக்கதாகவும் காணப்படும். ஒழுக்க விழுமியங்கள் சமயத் தலைமைத் துவத்தின் அடிநாதமாக அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. சமயத் தலைமைத் துவம் உலக அமைதிக்கும் மக்களின் நல் வாழ்வுக்கும் தம்மைச் சமர்ப் பணம் செய்து கொள்ளும். அந் நாட்களில் சமயபீடங்களினதும் சமயத்தலைவர்களினதும் பணிகளின் நோக்கெல்லைகள் துயர் துடைப்பனவாகவும், பிணியகற்றுவனவாகவும், அறியாமையைப் போக்குவனவாகவும் வறுமையைப் போக்குவனவாகவும், அமைந்திருந்தன. இந் நாளில் அரசியல் தேவையற்ற தலையீடுகளைச் செய்து நாட்டின் உறுதித்தன்மையையும், பொருளாதார அபிவிருத்தியையும் பாதிக்கும் சக்திகளாக உலகெங்குமாய் பரவலாக தொழிற் பட்ட வண்ணமாய் இருக்கின்றது. பொதுவாகச் சமயத் தலைவர்களுக்குச் சார்ந்து நிற்கும் அமைப்புக்கு அப் பாலும் உலகளாவிய முறையில் மதிப்பும், மரியாதையும் வழங்கப் படுகின்றன.

4.0 மானிட சமுதாயம் தனது இலக்குகளை, தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே குழுக்களாக, நிறுவனங்களாக, அமைப்புக்களாக கூட்டமைப்புக்களாக உருவாக்கித் தகுந்த தலைமைத்துவத்தை, ஏற்படுத்திச் செயற்படுகின்றன. தலைமைத்துவத்தின் சிறப்பான செயற்பாடுகளே சமூகத்தின் இலக்குகளை எட்ட, நேர் கணியமான பெறுபேறுகளைப் பெற்றுக் பெற்றுக் கொள்ள வழிவகுக்கும். பொறுப்பு மிக்க இத்தகைய பணிகளை நிறைவேற்றிக் கொள்கிற தலைமைக்குச் சில பல சிறப்புக் குண இயல்புகள் அவசியமாகின்றன.

4.1 தலைமைத்துவத்திற்குரிய சிறப்புக் குணவியல்பு குறித்து உளவியலாளர் களிடையே பலவகைப்பட்ட கருத்துக் கள் காணப்பெறுகின்றன. இவை அடிப்படையான வேறுபாடுகளைக் கொண்டவைகளல்ல. குறித்த குணவியல்புகளை விரித்து விரித்து விளக்குவதால் ஏற்பட்ட நிலைப்பாடுகளே யாகும். ஆல்போர்ட் என்கிற உளவியலாளர் பத்தொன்பது வகைப் பட்ட சிறப்பியல்புகளை குணவியல்புளாகக் குறிப்பிடுகையில், சான்ஸ் போட் என்பவர் எழுபத்தொன்பதிற்கும் அதிகமான குணவியல்புகளைக் குறிப்பிடுகின்றார். இவையாவற்றையும் ஆராய்ந்த கொலின்ஸ் என்பவர் குணவியல்புகள் பதினொருவகைப் பட்டவை என்றும், இக் குணவியல்புகளே தலைமைத்துவம், திட்டமிடல், அமைப்புறுவித்தல், முன்னெடுத்தல் ஆகியவற்றைச் சிறப்புற நிறைவேற்ற உதவுகின்றன என்றும் குறிப்பிட்டார். அவையாவன நுண்ணறிவு (Intelligence) ஒழுக்க உணர்வுகள் (Moral-sensitivities) இயல்பான கற்பனை வளங்கள் (Imagination originality)



படிப்பகம்

கட்டுப்பாடு (Restraint) உத்துதலும் நிர்ணயமும் (Drive and determination) பொறுப்பேற்றல் (Responsibility) சுய நம்பிக்கை (Self reliance) கம்பீர உடல் வாகு (Dynamic-physical characteristics) சமநிலை (Impertubability) சமூக செயற்பாடு (Social responsiveness) இயல்பான நல்ல சமூக உளத்தொடர்பு ஆற்றல் (Easy maintenance of good relations with others) ஆகும்.[17]

4.2.0 தலைமையை, தலைவனிடம் காணப் பெறும் குணவியல்புகள் ஆளுமைக் கூறுகள் பெற்றுத்தருகின்றன என்பது மிக அடிப்படையான கருத்தாயினும் ''அனுபவம்'' தலைமைத்துவத்தை பெற்றுத்தருவதில் குறிப்பாகச் சமூக; பொருளாதார அமைப்புக்களிற் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை. அரச தனியார் நிறுவனங்களிலே அதிகாரத் தலைமையை நியமிக்கும் போது நியமனம் சார்ந்த பிற தகுதிகளை நோக்குவதோடு, அனுபவமும் கவனிக்கப் படுகின்றது. ஆற்றலுக்கும் அனுபவத்திற்கும் தொடர்புண்டு என்கிற நிலையை மறுப்பதற்கில்லை என்பதை விட்லரின் ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.[18]

இத்தொடர்பு நிலை செயற்திறனிலே பெரிய வேறுபாடுகளை காட்டிடவில்லை எனவும் வேறு ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. தலைமைத்துவச் சிறப்பியல்புகளில் ஒரு கௌரவ சிறப்பியல்பாக அனுபவத்தை ஏற்கலாம் எனலாம். தலைமைத்துவ குணவியல்புகளில் முதன்மையானது என ஏற்கப்படுவது நுண்ணறிவாகும்.[19] தனிநபர் ஒருவர் தலைமைக்கு நியமிக்கப்படுகின்ற போது, தெரிவு செய்யப் படுகிற போது, வேறு எவ்வகையிலாயினும் அதனை அடைந்து கொள்கிற போது தலைமையை பெற்றவர் அதீத நுண்ணறிவுத் திறன் உள்ளவர் என்றவாறாகவே சாதாரண மக்கள் கூட நினைத்துக் கொள்வர். அந்த அளவிற்கு இந்த இயல்பு தலைமைத்துவத்துடன் இணைத்துப் பார்க்கப்படுகின்றது. றிச்சாட் மன்னின் ஆராய்ச்சிகள் தலைமைத்துவத்தின் நுண்ணறிவின் முதன்மையை துலக்கமாக விளக்குகின்றன. நுண்ணறிவு என்பது 'புரிந்து கொள்கிற' சிந்தனை அமைப்பு முழுவதினதும் உள்ளடங்கலாய் அமைகின்றது. கூர்மையான நுண்ணறிவு உள் நோக்கு, தூரதிருஷ்டியான பார்வை நுணுக்கமான பண்புகளை வழங்குகின்றது. நுண்ணறிவானது வளர்த்து கொள்ளக் கூடிய தொன்றல்ல. பிறப்புடனாய் வருகின்றது என்கிற கருத்தொன்றும் உளவியலில் காணப்படுகின்றது. பல்வேறு பரிசோதனைகள் கூடிய நுண்ணறிவுள்ள தலைமைத்துவத்தின் முன்னெடுப்புக்கள் சாதகமானதும், அர்த்தப்பாங்கானதுமான விளைவுகளைத் தருகின்றன என்பதை மெய்ப்பிக்கின்றன.

4.2.2 தலைமைத்துவத்திற்கும் Dominance எனப்பெறும் ஆதிக்கம் செலுத்தல் என்பதற்கும் இடையிலான வேறுபாடுகளைக் கண்டு கொள்ளுதல் தலைமைத்துவம் குறித்த ஆளுகைப் புலத்தை நிர்ணயித்துக் கொள்ள உதவும் தலைமைத்துவ குணவியல்புகள் எனக் குறிப்பிடத்தகக் குண இயல்புகளுள் ஆதிக்கம் செலுத்துதல் என்கிற குண இயல்பு இரண்டாவது இடத்தைப் பெறுகின்றது.[20] ஆதிக்கம் செலுத்துதல் என்கிற நிலைப்பாட்டில் அதன் அதீத நிலைமைகள் பிறழ்வான தலைமைத்துவத்திற்கு வழிவகுக்கும். மிதமான நிலைப்

பாடே நேர்க்கணிய தலைமைத்து வத்திற்கு வழி வகுக்கும். ஆதிக்கம் செலுத்துதல், வசப்படுத்தல் என்கிற நிலைக்கு முரணானது. வசப்படுத்தல் என்கிறபோது சுயம் இழந்த சரணாகதி நிலையையே குறிக்கும். ஆதிக்கம் செலுத்தலை செல்வாக்குச் செலுத்தல என்றவாறாகவும் பார்க்கலாம். தலைமைத்துவமானது இயல்பான இடைவினையுடையது என்பதால், தலைமைத்துவத்தை ஆதிக்கம் செலுத்துதல் அல்லது ஆக்கிரமித்தல் என்பதன் பிரதியீட்டுச் சொல்லாகவும் கண்டு கொள்ள முடியாது. பிரதியீட்டுச் சொல்லாகக் கண்டு கொண்டால் மனிதர்கள் மனிதர்களாகவல்லாது, தலைமைத்துவத்தால் கருவியாகவே பயன்படுத்தப்படுவார். தலைமைத்துவ இடைவினையில் இரு பகுதியினருமே ஆதிக்கம் செலுத்தப்படுகிறார்கள். இங்கு காணப்பெறும் வேறுபட்ட நிலை விகிதாசார அடிப்படையில் அமைந்து காணப்பெறும். உளவியல் சார் நோக்கில் தலைமைத்துவம், தன்னை பின்பற்றுவோரை நோக்கி ஒருவித இயல்பான செல்வாக்குச் செலுத்துகிற அதாவது ஆதிக்கம் செலுத்துகிற தன்மையையே கொண்டிருக்கும். தன்னைப் பின்பற்றுபவர்களது மனங்களை உளவியற் புரிந்துணர்வுடன், அதிகாரத்தை பயன்படுத்தாமல், கட்டுப்படுத்தும் எச்சரிக்கையுணர்வை உண்டு பண்ணாமல், தன்மேலார்ந்த செல்வாக்கைச் செலுத்துதலே சிறந்தது. இவ்வாறு அமையும் போது தலைமைத்துவ வழி வருபவர்களது செயற்பாடுகள் தலைமையின் பேராலேயே நடைபெறுகின்றன என்றவாறான 'சமுத்திரை குத்துதல்' போன்ற தன்மையை பிரதி பலிக்க வேண்டும். இங்கு சரணாகதி என்கிற அர்த்தம் தோன்றாது சமர்ப்பணம் என்கிற தொனிப்பே செயல்களில் மேவோங்கி நிற்கும்.

4.2.3 மூன்றாவது முக்கிய இடத்தை வகிப்பது இசைந்து போகிற இயல்பாகும். (Adjustment) தலைமைத்துவம் கூடுதலான கோரிக்கைகளை, விண்ணப்பங்களை தன்னைச் சார்ந்துள்ள குழுவினர் மீது முன் வைக்கின்ற போது, ஒருவகைப்பட்ட உளவியற் பாதிப்பை அங்கத்தவர்களிடையே ஏற்படுத்தும். இத்தகைய பாதிப்பு தலைமைத்துவத்தின் செயற்திறனில் வெறுப்பையும் அதிருப்தியையும் ஏற்படுத்தும். இதனைச் சரிசெய்யத் தலைமைத்துவத்தின் இசைந்து போகிற பண்பே பெரிதும் உதவும். மோபேக் என்பவரது ஆய்வுகள் தலைமைத்துவத்திற்கும் இசைந்து போதலுக்கும் இடையே நேர்க்கணியமான உறவுண்டென எடுததுக் காட்டின. மேலும் வயதில் இளைய தலைவர்களுக்கு இசைந்து போகின்ற இயல்பு கூடுதலாக உள்ளது எனவும் நிறுவினார்.

4.2.4 செயலாற்றல், (Activity) தலைமைத்துவத்தின் சிறப்பியல்புகளில் ஒன்றாய் அமைகின்றது. தலைமைத்துவத்தை நீண்ட காலத்திற்கு தக்க வைத்துக் கொள்வதற்காக மட்டுமல்ல தலைமைத்துவத் தேர்வில் ஈடுபடும் சக அங்கத்தவர்களுக்கு, தலைமையைத் தேர்ந்து கொள்வதில் மிக வெளிப்படையாக அவதானித்துக் கொள்ளக்கூடிய இயல்பாக செயலாற்றல் அமைகின்றது. மேலும் தலைமைத்துவத்தின் விரைவுப் பெறுபேறுகளுக்கு வழி கோலுகின்றது.

5·0 இதுவரை இனம் கண்டு கொண்ட தலைமைத்துவக் குணவியல்புகள், தலைமைத்துவத்தை நேர்க்கணிய

www.padippakam.com

மாக எடுத்துச் செல்லப் பெரிதும் உதவுகின்றன. சமகால உலகின் சமூக அமைப்புக்கள் இணைத்தன்மை வாய்ந்தவையாகவும், சிக்கல் நிறைந்தவையாகவும் அமைந்து கிடக்கின்றன. விஞ்ஞானத்தின் பிரமிக்கத்தக்க வளர்ச்சி நிலைகளும், வளர்ச்சியால் ஏற்பட்ட தொழில் நுட்ப ஆற்றல்களும் மனிதத் தேவைகளையும், எதிர்பார்ப்புக்களையும் அதிகரிக்கச் செய்துவிட்டன, குறைந்தளவில் நேரத்தையும் பணத்தையும் செலவாக்கி, கூடியளவில் திருப்தியையும், பலன்களையும் பெற்றுக்கொள்ளவே மனித சமுதாயம் விருப்புகிறது. வாழ்வியலின் பொதுவான விழுமியங்களென கருதப்பட்டனவற்றில் காட்டி நிற்கும் ஒருமைப் பாடு குறைந்து செல்லுகின்றது. சகிப்புத்தன்மை சமநோக்கு அருகிவருகின்றன. கலாச்சார பண்பாட்டு விழுமியங்களை பின்பற்றுகின்ற நாட்டு மக்கள் தங்களது அதிருப்திகளை, வெறுப்புக்களை வெளிக்காட்டத் தாமதிப்பார்கள் என்கிற கருத்தும் வலுக்குன்றிவிட்டது, இன்றைய சமூகத்தின் இத்தகைய போக்குகள், மனமாற்றங்கள் தலைமைத்துவத்திலும் பிரதிபலிக்கவே செய்யும் அன்று போல் இன்று இல்லையாதலால், அன்றைய தலைமைத்துவத்துக்குப் போதுமானவை எனக் கண்டுகொள்ளப்பட்டவை இன்று போதாததாகிறது. எனவே தலைமைத்துவத்தை நிறைவுற்றதொன்றாக்க புதிய அணுகு முறைகளையும், நுட்பங்களையும் கண்டு கொள்ளவேண்டும்.

5.1 தலைமைத்துவத்தின் வெற்றிகரமான செயற்பாடானது நிலைமைகளுக்கும் தேவைகளுக்கும் தகுந்ததான வழிமுறையை தெரிந்து எடுத்துச் செயல்படுவதில் பெருமளவு தங்கியுள்ளதெனலாம். சமூக உளவியலாளர்கள் பொதுவான வழிகள் இரண்டை முன் வைக்கின்றார்கள். அவையாவன அக்கறை செலுத்துதல் முறை (Consideration Method) முன்முனைதலும் வழிநடாத்தலுமான முறை (Initiating a Directing Method)[21] அக்கறை செலுத்தல் முறையைப் பொறுத்த வரையில் நிறுவனத்தில் அல்லது குழுவில் தொழில் புரிபவர்களது உடல் உளம், சார்ந்த இயல்பு நிலையையும் திருப்தி நிலையையும் சகச நிலையில் வைத்துக்கொள்ளத் தலைமைத்துவம் முதலில் முயற்சி எடுக்க வேண்டும். இத்தகைய நிலையைத் தலைமைத்துவம் உறுதி செய்துகொண்டபின், தொழில் புரிபவர்களது கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு நிறுவனத்தின் இலக்கையும் அதனை அடைவதற்கான வழிவகைகளையும் எடுத்துக்கூறி உற்சாகமூட்டி, அவர்களை மிக இயல்பாகச் செயல்படவைத்தலாகும். முன்முனைதலும் வழிநடத்தலுமான தலைமைத்துவ முறையானது, அடிப்படையில் சில தனித்துவமான வழிகளையும், தெளிவான பாதைகளையும், குழுவினரது அல்லது நிறுவனத்தின் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக தலைமைத்துவம் அமைத்துக் கொண்டு, அந்த நிறுவனத்தைச் சார்ந்த அங்கத்தவர்களது செயல்களை வழிநடாத்தி, இயைபுபடத் தொழிற்படவைத்தலாகும. அக்கறை செலுத்தல் தலைமைத்துவ வழிமுறையானது பாரம்பரியமானதும், அதிக பலனைத் தரத்தக்கதொன்றாகவும் கருதப்படுகின்றது. முன்முனைதலும் வழிநடாத்துதலும் முறையானதும் பிரச்சினைக்குரிய சிரமமான இலக்குகளை அடைவதற்கு உகந்த முறையாகக் கருதப்படுகின்றது. நிருவாக தலைமை, நிறைவேற்றுத் தலைமை, கொள்கை வகுப்புத் தலைமை போன்றவற்றிற்கு இம்முறை மிகவுகந்ததொன்றாக அமைகின்றது. தேவைக்கும், சந்தர்ப்பம், சூழ்நிலைக்கும் உகந்ததாற் போல



படிப்பகம்

www.padippakam.com

இரு முறைகளையும் இணைத்தும் பயன்படுத்தலாம்.

5.5 முன்னெப்போதுமில்லாதவாறாய், இக்கால மனித சமுதாயம் தலைமைத்துவத்தின் மீது வெறுப்பையும், அதிருப்தியையும் மிக இயல்பாய் வெளிப்படுத்துகின்றது. தலைவர்கள் குறித்தும், உயர்பதவியிலிருப்பவர்கள் குறித்தும் கேலிச்சித்திரம் வரைதலும், விகடகவி புனைதலும், இரு அர்த்தப்பட்ட எழுதுவதும் மரபாகி வருகின்றது. இந்த நிலைமை தலைமைத்துவம் துரோகம் இழைத்தமையால் மட்டும் உருவாகும் நிலையல்ல இகழ்தலும் இம்சைப்படுத்தலும் மனிதனுக்குரிய இயல்பான, ஆனால் வெறுக்கத்தக்க குணவியல்புகளே யாகும். தலைமைத்துவத்திடமிருந்து தாம் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்கிற எண்ணமுனைப்பும் பிறரது ஒத்தாசையும் தலையீடுமின்றித் தனது கருமங்களைத் தானே செய்ய வேண்டும் என்கிற எண்ணப் பாங்குகளும் இத்தகைய அதிருப்தி நிலைகளுக்கு கால்கோளாகின்றன. அதுமட்டுமல்ல தனிப்பட்ட முறையில் தன்னோடு தொடர்புற்றவர்கள், விருப்பத்துக்குரியவர்கள் அத்தகைய பதவி நிலையைப் பெறவேண்டும் என்கிற ஆவலினாலும் இத்தகைய வெறுப்பைத் தலைமைத்துவத்தில் காட்டிக் கொள்கின்றனர். மேலும் சிலர், கூட்டுவாழ்க்கையில் ஏற்பட்ட வெறுப்புக்களினாலும் தலைமைத்துவத்தைச் சாடிக்கொள்வார்கள். இந்நிலைமைகளுக்கெல்லாம் ஈடுகொடுக்கத்தக்கவாறாக, நவீன தலைமைத்துவங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

5.3 தலைமைகள் அல்லது தனி நபர் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதில் அல்லது விடுவித்துக் கொள்வதில் செயற்பட்டு பெறப்படும் நேர்க்கணியப் பெறுபேற்றைக் காட்டிலும் நிறுவனத்தில் அல்லது குழுவில் அங்கம் வகிக்கும் அனைவருக்கு முன்னும் பிரச்சினையை முன்வைக்கும் போது பெறப்படும் தீர்வானது விரைவானதாகவும் சிறப்பானதாகவும் அமைகின்றன.[22] எனப்பல ஆய்வுகள் எடுத்துக்கூறுகின்றன இவை பெரும்பாலும் சிறிய குழுக்களுக்கே பொருத்தமுடையனவாக அமையலாமாயினும் இத்தகைய கருத்து வளர்ச்சிகள் எதிர்காலத்திலே தலைமைத்துவத்திற்கு சவாலாக அமையலாம்.

5.4 தலைமைத்துவ முன்னெடுப்புக்கள் சிறப்புற அமைய தலைமைத்துவம் குறித்த கற்கை நெறிகளைத் தெரிந்துகொள்வதிலும் பார்க்க கடந்த கால தலைமைத்துவங்களின் தோல்விகளை ஆராய்ந்து பார்த்தலே அதிக பயனைத் தரும்.

## அடிக்குறிப்புக்கள்

1. Gardner Lindzey Ellist Aronson *The Hand Book of Social Psychology Vol 4* Mohan Primalini Amerind Publication Pvt. Ltd., New Delhi 1969 P. 205.

2. W. J. H. Sprotts, *Human Groups*, Penquin Books, 1969 P. 69

3. Henry Clay, Lindgren, *An Introduction to Social Psychology* Willy Eastern Private Limited, New Delhi 1974, P. 380.



படிப்பகம்

www.padippakam.com

4. Ibid, Henry Clay Lindegren 1974, P. 380

5. Ibid. Henry Clay Lindegren 1974, P. 381

6. J. A. C., Brown, *The Social Psychology of Industry*, Nicholls & Company Ltd. Gt. Bt 1954, P. 241

7. Napier Gershifled *Groups*, P. 241

8. Dominic Abrams, Rupert Brown, "Consciousness and Social Identity. Self regulation as a group member" *Social Psychological Ouarterly* A Journal of the American Sociological Association Dec — 1989 P. 311

9. op. cit, J. A .C. Brown 1954 p. 226

10. David Krech, Richard Crutchfield, Egerton L. Ballachey, *Individual in Society* Mcgrow - Hill Book Company, New York, 1962, P. 434

11. Ibid.

12. Idid.

13. op. cit, Henry Clay Lindgren, 1974 P. 383

14. Idid, P. 384

15: Ibid, P. 385

16. Ibid.

17. Vatsyayan, *Social Psychology*, Kedar Nath Ramanath, New Delhi, 1983 P. 191

18. op. cit, Henry Clay 1974 P. 389

19. Ibid, p. 390

20. Ibid, 392

21. op. cit, David Krech, P. 446

22. Mark Stasson, Tatsuyakameds, 'Effects of assigned Group concerning requirements on Group, Problems Solving Group members learning.' *Social Psychology Ouarterly*. A Journal of American Sociological Association, March 1991 P. 25



படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை
தொகுதி VI
இதழ் I & II, 1994

# 'இலங்கையை இலௌகீக, ஆன்மிக வழிகளில் கைப்பற்றுதல்' - சில குறிப்புகள்

திருமதி எஸ். கிருஷ்ணகுமார்

பதினேழாம் நூற்றாண்டில் இலங்கையைப் பற்றிய பல நூல்கள் போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கில மொழிகளில் எழுதப்பட்டன. அவை இலங்கையின் வரலாற்றை எழுதுவதற்குப் பெரிதும் பயன்படுவனவாக உள்ளன. அவற்றுள் முதன்மை இடத்தினை வகிப்பதாக பெர்னாங் த. கேய்ரோஸ் (Fernao de Qneyroz) என்ற போர்த்துக்கேய ஆசிரியரால் எழுதப்பட்ட இலங்கையை இலௌகீக, ஆன்மிக வழிகளில் கைப்பற்றுதல் ''The Temporal and Spiritual conquest of Ceylon'[1] என்ற நூல் அமைகின்றது. இந்த நூல் பதினாறாம், பதினேழாம் நூற்றாணடுகளில் இலங்கையின் கரையோர அரசுகளின் வரலாற்றை அறிவதற்கு உதவுகின்றது. குறிப்பாக இக் குறிப்பிட்ட காலப்பகுதியின் யாழ்ப்பாணப் பட்டின இராச்சியத்தின் வரலாற்றை அறிந்து கொள்வதற்குப் பெரிதும பயன்படுகின்றது.

## நூலின் ஆசிரியர்

நூலின் ஆசிரியரான பெர்னாங் த கேய்ரோஸ் 1617 ஆம் ஆண்டில் போர்த்துக்கல் நாட்டில் பிறந்தார். அவர் தமது பதினோராம் வயதில் 1632 ஆம் ஆண்டில் யேசு சபையில் இணைந்து ஆரம்ப மதக் கல்வியைப் பெற்றுக் கொண்டார். 1635 ஆம் ஆண்டில் மதச் சேவையில் ஈடுபடுவதற்காக இந்தியாவுக்கு வந்தார். இங்கு மெய்யியல், இறையியல் ஆகிய துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுக் கொண்ட பின்னர், இறையியற் பேராசிரியராகப் பணி புரிந்தார். நிர்வாகத் துறையில் பெற்றிருந்த ஆளுமை காரணமாகப் பல்வேறு நிர்வாகப் பணிகளிலும் பங்கேற்றுக் கொண்டார். இந்தியாவில் இயங்கிய யேசு சபை மத நிறுவனத்தின் அதி உயர் நிர்வாகப் பதவியான புறொவின்சியல் (Provincial) என்ற பதவியினை 1677—80 காலப்பகுதியில் வகித்தார்.

இவை யாவற்றிற்கும் மேலாகப் பல்வேறு நூல்களை எழுதியவர் என்ற வகையிலும் பெருமைக்குரியவராகத் திகழ்கின்றார். இவர் எழுதிய நூல்களுள் 'வணக்கத்திற்குரிய அருட்சகோதரர் பீட்றோ டி பஸ்ரோவின் வாழ்க்கை வரலாறு 'இலங்கையை இலௌகீக ஆன்மிக வழிகளில் கைப்பற்றுதல்' ஆகிய நூல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் பல நூல்கள் எழுதியிருந்தார் எனவும், அவை தீ விபத்து ஒன்றில் அழிந்தன எனவும் கூறப்படுகின்றது.

இந்தியாவில் ஐம்பத்து மூன்று ஆண்டுகள் தமது மத, அறிவியல் கடமைகளில் வாழ்க்கையை நடத்திய கேய்ரோஸ் சுவாமிகள், 1688 ஆம் ஆண்டில் தமது இலங்கை பற்றிய நூலை எழுதி முடித்த குறுகிய காலப்பகுதிக்குள் இறந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

நூல் எழுதப்பட்ட நோக்கம்

கேய்ரோஸ் சுவாமிகளின் நூலினை ஒரு வரலாற்று மூலாதாரமாகப் பயன்படுத்தும் வரலாற்று மாணவன், அந்த நூல் எழுதப் பட்டமைக்கான காரணத்தினையும், பின் னணியினையும் அறிந்து கொள்வது பயனு டையதாகும். கேய்ரோஸ் சுவாமிகள் பல் வேறு நூல்களை எழுதி இருந்த போதிலும், இரண்டு நூல்களே பெரிதும் அறியப்பட்ட வையாய் உள்ளன. அவற்றுள் முதலில் எழு தப்பட்டது அருட்சகோதரர் பீட்றோ டி பஸ் ரோவின் வாழ்க்கை வரலாறு (Life of- Venerable Brother Peter de Basto) பற்றி யதாகும். இந்த நூலினை எழுதிய போதே கேய்ரோஸ் சுவாமிகள் தமது இலங்கை பற் றிய நூலினை எழுதுவதற்குத் தூண்டப்பட் டார்.

அருட்சகோதரர் பஸ்ரோ ஒரு சாதா ரண மதத்துறவியாக இருந்த போதிலும் தியானம் முதலிய மத வழிபாட்டு நடவடிக் கைகளில் ஆழமாகவும், அதிகமாகவும் ஈடு பட்டமை காரணமாக எதிர்வு கூறும் வலு வினையும் பெற்றிருந்தார். அவரது எதிர்வு கூறல்களில் இலங்கை பற்றியவை முக்கியத் துவம் பெற்றிருந்தன. 1658 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர்' டச்சுக்காரரிடம் இலங் கையை இழக்கப் போவது குறித்து, அவர் முன்னதாகவே குறிப்பிட்டிருந்தார். இலங் கையில் போர்த்துக்கேயரின் எதிர்காலம் குறித்து அருட்சகோதரர் வெளியிட்ட, எதிர்வு கூறல்களை இலங்கையின் வரலாற் றுப் பின்னணியில் வைத்து நோக்கிய போது கேய்ரோஸ் சுவாமிகள், இலங்கை வரலாறு பற்றிய பெருமளவு தகவல்களைப் பெற்றி ருந்தார். அவை யாவற்றையும் வாழ்க்கை வரலாறு பற்றிய நூலில் இணைத்துக் கொள்ள முடியாது போகவே, இலங்கை பற்றிய தனியான ஒரு நூலினை எழுது வதற்குத் தூண்டப்பட்டார். இது கேய் ரோஸ் சுவாமிகள் இலங்கை பற்றிய நூலினை எழுதுவதற்கு வழி கோலிய காரணியாகவே அமைந்தது. இவற்றுடன் வேறும் பல காரணிகள் இணைந்தே அவ ரது இலங்கை பற்றிய நூலை எழுதுவதற் கான அவசியத்தை ஏற்படுத்தின என்பதும் கருத்திற் கொள்ளத்தக்கதாகும்.

சுவாமிகளின் நூலினுடைய தலைப்புச் சுட்டுவது போன்று 'இலங்கையை இலௌ கீக, ஆன்மீக வழிகளில் கைப்பற்றுதல்' வேண்டும் என்ற எண்ணத்தை அடிப்படை யாகக் கொண்டு எழுதப்பட்டதே மேற்படி நூலாகும்.

போர்த்துக்கேயர் பதினாறாம் நூற் றாண்டின் ஆரம்பத்தில் இருந்து, இந்தியா வின் பல்வேறு பகுதிகளிலும், இலங்கையின் கரையோரப் பகுதிகளிலும் தமது ஆதிக் கத்தை ஏற்படுத்திப் படிப்படியாக விஸ்த ரித்து வந்தனர். பதினேழாம் நூற்றாண்டில் கடற்படை வலுவினை அதிகமாகக் கொண்ட டச்சுக்காரர் இப்பகுதிகளுக்கு வந் தபோது, போர்த்துக்கேயரின் ஆதிக்கம் அச் சுறுத்தலுக்கு உள்ளாகத் தொடங்கியது, பதினேழாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கையின் கரையோர மாகாணங்களும், இந்தியத்தளங்களும் டச்சுக்காரரிடம் இழக் கப்பட்டன. இலௌகீகத்துறையில் போர்த் துக்கேயர் பெற்றுக் கொண்ட இத்தோல் விகள், அவர்கள் இதுவரை காலமும் மேற் கொண்டு வந்த ஆன்மீக நடவடிக்கைக ளையும் பாதிப்பனவாய் இருந்தன. தீவிர மத அபிலாசைகள் மிக்க கேய்ரோஸ் சுவா மிகள், இலங்கையை மீளவும் கைப்பற்றும் வழிகளைத் தேடினார். அதன்படி போர்த் துக்கேயர் மத்தியிலும் இலங்கையை மீளக் கைப்பற்றும் முயற்சிகளில் ஈடுபடுத்தும் வகையில் ஊக்கத்தினை ஏற்படுத்த விரும் பினார். அத்தகைய தூண்டலை ஏற்படுத் தும் வகையிலேயே மேற்படி நூலை எழு தினார். நூலுக்கு கேய்ரோஸ் சுவாமிகள் எழுதிய முன்னுரைகளில் இக் கருத்துக் களை அவர் கூறியுள்ளமை அவதானிக் கத்தக்கதாகும்.

கேய்ரோஸ் சுவாமிகள் தமது நூலின் முதலாவது முன்னுரையினை அக்காலத்தில் இந்தியாவில் போர்த்துக்கேய இராஜப் பிர திநிதியாகப் பதவி வகித்த பிரான்சிஸ்கோ



படிப்பகம்

www.padippakam.com

த தாவரா கொண்டே த அல்வார் (Francisco de Tavora, Conde de Alvor) என்பவருக்கு எழுதியுள்ளார். அம் முன்னுரையில் தமது நோக்கத்தினை நன்கு வெளிப்படுத்துவதைக் காணலாம்.

> " One of the greatest services which your Excelleney can render to the Divine and Human Majesty in persuade Portugal to recover India, and especially Ceylon, the only obj-ect for which I gathered these in-formation so that considering all this the portuguese might realize what they have lost and resolutely dete-mine to seek a means for recovery for nothing is impossible to industry and valour renders all things easy ,, [2]

மற்றைய முன்னுரை நூலை வாசிக்கும், போர்த்துக்கேயர்களை விழித்து எழுதப்பட்டதாகும். அங்கும் கேய்ரோஸ் சுவாமிகள் தனது நோக்கத்தினைத் தெளிவு படக் கூறுவதைக் காணமுடிகிறது. அஃதாவது,

> " Of all the great and Lamen table lossess and ruins of the portu-guese state in the East Indies, the greatst and the most painful in the opinion of all well qualified to Judge was the loss of the Island of Ceylon, becausc of the fruit full and most rich and in every respect most happy king-dom which was there by lost, the enormous expense incurred on the con-quest, aud the bloodshed and lives wh-ch it cost the Portuguese nation; all of which came to naught by our misma nagement, and is as forgotten, so far as a remedy is concerned as the grief is remembered. " [3]

இவ்விரு முன்னுரைகளும் கேய்ரோஸ் சுவாமிகளின் நோக்கத்தினைப் பொதுவாக அறிந்து கொள்வதற்கு உதவக்கூடிய போதுமான உதாரணங்களாகும். இவற்றில் இலங்கை இழக்கப்பட்டமை குறித்த ஆசிரியரின் ஆதங்க உணர்வினையும், அதனை மீண்டும் கைப்பற்றவேண்டும் என்னும் ஆவலையும் காண முடிகின்றது. இவற்றுடன் வேறும் பல அம்சங்கள் இணைந்தே நூலை எழுதுவதற்கான தூண்டுதலையும், அவசியத்தையும் ஏற்படுத்தி இருந்தன. அவற்றைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்.

1) அருட்சகோதரர் பஸ்ரோவின் தீர்க்க தரிசனம் தெரிவித்தது போன்று, போர்த்துக்கேயரின் தவறான நடவடிக்கைகள் காரணமாகவே இறைவன் இலங்கையை இழக்கச் செய்தான் என்பதை எடுத்துக் காட்டுவதும், மீண்டும் போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றுவார்கள் என்பதை வலியுறுத்திக் கொள்வதும்,

2) இலங்கையின் பொருளாதார வளம், கேந்திர முக்கியத்துவம் ஆகியவை காரணமாக போர்த்துக்கேயர் தமது கீழைத் தேசப் பேரரசின் தலைமைப்பீடமாக இலங்கையைத் தெரிவு செய்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாது போனமை தவறு என்பதை எடுத்து விளக்குவதும்,

3) இலங்கை பற்றிய அறிவு போர்த்துக்கேயர் மத்தியில் நன்கு தெரிந்திருக்காமையினாலேயே போர்த்துக்கேயரின் தவறுகள் பல இடம் பெற்றன எனவும், அவை பற்றிய போதிய தகவல்களையும், அனுபவங்களையும் எடுத்துக் காட்டுவதன் மூலம் போர்த்துக்கேயர் இலங்கையை மீளவும் கைப்பற்றும் பட்சத்தில் அவற்றை அறிந்து உணர்ந்து செயற்படவும், திட்டங்களை வகுத்துக் கொள்ள வாய்ப்பாக அமையும் வகையிலும்,

4) இலங்கையில் போர்த்துக்கேயர் காலத்தில் மதம் மாறிய கத்தோலிக்கர்கள், பின் வந்த டச்சுக்காரரின் ஆதிக்கத்தினால் துன்புறுத்தப்பட்டமை காரணமாக, அவர்களைக் காப்பாற்றும் பொருட்டு இலங்கையை மீளவும் தாம



படிப்பகம்

www.padippakam.com

தமின்றிக் கைப்பற்ற வேண்டும் என்பதை வற்புறுத்திக் கொள்ளவும் மேற்படி நூலினை எழுதினார். இந்த விடயங்கள் யாவும் நூலின் பல்வேறு பகுதிகளிலும் விரவிக் காணப்படுவதோடு, மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுவதையும் காணலாம்.

## நூல் எழுதப்பட்ட காலம்

வரலாற்று மூலாதாரமாகக் கொள்ளப்படும் கேய்ரோஸ் சுவாமிகளின் நூல் எழுதப்பட்ட காலமும், அதன் பெறுமதியைத் தீர்மானிப்பதற்கு உதவக் கூடியதாகும். இந்த நூல் எழுதப்பட்ட காலம் 1671—1688 காலப்பகுதியாகும். இந்த நூல் உடனடியாகவே பதிக்கப்பட இருந்த போதிலும் அது சாத்தியப்படவில்லை. ஆயினும் பதினேழாம் நூற்றாண்டுக்குரியது என்ற வகையில் அதன் முக்கியத்துவத்தைப் பெற்றுக் கொள்ளத் தவறவில்லை.

இந்த நூல் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே இலங்கையின் வரலாற்று ஆய்வாளர்களின் கவனத்தைப் பெற்றது. இந்நூல் இலங்கை வரலாறு பற்றி அறிவதற்கு உதவும் முக்கியத்துவம் உணரப்பட்டு 1913—14 இல் மூல மொழியிலான பதிப்பு வெளியிடப்பட்டது. அதன் அடிப்படையில் பல வரலாற்று நூல்கள் எழுதப்பட்டிருந்தன. 1930 ஆம் ஆண்டு வணக்கத்திற்குரிய பிதா எஸ். ஜி. பெரேரா என்பவரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது.

## நூலின் அமைப்பு

இலங்கை பற்றி அந்நியரால் எழுதப்பட்ட நூல்களுள் அதி நீண்ட நூலாக கேய்ரோஸ் சுவாமிகளின் நூல் அமைகின்றது. அதன் ஆங்கில மொழி பெயர்ப்பு 1197 பக்கங்களை உள்ளடக்கியதாக உள்ளது. இந்நூல் மூன்று தொகுதிகளைக் கொண்டது. ஒவ்வொரு தொகுதியும் இவ்விரு பகுதிகளைக் கொண்டது. இதன் முதலாவது பகுதி இலங்கையைப் பற்றிய பொதுவான விபரங்கள், புராதன வரலாறு சமூகப் பழக்க வழக்கங்கள் போன்ற விடயங்களைக் கூறுகின்றது. இலங்கையின் பிரதான இராச்சியங்களைப் பற்றிய விபரங்கள் தனித்தனியாக விபரிக்கப்பட்டுள்ளன. இரண்டு தொடக்கம் ஐந்து வரையிலான பகுதிகளில் போர்த்துக்கேயர் வருகை தொடக்கம் கரையோர மாகாணங்களை டச்சுக்காரர் கைப்பற்றியமை வரையிலான காலப்பகுதியில் நிகழ்ந்த சம்பவங்கள், அரசியல், பொருளாதார, சமூக, சமய நடவடிக்கைகள் சார்ந்த சகல விடயங்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆறாவது பகுதியில் போர்த்துக்கேயர் இலங்கையில் செயற்பட்ட முறை, அவர்கள் இழைத்த தவறுகள் என்பவை சுட்டிக் காட்டப்பட்டு விமர்சிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இலங்கையை மீளவும் கைப்பற்ற யாது செய்ய வேண்டும் என்பது குறித்தும், கைப்பற்றிய பின்னர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும் கூறப்பட்டுள்ளது.

## நூலின் மூலாதாரங்கள்

கேய்ரோஸ் சுவாமிகள் இலங்கையின் பகுதிகளுக்கு வந்திருக்கவில்லை. ஆயினும் இலங்கை பற்றிய நூலை எழுதுவதற்கும் பல்வேறு வழிகளிலும் முயற்சி செய்திருந்தார் என்பதை அவரது நூலை வாசிப்பவர்கள் உணர்ந்து கொள்ளமுடியும் போர்த்துக்கேயர் தமது கடல் கடந்த நடவடிக்கைகள் பற்றிய நூல்களை எழுதிச் சென்ற பலரைத் தம்மகத்தே கொண்டிருந்தனர். கேய்ரோஸ் சுவாமிகளுக்கு முன்னரே பரோஸ்(Barros)[4] போன்ற பல ஆசிரியர்கள் இலங்கை பற்றிய தமது அறிவினைப் பகுதி பகுதியாக எழுதி இருந்தனர். பதினேழாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் போலோ த திரினிடாடே என்பவர் 'கீழைத் தேசங்களைக் கைப்பற்றுதல்' (Conguistado Oriente)[5] என்ற நூலில் இலங்கை பற்றியும் எழுதி இருந்தார். இவ்வாறு தமக்கு முன்னர் எழுதப்பட்ட வரலாற்று இலக்கியங்களைத் தமது நூலின் ஆதாரங்களாகவும் சுவாமிகள் பயன்படுத்திக் கொண்டார்'



படிப்பகம்

www.padippakam.com

இவை தவிர இலங்கை பற்றி எழுதப் பட்டுப் பதிப்பிக்கப்படாதிருந்த பல அறிக் கைகள், குறிப்புக்கள் ஆகியவற்றையும் பயன்படுத்தி உள்ளார். யேசு சபையின் பிரதான மத குரு என்ற வகையில் அவர் கொண்டிருந்த தொடர்புகள் காரணமாகப் பல்வேறு அரசியல், மத தொடர்புகள் பற் றிய குறிப்புக்கள், அறிக்கைகள் ஆகியவற் றையும் பெறும் வாய்ப்பு இருந்தது. அவை யாவற்றிற்கும் மேலாக இலங்கையில் இருந்து இந்தியாவுக்குச் சென்றவர்களின் நேரடி அனுபவங்கள், தகவல்கள் ஆகியவற் றையும் பெற்றுப் பயன்படுத்தி உள்ளார். குறிப்பாக இலங்கை டச்சுக்காரரால் கைப் பற்றப்பட்டதைத் தொடர்ந்து, அலுவலர் கள், மதகுருமார்கள், இராணுவத்தினர், சாதாரணமக்கள் எனப் பல தரப்பட்டவர் களும் இந்தியாவுக்குச் சென்றனர்.

இவ்வாறு கிடைக்கப் பெற்ற பெரும ளவு தரவுகளையும், தகவல்களையும் தொகுத்து ஒழுங்கு படுத்தி, ஒரு இலட் சிய அடிப்படையிலான வரலாற்று இலக்கி யத்தினைக் கேய்ரோஸ் சுவாமிகள் படைத் திருந்தார் எனக் கூறமுடியும்.

### இலங்கை வரலாறும் கேய்ரோஸ் சுவாமிகளின் நூலும்

கேய்ரோஸ் சுவாமிகளின் நூல் இலக் கிய நயம் கருதி வாசிப்பவர்களுக்கு உகந்த விருந்தாக அமையும் வகையில் எழுதப் பட்ட நூலன்று. அது குறிப்பிட்ட நோக் கங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட மக் களுக்காக எழுதப்பட்ட நூலாகும்.

ஆயினும் இலங்கை வரலாற்றைப் பொறுத்த வரையில் குறிப்பிடத்தக்க பெறு மதி வாய்ந்த வரலாற்றுத் தகவல்களைத் தரும் ஒரு மூலாதார நூலாக அது அமை கின்றது. குறிப்பாகப் பதினாறாம், பதி னேழாம் நூற்றாண்டு இலங்கையின் வர லாற்றை அறிய இது பெரிதும் உதவுகின் றது. இதனால் தான் இந்நூலை மொழி பெயர்த்த வண. எஸ். ஜி. பெரேரா அவர் கள் மகாவம்சத்திற்கு அடுத்த படியாக இலங்கை பற்றி அறிவதற்கு உதவும் மூலா தார நூலாக இதனைக் குறிப்பிடுகின்றார்.

இலங்கையில் போர்த்துக்கேயரின் ஆதிக்கம் பற்றி எழுதிய நவீன சிங்கள வரலாற்றாசிரியரான பேராசிரியர் ரிகிரி அபயசிங்க அவர்கள் இந்நூலைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்.

> "... It has been justly hailed as second only to the *Mahavamsa* as a source for the history of Ceylon. For the loving care and great pains with which he has gone through his sources and wealth of information he has made available to Queyroz does not yield place even to the aurthor of the *Mahavamsa*.[6]"

### யாழ்ப்பாண வரலாறும் கேய்ரோஸ் சுவாமிக ளின் நூலும்

பதினேழாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணம் பற்றிய விபரங்களை உள்ளடக்கிய மூன்று நூல்கள் ஐரோப்பிய மதகுருமார்களால் எழுதப்பட்டன. அவற்றுள் கூடுதலான விபரங்களை உள்ளடக்கிய நூல் என்ற வகையில் கேய்ரோஸ் சுவாமிகளின் நூல் முதன்மை வகிக்கின்றது இதற்கு அடுத்த படியாக' போர்த்துக்கேய பிரான்சிஸ்கன் சபை மதகுருவான பேலோ த. திரினி டாடே என்பவரால் எழுதப்பட்ட "கீழைத் தேசங்களைக் ஆன்மீக வழியில் கைப்பற் றுதல்" என்ற நூலில் யாழ்ப்பாண வரலாறு பற்றிய பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன.[7] கேய்ரோஸ் சுவாமிகளின் நூலில் கூறப்பட் டுள்ள பல விடயங்கள் திரினிடாடே சுவா மிகளின் நூலில் சுருக்கமாக கூறப்பட்டுள் ளது எனலாம். திரினிடாடே சுவாமிகளின் நூல் காலத்தால் முற்பட்டதாகும்.

மூன்றாவது நூல் பிலிப்ஸ் போல்டே யஸ் என்ற டச்சு மதகுருவால் எழுதப் பட்ட "இலங்கை பற்றிய உண்மையான தும், துல்லியமானதுமான விவரணம்,,[8] என்ற நூலாகும். டச்சுக்காரரின் முற்று



படிப்பகம்

www.padippakam.com

கையின் போது படையெடுப்பாளருடன் கூடவே வந்திருந்த ஆசிரியர்' 1658 ஆம் ஆண்டு இப்பகுதி கைப்பற்றப்பட்டமை பற்றிய விவரணங்களையும், டச்சுக்காரரின் மத நடவடிக்கைகள பற்றிய விபரங்களையும், அக்கால யாழ்ப்பாண மக்களின் சமய, சமூக நடைமுறைகள், சம்பிரதாயங்கள் ஆகியவை பற்றிய விரிவான தகவல்களையும தருகின்றார்.

இம்மூன்று நூல்களும் பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டுகளில் நிலவிய யாழ்ப்பாண இராச்சியத்தின் அரசியல், பொருளாதாரம், சமூக சமய விடயங்கள் பற்றிய வரலாற்றினை அறியப் பெரிதும் உதவுகின்றன.

இவற்றுள் யாழ்ப்பாண வரலாற்றைக் கூறும தமிழ் வரலாற்றிலக்கிய நூலான யாழ்ப்பாண வைபவ மாலையின் தரவுகள் காட்டுவதற்கும் மேலான பல விடயங்கள் யாழ்ப்பாண இராச்சியத்தில் இடம பெற்றன என்பதை மேற்படி ஆதாரங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. குறிப்பாக யாழ்ப்பாண இராச்சியத்தின் பிற்பட்ட கால அரசியல் வரலாறு, போர்த்துக்கேயர் ஆட்சியின போது யாழ்ப்பாண இராச்சியத்தில நிலவிய விடயங்கள் என்பவை குறிதத விரிவான தகவல்களை கேய்ரோஸ் சுவாமிகளின் நூல் தருகின்றது.

கேய்ரோஸ் சுவாமிகளின் நூலினையும பிற போர்த்துக்கேய ஆதாரங்களையும் பயன்படுததி சுவாமி ஞானப்பிரகாசர் இரண்டு நூல்களை இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலே எழுதி உள்ளார். அவை தமிழ் மொழியிலான ''யாழ்ப்பாண வைபவ விமர்சனம்''[9] என்பதும ஆங்கில மொழியிலான ''The kings of Jaffna''[10] என்பதும் ஆகும. அவை யாழ்ப்பாண இராச்சியத்தின் அரசியல் வரலாற்றினை மட்டும் எடுத்துக்கூறுகின்றன. மேற்படி ஆதாரங்களின் மூலம் யாழ்ப்பாண இராச்சியத்தின் அரசியல் வரலாறு மேலும் சிறப்பாக ஆராயப்படுவதும், சமூக சமய வரலாறுகள் நுணுகி ஆராயப்படுவதும் அவசியமாகும்.

கேய்ரோஸ் சுவாமிகளின் நூலில், யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் சமூக வரலாறு விளங்கப்பட்டிருந்தது என்பதைக் கூட்டுவதற்கு ஓர் உதாரணத்தை எடுத்துக காட்டலாம்

> '' The Nayres of Malavar, The Paravaz of the coast of Fishery The Chingalas of Ceylon.
>
> The Belalas in Jafana patao those of Negapatao and paleacate, those of samatra, and of Malaca'' those of Java, Macassar and Maluco would all drink their blood and they are either going about with their arms in their hands, or are everey yearning for their deliverence.
>
> and there is not a single nation that does not desire. to oust them from India, and their diffusion can be efficacious for their undoing, as it was for cur dwindling, for if by their deceptions we had the Natives against us, by still greater disillusions we shall have the Natives for us and against them,[11]

டச்சுக்காரரால் யாழ்ப்பாணப் பிரதேசம் கைப்பற்றப்பட்டமை குறித்து விபரமான விபரங்களைத் தந்த பின் கேய்ரோஸ் சுவாமிகள் பின்வருமாறு கூறி இருப்பது நோக்கத்தக்கதாகும்,

> ''.. In this manner God wished to show that he would drive as out of that Kingdom by stoning in punishment for the hardness with which some individuals and Royal minsters dealt with the poor inhabitants after the death of the renowned Captain Phiillpe de Oliveyra, its last Conqueror, a chastisement which God



படிப்பகம்

www.padippakam.com

meted out to the impious his anger turning to tone against hearts of stone. for though the Balalas were a quiet people greatly different from the Chingalas, they reduced them to the uttermost misery...''12

நூல் பற்றிய மதிப்பீடு

போர்த்துக்கேய மக்களுக்காக, போர்த்துக்கேய மொழியில் எழுதப்பட்ட நூல், இலங்கை வரலாற்றிற்கு உதவுகின்றது. அந்த நூலின் சிறப்பு அம்சங்கள் பல உள்ளன. இலங்கை மக்களின் வரலாற்றைத் தனியே போர்த்துக்கேய, நோக்கில் பார்க்காது கீழைத்தேச நோக்கிலும் அவதானித்தமை அவற்றுள் முக்கியமானதாகும்.

அது மட்டுமன்றி பதினேழாம் நூற்றாண்டில் வழக்கில் இருந்த பல விடயங்கள், இன்று இலங்கையரால் மறக்கப்பட்டு விட்டன. அவை இங்கு பதிவு செய்யப்படவில்லை. ஆனால் கேய்ரோஸ் சுவாமிகளின் நூலில் இருந்து அவற்றைப் பெற முடிகின்றது.

கேய்ரோஸ் சுவாமிகளை ஒரு மத குருவாகவும், போர்த்துக்கேய தேசாபிமானியாகவும் காணக்கூடியதாக இருப்பது வியப்பிற்குரியதல்ல. ஆனால் அவரது நூலின் தன்மை, நூலை எழுதுவதற்குப் பயன்படுத்தியுள்ள முறை ஆகியவற்றை நோக்கும் போது, அவர் ஒரு சிறந்த வரலாற்றாசிரியனுக்கு உரிய பல பண்புகளையும் கொண்டிருந்தார் என்பதைஅறியலாம். அவர் தேடிப் பெற்ற பெருந்தொகையின வான விபரங்கள், ஒழுங்குபடுத்தியுள்ள முறை, அவற்றில் உண்மையைத்தேடும் முயற்சி என்பவை அவற்றுட் சிலவாகும். கேய்ரோஸ் சுவாமிகள் புரதான ஐரோப்பிய வரலாறு, சமகால ஆசிய ஐரோப்பிய வரலாறு ஆகியவற்றிலும் ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதை அவரது நூல் எடுத்துக் காட்டுகின்றது.

இந்த நூலில் வரலாறு பற்றிய தகவல்கள் சில தவறாகக் கூறப்படுவதுடன் குறைபாடுகள் பலவும் இடம் பெறத் தவறவில்லை. ஆயினும் சமகாலத்தைச் சேர்ந்த பிற ஆதாரங்களுடன் வைத்துச் சரிபார்க்கும் வாய்ப்பு உள்ளது.

குறிப்பாக பிற்பட்ட யாழ்ப்பாண வரலாறு பற்றி அறிவதற்கு சமகாலத்தைச் சேர்ந்த பிற போர்த்துக்கேய ஆதாரங்களும், தென் இந்திய ஆதாரங்களும் உதவக்கூடும். அவை உதிரியான சான்றுகளாக வரலாற்றை அறிந்து கொள்ள உதவுபவை.

இவை யாவற்றையும் தொகுத்து நோக்கும் போது இலங்கை வரலாற்றிற்கு உதவுகின்ற முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மூலாதார நூலாக கேய்ரோஸ் சுவாமிகளின் ''இலங்கையை இலௌகீக ஆன்மீக வழிகளில் கைப்பற்றுதல்'' என்ற நூல் அமைகின்றது. அது யாழ்ப்பாண இராச்சியத்தின் பிற்பட்ட கால வரலாற்றை அறிவதற்கு ஒரு வரப்பிரசாதமாகவே அமைகினறது.

## அடிக்குறிப்புக்கள்

1. Queyroz, Fernao de *The Temporal and spiritual conguest of Ceylon*, translated by S. G. Perera Vol. I — III Colombo. 1930,
2. Qneyroz. p. VII
3. Qneyroz. p. IX



படிப்பகம்

www.padippakam.com


4. Barros, Joao and Couto Diogo do. 'The History of Ceylon from the Earliest Times to 1600 A. D'. as related by translated by Donald Ferguson in JCBRAS XX Colombo, 1908.

5. Trinidade, Paula da *Conquista Espiritual do Oriente* Vol. III Lisbon, 1967

6. Abeysinghe, Tikiri, *Portuguese Rule in Ceylon 1594 – 1612*, Colombo, 1966 p. 7

7. Paulo Da Trinidade, *The Spiritual Conquest of the East*., Book 3, Chapters 1 — 56 Chapters on The Introduction of Christianity to Ceylon. Translated by Edmund Peiris Colombo. 1972

8. Baldaus, P., *A True and Exact Description of the Great Island of Ceylon*, translated by P. Brohier (vol. VIII nos. 1—4, of the C H J) Dehiwela 1960.

9. ஞானப்பிரகாசர். சுவாமி, எஸ். *யாழ்ப்பாண வைபவ விமர்சனம்*, தமிழர்சர் உகம் அச்சுவேலி, 1928

10. Gnanapragasar, S. *The kings of Jaffna during the Portuguese Period of Ceylon History*, Atchuvely1 920

11. Queyeroz. P. X1II

12. Queyroz. P. 1000




படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை
தொகுதி VI
இதழ் I & II, 1994

# 'சிந்தனை' ஆய்வுக் கட்டுரைகளின் விபரப் பட்டியல்

சு. சத்தியசீலன்

கலை, சமூக விஞ்ஞானம் சார்ந்த காலாண்டுச் சஞ்சிகையாகச் 'சிந்தனை' பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1967 சித்திரையில் உதயமாகி ஆடி 1972 வரை வெளிவந்தது இச் சஞ்சிகையின் வெளியீட்டுடன் தொடர்பு கொண்டிருந்த சிலர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஓர் உறுப்பாக யாழ்ப்பாண வளாகம் அமைக்கப்பட்ட காலத்தில் இந் நிறுவனத்திலே இணைந்து கொண்டனர். புதிய வளாகத்தில் தமிழில் ஆராய்ச்சி சஞ்சிகை ஒன்றை வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டபோது சில ஆண்டுகளாக இலங்கையில் கலை, சமூக விஞ்ஞானத் துறைகளைப் பொறுத்த மட்டில் ஆராய்ச்சி ஏடாக வெளிவந்த சிந்தனையைத் தொடர்ந்து வெளியிட வேண்டுமென்று யாழ்ப்பாண வளாக மனிதப் பண்பியற் பீடத்தினர் தீர்மானித்தனர். அதன் விளைவாக மனிதப் பண்பியற் பீடத்தின் வெளியீடாக 1976 தையில் 'சிந்தனை' மறு பிறவி எடுத்து நான்கு இதழ்களை வெளியிட்டு வாடிப் போயிற்று.

1983 பங்குனியில் மீண்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட வெளியீடாக சிந்தனை தளிர்விட்டு வளரத் தொடங்கியது. இடையிடை நிதி நெருக்கடி காரணமாகவும் அரசியல் குழப்பநிலை காரணமாகவும் காலம் தாழ்த்தி மலர்ந்திட்டாலும் தொடர்ந்து வெளிவந்து கொண்டுள்ளது. 1993 பங்குனியில் இருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட நிதியிலிருந்து பணம் ஒதுக்கப்பட்டு வெளியிடப்பட்டு வருகின்றது. இவ்வகையில் இலங்கைப் பல்கலைக்கழக மனிதப் பண்பியற்பீட வெளியீடாகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட வெளியீடாகவும் மலர்ந்த 'சிந்தனை' ஆய்வுக் கட்டுரைகளின் விபரப்பட்டியல் ஆய்வாளர், மாணவர் நலன்கருதி இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளது. இதுவரை 126 ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கி சிந்தனை வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அம்பிகாதேவி, சி., 'கிராமிய வறுமைத்தணிப்பு —உலக வங்கியின் அணுகு முறை'' சிந்தனை, V, இதழ் I & II, பங், ஆடி, 1993, பக். 67—81.

அருளானந்தம், சு., 'இலங்கையில் பல்கலைக்கழகக் கல்வி இன்றைய கால கட்டத்தில் முகங் கொடுக்க வேண்டிய சில பிரச்சினைகள்', சிந்தனை, தொகுதி III (புதிய தொடர்), இதழ் I, பங்குனி, 1985, பக். 84—95.



படிப்பகம்

www.padippakam.com

அருளானந்தம், சு., 'இலங்கையில் விஞ்ஞானக் கல்வியின் தேவையும், அதன் இன்றைய நிலையும்', சிந்தனை, தொகுதி V, இதழ் I & II, பங், ஆடி, 1993, பக். 82—90.

'இலங்கைப் பாடசாலைக் கலைத்திட்டத்தில் ஒன்றிணைந்த விஞ்ஞானத்தின் வளர்ச்சியும் அமுலாக்கமும்', சிந்தனை, தொகுதி VI, இதழ் I & II, பங்., 1994, பக். 54—62.

அனஸ். எம். எஸ். எம்., 'சேர் செய்யித் அகமத்கான்—இந்திய முஸ்லிம் தேசியவாதத்தின் தொடக்கம்', சிந்தனை, தொகுதி I, இதழ் I பங்குனி, 1983, பக். 27—36.

ஆறுமுகம். கே, கே., 'யாழ்ப்பாண நகர நிலப்பயன்பாடு', சிந்தனை, தொகுதி I (புதிய தொடர்), இதழ் III, கார்த்திகை, 1983, பக். 56—69.

ஆறுமுகம், வ., 'இலங்கையில் நவீன கல்வியும் கோல்புறூக் விதப்புரைகளும்'' சிந்தனை, தொகுதி I, இதழ் I, பங்குனி, 1983, பக். 1—10.

'கற்றலில் கட்டுப்பாடு', சிந்தனை, தொகுதி III (புதிய தொடர்), இதழ் II & III, யூலை, ஆகஸ்ட், 1995, பக். 35—41.

இரகுநாதன். ம., 'நடையியல் நோக்கில் நிலக்கிளி காட்டாறு — ஒப்பாய்வு, சிந்தனை, தொகுதி VI, இதழ் I & II, பங், ஆடி, 1994, பக். 42—53.

இராமகிருஷ்ணன். வே., 'திருக்குறளும் ஒழுக்கமும்', சிந்தனை, தொகுதி I, இதழ் I, பங்குனி, 1983, பக். 52—56.

இராமநாதன் கலைவாணி. 'நாவலரும் சைவசித்தாந்தமும்', சிந்தனை, தொகுதி I (புதிய தொடர்), இதழ் II, ஆடி, 1983, பக். 137 — 144.

'வரலாற்றுக்கு முற்பட்டகால ஈழத்து இந்துமத நம்பிக்கைகள்', 'சிந்தனை, தொகுதி V. இதழ் III, கார்த்திகை, 1993; பக். 38—48.

இராஜேந்திரம். ச., பாலச்சந்திரன். செ., 'மட்டக்களப்பு மாவட்டத்தின் காலநிலையியல் நீர்ச்சமநிலை', சிந்தனை, தொகுதி V, இதழ் III, கார்த்திகை, 1993, பக். 66—78.

இராஜேஸ்வரன், எஸ். ரி. பி., 'பிரதேச அபிவிருத்திக்கான பொருத்தமான நிலவகைப்பாட்டுத் தேர்வு - அளவு சார் ரீதியான அணுகுமுறை', சிந்தனை, தொகுதி III (புதிய தொடர்), இதழ் I, பங்குனி, 1985, பக். 72—83.



படிப்பகம்

www.padippakam.com

இராஜேஸ்வரன், எஸ். ரி. பி.., மற்றும் றொபேட் ஜி. துஷ்யந்தி. இ. — 'யாழ்ப்பாணக் குடாநாட்டின் உருவாக்கமும் அதன் உருவவியல் அமைப்பும் - விமானப் பட அடிப்படையிலான ஆய்வு', சிந்தனை, தொகுதி V இதழ் III, கார்த்திகை, 1993, பக். 58—65.

இராஜேஸ்வரன், பா., சுதாகர், க., — 'விவசாய நிலப்பயன்பாடுகளுக்கான நிலப்பொருத்தப்பாடு. தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு நிருவாகப் பிரிவைச் சிறப்பாகக் கொண்ட ஓர் ஆய்வு', சிந்தனை, தொகுதி IV, இதழ் I, பங்குனி, 1990, பக். 37—58.

இராஜேஸ்வரன், எஸ். ரி. பி., — 'நிலப்பயன்பாட்டு வகைகளை மதிப்பீடு செய்தல்', சிந்தனை தொகுதி VI, இதழ் I & II, பங்., ஆடி, 1994, பக். 71—79.

கணபதிப்பிள்ளை. அ., — 'ஞாயிற்றுச் சக்தியும் அதன் சமநிலையும்', சிந்தனை, தொகுதி I, இதழ் 3 & 4 புரட்டாதி, மார்கழி, 1976, பக். 54—63

'வறண்ட பிரதேசக் குடியேற்றத்திட்டங்களின் உற்பத்தித் திறனில் தொழில் நுட்பங்களின் பங்களிப்புப் பற்றிய மதிப்பீடு', சிந்தனை, தொகுதி I (புதிய தொடர்), இதழ் II, ஆடி, 1983, பக். 21—36

'பயிர்ச்செய்கைப் பிரதேசம் ஒன்றில் நீர்ப்பாய்ச்சல் திட்டமிடுதலில் சில முககிய அம்சங்கள்' சிந்தனை, தொகுதி II (புதிய தொடர்), இதழ் II, ஆடி, 1984, பக். 38—44.

'இலங்கையின் நீர்ப்பாசன அபிவிருத்தியில் வரலாற்றுச் சிறப்பம்சங்கள்', சிந்தனை, தொகுதி III (புதிய தொடர்), இதழ் I, பங்குனி, 1985, பக். 60—71.

கணேசலிங்கம், யோகேஸ்வரி, — 'வேற்றுமையும் சொல்லொழுங்கும்', சிந்தனை தொகுதி I, இதழ் 2, சித்திரை, 1976, பக். 37—47

'புராண படனம் – அன்றும் இன்றும்', சிந்தனை, தொகுதி I (புதிய தொடர்), இதழ் II ஆடி, 1983, பக். 145—151.

கந்தசாமி, பார்வதி., — 'ஐந்தாம் வகுப்பு மாணவர் தமிழ்மொழிப் பயிற்சிகளில் சில அவதானிப்புகள்', சிந்தனை, தொகுதி II (புதிய தொடர்) இதழ் I, பங்குனி, 1984, பக். 73—99

'ஆங்கிலத்தில் தமிழ் அசைகளின் செல்வாக்கு', சிந்தனை, தொகுதி III (புதிய தொடர்), இதழ் I, பங்குனி 1985, பக். 1—8.

கந்தையா, கா., — 'இலங்கையின் அந்நியச் செலாவணி விகிதங்களின் போக்கு 1978—1990', சிந்தனை தொகுதி IV, இதழ் I, பங்குனி 1990, பக். 80—88.



படிப்பகம்

www.padippakam.com


கந்தையா. கா., ‘ இலங்கையில் ஏற்றுமதி மேம்பாட்டுக் கைத்தொழிலாக்கம் சாதனைகள், குறைபாடுகள், சவால்கள்’, சிந்தனை, தொகுதி V இதழ் I & II பங். ஆடி, 1993, பக். 50—66

கம்லத், ஸுச்சரித., ‘ கலைப்படைப்புகள் பற்றிய கருத்துரை’, சிந்தனை தொகுதி I இதழ் I, தை, 1976, பக். 52—60.

கயிலைநாதன், இ., ‘ அம்பிடு என்னும் சொல் பற்றி ஒரு குறிப்பு’, சிந்தனை, தொகுதி I (புதிய தொடர்), இதழ் III, கார்த்திகை, 1983, பக். 138—139.

‘ தமிழ்மொழியில் உளப்பாட்டுத் தன்மைப்பன்மை’ சிந்தனை, தொகுதி III (புதிய தொடர்) இதழ் I, பங்குனி, 1985, பக். 55—59.

‘ யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் இறந்தகால அமைப்பு’, சிந்தனை, தொகுதி V, இதழ் I & II, பங். ஆடி, 1993, பக். 91—94.

காசிநாதன்., நடன, ‘பாண்டியர்கால ஆட்சி இயல்’, சிந்தனை, தொகுதி (புதிய தொடர்), இதழ் II, ஆடி, 1984, பக். I — 18.

கிருஷ்ணகுமார். எஸ்., ‘இலங்கையை இலௌகீக, ஆன்மீக வழிகளில் கைப்பற்றுதல்’ சில குறிப்புக்கள், சிந்தனை, தொகுதி VI, இதழ் I & II. பங், ஆடி, 1994. பக். 100—107

கிருஷ்ணராசா. செ., ‘யாழ்ப்பாணக்குடாநாட்டில் கிடைத்த நாணயங்கள்’, சிந்தனை தொகுதி I (புதிய தொடர்), இதழ் III, கார்த்திகை, 1983, பக். 70 — 84.

‘ இந்திய தென்கிழக்காசிய தொடர்புகளும் இந்துப் பண்பாடு பற்றிய சில பிரச்சினைகளும் — ஒரு வரலாற்றுக் குறிப்பு’‘ சிந்தனை, தொகுதி IV, இதழ் I, பங்குனி 1990, பக். 68 — 79.

கிருஷ்ணராஜா, சோ., ‘இயற்கை உரிமைகளும் மனித உரிமைகளும்,’ சிந்தனை. தொகுதி I, இதழ் I தை, 1976, பக். 1 — 5.

‘சைவசித்தாந்த அறிவுக் கொள்கை — காட்சி’, தென்னாசியவியற் கருத்தரங்குக் கட்டுரைச் சுருக்கம், சிந்தனை, தொகுதி I, இதழ் II, சித்திரை, 1976, பக். 65 — 67.

‘இரு காந்திய நாவல்கள்,’ சிந்தனை, தொகுதி I, இதழ் 3 & 4, புரட்டாதி, மார்கழி, 1976, பக். 28 — 32,

‘குறியீட்டு அளவையியல் — ஓர் அறிமுகம்’, சிந்தனை, தொகுதி II, (புதிய தொடர்), இதழ் III, கார்த்திகை 1984, பக். 58 — 92.




படிப்பகம்

www.padippakam.com

கிருஷ்ணராஜா, சோ., நீலகண்ட பாடியத்தில் முப்பொருள் உண்மை', சிந்தனை தொகுதி IV, இதழ் I. பங்குனி, 1990, பக். 59 — 67.

'சைவசித்தாந்த ஒழுக்கவியல் — தேவி காலோத்திர ஆகமப் போதனைகள்', சிந்தனை, தொகுதி VI, இதழ் I & II, பங்குனி, ஆடி, 1994. பக். 11 — 19.

கிருஷ்ணவேணி, அ. நோ., 'அழகியலும் மதமும்', சிந்தனை, தொகுதி V இதழ் III, கார்த்திகை, 1993, பக். 16 — 23.

குகபாலன், கா., யாழ்ப்பாண மாவட்ட மக்களின் இடப்பெயர்வு', சிந்தனை தொகுதி I (புதிய தொடர்), இதழ் II, ஆடி, 1983, பக். 78 — 93.

'இலங்கையில் தேசிய குடிக்கணிப்புகளும் அவற்றின் குறை நிறைகளும், சிந்தனை, தொகுதி III (புதிய தொடர்), இதழ் I, பங்குனி, 1985, பக். 30—39.

'யாழ்ப்பாண மாவட்டத்தில் இறப்புக்களின் போக்கினை தீர்மானிக்கும் காரணிகளும், விளைவுகளும்', சிந்தனை, தொகுதி V இதழ் I & II, பங்குனி, ஆடி 1993, பக். 28—49.

குணசிங்ம், செல்லத்துரை, 'மத்திய காலத்தமிழ் நாட்டு இந்துக் கோவில்கள் தொழில் நிறுவனங்கள்' சிந்தனை, தொகுதி I, இதழ் 3 & 4, புரட்டாதி, மார்கழி, 1976, பக். 43—53.

கைலாசபதி, க., 'இலக்கியத் திறனாய்வும் உணர்வு நலனும்', சிந்தனை, தொகுதி I, இதழ் 2, சித்திரை 1976, பக். 1—10.

சண்முகதாஸ், அ., 'கவிஞரும் மொழியும்—ஒரு மொழியியல் நோக்கு', சிந்தனை, தொகுதி I, இதழ் I, தை, 1976, பக். 37—51.

'தமிழர் வழிபாட்டில் செவ்வேளும் திருமாலும்', சிந்தனை, தொகுதி I (புதிய தொகுதி), இதழ் III, கார்த்திகை, 1983, பக். 108—122.

சண்முகதாஸ், மனோன்மணி, 'யாழ்ப்பாணத்தில் நூலக வளர்ச்சி' தென்னாசியாவிற் கருத்தரங்குக் கட்டுரைச் சுருக்கம், சிந்தனை, தொகுதி I, இதழ், 2, சித்திரை 1976, பக். 70—73.

'பெண்களும் தமிழ் நாவலும்', சிந்தனை, தொகுதி I இதழ் 3&4, புரட்டாதி, மார்கழி, 1976, பக். 10—27.

சண்முகலிங்கம், க., 'மானிடவியலும் ஆக்க இலக்கியமும்' சிந்தனை, தொகுதி I, இதழ் 2, சித்திரை, 1976, பக். 22—28.

சத்தியசீலன், ச., 'இலங்கையும் இந்து சமுத்திர வர்த்தகமும் (கி.மு. 2 ஆம் நூற்றாண்டு—கி.பி. 13 ஆம் நூற்றாண்டு வரை), சிந்தனை, தொகுதி I, இதழ் 2, சித்திரை, 1976, பக். 48—59



படிப்பகம்

www.padippakam.com

சத்தியசீலன், ச., 'பிரித்தானிய மலாயாவில் யாழ்ப்பாணத்தவரின் அரசியல் நடவடிக்கைகள்', சிந்தனை, தொகுதி I (புதிய தொடர்) இதழ் II, ஆடி, 1983, பக். 37—56.

'இலங்கைத் தமிழர் — இந்திய வம்சாவளித் தமிழர் இடையிலான உறவுகள் பற்றிய சில கருத்துக்கள்' சிந்தனை தொகுதி III (புதிய தொடர்), இதழ் I, பங்குனி, 1985, பக். 40—54.

'பிரித்தானியர் கால நல்லூர் — ஒரு நோக்கு'. சிந்தனை, தொகுதி V இதழ் I&II, பங்குனி, ஆடி, 1993பக். 95—104.

'இலங்கையில் இனவாதமும் தேசக்கட்டுமாணமும்', சிந்தனை, தொகுதி V, இதழ் III, கார்த்திகை, 1993, பக். 24—38

'சிந்தனை ஆய்வுக் கட்டுரைகளின் விபரப்பட்டியல் சிந்தனை, தொகுதி IV இதழ் I & II, பங், ஆடி, 1994, பக். 118

சந்தானம், சாந்தினி, '19 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலக் கல்வியும் தமிழ் நாவலின் தோற்றமும்', சிந்தனை, தொகுதி I, இதழ் 3 & 4, புரட்டாதி, மார்கழி, 1976. பக். 33 — 42.

சந்திரகாந்தன், ஏ. ஜே. வி. 'கிறிஸ்தவ தமிழ்நாவல்களும் சமுதாய விழிப்புணர்வும்' சிந்தனை தொகுதி IV, இதழ் I, பங்குனி, 1990, பக். 89—103

சிவசந்திரன், இரா., 'இலங்கையின் வன்னிப் பிரதேச விவசாய அபிவிருத்தி சிந்தனை தொகுதி II (புதிய தொடர்), இதழ் I, பங்குனி, 1984, பக். 54 — 72.

'முத்தையன் கட்டு இளைஞர் குடியேற்றத்திட்டம்; ஒரு விவசாயப் புவியியலாய்வு, சிந்தனை, தொகுதி III (புதிய தொடர்), இதழ் I, பங்குனி, 1985, பக். 96 — 114.

சிவசாமி. வி., 'வடமொழிச் சாசனமும் தமிழ்ச் சாசனமும்', சிந்தனை, தொகுதி I, இதழ் I, தை, 1976, பக். 25—36.

'இந்திய இசை, சமய, இலக்கிய-மரபுகளில் ஜயதேவர் ஓர் ஆய்வு சிந்தனை, தொகுதி I (புதிய தொடர்), இதழ் IIIகார்த்திகை, 1983, பக். 1 — 13.

'இசை மேதை பாபநாசம் சிவன்' சிந்தனை. தொகுதி I (புதிய தொடர்), இதழ் 1, பங்குனி, 1984, பக். 7—27

சிவத்தம்பி, கார்த்திகேசு, 'ஈழத்துத் தமிழ்க் கவிதைப் பாரம்பரியம்', சிந்தனை. தொகுதி II (புதிய தொடர்), இதழ் I பங்குனி, 1984, பக். 28—53

சிவநாதன், ப., 'இலங்கையில் வெங்காயச் சந்தைப்படுத்தல் பற்றிய ஆய்வு' சிந்தனை, தொகுதி IV, இதழ் I, பங்குனி, 1990, பக். 104 — 117



படிப்பகம்

www.padippakam.com

சிவலிங்கராஜா, எஸ்., 'யாழ்ப்பாணக் குடாநாட்டில் 19 ஆம் நூற்றாண்டில் நிலவிய பாரம்பரியக் கல்விமுறை, சிந்தனை, தொகுதி I (புதிய தொடர்), இதழ் II, ஆடி, 1983, பக். 68—77.

சிவானந்தமூர்த்தி, கே., 'பன்முகப்படுத்தப்பட்ட தலைமைத்துவ அமைப்புக்கள் சமூக உளவியல் நோக்கு' சிந்தனை தொகுதி VI இதழ் I & II பங்., ஆடி, 1994, பக். 80 — 90.

சிற்றம்பலம், சி. க., 'இலங்கையின் ஆதிப்பிராமிக் கல்வெட்டுக்கள் காட்டும் இந்து மதம்', சிந்தனை, தொகுதி I, இதழ் 2, சித்திரை 1976. பக். 29—36.

'பிராமிக் கல்வெட்டுக்களும் தமிழும்', சிந்தனை, தொகுதி I, இதழ் I, பங்குனி, 1983, பக். 57—86.

'பண்டைய ஈழத்து யக்ஷ, நாக வழிபாடு', சிந்தனை, தொகுதி I (புதிய தொடர்), இதழ் II, ஆடி, 1983, பக். 121—136.

'பௌத்தத்திற்கு முந்திய ஈழத்து இந்து மதம்', சிந்தனை. தொகுதி I (புதிய தொடர்) இதழ் III, கார்த்திகை, 1983, பக். 38—55.

'ஈழமும் இந்து மதமும் — அநுராதபுர காலம்', சிந்தனை, தொகுதி II (புதிய தொடர்), இதழ் I, பங்குனி, 1984, பக். 108—141,

'ஈழமும் இந்து மதமும் — பொலநறுவைக்காலம்' (கி. பி. 1000 — 1250), சிந்தனை, தொகுதி II (புதிய தொடர்), இதழ் II, ஆடி, 1984, பக். 115—156.

'ஈழமும் இந்து மதமும் — பொலநறுவை அரசுக்குப் பிற்பட்ட போர்த்துக்கேயர் வருகைக்கு முற்பட்ட காலம் (கி. பி. 1250 — 1505)', சிந்தனை, தொகுதி II (புதிய தொடர்), இதழ் III, கார்த்திகை, 1984, பக். 129—179.

சின்னையா, கலையரசி., 'ஈழத்தில் இந்து இலக்கியங்கள்' (பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை) சிந்தனை, தொகுதி I (புதிய தொடர்), இதழ் III, கார்த்திகை 1983, பக். 93—107.

சுசீந்திரராசா. சு., 'தமிழ்மொழி கற்றல், கற்பித்தலில் ஒத்த கருத்துள்ள சொற்களும், எதிர்க்கருத்துள்ள சொற்களும்', சிந்தனை, தொகுதி I, இதழ் I, பங்குனி, 1983, பக். 19 — 26.

'தமிழ்மொழிப் பாடநூல்களில் பேச்சுத் தமிழும், எழுத்துத் தமிழும்', சிந்தனை, தொகுதி II, (புதிய தொடர்), இதழ் II, ஆடி, 1983, பக். 1 — 9.

'யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழில் ஆக்கப் பெயர்கள்', சிந்தனை, தொகுதி II (புதிய தொடர்), இதழ் II, ஆடி, 1984, பக். 18 — 38.



படிப்பகம்

www.padippakam.com

'பண்டிதமணி ஆய்வில் எழும் சிக்கல்கள்', சிந்தனை, தொகுதி III, (புதிய தொடர்), இதழ் II & III யூலை, ஆகஸ்ட், 1985, பக். 18 — 38.

சுப்பிரமணியம், நா., '1970 க்குப் பின் ஈழத்தில் வெளிவந்த தமிழ் நாவல்கள்", சிந்தனை, தொகுதி 1, இதழ் I, தை, 1976, பக். 61 —65'

'1970க்குப் பின் ஈழத்துத் தமிழ் நாவல்கள்', தென்னாசிய வியற் கருத்தரங்குக் கட்டுரைச் சுருக்கம், சிந்தனை, தொகுதி I, இதழ் 2, சித்திரை, 1976, பக். 60 — 64.

'தமிழில் யாப்பும், யாப்பியலும்—வரலாற்று நோக்கு', சிந்தனை, தொகுதி III (புதியதொடர்), இதழ் II & III யூலை, ஆகஸ்ட், 1985, பக். 72 — 95.

சுரேஷ் கனகராஜா, 'சமகால ஈழத்துத் தமிழ்க் கவிதையில் முப்போக்குகள் ஒரு மூன்றாம் உலக இலக்கியக் கண்ணோட்டம்', சிந்தனை, தொகுதி V, இதழ் III, கார்த்திகை, 1993, பக். 1—14.

சூசை, ஏ. எஸ்., 'இலங்கையில் மீன்பிடித்துறையின் இன்றைய நிலை ஒரு போக்கு', சிந்தனை, தொகுதி V இதழ் III, கார்த்திகை, 1993, பக். 79—89.

ஞானகுமாரன், நா., 'அனுபலப்திப் பிரமாணம்'. சிந்தனை, தொகுதி III (புதிய தொடர்), இதழ் II&III யூலை, ஆகஸ்ட், 1985, பக். 42—52.

'சங்கரரின் உலகு பற்றிய நோக்கு', சிந்தனை, தொகுதி V, இதழ் I&II பங், ஆடி, 1993, பக். 13—27.

'சுயாதீன சித்தமும், சைவசித்தாந்தமும்', சிந்தனை, தொகுதி V இதழ் III, கார்த்திகை, 1993, பக். 49—57.

நித்தியானந்தன், வி., 'இலங்கையில் முயற்சியாளர் வர்க்க எழுச்சியும் அதன் முதலாளித்துவ இணக்கப்பான்மையும், 'சிந்தனை, தொகுதி II (புதிய தொடர்) இதழ் II, ஆடி, 1984, பக். 79—114.

நுஃமான், எம். ஏ., 'ஆரம்ப வகுப்புகளில் தமிழ்மொழி கற்பித்தல், சில அடிப் படைப் பிரச்சினைகள்', சிந்தனை, தொகுதி I (புதிய தொடர்), இதழ் II, ஆடி, 1983, பக். 57—97.

பத்மநாதன். சி., 'இலங்கைத் தமிழ் வணிக கணங்களும், நகரங்களும் (கி. பி, 1000 — 1250) சிந்தனை, தொகுதி II (புதிய தொடர்), இதழ் II, ஆடி, 1984, பக். 45 — 78.

'அடங்காப்பற்று வன்னிமைகள்', சிந்தனை தொகுதி V இதழ் I&II, பங், ஆடி, 1993, பக். 1 — 12.

'கயிலாய வன்னியனார் மட தர்ம சாதனப் பட்டையம் சில வரலாற்றுக் குறிப்புக்கள்', சிந்தனை, தொகுதி V இதழ் III கார்த்திகை, 1993, பக். 99 — 105.



படிப்பகம்

www.padippakam.com


ரூபாமூர்த்தி, கா., 'யாழ்ப்பாணப் பகுதியில் மீன்பிடித்தொழில் அபிவிருத்தி', சிந்தனை, தொகுதி I (புதிய தொடர்), இதழ் III, கார்த்திகை 1983, பக். 123—137,

வாமதேவா, சந்திரலேகா 'காரைக்காலம்மையாரும் அவர் பாடிய பிரபந்தங்களும் — ஓர் ஆய்வு', சிந்தனை, தொகுதி III (புதிய தொடர்) இதழ் I, பங்குனி, 1985, பக். 9—29.

விக்டர், ஹென்றி, ஐ., 'பௌத்த களத்தில் கிறித்தவ இறையியல்: லின் டீ சில்வாவின் இறையியல் அணுகுமுறை', சிந்தனை, தொகுதி VI இதழ் ஆடி, I&II பங், 1994, பக். 20-29.

வேலாயுதம், தி., 'இலங்கையின் கல்வி நிருவாகத்தின் பன்முகப்படுத்தலுக்கான வழிமுறைகள்,, சிந்தனை, தொகுதி I (புதிய தொடர்), இதழ் III கார்த்திகை, 1983, பக். 85—92.

வேலுப்பிள்ளை, ஆ., 'இலக்கணக் கொள்கைக் கட்டுரைகளிலே கணேசையரின் அணுகுமுறை' சிந்தனை, தொகுதி II (புதிய தொடர்), இதழ் III கார்த்திகை 1984, பக். 93—128.

ஜெயராசா. சபா., 'இடைநிலைப் பாடசாலைக் கல்வி அனுபவ ஒழுங்கமைப்பின் நவீன வடிவங்கள்', சிந்தனை, தொகுதி II (புதிய தொடர்) இதழ் I, பங்குனி, 1984, பக். 1—6.

'கல்வியும் சுயவேலைவாய்ப்புகளும் சமன்பாடுகளின் பகுப்பாய்வு', சிந்தனை, தொகுதி IV, இதழ் I & II பங்குனி, ஆடி, 1994, பக். 63 — 70.




படிப்பகம்

www.padippakam.com

## சிந்தனை வருடச் சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா | 300/- |
| இந்தியா | இந்திய ரூபா | 300/- |
| பிறநாடுகள் | | £ 14 US $ 20 |

ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆசிரியர், சிந்தனை, வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். கொடுப்பனவுகள் சிந்தனை நிர்வாக ஆசிரியருக்கு இலங்கையில் காசுக்கட்டளை, காசோலை, தபாற்கட்டளை மூலமும் பிற நாடுகளிலிருந்து வங்கிக்கட்டளையின் மூலமும் அனுப்பப்படல் வேண்டும்.

மாற்றிதழாகச் சிந்தனையைப் பெறவிரும்பும் நூலகங்கள், நிறுவனங்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி; நூலகர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம். திருநெல்வேலி, யாழ்ப்பாணம். இலங்கை.

கட்டுரைகளில் தெரிவிக்கப்படும் கருத்துக்களுக்குக் கட்டுரையாசிரியர்களே பொறுப்பாவர். அவை யாழ்ப்பாணப் பல்கலைகழகக் கலைப்பீடத்தினதோ. சிந்தனை ஆசிரியர் குழுவினதோ கருத்துக்களாக அமையாது.

படிப்பகம்

www.padippakam.com

# CINTANAI

Vol. VI March, July 1994 No. I, II

1. Local Government: A Conceptual overview 01
**A. V. Manivasagar**

2. Saiva Siddhantha Ethics according to Devikallothra Agama 11
**S. Krishnarajah**

3. Christian theology in the Buddhist frontier:
Lynn de Silva's Approach. 20
**I. Henry Victor**

4. 'U l' in Thirukkural 30
**N. Subramanian**

5. A Comparative Analysis of Nilakili and Kattaru from a stylitic Perspective. 42
**M. Ragunathan**

6. Development and implementation of Integrated Science in the Sri Lankan School curriculum 54
**S. Arulanantham**

7. Education and Self - Employment Analysis of Equations 63
**Saba. Jeyarasa**

8. Estimating the different Land utilization types from the Aerial Photographs 71
**S. T. B. Rajeswaran**

9. Leadership in Multifarious forms - a Socio psychological Analysis 80
**K. Sivanandamoorthy**

10. 'The Temporal and Spiritual Conquest of Ceylon' - Some Notes
**S. Krishnakumar**

11. Index of the Articles that appear in Cintanai 108
**S. Sathiaseelan**

படிப்பகம்